# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

**மானியக் கோரிக்கை எண். 34**

**கே.என். நேரு**
நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | | பக்கம் எண் |
|---|---|---|---|
| தொலை நோக்குத் திட்டம் | | | 1 |
| 1. | முன்னுரை | | 2–11 |
| | 1.1 | துறைகள் | 11–12 |
| | 1.2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள் | 12–14 |
| | 1.3 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புளுக்கான சாதாரணத் தேர்தல்கள் | 14–18 |
| 2. | நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | | 19 |
| | 2.1 | நிருவாகம் | 19–25 |
| | 2.2 | உட்கட்டமைப்பு மேம்பாடு | 25–42 |
| | 2.3 | நகர்ப்புர சுகாதார கட்டமைப்பு | 42–48 |
| | 2.4 | கல்வி மற்றும் இளையோர் நலன் | 48 |
| | 2.5 | முன்னோடித் திட்டங்கள் | 49–54 |
| | 2.6 | செயல்பாட்டிலுள்ள திட்டங்கள் | 55–71 |
| | 2.7 | வெளிஆதார நிதியுதவித் திட்டங்கள் | 71–80 |
| | 2.8 | நிதி மேலாண்மை | 80–88 |
| | 2.9 | தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் | 88–89 |
| | 2.10 | நகராட்சி நிருவாக இயக்குநரகம் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மாநகராட்சிகள் | 89–113 |
| 3. | பெருநகர சென்னை மாநகராட்சி | | 114–116 |
| | 3.1 | உட்கட்டமைப்பு | 116–143 |
| | 3.2 | சுகாதாரம் மற்றும் தூய்மை | 143–169 |
| | 3.3 | வருவாய் | 170–174 |

| | | | |
|---|---|---|---|
| | 3.4 | கல்வி | 174–179 |
| | 3.5 | நமக்கு நாமே திட்டம் | 179–181 |
| | 3.6 | நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டம் | 181–182 |
| | 3.7 | துறை பயிற்சி தேவைகள் மற்றும் திறன் வளர்ப்பு நடவடிக்கைகள் | 182–183 |
| | 3.8 | சிங்கார சென்னை 2.0 | 183–185 |
| | 3.9 | வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்ககைகள் | 185–188 |
| | 3.10 | நிலையான அபிவிருத்திக்கான இலக்குகள் | 188–191 |
| **4.** | **பேரூராட்சிகளின் ஆணையரகம்** | | 192 |
| | 4.1 | நிருவாகம் | 192–193 |
| | 4.2 | பேரூராட்சிகளின் செயல்பாடுகள் | 193–201 |
| | 4.3 | சுகாதாரம் | 201–207 |
| | 4.4 | சுற்றுச்சூழல் மேம்பாடு | 207–209 |
| | 4.5 | செயலாக்கத்திலுள்ள திட்டங்கள் | 209–213 |
| | 4.6 | தமிழக அரசின் திட்டங்கள் | 213–222 |
| | 4.7 | மின் ஆளுமை | 222–223 |
| | 4.8 | நிதி மேலாண்மை | 223–229 |
| **5.** | **சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்** | | 230–234 |
| | 5.1 | குடிநீர் வழங்கல் மேலாண்மை | 234–243 |
| | 5.2 | குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 244–255 |
| | 5.3 | கழிவுநீர் மேலாண்மை | 256–258 |
| | 5.4 | கழிவுநீர் திட்டங்கள் | 259–265 |
| | 5.5 | மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகம் | 265– |

| | | | |
|---|---|---|---|
| | | | 268 |
| | 5.6 | பணியாளர் திறன் மேம்படுத்துதல் | 268–269 |
| | 5.7 | தொழில் நுட்ப பயன்பாடு | 269–273 |
| | 5.8 | நுகர்வோர் குறைகளை கண்காணித்தல் | 273–275 |
| | 5.9 | பணியாளர்களின் நலன் | 275–277 |
| | 5.10 | நிதி நிலைமை | 277–280 |
| 6. | **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்** | | 281–282 |
| | 6.1 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை | 283 |
| | 6.2 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் | 283–284 |
| | 6.3 | கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் | 284–309 |
| | 6.4 | தனிக் குடிநீர்த் திட்டங்கள் | 309–315 |
| | 6.5 | பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 315–322 |
| | 6.6 | சிறப்புத் திட்டங்கள் | 323–324 |
| | 6.7 | ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம் | 324–326 |
| | 6.8 | உபகரண சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | 326–327 |
| | 6.9 | குடிநீரின் தரப்பரிசோதனை மற்றும் கண்காணிப்பு | 327–329 |
| | 6.10 | நில நீர்ப்பிரிவின் செயல்பாடுகள் | 329–330 |
| | 6.11 | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் | 330–331 |
| | 6.12 | நிதிநிலை | 331–333 |
| | 6.13 | ஜல் ஜீவன் இயக்கம் | 333–344 |

| | | | |
|---|---|---|---|
| 7. | **தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்** | | 345–346 |
| | 7.1 | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் | 346–348 |
| | 7.2 | வெளிஆதாரத் திட்டங்கள் | 349–359 |
| | 7.3 | குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் | 359–361 |
| | 7.4 | சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் | 361–362 |
| 8. | **சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை** | | 363 |
| | 8.1 | நிறைவுற்ற சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள் | 364–368 |
| | 8.2 | மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள் | 368–371 |
| | 8.3 | மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் | 372–373 |
| | 8.4 | விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல் | 373–375 |
| 9. | **தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்** | | 376 |
| | 9.1 | டுபிட்கோவின் நோக்கங்கள் | 377 |
| | 9.2 | திட்டஇயக்குநரகம் / திட்டமுகமை | 377 |
| | 9.3 | நிதிமேலாளர் | 378 |
| | 9.4 | அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் | 379–385 |
| | 9.5 | அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 | 386–389 |
| | 9.6 | சீர்மிகு நகரங்கள் திட்டம் | 389–391 |
| | 9.7 | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் | 391–393 |
| | 9.8 | சிங்கார சென்னை 2.0 | 394–396 |
| | 9.9 | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர | 396–397 |

| | | | |
|---|---|---|---|
| | | உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – சுழற்சி நிதி | |
| | 9.10 | பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி | 397 |
| | 9.11 | ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM) கட்டம் 1 (2011–2016) | 398–400 |
| | 9.12 | டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் | 400 |
| | 9.13 | சிறப்பு சாலைகள் திட்டம் | 400–401 |
| | 9.14 | அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை | 401–402 |
| **10.** | **புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்** | | 403–411 |
| **11.** | **தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்** | | 412–414 |
| | 11.1 | செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில திட்டங்கள் | 415–419 |
| | 11.2 | நடைபெற்று வரும் திட்டங்கள் | 419–421 |
| | 11.3 | நடைபெற்று வரும் பெரிய அளவிலான திட்டங்கள் | 422–426 |
| | 11.4 | விருதுகள் | 426 |
| | 11.5 | தமிழ்நாடு அரசுக்கான பணிகள் | 426–429 |
| | 11.6 | இந்திய அரசுக்கான பணிகள் | 429–431 |
| | 11.7 | நிறுவனத்தின் நிதிநிலை | 431 |
| | 11.8 | சமூகப் பொறுப்புணர்வு பணிகள் | 431 |
| **12.** | **நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்** | | 432–434 |
| **13.** | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | | 435–436 |
| **14.** | **தொடர் செயல் திட்டம்** | | 437–438 |

## மானியக் கோரிக்கை எண்.34

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022–2023

# தொலை நோக்குத் திட்டம்

சுத்தம், பசுமை, ஆரோக்கியச் சுற்றுச்சூழல், அடிப்படை வசதி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை நிலை அகற்றல் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி போன்றவற்றில் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பங்கேற்பு அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலமாக அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை தரத்தினை வழங்குவதற்கு வழிவகுத்தல்.

## 1. முன்னுரை

நகரங்கள் நாகரிகத்தின் இருப்பிடமாகும். தமிழ் நாட்டின் தனிச்சிறப்பான நகரமயமாக்கல், தவிர்க்க முடியாததும் மற்றும் விரும்பத்தக்கதும் ஆகும். நகரமயமாக்கலானது, வலுவான பொருளாதார இணைப்புகள் மூலம் வெளிப்படையாக நகர்ப்புர மக்களுக்கு நேரடி நன்மையை அளித்தது மட்டுமல்லாது கிராமப்புறங்களிலும் வறுமை ஒழிப்புக்கு உதவியுள்ளது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் நகரமயமாக்கலை ஒரு உந்து சக்தியாக பயன்படுத்துவது மிகப்பெரிய சவாலாகும். இதனை, முதன்மையாக எதிர் கொள்வதே தமிழக அரசின் முக்கிய குறிக்கோளாகும்.

நகர்ப்புர வளர்ச்சியின் பல அம்சங்களில் தமிழ்நாடு முன்னோடியாக இருந்தாலும், அதிகரிக்கும் அடிப்படை சேவைகளின் அழுத்தத்தை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரம் உள்ளது.

உள்ளடக்கிய மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள நகரங்களை உருவாக்க, நகர்ப்புர வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை, "தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2030" தெளிவாக



விளக்குகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் நிதியுதவி இருந்தபோதிலும், நகர்ப்புர சேவைகளில் உள்ள இடைவெளியை சீரமைக்க திறமையான நகர்ப்புர நிதி சீர்திருத்தங்கள், நகர்ப்புர நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் உள்ள சவால்களை எதிர்க்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு ஆகியவை தேவைப்படுகின்றன.

### வளர்ச்சியில் முதலீடு

நகர்ப்புர மக்கள் தொகை விகிதத்தில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மதிப்பீட்டின் படி, மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.45% மக்கள், நகரங்களில் வாழ்கிறார்கள். 2001–11 – இல் வளர்ச்சி விகிதம் 27% ஆகும். அதே காலகட்டத்தில், (2001–2011) கிராமப்புற மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 6% மட்டுமே. 2036 ஆம் ஆண்டுக்கான மக்கள்தொகை கணிப்புகளில், மாநிலத்தின் மக்கள் தொகையில், 60% நகர்ப்புரத்தில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றம் மற்றும் இயற்கை வளங்கள் குன்றுதல் குறித்து அதிகரிக்கும் (யதார்த்தமான) பிரச்சினைக்கு மாறாக, பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும். அதே நேரத்தில், அதிகரித்து வரும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர சேவைகளான குடிநீர் வழங்கல், வடிகால், திடக்கழிவு மேலாண்மை, நகர்ப்புர போக்குவரத்து அமைப்புகள் போன்றவற்றுக்கு இடமளிப்பதே, அடிப்படை வளர்ச்சிக்கான திட்டமிடுதலின், மாநிலம் எதிர்கொள்ளும் சவாலாகும். நகரங்கள் எதிர்கொள்ளும் உண்மையான சவால்களில் சில 1) பெருகி வரும் வளர்ச்சி மையங்களில் கடுமையான உள்கட்டமைப்பு பற்றாக்குறை, 2) தரமான நிர்வாகத்தை வழங்குவதற்கான குறைந்த நிறுவன திறன் 3) சொத்துக்களின் நிலைத்தன்மையை நிவர்த்தி செய்ய நிதி சீர்திருத்தம் மற்றும் கட்டண மாற்றங்கள் தேவை ஆகியனவாகும்.

எனவே, நம்முன் வைக்கப்படும் சவால்களின் அளவு, மிகப்பெரிய முதலீடுகளையும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்களின் மூலம் இலக்கு அணுகுமுறையையும் தேவையாக்குகிறது.



**வாழ்வாதாரமான நீர்**

பாதுகாக்கப்பட்ட தூய்மையான நீரை பெறுவது நாகரிகத்தின் அடித்தளம் ஆகும். முன்வைக்கப்பட்ட தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, ஒவ்வொரு மாநகரம் / நகரத்திற்கும் நீர் நிலுவைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நீர்நிலைகளின் புத்துயிர் மற்றும் மறுசீரமைப்புக்கு வலுவான உந்துதல் கொடுக்கப்பட்டுள்ளது. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT), சிங்கார சென்னை போன்ற பல திட்டங்களில் இந்த கூறுக்கான ஒதுக்கீடு கணிசமானதாகும். IEC நடவடிக்கைகள் நீர் பாதுகாப்பில் கல்வி, தகவல் மற்றும் மக்களின் பங்களிப்பை வெளிப்படுத்த முயல்கின்றன.

காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கத்திற்கு எதிராக, நீர் விரயம் மற்றும் வீணாவதைக் குறைத்தல், பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல் மற்றும் மறுபயன்பாடு செய்தல் ஆகியவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. காலநிலை மாற்றத்தின் (இருத்தலியல்) அச்சுறுத்தலானது நகரங்களை

வெள்ளம் மற்றும் நீர் வடிதல் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளுக்கு உள்ளாக்குகிறது.

மண்ணின் வளம், நீரைத் தக்கவைத்தல் மற்றும் நிலத்தடி நீர் சேமிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இம்மண்ணில் வளரக்கூடிய மரங்களை வளர்க்க (சாத்தியமான இடங்களில்) நகரங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

**சவாலான திடக்கழிவு மேலாண்மை**

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளின் பரவலான நகரமயமாக்கலின் வடிவத்துடன், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான சட்டப்பூர்வ நகரங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது. மிகப்பெரிய உள்ளாட்சி அமைப்பான பெருநகர சென்னை மாநகராட்சி, ஒரு சதுர கி.மீ.க்கு 3,521 பேர் மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது. எனவே சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவை குடியிருப்பாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT) கீழ் 28 பெரிய



நகரங்களில், 100% பாதாள சாக்கடை / கழிவு நீர் சேகரிக்கும் அமைப்புகளை ஏற்படுதுவதன் மூலம் இந்தச் சவாலுக்கு தீர்வு காணப்படுகிறது. இது நகரங்களில், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ப மழை நீர் வடிகால் திட்டங்களும், வடிகால் அணுகுமுறையை கொண்டு நீண்ட கால திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

வெகுகாலமாக திடக்கழிவுகளால் மாசுபட்ட நிலத்தை மீட்பதற்காக, உயிரி சீரமைப்பு / உயிரி அகழ்ந்தெடுத்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மரபுக் கழிவுகளை மீட்டெடுக்கும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. கசடுகழிவு மேலாண்மை சேவைகளை வழங்குவதற்காக சிறிய நகரங்கள் ஒரு தொகுதியாகவோ அல்லது தனித்தனியாகவோ எடுக்கப்படுகின்றன.

நன்கு பராமரிக்கப்பட்ட கழிவறைகளை வழங்குவது மற்றும் குப்பைகள் இல்லாத நகரங்களை உருவாக்குவதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவது ஆகியவற்றுக்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM) மற்றும் சிங்கார சென்னை ஆகிய திட்டங்களின் கீழ் விரிவான முறையில் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த முயற்சியில், சாத்தியமான பொது தனியார்

கூட்டாண்மை (PPP) மாதிரிகள் மூலம் தனியார் பங்கேற்பு அனுமதிக்கப்படுகிறது.

**சாலைகள் – வலைப்பின்னல் போன்ற இனணப்பான்கள்**

பயணத்தை எளிதாக்கும் வகையில் சாலைகள் அமைக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, மாநகராட்சிகள் மட்டுமின்றி நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள அனைத்து மண் சாலைகளும், அனைத்து பருவநிலைகளுக்கும் உகந்த சாலைகளாக மாற்றப்படும். தமிழ்நாடு நகர்ப்புர சாலை உள்கட்டமைப்பு நிதியம் (TURIF), சிங்கார சென்னை மற்றும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT) ஆகிய திட்டங்களில் இந்தக் கூறுகள் உள்ளமைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளிலும், LED விளக்குகளைப் பயன்படுத்தி ஆற்றல் திறன் கொண்ட தெருவிளக்குகளும் பொருத்தப்படுகின்றன.

**நகரத்தின் கார்பன் உள்வாங்கிகள்**

தார் மற்றும் கான்கிரீட் சாலை மயமாக்கப்பட்ட நகரங்களுக்கு மத்தியில், சிறிய பசுமை பகுதியை



வளர்ப்பது சாலச்சிறந்ததாகும். நீர்நிலைகளை தூர்வாருதல், இம்மண்ணிற்கு ஏற்ற இன மரங்களை நடுதல் மூலம் புத்துயிர் பெறுதல், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களை பராமரித்தல் ஆகியவை கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம், சிங்கார சென்னை 2.0 போன்ற திட்டங்களில் பெருமை சேர்க்கின்றன.

**வேலை வாய்ப்புகள்**

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள், மாணவர்கள் பயன்பெறும் வகையில் நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்களை ஏற்படுத்த வேண்டும். வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு திட்டங்கள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்படும்.

**சென்னை – தலைநகரம்**

சிங்கார சென்னை 2.0 ஒரு நவீன பெருநகரத்திற்கு ஏற்றவாறு பல வசதிகளை வழங்கும்.

**மறைந்தவர்களுக்கு மரியாதை**

சுகாதாரமான, சுற்றுச்சூழலுக்கு உகந்த சுடுகாடுகள் / மயானங்களை பல கட்டங்களாக நவீனபடுத்தப்பட உள்ளன. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் மற்றும் சிங்கார சென்னை 2.0 மூலம் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**பிற உட்கட்டமைப்பு**

நவீன சந்தைகள் மற்றும் இறைச்சி கூடங்கள், ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள், வீடற்றவர்களுக்கு இரவு தங்குமிடங்கள் மற்றும் விருந்தினர் தொழிலாளர்களுக்கான தங்குமிடங்களை, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், பகுதி–அடிப்படையிலான திட்டங்களை செயல்படுத்துகின்றன.

**பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம்**

ஒரு நகரத்தின் உயிர், அதன் பொது சதுக்கத்தில் உள்ளது. விக்டோரியா நினைவு மண்டபம் போன்ற வரலாற்று சிறப்பு மிக்க கட்டடங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். மக்களை கொண்டாட்டத்தில்



ஒன்றிணைக்கும் கலாச்சார விழாக்களை நடத்திட நகரங்கள் ஏதுவாக அமையும்.

**மக்கள் பங்கேற்பு மற்றும் திறன் மேம்பாடு**

நகர்ப்புர வளர்ச்சிக்கு திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றின் அனைத்து நிலைகளிலும் சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ள அனைவரின் திறனை மேம்படுத்துதல் உட்பட குடிமக்கள் பங்கேற்பிற்கான நடைமுறைப்படுத்துவதே இந்த முயற்சியாகும்.

சமீபத்தில் நடந்து முடிந்த நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தல் 12819 வார்டு உறுப்பினர்கள் மற்றும் 646 மேயர்/தலைவர்களை, தங்கள் நகருக்காக முடிவெடுக்கும் பொறுப்பில் வைத்துள்ளது. அரசின் திட்டங்கள் குறித்த தேவையான தகவல்களை வழங்கவும், அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை வரையறுக்கவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**1.1 துறைகள்**

1. நகராட்சி நிருவாக இயக்குநரகம்
2. பெருநகர சென்னை மாநகராட்சி

3. பேரூராட்சிகள் ஆணையரகம்
4. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
6. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்
7. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை
8. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்
9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்
10. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்

**1.2 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரங்கள்**

கடந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட புதிய மாநகராட்சிகளோடு, தற்போது 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளை இந்தத் துறை நிருவகித்து வருகிறது.

தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் அட்டவணை 1.1 வழங்கப்பட்டுள்ளது.



**அட்டவணை 1.1**

| வ எண் | மாவட்டம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | - | 2 | 2 | 4 |
| 2. | சென்னை | 1 | - | - | 1 |
| 3. | கோயம்புத்தூர் | 1 | 7 | 33 | 41 |
| 4. | கடலூர் | 1 | 6 | 14 | 21 |
| 5. | தர்மபுரி | - | 1 | 10 | 11 |
| 6. | திண்டுக்கல் | 1 | 3 | 23 | 27 |
| 7. | ஈரோடு | 1 | 4 | 42 | 47 |
| 8. | காஞ்சிபுரம் | 1 | 2 | 3 | 6 |
| 9. | செங்கற்பட்டு | 1 | 4 | 6 | 11 |
| 10. | கன்னியாகுமரி | 1 | 4 | 51 | 56 |
| 11. | கரூர் | 1 | 3 | 8 | 12 |
| 12. | கிருஷ்ணகிரி | 1 | 1 | 6 | 8 |
| 13. | மதுரை | 1 | 3 | 9 | 13 |
| 14. | நாகப்பட்டினம் | - | 2 | 4 | 6 |
| 15. | மயிலாடுதுறை | - | 2 | 4 | 6 |
| 16. | நாமக்கல் | - | 5 | 19 | 24 |
| 17. | நீலகிரி | - | 4 | 11 | 15 |
| 18. | பெரம்பலூர் | - | 1 | 4 | 5 |
| 19. | புதுக்கோட்டை | - | 2 | 8 | 10 |
| 20. | இராமநாதபுரம் | - | 4 | 7 | 11 |
| 21. | சேலம் | 1 | 6 | 31 | 38 |
| 22. | சிவகங்கை | - | 4 | 11 | 15 |
| 23. | தஞ்சாவூர் | 2 | 2 | 20 | 24 |
| 24. | தேனி | - | 6 | 22 | 28 |
| 25. | திருவள்ளூர் | 1 | 6 | 8 | 15 |
| 26. | திருவண்ணாமலை | - | 4 | 10 | 14 |
| 27. | திருவாரூர் | - | 4 | 7 | 11 |
| 28. | தூத்துக்குடி | 1 | 3 | 18 | 22 |

| வ. எண் | மாவட்டம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 29. | திருச்சிராப்பள்ளி | 1 | 5 | 14 | 20 |
| 30. | திருநெல்வேலி | 1 | 3 | 17 | 21 |
| 31. | தென்காசி | - | 6 | 17 | 23 |
| 32. | திருப்பூர் | 1 | 6 | 15 | 22 |
| 33. | வேலூர் | 1 | 2 | 4 | 7 |
| 34. | திருப்பத்தூர் | - | 4 | 3 | 7 |
| 35. | இராணிப்பேட்டை | - | 6 | 8 | 14 |
| 36. | விழுப்புரம் | - | 3 | 7 | 10 |
| 37. | கள்ளக்குறிச்சி | - | 3 | 5 | 8 |
| 38. | விருதுநகர் | 1 | 5 | 9 | 15 |
| | **மொத்தம்** | **21** | **138** | **490** | **649** |

## 1.3 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள்

இந்திய அரசமைப்புச் சட்டம் விதி 243 U–ன்படி, ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் பதவிக்காலமானது, அதன் முதல் கூட்டத் தேதியிலிருந்து 5 ஆண்டுகளாகும் மற்றும் அதன் பதவிக்காலம் முடிவுறும் முன்னரே, அடுத்த சாதாரணத் தேர்தல் நடத்தப்பெற வேண்டும். அவ்வாறு இந்திய அரசமைப்பு 74வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டப் பின்னர், முதலாவது சாதாரணத் தேர்தல் 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அதற்கடுத்த சாதாரணத்



தேர்தல்கள், குறித்த கால இடைவெளிகளில் 2001, 2006 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்றன. எனினும், 2016ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான 5வது சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்பெறவில்லை.

உள்ளாட்சி அமைப்புகளின் தன்னாட்சி கொள்கை மீது உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, 2016–ல் நடைபெற வேண்டிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஐந்தாவது சாதாரண தேர்தல்களை நடத்துவதற்கான தனது உறுதியை அறிவித்தது. அதன் அடிப்படையில், தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டது. புதிதாக சீரமைக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வார்டு எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்கப்பட்டன. இறுதியாக, மாநகராட்சி மேயர் மற்றும் நகராட்சித் தலைவர் பதவியிடங்களில் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள் அறிவிக்கை

செய்யப்பட்டன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகள் மற்றும் பதவியிடங்களில், முதல்முறையாக பெண்களுக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (கடம்பூர் பேரூராட்சி தவிர) 19.02.2022 அன்று வாக்குப்பதிவு சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்தப்பட்டு, வாக்கு எண்ணிக்கை 22.02.2022 அன்று நடைபெற்றது. மொத்தமுள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளில், முறையே 1373, 3842 மற்றும் 7604 வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். மாநகராட்சிகள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் முதலாவது மன்றக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியேற்றுள்ளனர். மேலும், மறைமுகத் தேர்தல் மூலம் 21 மேயர்கள்/ 21 துணை மேயர்கள் மற்றும் 138 நகர்மன்ற தலைவர்கள்/ 136 துணைத் தலைவர்கள் மற்றும் 487 பேரூராட்சி தலைவர்கள்/ 483 துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள் மற்றும் மாநகராட்சிகள், நகராட்சிகள்



மற்றும் பேரூராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் விவரங்கள், முறையே அட்டவணை 1.2 மற்றும் 1.3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.2: மாநகராட்சி மேயர்கள்/ துணை மேயர்கள் மற்றும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள்/துணைத் தலைவர்கள்.

**அட்டவணை 1.2**

| பதவியிடங்கள்/ வார்டுகள் | தாழ்த்தப்பட்டோர் (பொது) | தாழ்த்தப்பட்டோர் (பெண்கள்) | பழங்குடியினர் | பெண்கள் (பொது) | பொது | பழங்குடியினர் (பொது) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மாநகராட்சி மேயர்கள் | 1 | 2 | 0 | 9 | 9 | – | 21 |
| மாநகராட்சி துணை மேயர்கள் | – | – | – | – | 21 | – | 21 |
| நகர்மன்ற தலைவர்கள் | 10 | 10 | 1 | 58 | 59 | – | 138 |
| நகர்மன்ற துணைத் தலைவர்கள் | – | – | – | – | 136 | – | 136 |
| பேரூராட்சித் தலைவர்கள் | 42 | 42 | 2 | 199 | 201 | 1 | 487 |
| பேரூராட்சி துணைத் தலைவர்கள் | – | – | – | – | 483 | – | 483 |
| **மொத்தம்** | **53** | **54** | **3** | **266** | **909** | **1** | **1286** |

அட்டவணை 1.3: மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள்

**அட்டவணை 1.3**

| **பதவியிடங்கள் / வார்டுகள்** | **தாழ்த்தப்பட்டோர் (பொது)** | **தாழ்த்தப்பட்டோர் (பெண்கள்)** | **பழங்குடியினர்** | **பெண்கள் (பொது)** | **பொது** | **பழங்குடியினர் (பொது)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|
| மாநகராட்சி வார்டு உறுப்பினர்கள் | 74 | 85 | 0 | 605 | 609 | – | 1,373 |
| நகராட்சி வார்டு உறுப்பினர்கள் | 241 | 309 | 5 | 1,647 | 1,640 | – | 3,842 |
| பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | 565 | 797 | 21 | 3,166 | 3,050 | 5 | 7,604 |
| **மொத்தம்** | **880** | **1,191** | **26** | **5,418** | **5,299** | **5** | **12,819** |



## 2. நகராட்சி நிருவாக இயக்குநரகம்

### 2.1 நிருவாகம்

2.1.1 புதிய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் உருவாக்கம்

தமிழ்நாடு மிகவும் நகரமயமான மாநிலங்களில் ஒன்றாகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். தற்போது மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை, 53 சதவீதத்திற்கு அதிகமாக உயர்ந்துள்ளது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை, சம்பந்தப்பட்ட நகர்ப்புரங்களோடு இணைத்து, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மாநிலத்தின் மிக வேகமான நகரமயமாக்கலை கருத்திற்கொண்டு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

இதனடிப்படையில், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி நகராட்சிகள் மற்றும்

அருகில் உள்ள நகரமயமாக்கப்பட்ட பகுதிகள் இணைக்கப்பட்டு, மாநகராட்சிகளாக உருவாக்கப்படும் என்ற வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பினை, சட்டமன்றப் பேரவையில் 2021–22 மானியக் கோரிக்கையின் போது அரசு வெளியிட்டது. மேலும், தாம்பரம் நகராட்சி மற்றும் அதனருகில் அமைந்துள்ள பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் நகராட்சிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகியவற்றை இணைத்து மாநகராட்சி உருவாக்கப்படும் எனவும் அரசு அறிவித்தது.

மேலும், விரைந்து நகரமயமாகி வரும் பகுதிகளில், அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு தேவைகளை கருத்திற் கொண்டு, அரசு, பள்ளப்பட்டி, திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோளிங்கர், இடங்கணசாலை, தாரமங்கலம், திருமுருகன்பூண்டி, கூடலூர், காரமடை, கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டிணம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி மற்றும் இலால்குடி ஆகிய பேரூராட்சிகள்,



நகராட்சிகளாக நிலை உயர்த்தப்படும் என அறிவித்தது. மேலும், புகளூர் மற்றும் டி.என்.பி.எல் புகளூர் பேரூராட்சிகளை இணைத்து புகளூர் நகராட்சியாக உருவாக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது.

அரசின் இவ்வறிவிப்புகளின் அடிப்படையில், புதிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நிலை உயர்த்துதல் தொடர்பான விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, அனைத்து சட்ட நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு, 6 புதிய மாநகராட்சிகள் மற்றும் 28 நகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள், மேலும் சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகள், அதிக அளவிலான பொருளாதார வாய்ப்புகள் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவை குறித்த இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்த புதிய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் உருவாக்கத்தின் மூலம், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் நிர்வாக எல்லைகள் விரிவு

பெற்று, தற்போது, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல், ஓசூர், நாகர்கோவில், ஆவடி, தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகள் அதன் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ளன.

நகராட்சிகள், ஆண்டு வருமான அடிப்படையில் அட்டவணை 2.1ல் உள்ளவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**அட்டவணை 2.1**

| வ. எண் | வகைப்பாடு | ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்) | எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சிறப்பு நிலை | 15 க்கு மேல் | 13 |
| 2 | தேர்வு நிலை | 9 – 15 | 31 |
| 3 | முதல் நிலை | 6 – 9 | 24 |
| 4 | இரண்டாம் நிலை | 6 க்கு கீழ் | 70 |
| **மொத்தம்** | | | **138** |



**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள்**

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், அரசமைப்புச் சட்டத்தின் உறுப்புரை எண் (article) 243W, பன்னிரண்டாவது அட்டவணையில் (மக்கள் தொகை கணக்கெடுப்பு, தீயணைப்பு தவிர) குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பான்மையான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் பின்வருமாறு:

- நகர திட்டமிடல் உள்ளிட்ட நகர்ப்புர திட்டமிடல்.
- நிலப்பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டடங்களை நிர்மாணித்தல்.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான திட்டமிடல்.
- சாலைகள் மற்றும் பாலங்கள்.
- குடியிருப்புகள், தொழில் துறை மற்றும் வணிக நோக்கங்களுக்கான நீர் வழங்கல்.
- பொதுசுகாதாரம், சுகாதாரப்பணி, துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்தல்.

- நகர்ப்புர வனவியல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநலம் குன்றியவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் பலவீனமான பிரிவினரின் நலன்களைப் பாதுகாத்தல்.
- குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்.
- நகர்ப்புர வறுமை ஒழிப்புப் பணிகள் செய்தல்.
- பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்ப்புர வசதிகளை வழங்குதல்.
- கல்வி, அழகியல் மற்றும் பண்பாட்டு கூறுகளை மேம்படுத்துதல்.
- மயானங்கள், தகனமேடைகள், நவீன எரிவாயு மற்றும் மின் தகனமேடைகள்.
- கால்நடைப்பட்டிகள், விலங்குகள் மீதான கொடுமையைத் தடுத்தல்.



- பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்தல் உள்ளிட்ட முக்கிய புள்ளி விவரங்களை பதிவு செய்தல்.
- தெருவிளக்குகள், வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொது கழிப்பிடங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்துதல்.
- அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பலன்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்தல்.

## 2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு

### 2.2.1 குடிநீர் வழங்கல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தினசரி குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதுடன், குடிநீர் விநியோகிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவதும், பல்வேறு காலகட்டங்களில் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களை ஒருங்கிணைத்து தற்போதைய உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பு செய்வதும், புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து குடிநீர் வழங்கும் பகுதிகளை விரிவுப்படுத்துவதும், செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் விநியோக திட்டங்களை குறிப்பிட்ட கால

வரையறைக்குள் நிறைவேற்றுவதும் அரசின் நோக்கமாகும்.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தற்போது குடிநீர் வழங்குதல் விவரம் அட்டவணை 2.2ல் உள்ளவாறு:

**அட்டவணை 2.2**

| வகைப்பாடு | குடிநீர் அளவு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு லிட்டர்) | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாநகராட்சிகள் | 135 மற்றும் அதற்கு மேல் | 6 |
| | 110–134 | 4 |
| | 70–109 | 10 |
| நகராட்சிகள் | 135 மற்றும் அதற்கு மேல் | 7 |
| | 110–134 | 23 |
| | 70–109 | 108 |
| **மொத்தம்** | | **158** |

நகர்ப்பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும், செயல்படக்கூடிய குழாய் இணைப்புகள் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்க தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. மேலும், மாநகராட்சிகள் மற்றும் பாதாளச் சாக்கடை வசதி கொண்ட நகராட்சிகளில்,



நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீரும், பிற நகராட்சிகளில், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீரும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நீராதார அமைப்புகளை புனரமைத்தல்**

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலுள்ள மொத்த நீர்நிலைகளில் விவரம்:

| வ. எண் | நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் | நீர் நிலைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 164 |
| 2 | நகராட்சிகள் | 425 |
| **மொத்தம்** | | **589** |

நீர் ஆதாரங்களில் திடக்கழிவு மற்றும் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல், நீர்வரத்தின் நுழைவாய் மற்றும் புறவாய்க் கால்வாய்களை புனரமைத்தல், நீர் ஆதாரங்களைத் தூர்வாருதல், நகர்ப்புரத்தில் உள்ள அனைத்து நீராதார அமைப்புகளையும் முழுமையாக மீட்டெடுத்து புனரமைத்தல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல், போன்ற பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதன் மூலம் தண்ணீர் தேக்கும் கொள்ளளவு அதிகப்படுத்தப்படும்.

அதனடிப்படையில், 2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 150 நீராதாரங்கள் புனரமைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதன்படி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம், ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி(KfW) ஆகியவற்றை ஒருங்கிணைத்து, ரூ.88.62 கோடி மதிப்பீட்டில் 75 நீராதாரங்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எஞ்சிய 75 நீராதாரங்களை புனரமைக்க அம்ரூத் 2.0 திட்ட நிதி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 தெருவிளக்குகள்

தற்பொழுது, 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் 138 நகராட்சிகளில் 8.62 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெருவிளக்கு என்ற வரையறையின் அடிப்படையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் தேவையான இடங்களில் கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்கப்படும். குறைந்த செலவில் மிகுந்த திறனுடன் இயங்கும் வகையிலான தெருவிளக்குகளை அமைப்பதே அரசின்



நோக்கமாகும். இதனடிப்படையில், அனைத்து தெரு விளக்குகளும் மின்னாற்றல் சேமிப்பு விளக்குகளாக மாற்றப்படும்.

2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, 11 மாநகராட்சிகள் மற்றும் 18 நகராட்சிகளில் KfW நிதியின் கீழ், ரூ.85.43 கோடி மதிப்பீட்டில், 12,710 கம்பங்களுடன் கூடிய புதிய விளக்குகள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ், 1,00,642 புதிய விளக்குகள் ரூ.147.58 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 87 நகராட்சிகள் மற்றும் 4 மாநகராட்சிகளில், தமிழ்நாடு நகரமைப்பு நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு (TUFIDCO) நிறுவன சுழற்நிதியின் கீழ், ரூ.399.50 கோடி மதிப்பீட்டில், 3,11,601 எண்ணிக்கையிலான பழைய விளக்குகளுக்கு மாற்றாக, புதிய விளக்குகள் அமைக்கப்படுகின்றன.

### 2.2.3 சாலைகள்

நகர்ப்புர உள்ளாட்சிகளில், சாலைகள், பல்வேறு பகுதிகளை இணைப்பதிலும், போக்குவரத்து மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் பெரும்பங்கு

வகிக்கின்றன. சாலைகள், பாதுகாப்பான வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பான நடமாட்டத்திற்கு ஏதுவான வகையில், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் (MORTH) குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, அமைக்கப்படுகின்றன.

மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் நகராட்சிகளால் மொத்தம் 25,814 கி.மீ நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், 5,399 கி.மீ நீளமுள்ள சிமெண்ட் கான்கிரிட் சாலைகளும், 15,911 கி.மீ நீளமுள்ள தார் சாலைகளும், 169 கி.மீ நீளமுள்ள கப்பி சாலைகளும், 2,890 கி.மீ நீளமுள்ள மண் சாலைகளும், 1,445 கி.மீ நீளமுள்ள பேவர் பிளாக் சாலைகளும் அடங்கும். சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் குறித்த விரிவான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதனடிப்படையில் இணையவழி சொத்துக்கள் பராமரிப்பு பதிவேடு உருவாக்கப்பட்டு, அறிவியல் ரீதியாக, பணிகள் தேர்வு செய்யவும், செயல்படுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



**புதிய சாலைகள்**

2021–22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க, 400 கிலோ மீட்டர் மண் சாலைகளை, அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளாக, அதாவது, தார்ச்சாலை, சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் பதிக்கப்பட்ட சாலைகளாக மாற்றியமைக்கும் பணிகள், ரூ.300 கோடி மதிப்பீட்டில், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், மூலதன மானிய நிதி, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

**சாலைகள் மறுசீரமைப்பு**

பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், இயற்கை இடர்பாடுகள் மற்றும் பருவமழை காரணமாக சாலைகள் சேதம் அடைகின்றன. இத்தகைய சேதமடைந்த சாலைகளை சீரமைப்பது அவசியமாகிறது. 2021–22ஆம் ஆண்டில் 500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கும் இலக்கிற்கும் மேலாக, 538.23 கி.மீ நீளமுள்ள 3,046 சாலைப் பணிகள் ரூ.442.92 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம்

(TURIF), மூலதன மானிய நிதி (CGF), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மற்றும் நகர்ப்புர உள்ளாட்சிகளின் பொது நிதி ஆகியவற்றின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

**2.2.4 சுகாதாரம்**

**(I) திடக்கழிவு மேலாண்மை**

குப்பைகளை உருவாகும் இடத்திலேயே பிரித்து, மக்கும் குப்பைகளை உரமாக மாற்றவும், குப்பையிலிருந்து எரிவாயு தயாரிக்கவும் இதன் மூலம், நகரங்களை, குப்பைகளற்ற பகுதிகளாக மாற்றவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

திட மற்றும் திரவக் கழிவுகளை அறிவியல் ரீதியாகவும், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையிலும் கையாள்வது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணியாகும்.

தமிழகத்தில் உள்ள 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகளில் நாள்தோறும் சுமார் 6,811 மெ.டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. இதில், 52% ஈரக்கழிவுகள் மற்றும் 48% உலர் கழிவுகள் ஆகும். ஈரக்கழிவுகள் அறிவியல் முறையில் கையாளப்பட்டு, உரமாக மாற்றப்படுகிறது. அதுபோன்று, உலர் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுவதற்காக வளமீட்பு மையம் மூலம் வியாபாரிகளுக்கு விற்கப்படுகிறது.



மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் எரிக்கப்படக் கூடிய கழிவுகள், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு இணைச்செயலாக்க முறை மூலம் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள தேக்கத்திடக்கழிவுகளை உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (Biomining) முறையில், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையில், முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை, நிலத்தின் தன்மைக்கேற்ப, பசுமை பகுதிகளாகவோ, பூங்காக்களாகவோ மாற்ற உறுதி பூண்டுள்ளது. நகர சுகாதாரச் செயல்பாட்டுத் திட்டத்தின் (City Sanitation Action Plan) அடிப்படையில், மக்கும் மற்றும் மக்காதக் குப்பைகளை கையாளுவதில் உள்ள இடைவெளியை நிரப்பும் பொருட்டு, அதிக எண்ணிக்கையிலான நுண்ணுர உற்பத்தி மையங்கள், உயிரி எரிவாயு கூடங்கள், வள மீட்பு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**(II) தேக்கத் திடக்கழிவினை அகற்றுதல்**

தேக்கத் திடக்கழிவினை பயோமைனிங் முறையில் அகற்றும் பணிகள், சென்னை நீங்கலான 11 மாநகராட்சிகளில், ரூ.222.93 கோடி மதிப்பீட்டிலும், போன்றே ரூ.300.90 கோடி மதிப்பீட்டில் 86

நகராட்சிகளிலும், நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பல்வேறு நகரங்களில் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதி திடக்கழிவு மேலாண்மை மையங்களை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும். கூடுதல் நிலப்பகுதி, பூங்காக்கள் மற்றும் பசுமைப் பகுதிகள் உருவாக்குவது உள்ளிட்ட பொதுப்பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படும்.

2021-22 ஆம் ஆண்டில், 15 வது நிதிக் குழு மானியத்தின் கீழ், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் முறையே, ரூ.70.75 கோடி மற்றும் ரூ.24.50 கோடி மதிப்பீட்டில் உயிரியல் அகழ்ந்தாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, மணப்பாறை, தேவகோட்டை, சின்னமனூர், புளியங்குடி, விருதுநகர் ஆகிய 7 நகராட்சிகளில் KfW நிதியுதவியின் கீழ், ரூ.13.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. குன்னூர் நகராட்சியில் பொது நிதியின் கீழ், ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் பயோமைனிங் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பயோமைனிங் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**2.2.5 நகரமைப்பு**

பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவும், கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகளில் கால அவகாசத்தை குறைக்கவும், கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள் மற்றும் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றிற்கு இணையவழி சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இணைய வழி சேவையில் கட்டட அனுமதி வழங்கும் முறையில் இருந்த குறைபாடுகள் களையப்பட்டு, பொதுமக்கள் எளிதில் பயன்படுத்தும் முறை பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், கட்டட அனுமதி பெறுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

கட்டட அனுமதி வழங்க இணைய வழியில் ஒப்புதல் அளித்தவுடன், கட்டணம் செலுத்துவதற்கான கோரிக்கை நேரடியாக விண்ணப்பதாரருக்கு சென்றடைவதுடன், இணைய வழியாக மட்டுமே கட்டணம் செலுத்துவதற்கேற்ப தற்போது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகள் இணையவழி வாயிலாக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், பொது மக்கள் கட்டட அனுமதி பெறுவதற்காக எந்த ஒரு சூழ்நிலையிலும் மாநகராட்சி/ நகராட்சி அலுவலகங்களுக்கு நேரில் வரவேண்டிய தேவை முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் தொடர் கண்காணிப்பின் மூலம், அனுமதி வழங்கும் பணிகள் ஆய்வு செய்வதன் வாயிலாக கட்டட அனுமதி அளிப்பதில் கால தாமதங்கள் தவிர்க்கப்படுகிறது.

மேலும், தொழில் செய்தலை ஊக்குவிக்கும் நோக்கில், கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்திடவும், கட்டட அனுமதி வழங்க தேவைப்படும், தீயணையப்பு துறை, இந்திய வானூர்தி அதிகார அமைப்பு போன்ற பிற துறைகளின் தடையின்மை சான்றுகளை இணையதள வாயிலாக பெற ஒரு பொதுவான இணைய முகப்பு (Common Online Portal), தமிழ்நாடு மின்ஆளுகை முகமை (TNeGA) வாயிலாக விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இணையவழி சேவை மேம்படுத்தப்படும்.



### 2.2.6 இதர உட்கட்டமைப்புகள்

**(i) நவீன பேருந்து நிலையங்கள்**

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மூலம் 166 பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 2.3ல் குறிப்பிட்டுள்ளன:

**அட்டவணை 2.3**

| பேருந்துநிலையங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| **பேருந்து நிலையத்தின் தரம்** | **நகராட்சிகளில் உள்ளபேருந்து நிலையங்களின் எண்ணிக்கை** | **மாநகராட்சிகளில் உள்ளபேருந்து நிலையங்களின் எண்ணிக்கை** | **மொத்தம்** |
| A | 14 | 20 | 34 |
| B | 40 | 9 | 49 |
| C | 59 | 5 | 64 |
| D | 16 | 3 | 19 |
| **மொத்தம்** | **129** | **37** | **166** |

பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் வகையில், நகர்ப்புரங்களில் அமைந்துள்ள அனைத்து பேருந்து நிலையங்களின் தரத்தினை உயர்த்த, அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2021–22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, திருச்சிராப்பள்ளியில் ரூ.350 கோடி

மதிப்பீட்டில் வணிக மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அவ்வறிவிப்பின்படி, திருமங்கலம், நாமக்கல், திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, ஆகிய நகராட்சிகளிலும் கரூர், காஞ்சிபுரம் ஆகிய மாநகராட்சிகளிலும் நவீன பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மன்னார்குடி, ராணிப்பேட்டை, சங்கரன்கோவில் ஆகிய நகராட்சிகளிலும், ஈரோடு மற்றும் கடலூர் மாநகராட்சிகளிலும் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டிலும், தேவைக்கேற்ப புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், நவீன வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்கள் மற்றும் அதிக பயன்பாடுள்ள வணிக மையங்கள் அமைந்துள்ள இடங்களில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் ஆகியன தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும்.



**(ii) பூங்காக்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பொது மக்களின், குறிப்பாக சிறுவர்களின் நலனுக்காக, விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மொத்தம் 3,096 பூங்காக்கள் அமையப் பெற்றுள்ளன.

2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள 100 பூங்காக்கள் மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, 56 பூங்காக்கள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 44 பூங்காக்கள் மேம்படுத்தும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**(iii) மயானங்கள்**

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மூலம் மொத்தம் 1,260 மயானங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 2.4ல் உள்ளன.

**அட்டவணை 2.4**

| வ.எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | மயானங்களின் வகைப்பாடு | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தகனக் கூடம் | எரிவாயு தகனமேடை | திரவ எரிவாயு தகனமேடை | மின்தகன மேடை | மொத்தம் |
| 1 | மாநகராட்சிகள் | **452** | 33 | 20 | 6 | 511 |
| 2 | நகராட்சிகள் | **667** | 56 | 30 | 1 | 749 |
| **மொத்தம்** | | 1,119 | 128 | 50 | 7 | 1,260 |

மயானங்களில், குடிநீர், மின்விளக்குகள், மயானப் பாதைகள் மற்றும் ஈமச்சடங்குகள் செய்யும் கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் அமைப்பதை முக்கிய குறிக்கோளாக இந்த அரசு கொண்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.75 கோடி மதிப்பீட்டில் 50 மின் மயானங்கள் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

அனைத்து மயானங்களையும், மின்மயானங்களாகவோ அல்லது எரிவாயு தகன மேடைகளாகவோ படிப்படியாக மாற்றிட அரசு உறுதி பூண்டுள்ளது.



**(iv) சந்தைகள்**

பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருட்களை விற்பனை செய்வதில் சந்தைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வருவாயில் சந்தைகள் தமது பங்களிப்பை வழங்குகின்றன. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் மொத்தம் 330 சந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 2.5ல் உள்ளன:

**அட்டவணை 2.5**

| வ எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | வாரச்சந்தை/ கடைகளின் எண்ணிக்கை | | தினசரி சந்தை/ கடைகளின் எண்ணிக்கை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சந்தைகள் | கடைகள் | சந்தைகள் | கடைகள் | சந்தைகள் (3+5) | கடைகள் (4+6) |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** |
| 1 | மாநகராட்சிகள் | 25 | 2,758 | 57 | 7,024 | 82 | 9,782 |
| 2 | நகராட்சிகள் | 81 | 5,117 | 167 | 18,645 | 248 | 23,762 |
| | **மொத்தம்** | **106** | **7,875** | **224** | **25,669** | **330** | **33,544** |

தினசரி மற்றும் வாரச் சந்தைகளை மேம்படுத்துவது மற்றும் நவீனப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். பொது மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்கவும், சரக்கு போக்குவரத்தை எளிதாக கையாளுவதற்கு ஏதுவாகவும், பெரிய நகரங்களில்,

சந்தைகள் பரவலாக்கப்பட வேண்டும். மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், ரூ.50 கோடி மதிப்பீட்டில், 10 புதிய சந்தைகள் அமைப்பதற்கும், ரூ.65 கோடி மதிப்பீட்டில் 20 சந்தைகள் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கும், அரசால் 2021-22 நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, பணிகள் தற்போது பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

**2.3 நகர்ப்புர சுகாதார கட்டமைப்பு**

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், 287 மருத்துவமனைகள் மற்றும் 302 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.3.1 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன் பராமரிப்பு**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலனுக்காக சேவைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றன. பச்சிளங்குழந்தைகள் இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறின் போது தாயின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2021-22 ஆம் ஆண்டில், 15 வது நிதி



ஆணைய மானியத்தின் கீழ் மாநகராட்சிகளில் 89 நல மையங்களும், நகராட்சிகளில் 164 நல மையங்களும் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2.3.2 பாதாளச் சாக்கடை திட்டம் மற்றும் கசடு கழிவுநீர் மேலாண்மை**

மொத்தமுள்ள 20 மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), 18 மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 16 மாநகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. ஓசூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 2022-23ஆம் ஆண்டில் அம்ருத் 2.0 திட்டத்தில் செயல்படுத்தப்படும். நகரம் முழுமைக்கும் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், 10 மாநகராட்சிகளில், புதியதாக சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த, அம்ருத், சீர்மிகு நகரங்கள் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின் கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**138 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடை திட்ட செயலாக்க நிலை**

மொத்தமுள்ள 138 நகராட்சிகளில், 7 நகரங்கள் 1 இலட்சத்திற்கு கூடுதலாகவும், மற்றவை 1 இலட்சத்திற்கு குறைவாகவும் மக்கள் தொகை கொண்டுள்ளன.

- 1 இலட்சத்திற்கு கூடுதலான மக்கள் தொகை கொண்ட 7 நகரங்களுள், திருவண்ணாமலை, நாமக்கல், நாகப்பட்டிணம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 நகரங்களில் பாதாளச் சாக்கடை திட்டம் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய ஆம்பூர், காரைக்குடி மற்றும் இராஜபாளையம் ஆகிய 3 நகரங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- 50,000 முதல் 1 இலட்சம் வரை மக்கள் தொகை கொண்ட 54 நகரங்களுள், மறைமலை நகர், திருவள்ளூர், சிதம்பரம், அரக்கோணம், திருப்பத்தூர், விழுப்புரம், மேட்டூர், இராசிபுரம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, திருவாரூர், தேனி– அல்லி நகரம், போடிநாயக்கனூர், உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம், உதகமண்டலம் மற்றும் விருதுநகர் ஆகிய 18 நகரங்களில் பாதாளச் சாக்கடை திட்டம்



நிறைவேற்றப்பட்டுள்ளது. திண்டிவனம், பொள்ளாச்சி மற்றும் மேட்டுபாளையம் ஆகிய 3 நகரங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- 21 நகரங்களில் (22 நகரங்களுக்கு பயன்தரும் வகையில்), கசடுகழிவு மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டு, எடப்பாடி, திருமங்கலம், தாராபுரம், கோவில்பட்டி, கடையநல்லூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அருப்புக்கோட்டை மற்றும் திருச்செங்கோடு ஆகிய 9 நகரங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, செங்கல்பட்டு, பண்ருட்டி, விருத்தாசலம், குடியாத்தம், வாணியம்பாடி, ஆத்தூர், பரமக்குடி, கம்பம், சங்கரன் கோவில், தென்காசி, புளியங்குடி மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய 12 நகரங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- எஞ்சியுள்ள 12 நகரங்களான பூவிருந்தவல்லி, திருவேற்காடு, ஆற்காடு, பேர்ணாம்பட்டு, இராணிப்பேட்டை, ஆரணி, கள்ளக்குறிச்சி, குமாரபாளையம், தேவகோட்டை, கோபிசெட்டிபாளையம் மற்றும் வால்பாறை ஆகிய நகரங்களில் தேவை, சாத்தியக்கூறு மற்றும் நிதித்திறன் அடிப்படையில் பாதாளச் சாக்கடை

திட்டமோ அல்லது கசடு கழிவு மேலாண்மை திட்டமோ செயல்படுத்தப்படும்.

- 50,000க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட 77 நகரங்களுள், பெரம்பலூர், அரியலூர், பெரியகுளம், சின்னமனூர், சத்தியமங்கலம், சிவகங்கை, உளுந்தூர்பேட்டை மற்றும் திருச்செந்தூர் ஆகிய 8 நகரங்களில் பாதாளச் சாக்கடை திட்டம் முடிவுற்றுள்ளன. இராமேஸ்வரம், சாத்தூர், பொன்னேரி ஆகிய 3 நகரங்களில் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.
- 24 நகரங்களில் (26 நகரங்கள் பயன்பெறும் வகையில்), கசடுகழிவு மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டு, காங்கேயம், செங்கோட்டை, விக்கிரமசிங்கபுரம், துறையூர், மேலூர் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய 6 நகரங்களில் முடிக்கப்பட்டு, நெல்லிகுப்பம், வாலாஜாபேட்டை, வந்தவாசி, குளித்தலை, வேதாரண்யம், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, கூத்தாநல்லூர், அறந்தாங்கி, மணப்பாறை, ஜெயங்கொண்டம், உசிலம்பட்டி, கூடலூர், கீழக்கரை, குன்னூர், குளச்சல், குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் ஆகிய 18 நகரங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



- நரசிங்கபுரம் நகரம், செயல்பாட்டில் உள்ள கசடு கழிவுநீர் மேலாண்மை திட்டத்துடன் இணைக்கப்படும் நிலையில், கூடலூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய 2 நகரங்கள், பேரூராட்சிக்கான முடிக்கப்பட்ட கசடு கழிவுநீர் மேலாண்மை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நகரங்களில் கசடுகழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்.
- செயலாக்கத்திலுள்ள அனைத்து பணிகளையும் விரைவாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து வீடுகளுக்கும் பாதாளச் சாக்கடை இணைப்பு ஏற்படுத்தப்படும். '
- அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பாதாளச் சாக்கடை மற்றும் கசடு கழிவு மேலாண்மை திட்ட பராமரிப்பிற்கென தேவையான எண்ணிக்கையில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

### 2.4 கல்வி மற்றும் இளையோர் நலன்

அனைத்து நகராட்சிப் பள்ளிகளிலும், கற்றல் வெளிப்பாடுகளின் மீது கவனம் செலுத்தி, தரமான கல்வி வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து மேல்நிலை பள்ளிகளிலும், மாணாக்கர்களுக்கு, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, வேலைவாய்ப்பு பெறத்தக்க தொழிற்பயிற்சி மற்றும் திறனாக்க பயிற்சிகள் வழங்கப்படும்.

#### 2.4.1 நவீன நூலகங்கள்

பொதுமக்கள், குறிப்பாக போட்டி தேர்வு எழுதும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2021–22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரங்கள் திட்டம் மற்றும் மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.88.70 கோடி மதிப்பீட்டில் 40 நூலகங்கள் / அறிவுசார் மையங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



### 2.5 முன்னோடித் திட்டங்கள்

#### 2.5.1 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், அடிப்படை கட்டமைப்பில் உள்ள இடைவெளியினை நிரப்பும் பொருட்டு, அரசால், "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம்" தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 13.09.2021ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 70–ல் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்திற்கு, 2021–22ஆம் நிதி ஆண்டில் 24.09.2021–ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 70 மூலம் ரூ.1000 கோடி அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வசதிப்பணிகள், தெருவிளக்கு அமைத்தல், சாலைகள்/தெருக்கள் அமைத்தல், சமுதாய கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையம், பேருந்து நிலையங்கள் அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல், நீர் நிலைகளை புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகள், தகன மேடைகளை கட்டுதல்

மற்றும் மேம்பாடு செய்தல், சந்தைகள் அமைத்தல், பூங்காங்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் நிறுவுதல் மற்றும் சமுதாய கூடங்கள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ளப்படும். நகராட்சிகளுக்கு ரூ.486.15 கோடி மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.449.73 கோடி என மொத்தம் ரூ.935.88 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், நகராட்சிகளில் நடைபெற்று வரும் பணிகளின் விவரம் அட்டவணை 2.6ல் உள்ளவாறு:

**அட்டவணை 2.6**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு செய்யப்பட்டவை / அனுமதிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | புதிய சந்தைகள் | 7 | 29.63 |
| 2 | சந்தைகள் மேம்பாடு | 17 | 55.19 |
| 3 | நூலகம் / அறிவு சார் மையங்கள் | 25 | 45.21 |
| 4 | நவீன எரிவாயு தகனமேடைகள் | 29 | 43.45 |
| 5 | பூங்காங்கள் | 56 | 30.06 |
| 6 | நீர் நிலைகள் புனரமைப்பு | 42 | 57.69 |
| 7 | சாலைகள் | 174 | 206.92 |
| **மொத்தம்** | | **350** | **486.15** |



அனைத்து பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.5.2 நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)**

சுய உதவி நடைமுறையை மேம்படுத்துவது மற்றும் சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிப்பது ஆகிய நோக்கங்களுக்காக, 'நமக்கு நாமே திட்டத்தை (நகர்ப்புரம்)' அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 13.09.2021 ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.71–ல் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், நகர்ப்புர உள்ளாட்சிகளில், நீர் நிலைகளை சீரமைத்தல், பூங்காக்களை நிறுவுதல், மேம்பாடு செய்தல், சீரமைத்தல், விளையாட்டுத் திடல்கள், போக்குவரத்து திட்டுகள், நீரூற்றுகள், தெரு விளக்குகள் அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள்

நிறுவுதல், மரங்கள் நடுதல் மற்றும் அவற்றை பாதுகாத்தல், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களுக்கு பயன்படும் கட்டடங்கள் ஆகியவற்றை கட்டுதல் மற்றும் சீரமைத்தல், பொது நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைத்தல், பாலங்கள், சிறு பாலங்கள் அமைத்தல், புதிய தகனமேடைகள், மழைநீர் வடிகால்கள், தார், சிமெண்ட், மண்/கப்பி/WBM சாலைகள்/தெருக்களை அனைத்து பருவ காலங்களுக்கேற்ற சாலைகளாக, அதாவது, தார், சிமெண்ட் கான்கிரிட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக தரம் உயர்த்துதல், பொது மற்றும் சமுதாய கழிவறைகள் கட்டுதல், கடைகள், சந்தைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் பணிகளுக்கு, (நீர்நிலை புனரமைப்பு பணிகள் தவிர்த்து) குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்காகும். நீர் நிலை சீரமைப்பு பணிகளுக்கு குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் 50



சதவீதம் ஆகும். பொது மக்கள் பங்களிப்பிற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (புதிய திட்டங்கள்) துறை, 20.12.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.129–ல் முதல் தவணையாக ரூ.150 கோடியை விடுவித்துள்ளது.

தற்போதுவரை மாநகராட்சிகளில் 136 பணிகளும், நகராட்சிகளில் 221 பணிகளும் அனுமதிக்கப்பட்டு அவற்றில் பல பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.5.3 நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம்

பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், நீர்நிலைகள் புனரமைப்பு போன்ற பொதுச்சொத்துகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் நகர்ப்புர வறியோரை ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் நோக்கில் தமிழ்நாடு நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. முன்னோடி முறையில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு, 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.75 கோடி ஒதுக்கியுள்ளது.

இத்திட்டம், 2021–22ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் இரண்டு மண்டலங்களிலும், 14 மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலத்திலும், 7 நகராட்சி நிருவாக மண்டலங்களில் தலா ஒரு நகராட்சியிலும், 37 மாவட்டங்களில் தலா ஒரு பேரூராட்சியிலும் முன்னோடி முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கான ஊதியம் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் அட்டவணை 2.7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7**

| நகர்ப்புர உள்ளாட்சி | ஊதிய விவரம் (ரூபாய் நாள் ஒன்றுக்கு) |
|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர், ஆவடி மாநகராட்சிகள் | 382 |
| இதர மாநகராட்சிகள் | 363 |
| நகராட்சிகள் | 342 |
| பேரூராட்சிகள் | 300 |

இத்திட்டத்தில் 14 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இதுவரை 63,480 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2022–23 ஆம் ஆண்டில் இத்திட்டம் தேவையின் அடிப்படையில் நீட்டிக்கப்படும்.



## 2.6 செயல்பாட்டிலுள்ள திட்டங்கள்

### 2.6.1 அரசின் திட்டங்கள்

**(i) சீர்மிகு நகரங்கள் திட்டம்**

பொது மக்களுக்கு முக்கிய உட்கட்டமைப்பு, சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சுற்றுச்சூழல் வழங்குதல் மற்றும் உயர்ந்த வாழ்க்கை தரத்தை வழங்கக்கூடிய நகரங்களாக திகழச் செய்யும் நோக்கத்துடன் ஒன்றிய அரசு, சீர்மிகு நகரங்கள் திட்டத்தை 2015 ஆம் ஆண்டு துவக்கியது. மேலும், இத்திட்டமானது, நிலைக்கத்தக்க, உள்ளடக்கிய வளர்ச்சியில், சேவைகள் வழங்குவதில் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்தவும் மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியை தேர்ந்தெடுத்து, அதில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணியானது, பிற நகரங்களிலும் பிரதிபலிக்கக்கூடியவாறு, பிற வளர்ச்சி அடையக் கூடிய நிலையில் உள்ள நகரங்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழும் வண்ணம் பணிகள் மேற்கொள்ள வகை செய்கிறது.

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரத்

திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக **ரூ.1000** கோடி நிதி, **50:50** என்ற விகிதத்தில் இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் பங்காக ஒவ்வொரு நகரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 10 மாநகராட்சிகளில் (பெரு நகர சென்னை மாநகராட்சி தவிர) இதுவரை, ரூ.9,722.62 கோடி மதிப்பிலான 619 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.1,853.45 கோடி மதிப்பிலான 247 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. சீர்மிகு நகரங்கள் திட்டக் காலம், தற்போது 2023 ஆம் ஆண்டு மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**(ii) அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம்**

அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் நோக்கமானது, குடிநீர், கழிவு நீர் மற்றும் கசடு கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால், மோட்டார் சாராத வாகன போக்குவரத்து, பூங்காக்கள் மற்றும் பசுமைப் பகுதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகள் நிறுவப்படுவதை உறுதிப்படுத்துவதாகும். இத்திட்டத்தின் கீழ், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட மாநகரங்கள், சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம்



வாய்ந்த நகரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட 26 மாநகரங்கள், 2 சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களான வேளாங்கன்னி மற்றும் இராமேஸ்வரம் என, மொத்தம் 28 நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| **நகரங்கள்/மக்கள் தொகை** | **இந்திய அரசின் பங்கு** | **தமிழ்நாடு அரசின் பங்கு** | **நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் பங்கு** |
|---|---|---|---|
| 10 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 33% | 20% | 47% |
| 10 இலட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 50% | 20% | 30% |

இத்திட்டத்தின் கீழ், நகராட்சி நிருவாக இயக்குநரக நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 18 மாநகராட்சிகள் மற்றும் 7 நகராட்சிகளில், ரூ.9,977.37 கோடி மதிப்பீட்டில் 385 கட்டமைப்புப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

மேலும், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின்

பங்களிப்பு நிதியை ஆசிய மேம்பாட்டு வங்கி / ஜெர்மன் வங்கி / தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் / ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் / மூலதன மானிய நிதி ஆகியவற்றின் கீழ் வழங்க அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்ட காலம் 2023ஆம் ஆண்டு மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

செயலாக்கத்தில் உள்ள திட்டங்களின் சுருக்கம் அட்டவணை 2.8ல் உள்ளன:

**அட்டவணை 2.8**

| பிரிவு | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | முடிக்கப் பட்ட திட்டங்கள் | முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 14 | 5,870.22 | 8 | 6 |
| பாதாள சாக்கடை திட்டம் | 13 | 3,912.89 | 2 | 11 |
| பசுமை பகுதிகள் / பூங்காக்கள் | 358 | 194.26 | 358 | – |
| **மொத்தம்** | **385** | **9977.37** | **368** | **17** |



**(iii) அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் – அம்ரூத் 2.0**

அம்ரூத் 2.0 திட்டத்தினை அக்டோபர், 1ம் தேதி 2021 ஆண்டு இந்திய அரசு துவக்கியது. 500 நகரங்களில் அம்ரூத் திட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றியினைத் தொடர்ந்து, நாட்டின் அனைத்து நகரங்களுக்கும் குடிநீர் ஆதாரப் பாதுகாப்பினை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நீரின் முழுமையான பயன்பாட்டினை ஊக்கப்படுத்தும் நோக்கில் குடிநீர் தேவைகள், நீர்நிலைகளை புனரமைத்தல், நீர்நிலை மேலாண்மை, மூன்றாம் நிலை சுத்திகரிப்பின் மூலம் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுபயன்பாட்டிற்கான வழிகளை ஆராய்தல் போன்றவற்றில், இத்திட்டம் கவனம் செலுத்தும். இத்திட்டத்தின் கீழ் பணிகளை செயல்படுவத்துவதற்கான ஒன்றிய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.76,760 கோடி. இதில் தமிழ்நாட்டிற்கு ரூ.4,935 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிதிக்கூறு**

| நகர மக்கள் தொகை | இத்திட்டத் திற்கான ஒன்றிய அரசின் மானியம் | மாநில/நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் |
|---|---|---|
| 10 இலட்சத்திற்கு மேல் | 25% | 75% |
| 1 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை | 33% | 67% |
| 1 இலட்சத்திற்கும் குறைவாக | 50% | 50% |

**அனைவருக்கும் குடிநீர் வழங்கும் நோக்கம்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 சதவீதம் குடிநீர் விநியோகிக்க வழிவகை செய்தல், அம்ரூத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும், இத்திட்டத்தின் மூலம் 28 அம்ரூத் நகரங்களில் 100 சதவீதம் கழிவுநீர் மற்றும் கழிவுகசடு மேலாண்மை வழங்குவதை உறுதி செய்யும்.

**பொது மற்றும் தனியார் பங்களிப்பை மேம்படுத்துதல்**

10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட அனைத்து நகரங்களும், தங்களது மொத்த திட்ட நிதி ஒதுக்கீட்டில், குறைந்தபட்சம் பத்து சதவீதம்



அளவில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது மற்றும் நகரங்களுக்கு முழுமையான குடிநீர் பாதுகாப்பை வழங்குவது ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் வலுவான சீர்திருத்த திட்டங்களை அம்ரூத் 2.0 கொண்டுள்ளது.

நகராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து 158 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகள்) 'நகர குடிநீர் சமநிலைத் திட்டம்' தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் அனைவருக்கும் குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்நிலைகளின் நீடித்த மேலாண்மை மற்றும் அம்ரூத் நகரங்களில் 100 சதவீத கழிவுநீர் மற்றும் கழிவுகசடு மேலாண்மை ஆகியவற்றிற்கான திட்டப்பணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

அம்ரூத் 2.0 திட்டத்தின் சீர்திருத்த செயல் திட்டங்கள், முதல் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட வேண்டும். சீர்திருத்த செயல்

திட்டங்கள், கட்டாயமாக செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் ஊக்கத்தொகை அடிப்படையிலான சீர்திருத்தங்கள் என இரு வகைப்படும்.

- சொத்துவரி மற்றும் பயனாளி செலுத்தவேண்டிய கட்டணங்களில் கட்டாய சீர்திருத்தங்கள் இருக்கும்.
- உள்ளாட்சி அமைப்புகளில், மக்களின் குறைகளை தீர்ப்பதற்கான பயனுள்ள அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- நீர் பாதுகாப்பு, நகர்ப்புர ஆளுமை மற்றும் ஆற்றல் திறன் ஆகியவற்றில் ஊக்கத்தொகை அடிப்படையிலான சீர்திருத்தங்கள் இருக்கும்

**(iv) தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புரம்) 2.0**

தூய்மை இந்தியா (நகர்ப்புரம்) திட்டத்தின் கீழ், 135 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் 'திறந்தவெளியில் மலம் கழிக்காத நகரங்களாக' அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இந்நிலையை தக்கவைத்துக் கொள்வது நகரங்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.



அனைவருக்கும் கழிவறைகளை வழங்குவதன் மூலம், அனைத்து நகர்ப்புரங்களையும் 'திறந்தவெளியில் மலம் கழிக்காத நகரங்களாக' உருவாக்குவதற்கு இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

தூய்மை இந்தியா (நகர்ப்புரம்) திட்டத்தின் கீழ், இதுவரை 5,07,143 தனிநபர் கழிப்பறைகள் (IHHL), 22,337 சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், இலகுரக வணிக வாகனங்கள் மற்றும் டிப்பர் லாரி போன்ற முதன்மை சேகரிப்பு வாகனங்களை வாங்குதல், நுண் உரம் தயாரிக்கும் மையங்கள், வள மீட்பு மையங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்புப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் தொடர்ச்சியாக, தூய்மை பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தி அதனை நீடித்து நிலை நிறுத்தும் பொருட்டும், 'தூய்மை இந்தியா (நகர்ப்புரம்) திட்டம் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட 2021 அக்டோபர் 1 அன்று 'தூய்மை இந்தியா திட்டம் 2.0 தொடங்கப்பட்டது. இத்திட்டம் 5 ஆண்டுகள் வரை, அதாவது 2026 அக்டோபர் வரை செயல்படும்.

ஒரு இலட்சத்திற்கு குறைவான மக்கள்தொகை கொண்ட அனைத்து நகரங்களிலும்

கழிவுநீர், சாக்கடை, கசடு கழிவு உள்ளிட்ட அனைத்து வகையான பயன்படுத்தப்பட்ட நீரையும் பாதுகாப்பாக சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் சுத்திகரித்தல்.

**தூய்மை இந்தியா திட்டம் 2.0 – நோக்கங்கள்**

(i) ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை உள்ள அனைத்து அதிகார அமைப்பு கொண்ட நகரங்களிலும், திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை நிலைநிறுத்துவது, சுத்திகரிக்கப்படாத மலக்கசடு, பயன்படுத்தப்பட்ட நீர் ஆகியவற்றை திறந்தவெளியில் வெளியேற்றாமலும், அனைத்து வகை பயன்படுத்தப்பட்ட (கழிவுநீர் மற்றும் கசடுநீர், வீட்டு உபயோக கழிவுநீர் மற்றும் கழிப்பறை கழிவுநீர் உட்பட) நீரினை பாதுகாப்பாக உள்ளிடவும், கொண்டு செல்லவும், சுத்திகரிப்பு செய்யவும், அச்சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி முறையில் அதிக அளவில் மீண்டும் பயன்படுத்துதல்.

(ii) மேலும், அனைத்து நகரங்களையும் தூய்மையான மற்றும் குப்பை இல்லா நகரமாக மாற்றுவதுடன், 100% திடக்கழிவுகளை அறிவியல்



முறையில் தீர்வு செய்தல், உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், கட்டுமானம் மற்றும் இடிப்புக் கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்தல், நெகிழி கழிவு மேலாண்மை மற்றும் அனைத்து தேக்கத்திடக் கழிவுகள் கொட்டும் இடங்களையும் சரிசெய்தல்.

(iii) அதிகளவில் மக்கள் பங்கேற்புடன் இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை உறுதி செய்வதுடன், இதனை 'மக்கள் இயக்கமாக' (Peoples' movement) மாற்றி தூய்மை பழக்கவழக்கங்களை நடைமுறைப்படுத்தி, அத்திறனை மக்கள் தொடர்வதை உறுதி செய்தல்.

இத்திட்டத்தின் நிதிப் பங்கீடு விவரம் பின்வருமாறு:

| நகர மக்கள் தொகை | இத்திட்டத்திற்கான இந்திய அரசின் மானியம் | மாநில அரசு/ நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு |
|---|---|---|
| 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை | 25% | 75% |
| 1 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை மக்கள் தொகை | 33% | 67% |

| | | |
|---|---|---|
| 1 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை | 50% | 50% |

மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய நிபந்தனைகள்:

- 15 வது நிதிக்குழு பரிந்துரைத்தபடி, சந்தை வீதங்களுக்கேற்ப சொத்து வரி விகிதங்களை சீரமைத்தல் மற்றும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்திக்கேற்ப ஆண்டுதோறும் சொத்து வரியை சீராய்வு செய்தல்.
- வழங்கப்படும் சேவைகளுக்கான பயனாளி கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் இரண்டு வருட காலத்திற்குள் செயல்பாட்டு செலவுகளை மீட்டெடுக்கும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் கட்டணங்களை உயர்த்துதல்.
- அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் பொதுநிதி மேலாண்மை முறையினை (PFMS) மேற்கொள்ளுதல்.

### (v) தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ( NULM )

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புர சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம் மற்றும்



நகர்ப்புர இரவு உறைவிடம் ஆகியவை நகராட்சி நிருவாக இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப்புரத்தில், தங்க வசதியின்றி தெருவில் வசிப்போருக்கு (Street dwellers) இதுவரை, 56 நகராட்சிகள் மற்றும் 20 மாநகராட்சிகளில் 229 உறைவிடங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வீடற்றோருக்கு நாகரிகமான மற்றும் பாதுகாப்பான தங்குமிடத்தை வழங்குவதற்காக இலவச உணவு வசதியுடன் கூடிய இரவு நேர உறைவிடங்களை அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் அமைப்பது அரசின் கொள்கையாகும். 2021-22 ஆம் ஆண்டில் 15 உறைவிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புர சாலையோர வியாபாரிகள் நலத்திட்டத்தின் கீழ், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சாலையோரம் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு உதவிடும் வகையில், தள்ளு வண்டிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, மதுரை, ஈரோடு மாநகராட்சிகள் மற்றும் திருவண்ணாமலை நகராட்சிக்கு 1,652 தள்ளுவண்டிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாக

இயக்குநரின் நிருவாக கட்டுப்பாட்டில் உள்ள மீதமுள்ள 18 மாநகராட்சிகள் மற்றும் 137 நகராட்சிப் பகுதிகளில் உள்ள வியாபாரிகளுக்கு தள்ளுவண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 2021–22 ஆம் ஆண்டில், 22 நகராட்சிகள் மற்றும் ஒரு மாநகராட்சியில் மொத்தம் 2,120 தள்ளுவண்டிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சாலையோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் 7% வட்டி மானியத்துடன் ரூ.10,000/– கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அனைத்து மாநகராட்சிகள் (சென்னை உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள 3,44,236 சாலையோர வியாபாரிகளுக்கு, கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, **1,60,653** சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.160.**65** கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **1,**83,583 சாலையோர வியாபாரிகளுக்கும் வங்கிகள் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.6.2 மாநில அரசின் திட்டங்கள்

(i) **மூலதன மானிய நிதி** (Capital Grant Fund)

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (IGFF), மூலதன மானிய நிதி (CGF) என



மறுபெயரிட்டு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில், இந்நிதிக்கான ஒதுக்கீடு 7 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிதி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று நிலைகளுக்கு, நிலை வாரியாக வழங்கப்படுகிறது. இந்த நிதி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படைப் பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பான மூலதன பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்நிதியின் கீழ், 2020–21 ஆம் ஆண்டில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, ரூ.261.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 6 மாநகராட்சிகளுக்கு ரூ.141.76 கோடியும் மற்றும் 18 நகராட்சிகளுக்கு ரூ.119.55 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் மூலதன மானிய நிதியின் கீழ், ரூ.453.52 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அடிப்படை உள்கட்டமைப்பு பணிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### (ii) இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Operation and Maintenance Gap filling Fund)

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த அதிகாரப் பகிர்வு நிதியில், 5% இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கு வழங்கப்படுகிறது. அடிப்படை கட்டமைப்பு வசதிகளான, குடிநீர் வழங்குதல், பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவு, நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் மின் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் நிதி தேவைப்படும் போது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது.

2020–21–ம் ஆண்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.119.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 14 மாநகராட்சிகளுக்கு ரூ.60.70 கோடியும், 86 நகராட்சிகளுக்கு ரூ.58.42 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு முகமைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, 2021–22 ஆம் ஆண்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு



இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.151.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP).

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல் போன்ற பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், 2021–22–ல் 13 மாநகராட்சிகள் மற்றும் 21 நகராட்சிகளில் ரூ.250 கோடி மதிப்பீட்டில், 1,810 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 37 பணிகள் ரூ.17.84 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.7 வெளிஆதார நிதியுதவித் திட்டங்கள்

தமிழக அரசு வெளிஆதார நிதியுதவியுடன் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 2.7.1 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவித் திட்டம்

ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 37 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், நீர் நிலைகள் புனரமைப்பு, குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள், கூட்டுக் குடிநீர் திட்டம், விளையாட்டு திடலுடன் கூடிய பூங்காக்கள் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டம் போன்ற 35 பணிகள் ரூ.3,049.48 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றுள், 25 திட்டப் பணிகள் ரூ.1,783.70 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. நிலுவையிலுள்ள அனைத்து பணிகளையும் விரைந்து நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் நடப்பு ஆண்டில் 17 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 30 நீர்நிலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.29.73 கோடி மதிப்பீட்டிலும்,



9 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பயோமைனிங் திட்டப்பணிகளை ரூ.55 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் கூடிய SMIF–TN–3 திட்டத்தின் கீழ், யூரோ 500 மில்லியன் (தோராயமாக ரூ.4,250 கோடி) புதிய கடன் பெறுவதற்கு அடுத்தடுத்து உள்ள திட்டங்களின் பட்டியல் இறுதி செய்யப்பட்டு வருகிறது.

### 2.7.2 உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ரூ.3,831 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 7 ஆண்டு கால அளவிலான இத்திட்டம், 31 மார்ச் 2022 அன்று வரை திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, மூன்று கூறுகளைக் கொண்டது. அதாவது, நகர்ப்புர ஆளுகைக் கூறு, நகர்ப்புரப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக்கூறு மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக்கூறு ஆகும்.

மேற்கூறிய 3 கூறுகளில், நகர்ப்புர ஆளுகை (மாதிரி நகரம்) மற்றும் நகர்ப்புரப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவி ஆகியவை நகராட்சி நிருவாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு, தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(i) நகர்ப்புர ஆளுகை (மாதிரி நகரம்) கூறு**

நகர்ப்புர மேலாண்மையில் சிறந்த அம்சங்களை செயல்படுத்துவதே மாதிரி நகரங்கள் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நகர்ப்புர மேலாண்மை மற்றும் ஆளுகை கூறை பொறுத்தவரையில் இந்த மாதிரி நகரங்கள் தமிழ்நாட்டிலுள்ள பிற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

இந்தக்கூறின் கீழ் ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் ஆகியவை மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாதிரி நகரங்களில் நகர்ப்புர மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்திட திட்ட காலமான 7 ஆண்டுகளுக்கும் மொத்தம் ரூ.383.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டு வரை நகர்ப்புர மேலாண்மை இலக்குகள்



எய்தப்பட்டமைக்காக மாதிரி நகரங்களுக்கு ரூ.356.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(ii) நகர்ப்புரப் பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக் கூறு**

நகர்ப்புரப் பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக் கூறின் கீழ், நகரங்களில் மின் ஆளுகை, பொது நிதி மேலாண்மை/ புவியியல் தகவல் முறைமை, திறன் மற்றும் நிறுவன மேம்பாட்டுப் பணிகளை வலுப்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுகை**

நகராட்சி நிருவாகத்தில் மின் ஆளுகை மூலம் பணிகளை கையாளுவதற்கு, தமிழக அரசு மிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புரங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும் தரமாகவும் சேவைகளை செய்வதற்கு 29 நகராட்சி மின் ஆளுகை சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்குறிக்கோளை அடைவதற்கு, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் "மையப்படுத்தப்பட்ட வலைதள மின் ஆளுகை பயன்பாடு" என்ற சீரிய திட்டம் ரூ.18.31 கோடியில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்ட நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு, அனைத்து

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 29 மின் ஆளுகை சேவைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த வசதியை திறம்பட பயன்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு வழங்கிய வழிகாட்டுதல்களை செயல்படுத்துவதற்காக UTIS மென்பொருளின் கீழ் பின்வரும் புதிய தொகுதிகள் / கூடுதல் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

(i) வணிக எளிதாக்குதலுக்கு ஏதுவாக, UTIS மென்பொருளில் மாற்றியமைத்தல் / சேர்த்தல் ஆகியவை செய்யப்பட்டுள்ளது.

(ii) பொது சேவை மையம் (CSC) மூலம் பல்வேறு துறைகளில் இருந்து பல சேவைகளை வழங்குவதற்காக 10 தொகுதிகள் மாவட்ட இணைய முகப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

(iii) குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட தொகுதிகளுடன் வீட்டிணைப்புக்கான குழாய் பதிப்புக் கட்டணங்களை வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



(iv) திடக்கழிவு மேலாண்மை பயனாளி கட்டணங்களை வசூலிப்பதற்காக புதிய தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

(v) 1,200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டிடத்தை கட்டுவதற்கான விரைவான ஒப்புதலுக்கு ஏற்ப, கட்டிட திட்ட ஒப்புதல் தொகுதியில் கூடுதல் அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(vi) மாநிலத்தில் வணிக எளிதாக்குதலை மேம்படுத்துவதற்காக, வளர்ச்சி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை ஆய்வு மென்பொருள் தொழில் துறையின் வழிகாட்டி நிறுவனத்தின் ஒற்றை சாளர இணைய முகப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**சொத்துக்கள்**

✓ UTIS மென்பொருளில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கணக்குகள் மற்றும் ரசீது செயல்முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது மற்றும் அனைத்து கட்டண உறுதிச் சீட்டுகளும் இணைய வழியில் தயாரிக்கப்படுகின்றன. இறுதிப் பணம் செலுத்திய பிறகு, சொத்துக்களின் விவரங்கள் அந்தந்தப் பதிவேடுகளில் தானாகவே பதிவு

செய்துவிடும். சொத்துப் பதிவேடுகள் பதிவேற்றப்பட்டவுடன், சொத்துக்கள் பற்றிய நிகழ்நேரத் தகவலை வழங்கும் சேவை மென்பொருளில் பராமரிக்கப்படும்.

- ✓ பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் நிலையைக் கண்காணித்தல் / மதிப்பாய்வு செய்வதற்கான வரைகலை மென்பொருளுடன் கூடிய புதிய தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுதியின் மூலம் திட்டங்களைச் செயல்படுத்துவது கண்காணிக்கப்படுகிறது.

அனைத்து வகையான நகர்ப்புர சேவைகளை குடிமக்கள் தங்கள் இல்லங்களிலேயே பெறுவதை உறுதிபடுத்தும் வகையில், **"நமது சேவையில் நகராட்சி, மக்கள் சேவையில் மாநகராட்சி"** என்ற திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியோடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அனைத்தையும், நிகழ் நேரத்தில் எளிமையாக கையாளும் வகையில் சேவைகளை மக்களின் வீட்டிற்கே கொண்டு



செல்வது, நகர்ப்புர மின் ஆளுகையின் நோக்கமாகும். இது நகர்ப்புர உள்ளாட்சிகளின் ஆளுகையில் மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தி வணிக எளிதாக்குதலை மேம்படுத்துவதுடன், வெளிப்படைத் தன்மை மற்றும் செயலாக்கத்தினை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

**ஆ) திறன் மற்றும் நிறுவன மேம்பாடு**

திறன் மற்றும் நிறுவன மேம்பாடு துணைக் கூறின் கீழ் ரூ.9.28 கோடி செலவில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 37,819 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் திட்ட காலத்தை ஓராண்டுக்கு, அதாவது 01.04.2022 முதல் 31.03.2023 வரை நீட்டிக்க இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. திட்ட காலத்தை 31.03.2023 வரை நீட்டிக்க உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் நீட்டிக்கப்பட்ட காலத்தில், பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(i) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

(ii) 14 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் புவியியல் தகவல் முறைமை கணக்கெடுப்பு ரூ. 9.58 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும் மற்றும்

(iii) நகராட்சி நிருவாக இயக்குநரகத்திற்கு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பொது நிதி சம்பந்தமான சீர்திருத்தங்களை செயலாக்குவதற்கும் மற்றும் நிலைநிறுத்துவதற்கும் ஏதுவாக, உத்திகள் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநரகத்தில் பொது நிதி மேலாண்மை சீர்திருத்தப் பிரிவு நிறுவப்படும்.

## 2.8 நிதி மேலாண்மை

### 2.8.1 மாநில நிதி ஆணையம்

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான ஒதுக்கீடு மற்றும் விடுவிக்கப்பட்ட



மானியத்தொகை விவரங்கள் கீழே அட்டவணை 2.9ல் உள்ளவாறு:

**அட்டவணை 2.9** (ரூ. கோடியில்)

| | 2021-22 | | 2022-23 | |
|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள்** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப்பட்டது** | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப்பட்டது** |
| மாநில ஆணைய மானியம் | 1,485.74 | 1,485.74 | 1,756.00 | - |
| மூலதன மானியம் | 287.95 | 287.86 | 329.25 | - |
| இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை | 95.98 | 95.98 | 109.75 | - |
| **நகராட்சிகள்** | | | | |
| மாநில ஆணைய மானியம் | 1,063.41 | 1,063.41 | 1,273.10 | - |
| மூலதன மானியம் | 208.76 | 208.76 | 238.71 | - |
| இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை | 69.58 | 69.58 | 79.57 | - |

### 2.8.2 ஆறாவது மாநில நிதி ஆணையம்

நிதித்துறையின் 06.03.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 50-ன்படி அமைக்கப்பட்ட

ஆறாவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வாணையத்தின் பரிந்துரைக் காலம் 01.04.2022 முதல் தொடங்குகிறது.

### 2.8.3 ஒன்றிய நிதி ஆணையம்

ஒன்றிய வரி வருவாயை மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பகிர்வு செய்வது குறித்தான பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 280–வது பிரிவின் கீழ் 15வது நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. 15–வது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலம் 2020–21 முதல் 2025–26 வரை ஆகும். 15–வது நிதி ஆணையம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (Million plus cities) மற்றும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (Non–million plus cities) என இரண்டு பிரிவுகளாக பிரித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி,



கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவையாகும். பிற மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் புனித தோமையர் மலை மற்றும் வெலிங்க்டன் கன்டோன்ட்மன்ட் போர்டுகள் ஆகியவை 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவையாகும்.

15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், ஒன்றிய அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிபந்தனையுடன் கூடிய (Tied) மானியம் மற்றும் நிபந்தனையற்ற (UnTied) மானியம் என இரண்டு பிரிவுகளாக மானியம் வழங்குகிறது. 15வது நிதி ஆணையம், கன்டோன்மன்ட் போர்டுகளுக்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் மானியம் வழங்க பரிந்துரைத்துள்ளது. 2021–22 ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட மானிய விவரம் அட்டவணை 2.10ல் உள்ளவாறு:

அட்டவணை 2.10

(ரூ.கோடியில்)

| மானிய வகை | 2021-22 | |
|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிக்கப்பட்டது |
| 10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையுடன் கூடிய மானியம்) | 420.00 | 420.00 |
| 10 இலட்சத்திற்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையுடன் கூடிய மானியம்) | 369.70 | 369.70 |
| 10 இலட்சத்திற்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையற்ற மானியம்) | 246.46 | 246.46 |

**10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களின் ஒருங்கிணைப்பு**

பெரிய நகரங்கள் வேகமாக வளரும் போக்கைக் கொண்டிருப்பதால், காற்றின் தரத்தை மேம்படுத்துதல், நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் திறமையான திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துதல் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, மானியங்கள் வழங்கப்படுகின்றன. 15-வது நிதி ஆணையம், 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்



தொகை கொண்ட நகரங்களுக்கு, நிபந்தனையுடன் கூடிய மானியத்தை மட்டுமே பரிந்துரைத்துள்ளது. சில அளவுகோல்களை நிறைவேற்றும் பட்சத்தில் இம்மானியம் விடுவிக்கப்படுகிறது.

இந்திய அரசு, நீர், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் காற்றின் தரத்திற்கான மானியங்களை பரிந்துரைக்க, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பு அமைச்சகங்களாக நியமித்துள்ளது. இந்த அமைச்சகங்கள் மேற்கண்ட நகரங்களுக்கு மானியம் வழங்குவதற்கான பரிந்துரைகளை அளிப்பதற்கு இலக்குகளை உருவாக்கியுள்ளன.

2021-22 ஆம் ஆண்டில், 15வது நிதிக்குழு மானியத்திலிருந்து இதுவரை, ரூ.146 கோடி மதிப்பீட்டிலான 126 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றில், 22 பணிகள் முடிக்கப்பட்டு மற்ற பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

**10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்**

10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு, வழங்கப்படும் மானியத்தில், 50 விழுக்காடு நிபந்தனையுடன் கூடிய மானியமாகும்.

இம்மானியம், (அ) துப்புரவு மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) நிலையைப் பராமரித்தல் மற்றும் (ஆ) குடிநீர் விநியோகம், மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகிய அடிப்படை சேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். உள்ளாட்சி அமைப்புகள், இயன்றவரையில் இவ்விரண்டு மிக முக்கியமான சேவைகளுக்கு, நிபந்தனையுடன் கூடிய மானியத்தின் ஒரு பாதியை ஒதுக்க வேண்டும். இருப்பினும், ஏதாவதொரு உள்ளாட்சி அமைப்புகளில் மேற்குறிப்பிட்ட ஒரு சேவையில் நிதித்தேவைகள் முற்றிலுமாக நிறைவு பெற்றுவிட்டால், மற்றுறொரு சேவைக்கு இந்நிதியினை பயன்படுத்தலாம்.

அடிப்படை மானியத்தின் மற்றுறொரு பாதி நிபந்தனையற்ற நிதியாகும். இந்நிதி, சம்பளம் அல்லது பிற பணியமைப்பு செலவுகள் தவிர்த்து, நில பயன்பாடு ஒழுங்குமுறை, நகர்ப்புர திட்டமிடல், தீயணைப்பு சேவைகள், குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம், சாலைகள், வடிகால் மற்றும் கல்வெட்டுகள், இடுகாடுகள் மேம்பாடு, இறைச்சிக் கூடம் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை முறைப்படுத்துதல் போன்ற இடம் சார்ந்த மேம்பாட்டு பணிகளுக்கும் மற்றும் தெரு விளக்குகள், வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து



நிறுத்தங்கள் போன்ற பொது வசதிகள் உள்ளிட்ட ஏதாவதொரு திட்டத்திற்கு பயன்படுத்தப்படலாம்.

2021-22 ஆம் ஆண்டில், இதுவரை, ரூ.613.07 கோடி மதிப்பீட்டிலான 1,743 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதில், 117 பணிகள் முடிக்கப்பட்டு மற்ற பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

**நகர்ப்புர சுகாதாரம், நல மையங்கள் மற்றும் நகர பொது சுகாதார ஆய்வகம்**

15வது நிதி ஆணையம், பொது சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புர மக்களுக்கான சேவை வழங்கலை வலுப்படுத்துவதற்காக, கூறுகளின் அடிப்படையில் மானியங்களை வழங்கியுள்ளது.

ஒட்டுமொத்த ஆரம்ப சுகாதார சேவைகளை நோக்காகக் கொண்டு, கிராமப்புறங்களில் உள்ள துணை மையங்கள் மற்றும் பொது சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்களில் நோய் கண்டறியும் உட்கட்டமைப்புக்கான நிதியுதவியை, 15வது நிதி ஆணையம் அனுமதித்துள்ளது. இதன்படி கீழ்காணும் பணிகள் அனுமதிக்கப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண் | கூறின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நல மையங்கள் | 453 | 113.25 |
| 2. | நகர பொது சுகாதார ஆய்வகம் | 22 | 4.84 |
| | மொத்தம் | 475 | 118.09 |

## 2.9 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் பின்வரும் நோக்கங்களுக்காக நிறுவப்பட்டது:

- நகராட்சி நிருவாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- நகராட்சி நிருவாகம் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவைப் பகிர்தல்.
- நகர்ப்புர மேம்பாடு, நகராட்சி நிருவாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் நடத்துதல்.



- நகர்ப்புர உட்கட்டமைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுதல்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை, இப்பயிற்சி நிறுவனத்தின் இயக்கத்திற்கு முக்கிய நிதியாதாரமாக அமைகிறது.

## 2.10 நகராட்சி நிருவாக இயக்குநரகம் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் மாநகராட்சிகள்

| I. மதுரை மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப் பட்ட நாள் | பரப்பளவு (சதுர கிமீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
| 01.05.1971 | 148.00 | 14,70,755 | 432.00 |

**2021–22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, நகரின் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாளச்சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
- வண்டியூர் கண்மாய் மற்றும் செல்லூர் கண்மாய் ஆகியன பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் **(TURIP)** கீழ் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் 119 சாலைகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மூலதன மானிய நிதி திட்டத்தின் (CGF) கீழ் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் 379 சாலைகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 15வது நிதிக்குழு 2021-22ன் கீழ் (15th FC) ரூ.46.00 கோடி மதிப்பீட்டில் தூய காற்றுத் திட்டம், குடிநீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 2.25 கோடி மதிப்பீட்டில் பள்ளி கட்டடம் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் (அரசு மற்றும் பொது மக்கள் பங்களிப்பு) நடைபெற்று வருகின்றன.
- நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ. 1.46 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் துரிதப்படுத்தப்படும்.

| **II. கோயம்புத்தூர் மாநகராட்சி** | | | |
|---|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நாள்** | **பரப்பளவு (சதுர கி.மீ)** | **மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி)** | **ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்)** |
| 01.05.1981 | 257.04 | 16,04,925 | 998.11 |



**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- முக்கியமான சாலைகளை இணைப்பதற்கும், நகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் ரூ. 144 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட 5 இணைப்புச்சாலைப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- விடுபட்ட பகுதிகளான வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளில் பாதாளச்சாக்கடை பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- காந்திபுரம் பகுதியில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் செம்மொழி பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP 2021-2022) கீழ் ரூ.10.01 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 17.87 கி.மீ நீளத்திலான 89 சேதம் அடைந்த தார் சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாடு நிலையான நகர்புர மேம்பாட்டு திட்டத்தின் (TNSUDP 2021-22) கீழ் ரூ.34.93 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு சேதமடைந்துள்ள 51.35 கி.மீ நீளத்திலான 204 தார் சாலைகளைச் சீரமைத்தல்.
- இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியின் (2021-22) மூலம் ரூ.55.37 இலட்சம் மதிப்பீட்டில் 10 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் புதுப்பித்தல்.
- 15-வது நிதிக்குழு (2021-22) மூலம் ரூ.16.41 கோடியில் 63 நகர்ப்புர சுகாதார நல்வாழ்வு மையங்கள் மற்றும் 3 மாநகர பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் அமைத்தல்.
- நமக்கு நாமே திட்டத்தின் (2021-22) கீழ் 6 பணிகளுக்காக ரூ.1.93 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 15வது நிதிக்குழு (2021-22) கீழ் 5 எண்ணிக்கையிலான திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 14 கி.மீ. கொள்ளவு கொண்ட காம்பேக்டர் வாகனம் (Compactor Vehicle) மற்றும் 500 எண்ணிக்கையிலான காம்பேக்டர் தொட்டி (Compactor bin) ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு ரூ.4.43 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 15வது நிதிக்குழு (2021-22) கீழ் குடிநீர் விநியோக அமைப்புக்காக 192 நவீன அளவுமானிகள் (Electromagnetic Flow Meters with SCADA System) பொருத்தி SCADA முறையில் விவரங்கள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.5.36 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் ரூ.19.05 கோடி மதிப்பீட்டில் 6 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### II. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 01.06.1994 | 167.23 | 9,15,869 | 722.84 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பஞ்சப்பூரில் ரூ.350 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு அறிவிக்கப்பட்டு அதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திருச்சி மாநகரப் பகுதியில் விடுபட்ட பகுதிகளில் ரூ.210 கோடி மதிப்பீட்டில் பாதாளச்சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி (கடன்) 2020-21ன் கீழ் 50.623 கி.மீ நீளத்திற்கு 156 பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்கு ரூ.30 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டம் நிதி 2021-22ன் கீழ் 24.267 கி.மீ நீளத்திற்கு 140 பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்கு ரூ.20 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- மூலதன நிதி 2021-22ன் கீழ் 2 நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணிகளுக்கு ரூ.3 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 15வது நிதிக்குழு மான்யம் 2020-21ன் கீழ் நுண் உரம் செயலாக்க மையங்கள்,
  இ-சார்ஜிங் நிலையங்கள், மின்கள வாகனங்கள் வாங்குதல், டீசெல்டிங் வாகனங்கள், தண்ணீர் தெளிப்பான், சூப்பர் சக்கர், வடிகால் தூர்வாரும் இயந்திரங்கள், காற்றின் தரம் கண்டறியும் கருவி மற்றும் சாலை மேம்படுத்துதல் போன்ற 51 பணிகளுக்கு ரூ.42 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 15வது நிதிக்குழு மான்யம் 2021-22ன் கீழ் நாள்பட்ட திடக்கழிவுகளை விஞ்ஞான முறையில் அகற்றி நிலத்தினை மீட்டெடுக்கும் பணி, ஜேசிபி, டிப்பர் வாங்குதல், இ-சார்ஜிங் நிலையம் கட்டுதல் மற்றும் சாலை மேம்படுத்துதல் போன்ற 9 பணிகளுக்காக ரூ.33 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் 2021-22ன் கீழ் 36 நகர்ப்புர சுகாதார நல மையம் மற்றும் 2 நகர்ப்புர சுகாதார ஆய்வகம் கட்டும் பணிகளுக்கு ரூ.9.44 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- நமக்கு நாமே திட்டம் 2021-22ன் கீழ் 15 பணிகளுக்கு ரூ.2.96 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் தொழில்முறை ஆலோசனை அலுவலகம், அறிவுசார் மையம் கட்டுதல் மற்றும் பழுதடைந்த சாலை சீர்படுத்துதல் போன்ற பணிகளுக்கு ரூ.42.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**IV. திருநெல்வேலி மாநகராட்சி**

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 01.06.1994 | 108.65 | 4,74,838 | 164.42 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ரூ.295 கோடி திருத்திய திட்ட மதிப்பீட்டில் அரியநாயகிபுரம் அணைப் பகுதியிலிருந்து குடிநீர் வழங்கல் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டப்



பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

- அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாளச் சாக்கடை 2ஆம் கட்ட திட்டப் பணிகள்
  ரூ. 296.11 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் 2022-23 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.
- தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தின் கீழ் நகர்ப்புர வீடற்றவர்களுக்கு 2 சிறப்பு தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு ரூ.1 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 2021-2022 ஆம் ஆண்டில் தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் கீழ் 18 நகர்ப்புர சுகாதார மற்றும் நல மையங்கள் அமைக்க ரூ.4.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021-2022 ஆம் ஆண்டில் தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் கீழ் 2 பொது சுகாதார ஆய்வகங்கள் கட்டுவதற்கு ரூ.44 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**V. சேலம் மாநகராட்சி**

| மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட தேதி | பரப்பளவு (சதுர கிமீட்டரில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 01.06.1994 | 91.34 | 8,29,267 | 235.00 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- விடுபட்ட பகுதிகளில் பாதாளச்சாக்கடை அமைக்கும் பணிகளுக்காக ரூ.530 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2 வார்டுகளில் 24 X 7 அடிப்படையில் குடிநீர் வழங்கும் பணிகளுக்கு ரூ.158 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது
- 2021–22 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) 9.677 கி.மீட்டர் நீளத்திற்கு 74 பழுதடைந்த சாலைகளை மறு சீரமைக்க ரூ.10 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021–22 ஆம் ஆண்டு மாநில பேரிடர் நிவராண நிதியின் கீழ் (SDRF) 28.32 கி.மீட்டர் நீளத்திற்கு 65 சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கவும் மற்றும் 15 சேதமடைந்த குடிநீர் விநியோக குழாய்களை சீரமைக்கவும் ரூ.6.15 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021–22 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் (CGF) 2 நவீன எரி வாயு தகனமேடைகள் அமைக்கும் பணிக்கு ரூ.3 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021–22 ஆம் ஆண்டு 15வது நிதிக் குழு மானிய நிதியின் கீழ் நுண்ணுயிர் உரம் தயாரிப்பு மையம் அமைத்தல் மற்றும் குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசிதிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட 110 பணிகளுக்கு ரூ.75.42 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021–22 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் 32 கூடுதல் நகர்ப்புர சுகாதார மைய கட்டிடங்கள் மற்றும் 2 ஆய்வகங்கள் கட்டும் பணிக்கு ரூ.8.44 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் கீழ் (NUHM) நகர்ப்புர சுகாதார மையங்களில் 4 கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.2 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் (NNT) 10 பணிகளுக்கு ரூ.3.02 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- சீர்மிகு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின் கீழ் 5 திட்டப் பணிகள் ரூ.36.30 கோடி திட்ட மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.



**VI. ஈரோடு மாநகராட்சி**

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 01.01.2008 | 109.52 | 4,98,121 | 194.23 |

**2021–22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2020–21) ரூ.8.84 கோடியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோக மேம்பாட்டுக்கு 21 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021–22) ரூ.20 கோடி மதிப்பீட்டில் 30.215 கி.மீ நீளத்திற்கு சாலைகள் சீரமைக்கும் பணிகள்.
- திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ரூ.4.93 கோடியில் வாகனங்கள் வாங்கப்படவுள்ளன.
- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் (2021–22) கீழ், 20 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் 2 பரிசோதனைக் கூடங்கள் கட்டும் பணிகள் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**புதிய பணிகள்**

- சோலார் பகுதியில் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய பேருந்து நிலையம்.
- சத்தி சாலையில் கனிராவுத்தர் குளம் பகுதியில் ரூ.130 கோடியில் (நிலத்தின் விலை உட்பட) புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி.

| VI. திருப்பூர் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூபாய் கோடியில்) |
| 01.01.2008 | 159.35 | 8,77,778 | 234.835 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்:**

- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) 237 சாலைப் பணிகள் ரூ.18 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 85 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 152 பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2021-22ன் கீழ் 51 சாலைப் பணிகள் ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 36 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 பணிகள் நடைபெற்று வருகிறது.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 4 பணிகள் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 4 பணிகளும் நடைபெற்று வருகிறது.
- மூலதன மானிய நிதி 2021-22-ன் கீழ் ரூ.6.8 கோடி மதிப்பிலான 3 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் வட்டி நிதியின் (2021-22) கீழ் 6 பணிகள் ரூ.24.34 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.



| VII. தூத்துக்குடி மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூபாய் கோடியில்) |
| 05.08.2008 | 90.66 | 3,72,408 | 115.00 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்:**

- மாநில பேரிடர் மேலாண்மை நிதி (2021-22) கீழ் ரூ.10.39 கோடி மதிப்பீட்டில் 56.91 கி.மீ. நீளத்திற்கு 227 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காகவும் மற்றும் இதர வெள்ள நிவாரண பணிகள் மேற்கொள்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் 15.25 கி.மீ. நீளத்திற்கு புதியதாக 98 சாலைப் பணிகளுக்கு ரூ.12.51 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 15வது நிதிகுழு மானிய நிதியின் கீழ் 14 இடங்களில் நகர்ப்புர நல மையங்கள் மற்றும் ஒரு ஆய்வகம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.3.72 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது
- நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.12 கோடி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தேசிய நகர்ப்புர சுகாதார அமைப்பு திட்டத்தின் கீழ் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மைய கட்டடம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.2.20 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021-22ம் ஆண்டில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.482.03 கோடி மதிப்பீட்டில் 23 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

| IX. வேலூர் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
| 01.08.2008 | 87.915 | 5,04,079 | 130.71 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**:

- தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 20.550 கி.மீ. நீளத்திலான 50 சாலைகளை சீரமைக்கும் பணிகளுக்கு ரூ.11.95 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 28.60 கோடி மதிப்பீட்டில் 32.588 கி.மீ. நீளத்திலான 247 சாலைகளை சீரமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மாதிரி நகரத் திட்டத்தின் கீழ் ரூ.69.74 கோடி மதிப்பீட்டில் 7.967 கி. மீ நீளத்திலான 12 சாலைகளை சீரமைப்பதற்காக பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (2021-22)ன் கீழ் 14.868 கி. மீ நீளத்திலான 84 சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதியின் (2021-22) கீழ் ரூ. 0.345 கோடி மதிப்பீட்டில் 7 கழிப்பிடங்கள் சீரமைக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ளன.
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) வாகனங்கள் கொள்முதல், குடிநீர் வசதி மற்றும் சாலை பணிகளுக்காக 23 பணிகள் ரூ. 45.90 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தின் (2021-22) கீழ் ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் 21 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் 5 புதிய நகர்ப்புர சுகாதார நல மையங்கள் கட்டுவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.
- சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ. 52.79 கோடி மதிப்பீட்டில் 9 திட்டப் பணிகள் எடுத்துகொள்ளப்பட்டன.
- தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் 6 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.



| X. தஞ்சாவூர் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
| 19.02.2014 | 36.33 | 3,51,655 | 77.98 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**:

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2021-22) ரூ.5.49 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் (2021-22) கீழ் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில்
  8 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் ஒரு நகர்ப்புர பொது சுகாதார ஆய்வகம் அமைக்கும் பணிகள்.
- மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் (SDRF) கீழ் ரூ.1 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்கும் பணிகள்.
- தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Tamil Nadu Urban Employment Scheme) ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், 1,560 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- சீர்மிகு நகர திட்டத்திற்கு ரூ. 60.94 கோடி மதிப்பீட்டில் 18 பணிகளுக்கு (2021-22) ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், அகழிகள் மறுசீரமைப்பு, குளங்கள் பராமரிப்பு, ஐம்பரிமாணத் திரையரங்கம் மற்றும் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இசை நீரூற்று, சீர்மிகு வகுப்பறைகள் மற்றும் இராஜப்பா பூங்காவில் கேளிக்கை மற்றும் எழில்மிகு வசதிகள் ஆகியன முக்கியப் பணிகளாகும்.

| XI திண்டுக்கல் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
| 19.02.2014 | 14.01 | 2,07,225 | 50.53 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**:

- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் 17.592 கி. மீ நீளத்திலான 143 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.11 கோடி மதிப்பீட்டில் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் நூலகம்/ அறிவு சார் மையம் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் ரூ.5 கோடி மதிப்பீட்டில் எஃகு சந்தை அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் ரூ.10 கோடி மதிப்பீட்டில் வாரச் சந்தை அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- 15 வது நிதிக்குழுவின் மானிய நிதியின் கீழ் (2021-22) ஆண்டில் ரூ.18.06 கோடி மதிப்பீட்டிலான 31 நுண்ணுர மையங்கள் அமைத்தல், குடிநீர் மேம்பாட்டு பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், பாதாள சாக்கடை திட்ட மேம்பாட்டுப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- 15வது நிதிக்குழுவின் மானிய நிதியின் கீழ் (2021-22) ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலான 8 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் 1 ஆய்வகம் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் கீழ் (2021-22) ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மேம்படுத்தவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புர வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் (2021-22) ரூ.1.60 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் அனுமதிப்பட்டுள்ளன.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.0.51 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் அனுமதிப்பட்டுள்ளன.



| XI ஓசூர் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
| 01.03.2019 | 72.41 | 2,45,354 | 102.41 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**

- ரூ.454 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் எடுத்துக் கொள்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான நிதி 2022-23 ஆம் ஆண்டு அம்ருத் 2.0 திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் நூலகம் / அறிவு சார் மையம் அமைத்தல் மற்றும் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மியாவாக்கி குறுங்காடு அமைத்தல் பணிகள் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழுவின் மானிய நிதியின் கீழ் (2021-22) 8 இடங்களில் நகர்ப்புர சுகாதார நல மையம் மற்றும் 1 பொது சுகாதார ஆய்வகம் அமைத்தல் பணிகள்

ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**புதிய பணிகள்**

- அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும். விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப மதிப்பீட்டில் உள்ளது.
- மூலதன மானிய நிதியின் கீழ், சாலை பணிகள் மற்றும் இரண்டு நீர்நிலைகள் மறுசீரமைப்பு செய்யப்படும்.

| XII நாகர்கோவில் மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நாள்** | **பரப்பளவு (சதுர கி.மீ)** | **மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி)** | **ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்)** |
| 01.03.2019 | 49.10 | 2,24,849 | 59.56 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**:

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 24 சாலைகள் 12.596 கி.மீ நீளத்திற்கு சாலை மேம்பாட்டு பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.16 கோடி மதிப்பீட்டில் 40 சாலைகள் 21.178 கி.மீ நீளத்திற்கு சாலை மேம்பாட்டு பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.



- மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் ரூ.1 கோடி மதிப்பீட்டில் 8 பூங்காக்கள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் கீழ் 10 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் மற்றும் 1 ஆய்வகம் அமைக்கும் பணிக்கு ரூ.2.75 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.19.50 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- அம்ரூத் திட்டத்தின் கீழ் ரூ.232.09 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படும்.

| XIV. ஆவடி மாநகராட்சி | | | |
|---|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நாள்** | **பரப்பளவு (சதுர கி.மீ)** | **மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி)** | **ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்)** |
| 17.06.2019 | 65.00 | 3,44,701 | 145.26 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்**:

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP) 2021-22 ன் கீழ் 9.34 கி. மீ நீளத்திலான 32 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.10.06 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- மாநில பேரிடர் நிதியின் (SDRF) 2021-22ன் கீழ் 38.08 கி. மீ நீளத்திலான 134 சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பதற்கும், சேதமடைந்த 1 குடிநீர்

வழங்கும் பணிக்கும் ரூ.8.23 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- மூலதன மானிய நிதியின் (2021-22) கீழ் 1 நவீன சந்தை கட்டடம், 1 அறிவு சார் மையம் மற்றும் 1 சிமெண்ட் கான்கிரீட் சாலை ஆகிய பணிகளுக்கு ரூ.12.50 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- 15 வது நிதிக்குழுவின் மானிய நிதியின் கீழ், 14 நகர்ப்புர சுகாதார நல மையங்களில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் 1 ஆய்வகம் கட்டுவதற்கு ரூ.3.72 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ரூ.5 இலட்சத்தில் ஒரு கழிப்பிடம் சீரமைக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.
- நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சத்தில் பொது மக்கள் பங்களிப்பு உட்பட, ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில், ஒரு பணிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புர வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.35 கோடி மதிப்பீட்டிலான 9 பணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**XV. தாம்பரம் மாநகராட்சி**

| **உருவாக்கப்பட்ட நாள்** | **பரப்பளவு (சதுர கி.மீ)** | **மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி)** | **ஆண்டு வருமானம் (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|---|
| 03.11.2021 | 87.64 | 7,23,017 | 284.24 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு நிதி 2021-22ன் கீழ்



6.04 கி.மீ. நீளத்திலான 41 சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.5 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

- மாநில பேரிடர் நிதியின் (SDRF) 2021-22ன் கீழ் 38.977 கி. மீ நீளத்திலான 272 சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பதற்கும், சேதமடைந்த 13 குடிநீர் வழங்கல் பணிக்கும் ரூ.10.56 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:
  - ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் ஒரு எரிவாயு தகனமேடை
  - ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் 2 பூங்காக்கள்
  - ரூ.0.89 கோடி மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலைப் பணிகள்
  - ரூ.15.02 கோடி மதிப்பீட்டில் தாம்பரம் மற்றும் அனகாபுத்தூரில் தினசரி அங்காடியை மேம்படுத்தும் பணிகள்
  - ரூ.0.99 கோடி மதிப்பீட்டில் பம்மலில் ஒரு நீர் நிலை மேம்படுத்தும் பணி
- ரூ. 0.51 கோடி மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தாம்பரம் மற்றும் செம்பாக்கம் பகுதிகளில் மழைநீர் வடிகால்களை அமைக்கும் பணி
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) வாகன கொள்முதல் செய்தல், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக ரூ. 14.65 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) நகர்ப்புர சுகாதார நல மையங்கள் அமைப்பதற்கு ரூ. 2.25 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## XVI. காஞ்சிபுரம் மாநகராட்சி

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 21.10.2021 | 36.14 | 2,32,816 | 88.96 |

**2021–22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) நகர்ப்புர பொது சுகாதார மையங்களுக்கு கூடுதல் கட்டடம் உட்பட 5 பணிகளுக்கு ரூ.1.25 கோடி நிதி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- 15வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் (2021-22) பாலாறு ஆற்றின் நீர் உறிஞ்சும் கிணறுகளில் 9 பிரதான உந்து குழாய்கள் மற்றும் கேபிள்களை மாற்றி அமைக்கும் பணிகள் மற்றும் நுண்ணுயிர் செயலாக்க மையம் அமைக்கும் பணிகளுக்காக ரூ.6.22 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- மாநில பேரிடர் நிவாரண நிதி 2021 -22ன் கீழ் 52 சேதமடைந்த சாலைகள் 14.19 கிமீ நீளத்திற்கு சீரமைக்க ரூ.0.81 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (2021-22) நிதியின் கீழ் 1 பணிக்கு ரூ.35 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் ரூ. 13.62 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**புதிய பணிகள்**

- புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்ட நிதி மற்றும் பிற நிதி ஆதாரத்திலிருந்து ரூ.30.48 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இராஜாஜி சந்தையினை புனரமைக்கும் பொருட்டு ரூ.7 கோடி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.



## XVII. கடலூர் மாநகராட்சி

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கிமீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 08.10.2021 | 27.69 | 1,73,636 | 45.38 |

**2021–22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (2021–22) கீழ் 12.720 கி. மீ நீளத்திலான 53 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக
ரூ.10.73 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- மாநில பேரிடர் நிதி (SDRF) 2021–22ன் கீழ் 28.475 கி. மீ நீளத்திலான 67 சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பதற்கு ரூ.4.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது
- மூலதன மானிய நிதியின் கீழ் 7.171 கி. மீ நீளத்திலான 32 புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு ரூ.6.50 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் 2.954 கி.மீ நீளத்திலான 15 புதிய தார் சாலைகள் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை மற்றும் ரூ.1.15 கோடி

மதிப்பீட்டில் நூலகம்/ அறிவு சார் மையம் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன

- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் (2021-22) கீழ் ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் 3 நகர்ப்புர சுகாதார நல மையங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**புதிய பணிகள்**

- புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்ட நிதி மற்றும் TUFIDCO கடனுதவியுடன் ரூ.40 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**XVIII. கும்பகோணம் மாநகராட்சி**

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 24.12.2021 | 14.68 | 1,55,482 | 51.26 (2019-20) |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகள் எடுக்கப்பட்டுள்ளன:
    - ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மற்றும் பசுமை வெளிகள்
    - குடிநீர் மேம்பாட்டு பணிகள்– TB குளம் – ரூ. 1.26 கோடி & தாமரை குளம்– ரூ. 1.17 கோடி



    - நவீன எரிவாயு தகன மேடை– அணைகரம்பாளையம்– ரூ.1.50 கோடி
    - மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிகள்–ரூ.1.175 கோடி.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (2021-22) கீழ் குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்களால் பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.20 கோடி மதிப்பீட்டிலான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**XIX. கரூர் மாநகராட்சி**

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி.) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 21.10.2021 | 53.26 | 2,14,412 | 82.00 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (2021-22) கீழ் 16.90 கி. மீ நீளத்திலான 109 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக ரூ.10 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 6.12 கி. மீ நீளத்திலான ரூ.5.61 கோடி மதிப்பிலான மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணிகள் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- 15 வது நிதிக்குழு மானிய நிதியின் (2021-22) கீழ் கழிவுநீர் அமைப்பை சுத்தம் செய்யும் ரோபோடிக் இயந்திரங்கள்

கொள்முதல், தூளாக்கும் இயந்திரம், வள மீட்பு மையம், குடிநீர் மேனிலை தொட்டிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், பேருந்து நிழல் கூடங்கள், விலங்குகளுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையம் மற்றும் பூங்கா மற்றும் இடுகாடு மேம்பாட்டு பணிகள் போன்ற 21 பணிகளுக்கு ரூ.4.31 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**புதிய பணிகள்**

- புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதி திட்ட நிதி மற்றும் பிற நிதியாதாரங்களிலிருந்து ரூ.62.5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- விடுபட்ட பகுதிகளில் குடிநீர்பணிகள் செயல்படுத்துவதற்காக ரூ.68 கோடி நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**XX. சிவகாசி மாநகராட்சி**

| உருவாக்கப்பட்ட நாள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 21.10.2021 | 19.89 | 1,26,402 | 41.61 |

**2021-22 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முக்கிய பணிகள்** :

- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (2021-22) கீழ் ரூ.1.5 கோடி மதிப்பில் நவீன திரவ எரிவாயு தகன மேடை அமைத்தல், ரூ.3.565 கோடி மதிப்பிலான 3 நீர் நிலைகள் மேம்பாட்டு பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- 15 வது நிதிக்குழு மானிய நிதியின் (2021-22) கீழ் வளமீட்பு மையங்கள், வாகனம் நிறுத்தும் இடங்கள், எரிவாயு தகன மேடை, குடிநீர் வழங்கல் பணிகள் மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் போன்ற 15 பணிகளுக்கு ரூ.2.035 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.



- 15 வது நிதிக்குழு மானிய நிதியின் (2021-22) கீழ் வாகனங்கள் கொள்முதல், குடிநீர் வழங்கல் மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் உள்ளிட்ட 11 பணிகளுக்கு ரூ.3.45 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் (2021-22) கீழ் ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் 1 நகர்ப்புர சுகாதார நல மையத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதி உள்ளாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. சென்னை மாநகராட்சி நாட்டின் பழமையான நகராட்சி அமைப்பாகவும், உலகின் 2வது பழமையான நகராட்சி அமைப்பாகவும் திகழ்கிறது. சென்னை மாநகரமானது 426 ச.கி.மீ. பரப்பளவில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 66.72 இலட்சம் மக்கள் தொகை கொண்டதாகும்.

சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் நிர்வாக அலுவலகம் முதலில் சென்னை பிராட்வே எர்ரபாலு செட்டி தெருவில் நிறுவப்பட்டு, பின்னர் 1913 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசாங்க வைசிராயாகவும், பல்வேறு பொறுப்புகளை வகித்தவராகவும், உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்த நிர்வாகியாகவும் இருந்த லார்டு ரிப்பன் பெயரில் ரிப்பன் கட்டடம் கட்டப்பட்டு ரிப்பன் கட்டடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

நகரமைப்பிற்கான அங்கீகாரமும், வரைபடங்கள் அனுமதிக்கான அதிகாரமும் 1974 ஆம் ஆண்டு வரை முனிசிபல் கார்ப்பரேஷன் வசமும், பின்னர் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தமிழ்நாடு நகர



ஊரமைப்பு சட்டம் மற்றும் திட்டங்கள் சட்டம் 1972ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கும் வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி 200 கோட்டங்களை கொண்ட 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 15 மண்டலங்கள் 3 வட்டார அலுவலகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பு அம்சங்கள் அட்டவணை 3.1ல் பின்வருமாறு.

**அட்டவணை – 3.1**

| பரப்பளவு | மக்கள் தொகை | வட்டாரங்கள் | மண்டலம் | வார்டுகள் / கோட்டங்கள் | சாலைகள் |
|---|---|---|---|---|---|
| 426 ச.கி.மீ | 66.72 இலட்சம் (2011 மக்கள் தொகை கணக்கின்படி) 85.17 இலட்சம் (2019) | 3 | 15 | 200 | 5,657 கி.மீ |
| **தெரு விளக்குகள்** | **பாலங்கள்** | **மழைநீர் வடிகால்கள்** | **சேகரமாகும் குப்பைகள்** | **பள்ளிகள்** | **பூங்காக்கள்** |
| 2.90 இலட்சம் | 285 | 2,071 கி.மீ | சராசரியாக நாளொன்றுக்கு 5,100 மெடன் | 281 | 718 |
| **விளையாட்டுத் திடல்கள்** | **நகர்ப்புர ஆரம்ப சுகாதர நிலையம்/ நகர்ப்புர** | **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் / பால்வாடிகள்/** | **பொதுக் கழிப்பிடங்கள்** | **மயான பூமிகள்** | **பணியாளர்கள்** |

| விளையாட்டுத் திடல்கள் | நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம்/ நகர்ப்புர சமுதாயநல மருத்துவமனை/ மகப்பேறு நிலையம் | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிதிட்டம்/ பால்வாடிகள்/ அங்கன்வாடிகள் | பொதுக் கழிப்பிடங்கள் | மயான பூமிகள் | பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 220 | 140 /16 /5 | 1,806 | 1,575 | 211 | 23,917 |

## 3.1 உட்கட்டமைப்பு

### 3.1.1 சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்துதட சாலைகள் மற்றும் 5,270 கி.மீ நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் அட்டவணை 3.2ல் உள்ளபடி பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 3.2**

| வ. எண் | மண்டலம் | மண்டலத்தின் பெயர் | தார் சாலைகள் | | சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் | | மற்ற சாலைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பேருந்துதட சாலை மற்றும் உட்புற சாலை | | பேருந்துதட சாலை மற்றும் உட்புற சாலை | | (மண் மற்றும் WBM) | |
| | | | எண் | நீளம்(கிமீ) | எண் | நீளம் (கிமீ) | எண் | நீளம் (கிமீ) |
| 1 | I | திருவொற்றியூர் | 884 | 155.65 | 611 | 65.05 | 8 | 0.5 |
| 2 | II | மணலி | 759 | 150.93 | 296 | 23.42 | 27 | 4.67 |
| 3 | III | மாதவரம் | 2409 | 391.51 | 264 | 25.45 | 152 | 40.17 |
| 4 | IV | தண்டையார்பேட்டை | 1280 | 242.07 | 1629 | 188.53 | 0 | 0 |
| 5 | V | ராயபுரம் | 716 | 183.35 | 711 | 75.01 | 0 | 0 |
| 6 | VI | திரு.வி.க நகர் | 1192 | 222.37 | 1051 | 156.56 | 2 | 0.26 |
| 7 | VII | அம்பத்தூர் | 2934 | 468.50 | 631 | 56.47 | 23 | 3.19 |
| 8 | VIII | அண்ணா நகர் | 1373 | 294.88 | 1010 | 107.11 | 0 | 0 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 1221 | 323.15 | 556 | 81.76 | 0 | 0 |
| 10 | X | கோடம்பாக்கம் | 1481 | 312.89 | 911 | 129.47 | 1 | 0.11 |
| 11 | XI | வளசரவாக்கம் | 2676 | 363.33 | 449 | 42.91 | 29 | 2.16 |
| 12 | XII | ஆலந்தூர் | 1062 | 156.48 | 576 | 70.35 | 22 | 1.51 |
| 13 | XIII | அடையார் | 1792 | 360.96 | 1140 | 114.59 | 2 | 0.17 |
| 14 | XIV | பெருங்குடி | 2446 | 397.52 | 586 | 50.71 | 41 | 4.79 |
| 15 | XV | சோலிங்கநல்லூர் | 1464 | 293.46 | 621 | 86.49 | 50 | 8.28 |
| மொத்தம் | | | 23,689 | | 11,042 | 1273.88 | 357 | 65.81 |



மேற்படி பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புறச்சாலைகள் மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (**TURIP**),

சிங்கார சென்னை 2.0 (**Singara Chennai 2.0**) திட்டங்களின் மானியத்தின் மூலமும் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி (**GCC's Capital Fund**) மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புறச்சாலைகள்**

பேருந்து தட சாலைகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) மற்றும் சிங்கார சென்னை 2.0 ஆகிய திட்டங்களின் மானியத்தின் மூலம் மேம்படுத்தப்படுகின்றன. சாலைகளில் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளும் போது சாலை உயரம் அதிகரிக்காமல் இருப்பதற்காக சாலைகளை அகழ்ந்தெடுத்து புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியானது தொடர்ந்து போதுமான தளவாடங்கள் கொண்டு சாலைகளின் தரத்தை உறுதி செய்கிறது. மேலும் சாலைகளின் தரம் திட்டப் பணிகளை கண்காணிக்கும் முகமையைக் கொண்டு தீவிரமாகக்



கண்காணிக்கப்பட்டு பிரத்தியேக தர ஆய்வு செய்து உறுதி செய்யப்படும்.

2021-22ம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 39.87 கி.மீ நீளமுடைய 59 சாலைகள் ரூ.37.58 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்பு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ன்கீழ் 13.58 கி.மீ நீளமுடைய 22 பேருந்து தட சாலைகள் ரூ17.38 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மே மாதத்திற்குள் முடிக்கப்படும்.

மூலதன மானிய நிதி 2021-22 ன் கீழ் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் புதியதாக கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு 1 கி.மீ சாலை ரூ.8.52 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு 3 மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021–22 ஆம் நிதியாண்டில் 148.36 கி.மீ நீளமுடைய 929 உட்புற சாலைகள் ரூ.92.23 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு மே 2022–க்குள் முடிக்கப்படும்.

மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2021–22 ன்கீழ் 110.90 கி.மீ நீளமுடைய 646 உட்புற சாலைப்பணிகள் ரூ.65.97 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு 3 மாதகாலத்திற்குள் முடிக்கப்படும்

(ii) **பேருந்து நிழற்குடை மற்றும் போக்குவரத்து தீவுகள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,416 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் 637 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 128 எண்ணிக்கையிலான போக்குவரத்துத்



தீவுகளும் 173 எண்ணிக்கையிலான மையத் தடுப்புச் சுவர்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**3.1. 2 பாலங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியால், 26 முக்கிய பாலங்கள் (14 மேம்பாலங்கள் மற்றும் 12 இரயில்வே மேம்பாலங்கள்), 16 வாகனச் சுரங்கப்பாதைகள், 5 பாதசாரிகள் சுரங்கப்பாதைகள், 4 நடைமேம்பாலங்கள் மற்றும் 234 சிறுபாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட முக்கிய பணிகள் அட்டவணை 3.3 ல் உள்ளவாறு தற்போது நடைபெற்று வருகிறன.

**அட்டவணை – 3.3**

| வ. எண் | பணியின் பெயர் | நிதி ஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | புழல் உபரி நீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் புதிய பாலம். | சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி | 19.33 |
| 2 | புழல் உபரி நீர் | சென்னை | 15.90 |

| வ. எண் | பணியின் பெயர் | நிதி ஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| | கால்வாயின் குறுக்கே ஆமுல்லவாயலில் புதிய பாலம். | பெருநகர வளர்ச்சி திட்ட நிதி | |
| 3 | புழல் உபரி நீர் கால்வாயின் குறுக்கே பர்மா நகர் பிரதான சாலையில் புதிய பாலம். | சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி | 14.33 |
| 4 | மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து தி.நகர் பேருந்து நிலையம் வரை (Escalators) நகரும் படிகட்டுகளுடன் கூடிய ஆகாய நடைபாதை அமைக்கும் பணி. | சீர்மிகு நகர திட்ட நிதி | 28.45 |
| 5 | கொளத்தூர் – வில்லிவாக்கம் சந்திக்கடவு (எல்.சி–1) குறுக்கே இரயில்வே மேம்பாலம். | மூலதன மானிய நிதி | 61.98 |
| 6 | யானை கவுனி சாலையில் தற்போதுள்ள இரயில்வே மேம்பாலத்தினை இடித்துவிட்டு புதிதாக மேம்பாலம் அமைக்கும் பணி. | மூலதன மானிய நிதி | 30.78 |
| 7 | ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி கால்வாயின் | மூலதன மானிய நிதி | 43.46 |



| வ. எண் | பணியின் பெயர் | நிதி ஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| | குறுக்கே உள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி. | | |
| 8 | கூவம் ஆற்றின் குறுக்கே அருணாச்சலம் சாலையில் கூடுதலாக பாலம் அமைக்கும் பணி. | மூலதன மானிய நிதி | 9.55 |
| 9 | நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் குறுக்கே இரும்பிலான நடைமேம்பாலம் அமைக்கும் பணி. | மூலதன மானிய நிதி | 5.42 |
| 10 | பார்த்தசாரதி பாலத்தை புனரமைக்கும் பணி. | செயல்பாடு மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி | 8.48 |
| 11 | வைத்தியநாதன் பாலத்தை புனரமைக்கும் பணி. | செயல்பாடு மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி | 5.01 |
| **மொத்தம்** | | | **242.69** |

தற்போதுள்ள வாகனப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தவும், எதிர்வரும் காலங்களில் தங்குதடையற்ற வாகனப் போக்குவரத்தை வழங்கிடவும், பெருநகர சென்னை மாநகராட்சியால், ரூ.286.41 கோடி மதிப்பீட்டில், கீழே அட்டவணை 3.4ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 இடங்களில் மேம்பாலங்கள் / பாலங்கள் உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதி (I&A) மற்றும் மூலதன மானிய நிதியின் (CGF) மூலம் கட்டப்பட உள்ளன. இப்பணிகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டு, ஏப்ரல் 2022–க்குள் இறுதி செய்யப்படவுள்ளது. அதன் விவரங்கள் கீழே அட்டவணை 3.4ல் உள்ளது.

**அட்டவணை – 3.4**

| வ. எண் | பணியின் பெயர் | ஆண்டு / நிதி ஆதாரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதி | 142.00 |
| 2 | தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் முதல் பிரதான சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி. | உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதி | 131.00 |
| 3 | போஜராஜன் நகர், இரயில்வே சந்திக்கடவு எண்.11Aன் குறுக்கே வரையறுக்கப்பட்ட வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி. | மூலதன மானிய நிதி | 13.41 |
| **மொத்தம்** | | | **286.41** |



### 3.1 .3 மழைநீர் வடிகால்வாய்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2,071 கி.மீ நீளத்திற்கு 8,835 மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் அட்டவணை 3.5ல் உள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை – 3.5**

| வ. எண் | மண்டலம் எண் | மண்டலத்தின் பெயர் | மழைநீர் வடிகால் எண்ணிக்கை | மழைநீர் வடிகால் நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | 422 | 73.13 |
| 2 | II | மணலி | 216 | 47.00 |
| 3 | III | மாதவரம் | 263 | 75.69 |

| வ. எண் | மண்டலம் எண் | மண்டலத்தின் பெயர் | மழைநீர் வடிகால் எண்ணிக்கை | மழைநீர் வடிகால் நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 4 | IV | தண்டையார்பேட்டை | 383 | 115.49 |
| 5 | V | இராயபுரம் | 339 | 104.87 |
| 6 | VI | திரு.வி.க.நகர் | 485 | 130.21 |
| 7 | VII | அம்பத்தூர் | 846 | 212.25 |
| 8 | VIII | அண்ணாநகர் | 587 | 163.25 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 628 | 161.31 |
| 10 | X | கோடம்பாக்கம் | 716 | 196.88 |
| 11 | XI | வளசரவாக்கம் | 1445 | 256.35 |
| 12 | XII | ஆலந்தூர் | 943 | 193.22 |
| 13 | XIII | அடையாறு | 516 | 132.09 |
| 14 | XIV | பெருங்குடி | 863 | 172.14 |
| 15 | XV | சோழிங்கநல்லூர் | 183 | 37.14 |
| **மொத்தம்** | | | **8,835** | **2,071.02** |

மேலும், 30 நீர்வழிக் கால்வாய்கள் 48.78 கி.மீ நீளத்திற்கு அட்டவணை 3.6ல் உள்ளவாறு பராமரிக்கப்படுகின்றன.



**அட்டவணை – 3.6**

| வ. எண் | மண்டலம் எண் | மண்டத்தின் பெயர் | கால்வாயின் பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | தாமரை குளம் கால்வாய் | 0.50 |
| 2 | II | மணலி | பழைய நாபாளையம் கால்வாய் | 1.29 |
| 3 | II | | துளசி நகர் கால்வாய் | 2.04 |
| 4 | II | | மணலி புதூர் TNHB கால்வாய் | 1.12 |
| 5 | II | | பெரிய ஏச்சன்குழி கால்வாய் | 0.26 |
| 6 | II | | கடப்பாக்கம் கால்வாய் | 0.95 |
| 7 | II | | மாதவரம் – மணலி குளம் கால்வாய் | 1.27 |
| 8 | IV | தண்டையார் பேட்டை | கேப்டன் காட்டன் கால்வாய் | 3.04 |
| 9 | IV | | கொடுங்கையூர் கால்வாய் | 5.28 |
| 10 | IV | | இணைப்பு கால்வாய் | 0.40 |
| 11 | IV | | வியாசர்பாடி கால்வாய் | 1.27 |
| 12 | IV | | ஜவஹர் கால்வாய் | 0.76 |
| 13 | VI | திருவிகநகர் | ஏகாங்கிபுரம் கால்வாய் | 1.53 |
| 14 | VI | | TVS கால்வாய் | 0.91 |
| 15 | VII | அம்பத்தூர் | நொளம்பூர் கால்வாய் | 1.25 |
| 16 | VII | | அம்பத்தூர் சிட்கோ கால்வாய் | 2.19 |
| 17 | VII | | பாடிக்குப்பம் கால்வாய் | 2.77 |

| வ. எண் | மண்டலம் எண் | மண்டத்தின் பெயர் | கால்வாயின் பெயர் | நீளம் (கிமீ) |
|---|---|---|---|---|
| 18 | IX | தேனாம்பேட்டை | நுங்கம்பாக்கம் கால்வாய் | 0.90 |
| 19 | IX & XIII | | மாம்பலம் கால்வாய் & நந்தனம் கால்வாய் | 6.86 |
| 20 | X | கோடம்பாக்கம் | ரெட்டிகுப்பம் கால்வாய் | 0.50 |
| 21 | X | | எம்.ஜி.ஆர். கால்வாய் | 1.80 |
| 22 | X | | ஜாபர்கான்பேட்டை கால்வாய் | 0.60 |
| 23 | X | | ட்ரஸ்ட்புரம் கால்வாய் | 1.51 |
| 24 | XI & XII | ஆலந்தூர் | நந்தம்பாக்கம் கால்வாய் | 1.47 |
| 25 | XII | | ஆதம்பாக்கம் கால்வாய் | 0.92 |
| 26 | XIII | அடையாறு | செல்லம்மாள் கல்லூரி மற்றும் கிண்டி தொழிற்பேட்டை கால்வாய் | 2.26 |
| 27 | XIII | | ராஜ்பவன் கால்வாய் | 1.20 |
| 28 | XIV | பெருங்குடி | பள்ளிக்கரணை கால்வாய் | 0.34 |
| 29 | XV | சோழிங்கநல்லூர் | தலைமை செயலகம் காலணி கால்வாய் | 1.08 |
| 30 | XV | | செம்மஞ்சேரி கால்வாய் | 2.51 |
| **மொத்த நீளம்** | | | | **48.78** |

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் மழைக்காலங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க நீண்ட நாள் கோரிக்கையான ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் 768 கி.மீ நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியின் கீழ் ரூ3,220 கோடி மதிப்பீட்டில் நடைப்பெற்று வருகிறது. இதுவரை 16.40% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் அம்பத்தூர், மணலி, மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

கோவளம் வடிநிலப்பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் M1, M2 & M3 என மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முதற்கட்டமாக M3 சிப்பங்களில் 52கி.மீ நீளத்திற்கு, ரூ.270 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, மேலும் M1 மற்றும் M2 பகுதிகளில் முதற்கட்டமாக 27.25 கி.மீ நீளத்தில் ரூ.150.45 கோடி மதிப்பீட்டில் பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டு மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தால் பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் (பகுதி) மண்டல பகுதியில் வாழும் சுமார் 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

தமிழ்நாடு நிலையான நகர மேம்பாட்டு திட்டத்தின் (**TNSUDP**) கீழ் 44.88 கி.மீ நீளத்தில் மழைநீர் வடிகால்களின் விடுபட்ட இணைப்புகளை (Missing links) ரூ.120 கோடியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதியின் கீழ் ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் 9.81 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றது.

2021 வடகிழக்கு பருவமழை காலத்தில் மழைநீர் தேங்கிய இடங்களை கண்டறிந்து 40.79 கி.மீ நீளத்திற்கு ரூ.184.65 கோடி மதிப்பீட்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

47 நீர் நிலைகள் புனரமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி (**CMCDM**) கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன, அவற்றில் 33 குளங்கள் புனரமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. 14 குளங்களின் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.



### 3.1.4 சிறப்புத் திட்டங்கள்

#### (i) சென்னை நகரக் கூட்டாண்மை திட்டம்

சென்னை நகரக் கூட்டாண்மை திட்டத்தின் முக்கிய நோக்கம், சென்னை பெருநகர பகுதியில் பொதுமக்களுக்கான சேவையை மேம்படுத்துவதே ஆகும். ஒரு பில்லியன் USD (சுமார் ரூ.7,500 கோடி) கொண்டுள்ள இத்திட்டம் 3 கட்டங்களாக நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி முக்கிய பங்குதாரராக விளங்குகிறது.

முதற்கட்டமாக 300 மில்லியன் USD (சுமார் 2,250 கோடி) 2021லிருந்து ஐந்து வருடங்களுக்கு உலக வங்கி தமிழ்நாடு அரசிற்கு வழங்கும். பெருநகர சென்னை மாநகராட்சி 5 வருடங்களுக்கு உலக வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 4 செயல்திறனுடன் இணைந்த குறியீடுகள் (Disbursement Linked Indicators) செயல்படுத்தினால் 90 மில்லியன் USD (சுமார் 675 கோடி) பெற்றுக்கொள்ளும். மேலும் 4 DLI யுடன் பெருநகர சென்னை மாநகராட்சி உலக வங்கியுடம் ஒப்புக்கொண்டவாறு முடிவு கட்டமைப்பு குறியீடுகளும் (Result Frame work Indicators) செயல்படுத்த வேண்டும்.

4 செயல்திறனுடன் இணைந்த குறியீடுகள் (Disbursement Linked Indicators), பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில்முறை காலிபணியிடங்களை குறைத்தல்; பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது கொள்முதல் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்; பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார அமைப்பு பலப்படுத்துதல்; பெருநகர சென்னை மாநகராட்சியில் சொந்த ஆண்டு வருவாயை அதிகரித்தல்

மேலும், முடிவு கட்டமைப்பு குறியீடுகள் (RFI), பொது இடங்கள் மற்றும் பேருந்து பயணங்களில் மகளிர் பாதுகாப்பினை உறுதி செய்தல், பாதசாரிகளுக்கான நடைபாதையை அதிகரித்தல், திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல், குடிமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம், மாநகராட்சி அளிக்கும் சேவையின் மீது அவர்களின் கருத்தை அறிதல்.

**பெரும் சாலைகள் திட்டம்**

சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தில் பெரும் சாலைகள் திட்டமானது முக்கியமான அங்கமாகும். இந்த திட்டம் அனைவருக்கும் உயர்தரமான மற்றும் சமமான சாலைகள் உருவாக்குவதேயாகும். பெருநகர சென்னை



மாநகராட்சியானது அனைத்து சாலைகளையும் இணைத்து **"முழுமையான சாலைகள்"** ஆக மாற்றுவதற்காக பெருநகர சாலை திட்டத்தைத் தொடங்கியுள்ளது, புதிய வடிவமைப்பின் தொடர்ச்சியாக நடைபாதைகள், ஒழுங்குமுறைப்பட்ட வாகனப்பாதைகள், தங்குதடையின்றி தொடர்ச்சியான ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்தம் மற்றும் பிற சேவை துறைகளின் பயன்பாட்டிற்காக நிலத்தடி குழாய்கள் **(DUCT)** அமைத்தல், பாதசாரிகளின் நடைபயிற்சிற்கு இடையூறு ஏற்படாத வகையில் பேருந்து நிறுத்தங்களை வடிவமைத்தல், நடைபாதை வியாபாரங்கள் மற்றும் இதர பிற சாலையோர கட்டமைப்புகளை வடிவமைத்தல். இத்திட்டத்தின் முதற்கட்டம், 70 சதுர கி.மீ பரப்பளவில் 111 கி.மீ சாலையினை கொண்டுள்ளது.

**(ii) சென்னைப் பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம்**

சென்ன பெருநகர பகுதியில் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளை தீர்க்க ரூ.904.88 கோடி மதிப்பீட்டில் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) கடனுதவியுடன் சென்னையில் திறன்மிகு போக்குவரத்து திட்டம்

மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய கூறுகள்

1. தகவமைப்பு போக்குவரத்து சமிக்ஞை கட்டுப்பாடு அமைப்பு (Adaptive Traffic Signal Control System)
2. சென்னை போக்குவரத்து தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (Chennai Traffic Information and Management System)
3. சென்னை பெருநகர பேருந்து அமைப்பு முறை (City Bus System)

**(iii) சீர்மிகு நகர திட்டம் (SCM)**

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.606 கோடி மதிப்பீட்டில் 37 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 11 பணிகள் ரூ.470 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

### 3.1.5 கட்டடங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளிகள், மருத்துவமனைகள், சமுதாய கூடங்கள் போன்ற 2,802 கட்டடங்கள் அட்டவணை – 3.7ல் குறிப்பிட்டுள்ளவாறு பராமரிக்கிப்படுகின்றன.

12 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.42.45 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள் 2022



– 2023 ஆம் ஆண்டில் நிறைவடைய வேண்டி துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.50.66 கோடி மதிப்பீட்டில் 11 இடங்களில் 22 பள்ளிகளில் புதிதாக வகுப்பறைகள் கட்டவும், தற்போதுள்ள பள்ளி கட்டிடங்களை புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது .

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.6.13 கோடி மதிப்பீட்டில் இரண்டு இடங்களில் இடுகாடு அமைக்கவும் மற்றும் 8 இடங்களில் கூடுதலாக வசதிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புரம்) 2.0, நிர்பயா நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதியின் கீழ் 2,020 கழிப்பறை இருக்கைகள் மற்றும் 700 சிறுநீர் கழிப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 366 இடங்களில் 918 இருக்கைகள் மற்றும் 671 சிறுநீர் கழிப்பறைகள் கொண்ட கழிப்பறைகள் கட்டுவதற்கு, ரூ.36.34 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

துாய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புரம்) 2.0–ல் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் சென்னை நகரின் மண்டலம்–5,6 & 9 (மெரினா பகுதி) இடங்களில் பொது மக்களின் வசதிக்காக கழிப்பறை கட்டிட வடிவமைத்தல், உருவாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (DBOT) முறையில் ஒரு திட்டம் ரூ.221.02 கோடி மதிப்பில் நடைமுறைப்படுத்தப்படும். அதன் விவரம் கீழே அட்டவணை 3.7ல் உள்ளது.

**அட்டவணை– 3.7**

| வ.எண் | மண்டலம் | நகர்ப்புர சமூகநல மருத்துவனை | நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம் | அவசர கால மகப்பேறு மையம் | பள்ளி கட்டடட்ம | சமுதாய நலக்கூடம் | சிறப்பு காப்பகங்கள் | அலுவலக கட்டடங்கள் | பிற வகையான கட்டடங்கள் | கட்டடங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 1 | 6 | | | 1 | 2 | 14 | 176 | 200 |
| 2 | மணலி | 1 | 2 | | | 1 | 1 | 7 | 56 | 68 |
| 3 | மாதவரம் | 1 | 4 | | | 3 | 2 | 14 | 144 | 168 |
| 4 | தண்டையார் பேட்டை | 1 | 15 | | 46 | 4 | 6 | 16 | 122 | 210 |
| 5 | இராயபுரம் | 1 | 13 | 1 | 42 | 7 | 16 | 38 | 194 | 312 |
| 6 | திரு. வி. க. நகர் | 1 | 14 | | 51 | 8 | 3 | 19 | 184 | 280 |
| 7 | அம்பத்துரர் | 1 | 9 | 1 | – | 1 | 2 | 8 | 122 | 144 |
| 8 | அண்ணா நகர் | 1 | 15 | | 28 | 8 | 5 | 8 | 223 | 288 |
| 9 | தேனாம்பேட்டை | 1 | 16 | | 53 | 13 | 8 | 18 | 34 | 143 |
| 10 | கோடம்பாக்கம் | 1 | 15 | 1 | 37 | 6 | 2 | 18 | 190 | 270 |
| 11 | வளசரவாக்கம் | 1 | 5 | | – | 1 | 2 | 12 | 19 | 40 |
| 12 | ஆலந்துரர் | 1 | 5 | | – | 4 | 1 | 14 | 179 | 204 |
| 13 | அடையாறு | 1 | 11 | | 24 | 3 | 3 | 6 | 326 | 374 |
| 14 | பெருங்குடி | 1 | 5 | | – | 4 | – | 12 | 51 | 73 |
| 15 | சோழிங்கநல்லூரர் | 2 | 5 | | – | 2 | 2 | 13 | 4 | 28 |
| **மொத்தம்** | | **16** | **140** | **3** | **281** | **66** | **55** | **217** | **2,024** | **2,802** |



## 3.1.6 மின்சாரம்

### தெருவிளக்குகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து பேருந்து வழி தடங்கள் மற்றும் உட்புறச் சாலைகளில் சீரான வெளிச்சம் தரும் தெரு மின்விளக்குகள் பொதுமக்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து பேருந்து மற்றும் உட்புறச் சாலைகள் முழுவதும் போதுமான தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி 2.90 லட்சம் தெரு மின்விளக்குகள் பராமரித்து வருகிறது. இவையனைத்தும் மின்சாரம் சேமிக்கும் எல்.இ.டி

விளக்குகளாகும். முக்கிய சாலை சந்திப்புகள், கடற்கரை பகுதிகள் மற்றும் பூங்காக்களில் 432 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் அட்டவணை 3.8ல் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை– 3.8**

| வ. எண் | மண்டலம் | மண்டலங்களின் பெயர் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | உயர்கோபுர மின் விளக்கு கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | I | திருவொற்றியூர் | 13,459 | 22 |
| 2 | II | மணலி | 11,498 | 8 |
| 3 | III | மாதவரம் | 19,333 | 39 |
| 4 | IV | தண்டையார்பேட்டை | 18,647 | 28 |
| 5 | V | ராயபுரம் | 15,155 | 35 |
| 6 | VI | திரு.வி.க நகர் | 17,760 | 32 |
| 7 | VII | அம்பத்தூர் | 26,411 | 49 |
| 8 | VIII | அண்ணா நகர் | 20,485 | 28 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 22,258 | 52 |
| 10 | X | கோடம்பாக்கம் | 23,772 | 36 |
| 11 | XI | வளசரவாக்கம் | 20,623 | 17 |
| 12 | XII | ஆலந்தூர் | 15,769 | 24 |
| 13 | XIII | அடையாறு | 23,043 | 32 |
| 14 | XIV | பெருங்குடி | 23,121 | 20 |
| 15 | XV | சோழிங்கநல்லூர் | 19,163 | 10 |
| **மொத்தம்** | | | **2,90,497** | **432** |



தெரு மின்விளக்குகள் பொதுவாக 25மீ இடைவெளியில் அமைக்கப்படுகிறது. விரிவாக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சியடைந்த பகுதிகள், போதிய வெளிச்சம் இல்லாத பகுதிகள் மற்றும் இருள் சூழ்ந்த பகுதிகளில் புதிய தெரு மின்விளக்குகள் நிர்பயா திட்டத்தின் மூலம் ரூ.60.84 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன.

### 3.1.7 மின் ஆளுமை

இணையதள சேவைகளில் நிதி, வருவாய் (சொத்து வரி உட்பட), பணிகள் மேலாண்மை, நகர திட்டமிடல், சட்ட வழக்கு மேலாண்மை அமைப்பு, பொது மேலாண்மை அமைப்பு, ஓய்வூதிய மேலாண்மை, பொதுமக்கள் குறை தீர்வு, நம்ம சென்னை செயலி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, 1913 அழைப்பு மையம், வாட்ஸ் அப் சேவைகள் ஆகியவை அடங்கும்.

புவிசார் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு (GIS) வலுப்படுத்தும் நோக்கத்தில் சர்வர் அறை மற்றும் புவி சார் பயன்பாட்டு மையம் அமைப்பதற்கு (இரண்டாம் கட்டமாக) உலக வங்கியின் நிதியுதவி ரூ.21.47 கோடி மதிப்பீட்டில், மேற்கொள்ளப்படவுள்ளது.

### 3.1.8 பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 718 பூங்காக்கள், 102 சாலை மையத்தடுப்புகள், 110 போக்குவரத்து தீவுத்திட்டுகள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த 718 பூங்காக்களில், ஒப்பந்த முறையில் 547 பூங்காக்களும் மற்றும் தத்தெடுப்பு முறையில் 111 பூங்காக்களுக்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சி 872 விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டு வசதிகள் அட்டவணை 3.9ல் உள்ளவாறு ஏற்படுத்தி பராமரித்து வருகிறது.

**அட்டவணை – 3.9**

| மண்டலம் | மண்டலத்தின் பெயர் | பூங்காக்களின் எண்ணிக்கை | விளையாட்டு திடல்களின் எண்ணிக்கை | சிறுவர் விளையாட்டு திடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| I | திருவொற்றியூர் | 8 | – | – |
| II | மணலி | 24 | 8 | 28 |
| III | மாதவரம் | 34 | 9 | 2 |
| IV | தண்டையார்பேட்டை | 53 | 25 | 37 |
| V | ராயபுரம் | 26 | 10 | – |
| VI | திரு–வி–க நகர் | 42 | 22 | 3 |
| VII | அம்பத்தூர் | 63 | 7 | 1 |
| VIII | அண்ணா நகர் | 41 | 42 | 9 |
| IX | தேனாம்பேட்டை | 39 | 13 | 5 |
| X | கோடம்பாக்கம் | 57 | 17 | 50 |
| XI | வளசரவாக்கம் | 79 | 6 | 6 |
| XII | ஆலந்தூர் | 69 | 2 | 4 |
| XIII | அடையாறு | 64 | 50 | 29 |
| XIV | பெருங்குடி | 56 | 8 | 4 |
| XV | சோழிங்கநல்லூர் | 63 | 1 | 22 |
| | **மொத்தம்** | **718** | **220** | **200** |



**(i) நடைபெறும் பணிகள்**

கடந்த நிதியாண்டு 2021–22ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டன. புதிதாக அமைக்கப்படும் அநேக பூங்காக்களில் உடற்பயிற்சிக்கான உபகரணங்களுடன் கூடிய திறந்தவெளி உடற்பயிற்சி திடல் அமைக்கப்பட்டு வருகிறது. புதியதாக அமைக்கப்படும் அனைத்து பூங்காக்களும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மழைக்காலங்களில் நீர்உறிஞ்சியாக செயல்படும் வகையில் குறைந்த பட்ச

கட்டுமானமும் அதிகபட்ச பசுமை பரப்புகளையும் கொண்ட புதிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

சென்னை நதிநீர் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT)ன்கீழ் அடையாறு கரையோரம் மற்றும் கோட்டூர்புரம் பகுதியல் ரூ.9.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஏப்ரல் 2022ல் முடிக்கப்படும்.

இதன் தொடர்ச்சியாக நடப்பு நிதியாண்டில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் அடையார், கோட்டூர்புரம், கெனால் பேங்க் சாலையில் புதிய விளையாட்டுத்திடல் மற்றும் அடர்வனம் காடு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.24.43 கோடி மற்றும் ரூ.12.57 கோடி மதிப்பீட்டில் 28 பூங்காக்கள் மற்றும் 18 விளையாட்டுத்திடல்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில், 17 பூங்கா பணிகள் மற்றும் 5 விளையாட்டுத்திடல்கள் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 11 பூங்கா பணிகள் மற்றும் 13 விளையாட்டுத்திடல்கள் அமைக்க ஒப்பம் கோரப்பட்டுள்ளது.



**(ii)சாலை மைய தடுப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, நமக்கு நாமே திட்டம் மற்றும் குடியிருப்பு நலச் சங்கங்களின் பங்களிப்பு மூலம் பிரதான சாலைகளில் அனைவரையும் கவரும் வகையில் தற்போதுள்ள சாலை மைய தடுப்புக்களில் அடர்த்தியாக பசுமையான செடிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) மரக்கன்றுகள் நடுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சென்னை மாநகரின் பசுமை பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாரம்பரிய மரவகைகள் பல்வேறு பகுதிகளில் நடப்பட்டுள்ளன. இத்துடன், சென்னை மாநகரில் உள்ள குடியிருப்பு நலச் சங்கங்களை ஒருங்கிணைத்து மரக்கன்றுகளை நட்டு அவற்றை வளர்க்க பெருநகர சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், கடந்த 9 மாதங்களில் 1,23,429 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**3.2. சுகாதாரம் மற்றும் தூய்மை**

**3.2.1 திடக்கழிவு மேலாண்மை**

சென்னை மாநகராட்சிப் பகுதியில் ஒரு நாளைக்கு உருவாகும் குப்பையின் அளவு சராசரியாக

5,100 மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிப்பு அனைத்து வீடுகளில் இருந்து நேரடியாக பெறப்படுகிறது. திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தெடுக்கப்பட்ட ஈரமான மற்றும் உலர்ந்த கழிவுகள் பரவலாக்கப்பட்ட பதனிடுதல் மையங்களுக்கு அனுப்பப்படுகிறது, மீதமுள்ள கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

தற்போது, திடக்கழிவு மேலாண்மை தூய்மைப் பணிகள் மொத்தமுள்ள பதினைந்து மண்டலங்களில் ஐந்து மண்டலங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியாலும், மீதமுள்ள பத்து மண்டலங்கள் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகிறது.

**(i) உட்கட்டமைப்பு**

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், குப்பையை உற்பத்தியாகும் இடத்திலேயே சேகரித்து, அவற்றை போக்குவரத்து மூலம் அந்தந்த பதனிடுதல் மையங்களுக்கு கொண்டு செல்வது மற்றும் குப்பைகளை குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.



பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு, 670 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள், 97 பேட்டரி மூலம் இயக்கப்படும் மூன்று சக்கர மிதிவண்டிகள், 2,114 மூன்று சக்கர மிதிவண்டிகள், 125 கனரக / இலகுரக காம்பாக்டர்கள், 16 கனரக / இலகுரக டிப்பர்கள், 16 சாலை பெருக்கும் இயந்திரங்கள் போன்றவை பயன்பாட்டில் உள்ளது. இதே போன்று தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் 3,136 பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள், 124 கனரக / இலகுரக காம்பாக்டர்கள், 83 கனரக / இலகுரக டிப்பர்கள் மற்றும் 40 சாலை பெருக்கும் இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 5,510 எண்ணிக்கையில் நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள், 503 எண்ணிக்கையிலான NMR (தற்காலிக தினக்கூலி பணியாளர்), 4,316 எண்ணிக்கையிலான NULM (தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்) ஒப்பந்தப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக 9,035 பணியாளர்கள் தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

**(ii) ஈரமான மற்றும் உலர் கழிவு பதனிடுதல்**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ செயல்படுத்தும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் தரம் பிரிக்கப்பட்ட ஈர மற்றும் உலர் கழிவுகள் பதனிட பல்வேறு இடங்களில் பரவலாக்கப்பட்ட பதனிடும் மையங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது நாளொன்றுக்கு 1,217 மெட்ரிக்டன் அளவிற்கு ஈர கழிவுகளை பதப்படுத்தும் வசதிகளான நுண்ணுயிர் மூலம் உரம் தயாரிக்கும் கிடங்குகள், உலர் முறையில் உரம் தயாரிக்கும் கூடங்கள் (Windrow Composting), இயற்கை உயிரி எரிவாயு ஆலைகள், உயிரி எரிவாயு ஆலைகள் என மொத்தம் 256 எண்ணிக்கையிலான பதனிடும் மையங்கள் அட்டவணை 3.10ல் குறிப்பிட்டுள்ளவாறு உருவாக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 842 மெட்ரிக்டன் உலர் கழிவுகளை கையாள, 194 எண்ணிக்கையிலான பொருள் மீட்பு வசதிகள், வள மீட்பு மையங்கள், நவீன எரியூட்டிகள் மற்றும் இதர மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஈரக்கழிவுகளை பதப்படுத்தும் நிலையங்களிலிருந்து தற்போது ஒரு மாதத்திற்கு 400 டன் உரம் உற்பத்தி செய்யப்படுகிறது.



இது தவிர மறுசுழற்சி செய்ய முடியாத எரியக்கூடிய உலர் கழிவுகள் இணை எரியூட்டியாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு வாரந்தோறும் 50 மெட்ரிக்டன் அனுப்பப்படுகின்றன.

ஈரக்கழிவுகளைப் பதப்படுத்த மேலும் 6 இடங்களில் நாளொன்றுக்கு 600 மெட்ரிக்டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டு கட்டுமான பணிகள் பல்வேறு நிலையில் உள்ளது.

மேலும், நாளொன்றுக்கு 45 மெட்ரிக்டன் உலர் கழிவுகளை களைவதற்கான மையங்கள் (incinerators, Pyrolysis Units) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களை நிறைவு செய்தால் பரவலாக்கப்பட்ட வசதிகளின் மொத்த திறன் நாளொன்றுக்கு சுமார் 2,700 மெட்ரிக்டன் அதிகரிக்கப்பட்டு குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் குப்பையின் அளவு பெருமளவு குறைக்கப்படும். அதன் விவரம் கீழே அட்டவணை 3.10ல் உள்ளது.

**அட்டவணை 3.10**

| வ. எண் | செயல்முறை வகைகள் | மொத்த எண்ணிக்கைகள் | கொள்ளளவு மெடன் |
|---|---|---|---|
| 1 | இயற்கை உரம் தயாரிக்கும் கூடம் | 208 | 583 |
| 2 | உயிரி எரிவாயு நிலையம் | 34 | 13 |
| 3 | மக்கும் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலை | 6 | 21 |
| 4 | காற்று புகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் கூடம் | 2 | 100 |
| 5 | தோட்ட கழிவுகள் மற்றும் இளநீர் குடுவைகளை மறுசுழற்சி செய்யும் நிலையம் | 5 | 400 |
| 6 | இயற்கை உயிரி எரிவாயு நிலையம் | 1 | 100 |
| | **மொத்தம்** | **256** | **1,217** |

## (iii) பதனிடுதல் மற்றும் களைதல் மையங்கள்

### அ) பெருங்குடி

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் நகரின் தெற்கு பகுதியில் 225.16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இவ்வளாகம் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது, மண்டலம் 9 முதல் மண்டலம் 15 வரையில்



சேகரிக்கப்படும் கழிவுகள் இவ்வளாகத்தில் கொட்டப்படுகிறது.

இதில் தரைமட்டத்திற்கு மேலே உள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 34.02 லட்சம் கன மீட்டர் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாக நிலப்பரப்பை உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (Bio–mining) முறையில் மீட்டெடுக்க ரூ 350.65 கோடி திட்ட மதிப்பீட்டிற்குத் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 6 சிப்பங்களாக ஒப்புதல் வழங்கப்பட்டது. குப்பை கொட்டும் வளாகத்தில் குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டு காலத்தில் திட்டம் நிறைவுபெறும். இது வரை 2.14 இலட்சம் கன மீட்டர் திடக்கழிவுகள் அகழ்ந்தெடுத்து சீரமைக்கப்பட்டுள்ளது.

### ஆ) கொடுங்கையூர்

மாநகரத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கொடுங்கையூர் குப்பை வளாகம் 257.50 ஏக்கர் பரப்பளவில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது. மண்டலம் 1 முதல் மண்டலம் 8

வரையில் சேகரிக்கப்படும் கழிவுகள் இவ்வளாகத்தில் கொட்டப்படுகிறது.

இதில் தரை மட்டத்திற்கு மேலே உள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 65 லட்சம் கன மீட்டர் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலத்தை அகழ்ந்தெடுத்தல் (Bio–mining) முறையில் மீட்டெடுக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான சாத்திய கூறு அறிக்கை பெறப்பட்டவுடன் இத்திட்ட பணிகள் தூய்மை இந்தியா 2.0 மூலம் 2022 –23ல் மேற்கொள்ளப்படவுள்ளது.

### (iv) கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள்

சென்னை மாநகரத்தின் தற்போதைய கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளின் சேகரிப்பு தினந்தோறும் சுமார் 800 மெட்ரிக்டன் ஆகும். இச்சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக கட்டுமான மற்றும் இடிப்பாட்டுக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல் இரண்டு தொகுப்புகளாகப் (packages) பிரித்து தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவற்றின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.



மேலும், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களிலும் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மறுசுழற்சி ஆலைகள் பொது மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு குப்பை கொட்டும் வளாகங்களிலும் தற்போது ஒரு நாளைக்கு 250 மெட்ரிக்டன் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் பெறப்பட்டு பதப்படுத்தப்படுகிறது. இதிலிருந்து பெறப்படும் பெரிய மற்றும் சிறிய சரளைக்கற்கள் மற்றும் மணல் மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும்.

### (v) இயந்திர உட்கட்டமைப்பு

பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திர பொறியியல் துறையில் மொத்தம் 1,790 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. இதில் தூய்மைப் பணிக்கு, கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் அகற்றுவதற்கு மற்றும் இதர பணிகள் பயன்பாட்டிற்காக காம்பாக்டர்கள், பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள், கனரக / இலகுரக டிப்பர்ஸ், முன்பின் பளுதூக்கிகள்–21 எண்ணிக்கைகள், புல்டோசர்கள்–2 எண்ணிக்கைகள், ஹைட்ராலிக் எஸ்கவேட்டர்கள்–14 எண்ணிக்கைகள் போன்றவை உள்ளடங்கும்.

இத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் கால்வாய்களில் மிதக்கும் குப்பைகளை அகற்ற இரண்டு ஆம்பிபியன் (AMPHIBIAN) இயந்திரம் மற்றும் நான்கு ரோபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்வதற்கு ஏழு எண்ணிக்கையில் வாகனத்தின் மீது பொருத்தப்பட்ட உயர்திறன் கொண்ட மறுசுழற்சி வசதியுடன் கூடிய கழிவு நீரை உறிஞ்சி அகற்றும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலாக பெருநகர சென்னை மாநகராட்சி 16 எண்ணிக்கையிலான சாலை பெருக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்துள்ளது.

**(vi) சுகாதாரம் – சமுதாயக் கழிப்பறைகள் / பொதுக் கழிப்பறைகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி 31.01.2018 அன்று 'திறந்த வெளி மலம் கழித்தலற்ற' மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மீண்டும் நான்கு முறை "திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநகராட்சியாக சான்றளிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் மேற்கண்டவாறு திறந்த வெளி மலம் கழித்தலற்ற பெருநகர சென்னை மாநகராட்சியை



செயல்படுத்துவது பெரும் சவாலாக உள்ளது. எனவே, இடைவிடாமல் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 816 சமுதாய கழிப்பிடங்களில் 7,344 கழிவறைகள் உள்ளது. மேற்கண்டவற்றில் பழுதடைந்தவற்றை நவீனப்படுத்தவும், கூடுதல் பொதுக் கழிப்பிடங்கள் கட்டவும் தனியார் தொண்டு நிறுவனங்கள், ஒன்றிய, மாநில அரசின் மானியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி ஆதாரம் ஆகியவற்றை கொண்டும், கூட்டாண்மை சமூக பொறுப்பு (CSR) மற்றும் அரசு தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் கட்டிமுடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### 3.2.2 பொது சுகாதாரம்

பொது சுகாதார துறையானது நோய் தடுப்பு சிகிச்சை வசதிகள் மற்றும் பல்வேறு பொது மக்களை மையப்படுத்திய சேவைகள் வழங்கி வருகிறது.

மேலும் இத்துறையானது மருத்துவசேவைகள், பூச்சிகளால் பரவும் நோய்தடுப்பு, பல்வேறு தேசிய நலத் திட்டங்கள் செயல்படுத்தல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, மற்றும் வீடற்றோர்க்கான காப்பகங்கள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கிவருகிறது.

இதுமட்டுமல்லாமல், நோய் தடுப்பு மற்றும் பொதுசுகாதாரத்தை பாதுகாப்பதற்காக தமிழ்நாடு சுகாதார சட்டம் மற்றும் சென்னை மாநகர சட்டம் ஆகியவற்றை செயல்படுத்துகிறது. இந்த நலத் திட்டம் செயல்படுத்துவதற்காக பல்வேறு பிரிவுகள் பொது சுகாதாரதுறையின் கீழ் இயங்கி வருகிறது.

**(i) சுகாதார கட்டமைப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த சுகாதார உள்கட்டமைப்பின் மூலம் தொற்று நோய்களுக்கு சிகிச்சை, கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகள் என முழுமையான சுகாதாரச் சேவைகளை அளித்து வருகின்றது.

கீழ்கண்ட மருத்துவ சேவைகள் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நலமையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகளின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது

- சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை அளித்தல்
- அனைத்து வகை காய்ச்சல்களுக்கும் சிகிச்சை அளித்தல் (மலேரியா, டெங்கு, காசநோய்).



- தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களுக்கான (NCD) பரிசோதனை மற்றும் சிகிச்சைகள். இவற்றோடு கர்ப்பப்பைவாய் மற்றும் மார்பக புற்று நோய் கண்டறியப்படுகிறது
- அடிப்படை ஆய்வுக்கூட பரிசோதனை
- (24X7) மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளில் சுகப்பிரசவங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை பிரசவங்கள்
- கர்ப்பகால பராமரிப்பு மற்றும் பேறுகால பின் பராமரிப்பு
- பிறந்த குழந்தையின் பராமரிப்பு
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல் மற்றும் குழந்தையின் வளர்ச்சியை கண்காணித்தல்.
- நிரந்தர குடும்பநல சேவைகள் அளித்தல்.
- விழிப்புணர்வு நடவடிக்கைகள்
- மகளிருக்கு ஏற்படும் இதர நோய்களுக்குச் சிகிச்சை அளித்தல்
- தேசிய திட்டங்களை செயல்படுத்துதல்

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 இரத்த சுத்திகரிப்பு மையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவை திருவொற்றியூர் நகர்ப்புர சமுதாய நல மையம், லக்ஷ்மிபுரம் ஆரம்ப

சுகாதார மையம், சின்ன போரூர் நகர்ப்புர சமுதாய நல மையம், பெருங்குடி நகர்ப்புர சமுதாய நல மையம், நுங்கம்பாக்கம் நோய் கண்டறியும் மையம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் நகர்ப்புர சமுதாய நல மையம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்காக நோயினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் பொருட்டு, சிறப்பு மருத்துவ சேவை வழங்குவதற்காக 40 பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் (Polyclinic) செயல்படுகின்றன.

**தொற்று நோய் மருத்துவமனை, தண்டையார்பேட்டை**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தொற்று நோய்களுக்கான சிறப்பு மருத்துவமனை 1914 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது இம்மருத்துவ மனையானது 360 படுக்கைகள் கொண்டு வெளிநோயாளிகள், உள்நோயாளிகள் சிகிச்சை மற்றும் பிற பரிசோதனை வசதிகளுடன் செயல்பட்டுவருகிறது. இம்மருத்துவமனையானது பெருநோய்த் தொற்றுகளான சின்னம்மை, காலரா, பன்றிகாய்ச்சல் ஆகியவற்றை கட்டுப்படுத்த பெரும் பங்களித்துள்ளது. இம்மருத்துவமனையில் கொரோனா நோய்த் தொற்றை கண்டறியும் RT-PCR வசதி கொண்டுள்ளது.



இம்மருத்துவமனையில் துணை செவிலியர் மற்றும் ஆய்வு நுட்புனர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இளங்கலை மருத்துவ மாணவர்கள் மற்றும் முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(ii) சேவைகள்**

**அ. பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்தல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1930-ஆம் ஆண்டிலிருந்து பதியப்பட்ட அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் கணினி மையமாக்கப்பட்டுள்ளது

பொதுமக்களின் வசதிக்காக 07.09.2008-லிருந்து பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் www.chennaicorporation.gov.in. என்ற இணையதளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ. பூச்சி தடுப்பு நடவடிக்கைகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்கு கொசுப்புழுகள் மற்றும் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. வாகனத்தில் எடுத்துச் செல்லும் 68 புகைப்பரப்பும்

இயந்திரங்கள், கையினால் எடுத்துச் செல்லும் 251 புகைப்பரப்பும் இயந்திரங்கள் ஆகியவற்றினை கொண்டு புகை மருந்து அடிக்கப்பட்டு முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனுடன் 224 கைத்தெளிப்பான்கள் மற்றும் 128 அதிவேக திறன் கொண்ட கைத்தெளிப்பான்களைக் கொண்டு மழைநீர் வடிகால்களிலும், திறந்தவெளி கால்வாய்களிலும் உள்ள கொசுப்புழுக்களை, கொசுப்புழு கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனுடன் கொசுப்புழுக்களை உண்ணும் கம்பூஃசியா மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிக்கென மாநகராட்சியில் 3,463 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை தடுக்க தேவையான நோய்த்தடுப்பு மருந்துகள் மற்றும் நிலவேம்பு குடிநீர் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களிலும் போதுமான இருப்பு வைக்கப்பட்டுள்ளது.



**இ. நகர்ப்புர வீடற்றோருக்கான உறைவிடங்கள்**

நகர்ப்புர வீடற்றோர்களுக்கு சிறப்பு பராமரிப்பு சேவைகள் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியில் 55 வீடற்றோருக்கான காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அவற்றில் 42 வீடற்றோருக்கான காப்பகங்களும், 13 மருத்துவமனை உள்நோயாளிகளின் உடனிருப்பவர்கள் தங்கும் சிறப்பு காப்பகங்களும் அடங்கும்.

இக்காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் 28 புதிய நகர்ப்புர வீடற்றோருக்கான காப்பகங்கள் கட்டடப்பட்டு வருகின்றன.

**ஈ. இந்திய மருத்துவம்**

பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு இந்திய மருத்துவ முறைகள் (ஆயுர்வேதம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) மூலம் சேவைகளை வழங்குகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆயுஷ்/சித்தா சிகிச்சைக்கென 9 தனி மையங்கள் மற்றும் 3 ஒருங்கிணைந்த ஆயுஷ் சிகிச்சை மையங்கள் உள்ளன.

### உ. கால்நடை மருத்துவம்

- **தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, நாய் இனக்கட்டுப்பாட்டு விதிக்குட்பட்டு (2001) நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவற்றிற்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாளக் குறியிடப்பட்டு, சிகிச்சைக்கு பிறகு அவை பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் விடப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் புளியந்தோப்பு, லாயிட்ஸ் சாலை, கண்ணம்மாபேட்டை ஆகிய 3 இடங்களில் நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன :

இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேலும் விரிவுபடுத்தப்படும்



கடந்த 2021-2022 ஆம் ஆண்டு (பிப்ரவரி 2022 வரை) 13,141 தெரு நாய்களுக்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையும், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

- **இறைச்சிக் கூடங்கள்**

பொதுமக்களுக்கு சுத்தமான மற்றும் தரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் பெரம்பூர், வில்லிவாக்கம், சைதாப்பேட்டை மற்றும் கள்ளிக்குப்பம் ஆகிய இடங்களில் இறைச்சிக்கூடங்கள் இயங்கி வருகின்றன.

- **செல்ல பிராணிகளுக்கான மருத்துவமனை**

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப் பிராணிகளுக்கான மருத்துவமனைகள் நுங்கம்பாக்கம், திரு.வி.க.நகர், மீனம்பாக்கம் மற்றும் கண்ணம்மாபேட்டையில் செயல்பட்டு வருகின்றன. இவை செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சை அளிப்பதோடு கால்நடை பொது சுகாதார மையமாகவும் செயல்பட்டு வருகின்றன. இங்கு அவற்றிற்கு இலவசமாக வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டு உரிமம் வழங்கப்படுகிறது, செல்லப் பிராணிகள் வைத்திருப்பவர்களுக்கு விலங்குகளால் ஏற்படும்

நோய்கள் மற்றும் அவற்றின் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்படுகிறது. கடந்த 2021–2022ஆம் ஆண்டு (பிப்ரவரி 2022 வரை) 17,186 நாய்களுக்கு சிகிச்சையும் மற்றும் 595 நாய்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

- **கால்நடை தொழுவங்கள்**

பெரம்பூர் மற்றும் புதுப்பேட்டையில் கால்நடை தொழுவங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அவற்றின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு கால்நடைகள் சாலைகளில் சுற்றி திரியாத வண்ணம் உறுதிமொழி பெறப்பட்ட பின் கால்நடைகள் அவர்களுக்கு திருப்பி தரப்படுகின்றன. கடந்த 2021–2022 ஆம் ஆண்டு (பிப்ரவரி 2022 வரை) 1823 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது. அபராத தொகை ரூ.27,64,050/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஊ. தேசிய நகர்ப்புர நலவாழ்வு திட்டம்**

தேசிய நகர்ப்புர நலவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதல்களின் படி சுகாதார சேவை வழங்கும் வழிமுறைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்ப்புர நலவாழ்வு திட்டத்தின் கீழ், மருத்துவம் மற்றும்



மருத்துவ சார் பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் பகுப்பாய்வு காரணிகள், சிறப்பு முகாம்கள், தர உத்தரவாதம், நோயாளி நலச் சங்கம், நகர்ப்புர சுகாதாரம் மற்றும் சத்துணவு நாள் முகாம்கள் இயங்குகின்றன. இவை 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள, 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகளின் மூலம் செயல்பட்டு வருகின்றன.

**எ. சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள்**

நகர்ப்புரங்களில் சுகாதாரப் பராமரிப்பு விநியோக முறையை வலுப்படுத்துவதற்காக, பதினைந்தாவது நிதிக்குழு (FC–XV), சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களை நிறுவ மானியங்களை வழங்கியுள்ளது. இந்த மையங்கள் தற்போதுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, மக்களுக்கு அருகிலுள்ள இடங்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும். இந்த மையங்களை மக்கள் சுலபமாக அணுக மேம்படுத்துவதோடு, ஏழை மக்கள் சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதையும் சுகாதார சேவைகளுக்கான சில்லரை செலவினங்களை குறைப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளன.

ரூ.88.30 கோடி செலவில் பதினைந்தாவது நிதி ஆணையத்தின் மானியத்தின் கீழ் 140 நகர்ப்புர சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள் மற்றும் பிற வசதிகளை மாநகராட்சி நிறுவும்.

**ஏ. சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம்**

சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பார்வை இழப்பு தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது, 43 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் பரிசோதனை செய்யப்படுகிறது. 2025-குள் பார்வை இழப்பின் விகிதத்தை 0.25% ஆக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பார்வைத்திறன் குறைபாட்டினை சரி செய்ய இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2021-22 ஆம் ஆண்டில் 9,079 கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கண் வங்கிகள் மூலம் 1,408 கண்விழிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.



**ஐ. தேசிய காச நோய் ஒழிப்புத் திட்டம்**

- தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் மூலம் 2025-குள் காசநோயினை ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 36 காசநோய் மையங்கள், 162 நிர்ணயிக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்கள், 13 CBNAAT மையங்கள் மற்றும் 13 TRUNAT மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து நோயாளிகளுக்கும் CBNAAT மற்றும் TRUNAT சேவைகள் வழங்கப்படுகின்றன.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் ஊடுகதிர் (X-RAY) வசதிகள் கொண்ட 7 நடமாடும் வண்டிகள் செயல்பட்டு வருகின்றன. அதிகம் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு காசநோய் பரிசோதனை செய்ய இந்த வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- 2021-ஆம் ஆண்டில், 13,172 நபர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது ஜனவரி 2022 முதல் மார்ச் 15, 2022 வரை

2,448 நபர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது.

**(iii) கோவிட்–19 தொற்றினைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மார்ச் 17, 2020 அன்று கொரோனா பெருந்தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் UPHC/UCHC மற்றும் நிலையான மாதிரி சேகரிப்பு மையங்களில் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சி கோவிட்–19 மூன்றாம் அலையினை கட்டுப்படுத்த கீழ்கண்ட நடவடிக்கைகள் உட்பட பல்வேறு தனித்துவ நடவடிக்கைகள்எடுக்கப்பட்டது:–

- கோவிட் நோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு சேவை வழங்குதல்.
- ஒற்றை சாளர முறையில் ஆய்வக முடிவுகளை அறிவித்தல்
- நோய் பாதிக்கப்பட்டவர்களை வீட்டிலேயே வகைப்படுத்துதல்
- சிறப்பு மருத்துவ அவசர ஊர்திகள்
- வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டோர்களுக்கு மண்டல தொலைபேசி அழைப்பு மையங்கள் மூலம் ஆலோசனை
- நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக கண்காணிக்க தனியார் மருத்துவமனைகள் / தனியார் CT ஸ்கேன் மையங்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நோய் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் தெரிவித்தலை கட்டாயமாக்கப்பட்டது
- கோவிட் தடுப்பூசி வழங்குதலை தீவிரப்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி கொரோனா நோயாளிகளை வீட்டிலேயே கண்காணிப்பதற்காகவும் மருந்து கைப்பைகளை வழங்குவதற்காகவும் 1,535 கோவிட் தன்னார்வலர்களை பணியமர்த்தி, வீட்டு கண்காணிப்பில் உள்ள நோயுற்றவர்களுக்கு தேவையான வீட்டு பொருட்களை வாங்குவதற்கும், மெகா தடுப்பூசி முகாம்களுக்கு மக்களை அழைத்து செல்லவும் பயன்படுத்தப்பட்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி இரண்டாம் அலையின் போது 21 கோவிட் வகைப்படுத்தல் மையங்கள், 952 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் மற்றும் 21 கோவிட் பராமரிப்பு மையங்கள் கோவிட் நோயை

கட்டுப்படுப்படுத்த பயன்படுத்தப்பட்டது. மேலும் மூன்றாம் அலையின் போது 21 கோவிட் வகைப்படுத்தல் மையங்கள் மற்றும் 5 கோவிட் பராமரிப்பு மையங்கள் பயன்படுத்தப்பட்டன.

**(iv) கோவிட்–19 தடுப்பூசி போடுதல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 16.03.2022 வரை 1.02 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இவர்களில் 54,37,891 பயனாளிகள் முதல் தவணை தடுப்பூசி எடுத்துக்கொண்டுள்ளனர். 44,63,509 பயனாளிகள் இரண்டு தவணை தடுப்பூசிகளும் எடுத்துக்கொண்டுள்ளனர்.

- மாற்று திறனாளிகளுக்கும், காப்பகங்களில் தங்கியுள்ளவர்களுக்கும், சிறப்பு தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன.
- 80 வயதிற்கு மேற்பட்டவர்களின் வீட்டிற்கு சென்று தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- கர்ப்பிணிகளுக்கும், பிரசவித்த தாய்மார்களுக்கும் சிறப்பு தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன.
- ஒவ்வொரு வாரமும் 1600 இடங்களில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படுகின்றன.



- ஒவ்வொரு வாரமும் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை 24 தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 35,38,583 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- இந்திய அரசின் அறிவுறுத்தலின்படி 15–18 வயதிற்குட்பட்டவர்களுக்கு கோவிட் தடுப்பூசி 03.01.2022 முதல் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 3,36,963 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.
- முன்கள பணியாளர்களும், 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய்கள் உடையவர்களுக்கும், முன்னெச்சரிக்கை தடுப்பூசி 10.01.2022 முதல் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,27,409 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மேற்கண்ட புதிய உத்திகளால் பெருநகர சென்னை மாநகராட்சி, தினசரி நோய்த்தொற்று 8,987 (16.01.2022) ஆக இருந்ததை 35 நாட்களில் சுமார் 200 ஆக குறைத்தது நோய்த்தொற்று சதவிகிதம் 29.71% ஆக இருந்ததை 0.5 % ஆக குறைத்தது தற்போது தினசரி நோய்த்தொற்று 10–20 ஆக உள்ளது.

## 3.3. வருவாய்

சென்னை மாநகர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் போதிய வசதிகளை உருவாக்குவதை கருத்தில் கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி புதுமை மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் மூலம் செயல்திறனை அதிகரித்து வருவாயினை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

மேலும், சென்னையில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு, போதுமான வருவாயை பெருக்குவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆண்டு வரவு செலவு ரூ.6,300 கோடி ஆகும். 2020-21 ஆம் நிதியாண்டின் வரவு செலவு கணக்குகள் அட்டவணை – 3.11ல் பின்வருமாறு:

**அட்டவணை – 3.11**

| வஎண் | கணக்கு தலைப்பு | 2020 – 2021 (ரூ. கோடியில்) |
|---|---|---|
| வருவாய் கணக்கு | | |
| 1 | வரவு | 2891.08 |
| | செலவு | 3014.33 |
| மூலதன கணக்கு | | |
| 2 | வரவு | 1875.68 |
| | செலவு | 1242.97 |



பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பல்வேறு வருவாய் ஆதாரங்கள் / வரவினங்கள் விவரம் மற்றும் பல்வேறு வருவாய் செலவினங்கள் விவரம் வட்ட விளக்க படங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

3.3.1 சொத்துவரி, தொழில்வரி, நிறுவனவரி, கேளிக்கை வரி, தொழில் உரிமம் கட்டணம் மற்றும் வணிக வளாக வாடகைகளை வசூலிப்பது வருவாய் துறையின் பொறுப்பாகும்.

**அட்டவணை – 3.12**

| வஎண் | இனம் | அரையாண்டு வரியாக (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 396 |
| 2 | தொழில்வரி | 215 |
| 3 | நிறுவன வரி | 0.60 |
| 4 | கேளிக்கை வரி | கொரோனா தொற்று காரணமாக 2021-22 நிதியாண்டில் கேளிக்கை வரிவசூல் குறைவாக ரூ.13 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. |
| 5 | தொழில் உரிமம் கட்டணம் | 11.13 ஆண்டுக்கு |
| 6 | வணிக வளாக வாடகை | 19.32 (நிதி ஆண்டு 2021-22) |

### 3.3.2 தொழிநுட்பம் மூலம் வசூல் மேம்படுத்துதல்

கோவிட்19 தொற்றால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக பழைய வரி விகிதங்களின் அடிப்படையில் வரி வசூலித்து வருவதால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிக்கிடையிலும், புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் வரிவசூல் திறனை மேம்படுத்தி வருகிறது. உலக வங்கி தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் (TNSUDP) நிதி உதவியுடன் ரூ.6.44 கோடி மதிப்பீட்டில் "ஆளில்லா விமானம்" பயன்படுத்தி புவிசார் தொழில்நுட்ப அடிப்படை வரைபடம் உருவாக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகளில் சொத்துவரி குறைவாக உள்ள மற்றும் சொத்துவரி மதிப்பிடப்படாத கட்டடங்களை கண்டறிந்து, அவற்றின் மூலம், சொத்துவரி வருவாயினை உயர்த்துவதும் ஒன்றாகும். மொத்தமுள்ள 200 வார்டுகளில், தற்போது 180 வார்டுகளுக்கு கள ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி நிலையினை மேம்படுத்த, வரி மதிப்பு குறைவாக/வரி



மதிப்பீடு செய்யப்படாத சொத்துவரி இனங்கள் கண்டறிந்து அவை அனைத்தும் சொத்துவரி வரம்பிற்குள் கொண்டுவர அனைத்து விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.3.3 பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி நிலை

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒரு முக்கிய வருவாய் பிரிவாக சொத்துவரி உள்ளது. சொத்துவரிக்கான பொது சீராய்வு நிறுத்தம் மற்றும் கொரோனா நோய்த்தொற்று காரணங்களினால், தற்போதைய சூழ்நிலையில், வருவாய் குறைந்துள்ளது. குறிப்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சொத்துவரி குறைந்த அளவே வசூலாகியுள்ளது.

கூடுதலாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.2591.83 கோடி கடன் உள்ளது. (பாரத ஸ்டேட் வங்கியில் பெறப்பட்டுள்ள மிகைப்பற்றுத் தொகை ரூ.550 கோடி உட்பட). மேலும் ஒப்பந்ததாரர்களுக்கு ரூ.279.43 கோடிக்கான பட்டிகள் தீர்வு செய்யப்படாமலும், ரூ.373.51 கோடி பல்வேறு அரசு துறை சார்ந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்படாமலும் நிலுவையாக உள்ளது.

இது மட்டுமல்லாமல், 11 மண்டலங்களில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை அதாவது குப்பைக் கழிவுகளை சேகரித்து அதனை குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லும் (PPP) திட்டத்திற்காக, தனியார் ஒப்பந்த நிறுவனங்களுக்கு மாதந்தோறும் கூடுதல் செலவினமாக ரூ.53 கோடி பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டும்.

### 3. 4. கல்வி

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறை, சென்னைப் பள்ளிகள் மூலம் மாணவ/ மாணவியர்களுக்கு வாழ்க்கை திறன்களைக் கொண்ட தரமான கல்வியை வழங்கி வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் அட்டவணை 3.13ல் உள்ளவாறு 281 பள்ளிகளில், 2,731 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதன் விவரம் கீழே அட்டவணை 3.13ல் உள்ளவாறு.



**அட்டவணை – 3.13**

| பள்ளிகளின் வகைகள் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மழலையர் வகுப்புகளை உள்ளடக்கிய தொடக்கப்பள்ளிகள் | 119 |
| மழலையர் வகுப்புகளை உள்ளடக்கிய நடுநிலைப்பள்ளிகள் | 92 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 38 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 32 |
| **மொத்தம்** | **281** |

#### 3.4.1 மாணவர்களின் சேர்க்கை விவரம்

2021–22 கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்ட பல்வேறு புதுமையான நடவடிக்கைகளின் அடிப்படையில் மாணவர்களின் சேர்க்கை 1,15,580 ஆக உயர்ந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், தற்போது மாணவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளது..

#### 3.4.2 பொதுத் தேர்வு தேர்ச்சி விவரங்கள்:

10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளிகள் தொடர்ந்து சிறந்த தேர்ச்சி

விழுக்காட்டை அட்டவணை 3.14ல் உள்ளவாறு அளித்து வருகின்றன.

**அட்டவணை – 3.14**

| கல்வி ஆண்டு | 10ம் வகுப்பு பொது தேர்வு | | | 12ம் வகுப்பு பொது தேர்வு | | |
|---|---|---|---|---|---|---|
| | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | சதவீதம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | சதவீதம் |
| 2016 – 2017 | 6,302 | 5,865 | 93.07 | 6,423 | 5,700 | 88.74 |
| 2017 – 2018 | 5,908 | 5,516 | 93.36 | 5,788 | 5,139 | 88.79 |
| 2018 – 2019 | 5,730 | 5,297 | 92.44 | 4,837 | 4,377 | 90.49 |
| 2019 – 2020 | 5,988 | 5,988 | 100 | 4,648 | 3,988 | 85.80 |
| 2020 – 2021 | 6,580 | 6,580 | 100 | 5,130 | 5,130 | 100 |

### 3.4.3 நகர முதலீடுகள், புதுமை, ஒருங்கிணைத்தல் மற்றும் நிலை நிறுத்துதல் (CITIIS) நிதியின் கீழ் "மாதிரி மற்றும் சீர்மிகு சென்னை பள்ளிகள்"

நகர முதலீடுகள், புதுமை, ஒருங்கிணைத்தல் மற்றும் நிலை நிறுத்துதல் முன் முயற்சி திட்டத்தின் கீழ் 18 வளாகங்களில் உள்ள 28 பள்ளிகளை "மாதிரி மற்றும் சீர்மிகு" பள்ளிகளாக மாற்றியமைக்க ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம் (AFD) ரூ.76.2 கோடியும், சீர்மிகு சென்னை நிறுவனம் ரூ.19.05 கோடியும் பங்களிக்க உள்ளது. இந்த திட்டம் போதிய உட்கட்டமைப்புகளை உள்ளடக்கியது.



### 3.4.4 பிற முக்கிய பணிகள்

நிர்பயா நிதியின் கீழ் பாதுகாப்பான நகர திட்டம் மூலம் 132 பள்ளிகளில் பெண்களுக்கான கழிப்பறைகள் ரூ.18.87 கோடி செலவில் புதுப்பிக்கப்படும், 67 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவியர்களுக்கு ரூ.6.99 கோடி செலவில் தற்காப்பு பயிற்சி அளிக்கப்படும், ரூ.4.79 கோடி செலவில் 159 சென்னைப் பள்ளிகளில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை ஏற்படுத்தப்படும் மற்றும் ரூ.5.47 கோடி செலவில் 159 சென்னை பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி 22 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் அனைத்து பள்ளிகளிலும், சீர்மிகு வகுப்பறைகளை நிறுவவும் ரூ.67.83 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் சென்னை மாநகராட்சி

மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களை முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில போட்டித்தேர்வுகளில் பங்குபெற்று வெற்றிபெற செய்ய ரூ.3.59 கோடி செலவில் இரண்டு உண்டு உறைவிட மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

I. சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி , நுங்கம்பாக்கம்.
II. அரசுஆண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளி , சைதாப்பேட்டை.

### 3.4.5 சமுதாய கல்லூரிகள் மற்றும் தொழில்முறை பயிற்சி நிறுவனம் (ITI)

மண்டலம் –9 ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற (NCVT – National Council of Vocational Training) தொழில்முறை பயிற்சி நிறுவனம் மூலம் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகளான பிளம்பர், பொருத்துனர், மெக்கானிக், எலக்டீரிசியன், மோட்டர் மெக்கானிக் மற்றும் கணினி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சி முடித்த மாணவர்களுக்கு தொழில் துறை பயிற்சி நிறுவனம் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.



பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, சுந்தரம் தெரு புரசைவாக்கம் மற்றும் சி.வி.ராமன் தெரு ஆழ்வார்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் சமுதாய கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இச்சமுதாய கல்லூரிகளின் மூலம் மென்பொருள் கணினி, சுகாதார உதவியாளர்கள். துணை மருத்துவ படிப்புகள், அடுமனை & இனிப்பு தயாரித்தல் மற்றும் சணல்பை உற்பத்தி செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.5 நமக்கு நாமே திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் "நமக்கு நாமே திட்டம்" பொது சொத்துக்களை மேம்படுத்தவும், OSR நிலங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்க செயல்படுத்தப்படுகிறது.

நமக்கு நாமே திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சுமார் ரூ.49.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 110 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.11.48 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் பங்களிப்பாளர்களின் தொகையாக ரூ.9.22 கோடி, அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையாக ரூ.2.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நமக்கு நாமே திட்டத்தின் வழிகாட்டுதலின் படி, 2 எண்ணிக்கையில் குளங்களை மேம்படுத்துதல், 27 எண்ணிக்கையில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல்களை மேம்படுத்துதல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல், 30 எண்ணிக்கையில் சென்னை பள்ளிகளை மேம்படுத்துதல், 19 எண்ணிக்கையில் அழகுபடுத்துதல், 15 எண்ணிக்கையில் பொதுக்கழிப்பிடங்களை மேம்படுத்துதல், 2 எண்ணிக்கையில் மயானபூமி மற்றும் தகனமேடையினை மேம்படுத்துதல், 15 எண்ணிக்கையில் மையதடுப்புச் சுவர், மழைநீர் வடிகால் மேம்படுத்துதல், மருத்துவமனைகளை மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் அனைத்தும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர, பெருநகர



சென்னை மாநகராட்சி துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**3.6 நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டம்**

நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களைக் கொண்ட மண்டலம்–4 (தண்டையார்பேட்டை) மற்றும் மண்டலம்–6 (திரு.வி.க. நகர்) ஆகிய இரண்டு மண்டலங்கள் முன்மாதிரியாக இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ரூ.5 கோடி வீதம் மொத்தம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்ற தினக்கூலியாக ரூ.382/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இரு மண்டலங்களிலும் இதுவரை 1,97,000 வீடுகள் ஆய்வு செய்து 57,000 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இத்திட்டத்தின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிய விருப்பமுள்ள

பயனாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 28,000 பயனாளிகளுக்கான வேலை அட்டை (Job Card) வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மண்டலம்–4 மற்றும் மண்டலம்–6ல் மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3.7 துறை பயிற்சி தேவைகள் மற்றும் திறன் வளர்ப்பு நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (TNIUS) கோயம்புத்தூர் மூலம் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL), தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பில் உள்ளவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தினை ஆலோசனை நிறுவனம் மூலம் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையின் அடிப்படையில், பெருநகர



சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.

### 3.8 சிங்கார சென்னை 2.0

தமிழ் நாடு அரசு 2021–22ம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில் நவீன, உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக "சிங்கார சென்னை 2.0" திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்திற்காக 2021–22ம் ஆண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த வருடமும் இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்ட கீழே அட்டவணை 3.14 குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் 2021–22ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14**

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | | தற்போதையநிலை |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூகோடியில்) | |
| 1 | பேருந்து சாலைகள் | 59 | 37.58 | 57 பணிகள் முடிக்கப்பட்டன. 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| வ. எண். | திட்டம் | அனுமதிக்கப்பட்டவை | | தற்போதையநிலை |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூகோடியில்) | |
| 2 | செயற்கை நீரூற்று | 26 | 1.29 | 19 பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன. |
| 3 | பூங்காக்கள் மேம்படுத்தும் பணி | 28 | 24.43 | 24 பணிகள் நடைபெற்று வருகின்றன. 4 பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன. |
| 4 | விளையாட்டு திடல் மேம்படுத்தும் பணி | 18 | 12.57 | 11 பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன. |
| 5 | மாறும் வண்ண மின் விளக்குகள் | 1 | 1.81 | பணி நடைபெற்று வருகிறது. |
| 6 | பெயர் பலகை (சாலை) | 1 | 8.43 | பணி நடைபெற்று வருகிறது. |
| 7 | மயானபூமி | 11 | 8.35 | 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன. |
| 8 | மழைநீர் வடிகால் | 1 | 184.67 | மொத்தம் உள்ள 10 சிப்பங்களில் 8 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 சிப்பங்களில் பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன. |
| 9 | நீர் நிலைகள் | 12 | 9.08 | 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. 10 பணிகள் ஒப்பந்த புள்ளி கோரப்பட உள்ளது. |
| 10 | பள்ளிகள் | 11 | 50.67 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| 11 | நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம் | 2 | 0.81 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | | **170** | **339.69** | |



### 3.9 வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சட்டமன்றத்தில் ஜுன் 21, 2021 அன்று ஆற்றிய ஆளுநர் உரையின் அடிப்படையில் தமிழ் நாடு அரசு, தேசிய பேரிடர் மேலாண்மை குழுவின் முன்னாள் கூடுதல் செயலாளர் / ஆலோசகர் திரு.V.திருப்புகழ் (IAS Retd), அவர்கள் தலைமையில் வல்லுநர்கள் அடங்கிய

ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. சென்னை மாநகரில் வெள்ள அபாயத்தினை தடுக்கும் பொருட்டு உரிய பரிந்துரைகளை அளிக்கும் பொறுப்பு இக்குழுவிற்கு அளிக்கப்பட்டது.

2021–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலன இடங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து பொதுமக்கள் மற்றும் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார். மேலும் சென்னை மாநகரில் வெள்ளம் பாதிக்கா வண்ணம் நிரந்தர தீர்வை அளிக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார். ஆலோசனைக் குழு 03.01.2022 அன்று அரசிற்கு தனது இடைக்கால அறிக்கையினை அளித்தது. 2021– ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் கடுமையாக பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளை இவ்வாலோசனைக் குழு வழங்கியது. இவ்வாலோசனைக் குழு வழங்கிய



பரிந்துரைகளை தொடர்ந்து, கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 40.80 கி.மீ. நீளத்தில் ரூ.184.67 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் இந்த நிதியாண்டிலேயே முடிக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக, ரூ.70 கோடி மதிப்பீட்டில் 20.03 கி.மீ. நீளத்திற்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைப்பாளரான தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) பரிசீலனையில் உள்ளது.

மேலும் கடந்த பருவமழையின் போது மழைநீர் வெளியேற்ற மோட்டார் பம்புகள் வைக்கப்பட்ட இடங்களில் புதிதாக மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி வரவு–செலவு 2022 –23ல் தமிழ்நாடு அரசின் வெள்ளத்தடுப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும்.

விரிவான முறையில் சென்னை மாநகரில் வெள்ள தடுப்பிற்கான உட்கட்டமைப்பை உருவாக்க பெருநகர சென்னை மாநகராட்சி நீர் ஆதாரத்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஏனைய துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 3.10 நிலையான அபிவிருத்திக்கான இலக்குகள்

சென்னை மாநகராட்சி நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளை 2030 க்குள் அடைவதற்கு அதிகப்படியான முன்னுரிமை வழங்கி வருகிறது.

**அ. உடல் நலம் மற்றும் நல்வாழ்வு (இலக்கு 3) –** பெருநகர சென்னை மாநகராட்சியானது முழுமையான சுகாதார சேவைகள் அதாவது கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் நலம், தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகளை ஒரே குடையின் கீழ் அளித்து வருகின்றது. சென்னை நகரக் கூட்டாண்மை திட்டத்தின் ஒரு பகுதியாக சுகாதாரத்துறை உட்கட்டமைப்பு மற்றும் மனித வளம் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.



**ஆ. தரமான கல்வி (இலக்கு 4) –** வகுப்பறைக்கு தேவையான மற்றும் சீரான மின்சாரம், இணையவழி இணைப்பு, மடிகணினி, ஸ்மார்ட் போர்டு மற்றும் வகுப்பறைக்கான தளவாடங்கள் ஆகியவற்றைக் கொண்டு ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

**இ. பாலின சமத்துவம் (இலக்கு 5) –** பெருநகர சென்னை மாநகராட்சி ஆனது பெண்களின் நலனுக்காக நிர்பயா திட்டத்தின் கீழ் நவீன கழிப்பறைகள், வாழ்வாதாரங்கள், பாதுகாப்பு போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பாலின பிரச்சனைகளை ஆராய பெருநகர சென்னை மாநகராட்சியில் பாலின ஆய்வகம் நிறுவப்பட்டு, பாலின பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும்.

**ஈ. சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (இலக்கு 6) –** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளை புனரமைக்கவும் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும் சுற்றுப்புறங்களை அழகுபடுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தனிநபர் மற்றும் சமுதாய

கிணறுகள் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளாக கட்டமைக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அனைத்து பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகள் நவீன வசதியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**உ. எளிய மற்றும் தூய்மையான சக்தி (இலக்கு 7) –** குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் வகையில் சிறந்த வெளிச்சம் அளிப்பதற்காக சோடியம் விளக்குகள் எல்.இ.டி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி நடைபயிற்சி, மிதிவண்டி மற்றும் E–மிதிவண்டிஆகியவற்றின் மூலம் மோட்டார் இல்லா வாகன போக்குவரத்தை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் பொதுமக்களின் ஆரோக்கியம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஊ. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (இலக்கு 11) –** நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை உருவாக்குதல், காற்றின் தரம், நகராட்சி மற்றும் பிற கழிவு மேலாண்மைக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், நகரங்களின் தனிநபர் சுற்றுச்சூழல் பாதிப்பைக்



குறைக்க பெருநகர சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

**எ. இலக்குகளை அடைவதற்கான கூட்டமைப்பு (இலக்கு 17) –** நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளை அடைய தமிழ்நாடு அரசு உலக வங்கியுடன் இணைந்து மூன்று கட்டங்களில் சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தவுள்ளது.

# 4. பேரூராட்சிகள் ஆணையரகம்

வளர்ந்து வரும் நகர்ப்புரங்களில் தற்போதைய வளர்ச்சி சூழலில், பெரும் நகரங்களுக்கு இடையில் இருக்கும் பேரூராட்சிகள் முக்கியத்துவம் கொண்டவைகளாக உள்ளன. பேரூராட்சிகள் பெரிய நகரங்களுக்கு இடைப்பட்ட அமைப்பாக அமைந்துள்ளதால், பெரிய நகரங்களை நோக்கி மக்கள் பெருமளவு இடம்பெயர்வதைத் தவிர்த்திட, இந்த நகரங்களுக்கு தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்குவது அவசியமானதாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 7,621 வார்டுகளை உள்ளடக்கிய 490 பேரூராட்சிகள் உள்ளன. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இப்பேரூராட்சிகளின் மக்கள் தொகை 69,24,178 ஆகும். பேரூராட்சிகள் என்பது கிராம ஊராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் இடைப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளாகும்.

## 4.1 நிருவாகம்

பேரூராட்சிகள், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் பேரூராட்சிகள் ஆணையரின் நிருவாக கட்டுப்பாட்டிற்குள் வருகின்றன. பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில், 17 மண்டல அலுவலகங்கள்



செயல்படுகின்றன. பேரூராட்சிகளின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்கின்றனர்.

பேரூராட்சிகள், 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. பேரூராட்சிகள், அட்டவணை 4.1ல் குறிப்பிட்டுள்ளதன்படி அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் 4 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1**

| வகை | ஆண்டு வருவாய் | எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்புநிலை | ரூ. 200 இலட்சத்திற்கு மேல் | 47 |
| தேர்வு நிலை | ரூ. 100 இலட்சத்திற்கு மேல்<br>ரூ. 200 இலட்சம் வரை | 187 |
| முதல் நிலை | ரூ. 50 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.100 இலட்சம் வரை | 194 |
| இரண்டாம் நிலை | ரூ. 50 இலட்சத்திற்கு கீழ் | 62 |
| | **மொத்தம்** | **490** |

## 4.2 பேரூராட்சிகளின் செயல்பாடுகள்

குடிநீர் வழங்கல், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, தெரு விளக்குகள் பராமரித்தல், சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், மழைநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல், சமுதாயக்கூடங்கள் அமைத்தல், வணிக வளாகங்கள், நவீன எரிவாயு

தகனமேடைகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகள் போன்றவற்றை கட்டுதல் மற்றும் பராமரித்தல், போன்ற அடிப்படை வசதிகளையும், சேவைகளையும் பொது மக்களுக்கு பேரூராட்சிகள் வழங்கி வருகின்றன. மேலும், கட்டிட உரிமம் மற்றும் கட்டிட அனுமதி அளித்தல் ஆகியவை பேரூராட்சிகளின் இதர முக்கிய செயல்பாடுகளாகும்.

#### 4.2.1 வருவாய் ஆதாரங்கள்

சொத்து வரி, தொழில்வரி, ஏல இனங்கள் / குத்தகை மற்றும் வாடகை, குடிநீர் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற வரி மற்றும் வரியில்லா இனங்கள் பேரூராட்சிகளின் சொந்த வருவாய் ஆதாரங்களாக அமைந்துள்ளன. மேலும், முத்திரைதாள் மிகு வரி, அரசிடமிருந்து மாநில பகிர்வு நிதி மற்றும் 15வது நிதி ஆணைய மானியம் (CFC) போன்ற ஒதுக்கீடு இனங்கள் மூலமும் பேரூராட்சிகள் வருவாயினை பெற்று வருகின்றன.

#### 4.2.2 குடிநீர் வழங்கல்

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, புதிய குடிநீர் திட்டங்கள் அரசால் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஏற்கனவே



உள்ள குடிநீர் திட்டப் பணிகள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யப்பட்டும் வருகின்றன. தற்போது அனைத்து பேரூராட்சிகளில் உள்ள பொது மக்களுக்கும், நிர்ணயிக்கப்பட்ட அளவான, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டரும், பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டரும் குடிநீர் வழங்கிட அரசு உறுதி பூண்டுள்ளது.

மொத்தமுள்ள 490 பேரூராட்சிகளில், 102 பேரூராட்சிகளில் தனிக்குடிநீர் திட்டங்கள் மூலமும், 373 பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்படும் 127 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் வாயிலாகவும், மீதமுள்ள பேரூராட்சிகளில் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலமும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

பேரூராட்சிகளில் 38 விழுக்காடு குடியிருப்புகளுக்கு மட்டுமே வீட்டு குடிநீர் இணைப்புகள் உள்ளன. தற்போது, அனைத்து குடியிருப்புகளுக்கும் 100% செயல்படக்கூடிய குடிநீர் இணைப்புகள் வழங்கிட, (Functional house service connection) முதற்கட்டமாக 2021-22-ம் ஆண்டில்

16,686 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கிட ஏதுவாக, நகர குடிநீர் சமநிலைத் திட்டம் (City water balanced plan) மற்றும் நகர குடிநீர் செயல் திட்டம் (City water action plan) அனைத்து பேரூராட்சிகளுக்கும் தயாரிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட தேவைக்கும், வழங்கப்படும் அளவிற்கும் இடையே உள்ள இடைவெளியின் அடிப்படையில் புதிய திட்டங்கள் மூலம் குடிநீர் ஆதாரங்களை உருவாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2021–22 ம் ஆண்டில் அரசாணை (நிலை) எண்.44 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (கு.வ1) நாள் 14.03.2022ன்படி, ராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் இதர ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கி ரூ.854.37 கோடி மதிப்பீட்டில், அம்ருத் 2.0 மற்றும் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் வெண்ணந்தூர், அத்தனூர், ஆர்.புதுப்பட்டி, பிள்ளாநல்லூர், நாமகிரிப்பேட்டை, பட்டணம், சீராப்பள்ளி



மற்றும் மல்லசமுத்திரம் ஆகிய 8 பேரூராட்சிகளில் உள்ள சுமார் 1,17,000 மக்கள் பயன்பெறுவர்.

### 4.2.3 சாலைகள்

பேரூராட்சிகளுக்கு அருகாமையில் உள்ள கிராமங்களை நகரங்களுடன் இணைத்து மக்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதில் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

490 பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 20,419 கி.மீ. நீளத்திற்கு பல்வேறு வகையான சாலைகள் பேரூராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் கீழே அட்டவணை 4.2 கொடுக்கப்பட்டுள்ளது.

**4.2 அட்டவணை**

| வ. எண். | சாலையின் வகைப்பாடு | நீளம் (கி.மீட்டரில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | தார் சாலைகள் | 11,157 |
| 2 | சிமெண்ட கான்கிரீட் சாலைகள் | 5,121 |
| 3 | பேவர் பிளாக் சாலைகள் | 1,037 |
| 4 | கருங்கல் ஜல்லி சாலைகள் | 127 |
| 5 | செம்மண் சாலைகள் | 57 |
| 6 | மண் சாலைகள் | 2,920 |
| | மொத்தம் | 20,419 |

தற்போது 2,977 கி.மீ. நீளமுள்ள மண் மற்றும் செம்மண் சாலைகளை தார் சாலை, சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலைகளாக மாற்றியமைக்க அரசு உறுதி மேற்கொண்டுள்ளது. 2021–22ம் ஆண்டின் கீழ் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மூலதன மானிய நிதி மற்றும் தமிழ் நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டங்களின் கீழ் ரூ.368.43 கோடி மதிப்பீட்டில் 824 பணிகள் 529 கி.மீ. நீளத்திற்கு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 182 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 642 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.2.4 தெரு விளக்குகள்

தெருவிளக்குகளை பராமரிப்பது என்பது பேரூராட்சிகளின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். மொத்தம் 3,89,960 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில், 2,251 உயர் கோபுர மின் விளக்குகள், 830 மெர்குரி ஆவி விளக்குகள், 16,513 சோடியம் ஆவி விளக்குகள், 1,93,584 குழல் விளக்குகள், 88,796 அடர் மின் விளக்குகள், 84,923 ஆற்றல் மிகு மின்விளக்குகள் (எல்.இ.டி.) மற்றும் 3,063 சூரிய மின் சக்தி விளக்குகள் ஆகும்.



அனைத்து பேரூராட்சிகளிலும் தற்போது உள்ள பாரம்பரிய தெருமின் விளக்குகளை, ஆற்றல் மிகு மின்விளக்குகளாக மாற்றியமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மின்சார பயன்பாடு குறைவதோடு மின்கட்டணம் குறைவதற்கும் வழிவகுக்கிறது.

### 4.2.5 நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையங்கள்

மொத்தமுள்ள 490 பேரூராட்சிகளில், 199 பேரூராட்சிகளில் பேரூந்து நிலையங்கள் உள்ளன. இப்பேருந்து நிலையங்களை அனைத்து வசதிகளுடன் கூடிய நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையங்களாக மாற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக 2021–22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10 பேருந்து நிலையங்களை ரூ.44.69 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கிட நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு, அப்பணிகள் தற்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. அப்பேரூராட்சிகளின் விவரங்கள் கீழே அட்டவணை 4.3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.3**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சியின் பெயர் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | திண்டுக்கல் | கன்னிவாடி |
| 2 | விழுப்புரம் | செஞ்சி |
| 3 | தேனி | தேவாரம் |
| 4 | ராணிப்பேட்டை | திமிரி |
| 5 | திருநெல்வேலி | வடக்குவள்ளியூர் |
| 6 | திண்டுக்கல் | கீரனூர் |
| 7 | திருச்சிராப்பள்ளி | தொட்டியம் |
| 8 | கடலூர் | குறிஞ்சிப்பாடி |
| 9 | திருச்சிராப்பள்ளி | தாத்தையங்கார்பேட்டை |
| 10 | சிவகங்கை | இளையான்குடி |

**4.2.6 சந்தைகள்**

பேரூராட்சிகளில் அமைந்துள்ள வாரச்சந்தைகள், நகரங்களுக்கும் அருகிலுள்ள கிராமப்புறங்களுக்கும், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், நகரங்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், சந்தைகள், சிறு மற்றும் குறு தொழில்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது. மொத்தம் 646 சந்தைகள் பேரூராட்சிகளால் பராமரிக்கப்படுகின்றன. 2021–22 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்புர மேம்பாட்டு



திட்டத்தின் (KNMT) கீழ் ரூ.51.84 கோடி மதிப்பீட்டில் 15 சந்தைகள் மேம்பாட்டு பணிகள் மற்றும் மூலதன மானிய நிதித் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடி மதிப்பீட்டில் 3 பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2 சந்தை பராமரிப்பு பணிகள், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இப்பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.3 சுகாதாரம்**

மக்களுக்கு தரமான சுகாதார வசதிகளை வழங்குவதும், தூய்மையை பராமரிப்பதும் பேரூராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும். அனைத்து பேரூராட்சிகளிலும் சுகாதாரத்தை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதனை எய்திட தூய்மை இந்தியா திட்டம் 2.0–இன் கீழ், தேவைகளின் அடிப்படையில் தனிநபர் இல்ல கழிப்பிடங்கள் கட்ட நிதி உதவி வழங்கப்படும். தூய்மை இந்தியா திட்டம் 2.0–இன் கீழ் அனைத்து பேரூராட்சிகளுக்கும் நகர சுகாதார செயல் திட்டங்கள் (City Sanitation Action Plans) தயாரிக்கப்பட்டுள்ளன, இத்திட்டத்தின் அடிப்படையில் பேரூராட்சிகளில் சமுதாயக் கழிப்பிடங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். சமுதாய மற்றும்

பொது கழிப்பறைகளை பராமரிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### 4.3.1 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ பேரூராட்சிகள் பின்பற்றி வருகின்றன. அதன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளில் நாள்தோறும் சுமார் 1,805 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகின்றன. இதில் 890 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளாகவும், மீதமுள்ளவை மக்காத கழிவுகளாகவும் உள்ளது.

தற்போது, பேரூராட்சிகள், 96 சதவீதம் வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணியை செய்து வருகிறது. மக்கும் கழிவுகளை நுண் உரம் தயாரிக்கும் மையங்களிலும், பரவலாக்கப்பட்ட மக்கும் குழிகள் மூலமாகவும் செயலாக்கப்படுகிறது. உலர் கழிவுகள், வளம் மீட்பு மையங்களின் மூலம் மறுசுழற்சி செய்யப்படுகிறது அல்லது இணை செயலாக்கத்திற்காக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை 5,366 பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் 11,923 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மேற்கொண்டு



வருகின்றனர். வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கும் பணியாளர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் மற்றும் மின்கலன் மூலம் இயங்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மின்கலனில் இயங்கும் வாகனங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை. எனவே, 2021-22ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1,909 மின்கலனில் இயங்கும் வாகனங்கள் மற்றும் 98 இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.49.13 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வாகனங்களை விரைவில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்திலுள்ள பேரூராட்சிகளில், 42 இடங்களில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மரபு கழிவுகள் ரூ.26.80 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள இடங்களில் உள்ள மரபு கழிவுகள் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் உயிரி அகழ்வு மூலம் தீர்வு செய்யப்படும். தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் கீழ் மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் ரூ.16.81 கோடி மதிப்பீட்டில் 23 பேரூராட்சிகளில் உள்ள மரபு கழிவுகளை உயிரி அகழ்வு மூலம் தீர்வு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் திடக்கழிவுகளின் அளவினை குறைக்கும் வகையில், மக்கும் கழிவுகள் வீடுகளிலேயே உரமாக்கப்பட்டு தோட்டத்திற்கு பயன்படுத்தப்படுவதால், வீடுகளிலேயே உரமாக்குதல்/மாடி தோட்டம் அமைத்தல் போன்ற முறைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு பேரூராட்சிகளில் உள்ள சுமார் 61,000 வீடுகளில் திடக்கழிவுகள் பிரிக்கப்பட்டு, மக்கும் கழிவுகள் பரவலாக்கப்பட்ட முறையில் உரமாக மாற்றப்பட்டு வருகிறது.

### 4.3.2 திரவக் கழிவு மேலாண்மை திட்டம்

பயன்படுத்தப்பட்ட நீர், நீர்நிலைகளில் கலந்து சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், முக்கூடல், சேரன்மாதேவி, பத்தமடை, மேலசெவல், கோபாலசமுத்திரம், நாரணம்மாள்புரம் ஆகிய பேரூராட்சிகளில் பரவலாக்கப்பட்ட முறையில் கழிவு நீர் சுத்திகரிப்பு கட்டுமானங்களை அமைத்திட ரூ.6.16 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் மாநில உயர் மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



#### 4.3.2.1 பாதாள சாக்கடைத் திட்டம்

பேரூராட்சிகளில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க, கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றி தீர்வுசெய்வது அவசியமானதாகும். பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்துவதில் அதிக மூலதனம் மற்றும் செயல்படுத்த நீண்ட காலம் எடுத்தாலும், பேரூராட்சிப் பகுதிகளில், வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரின் பாதுகாப்பான சேகரிப்பு, கொண்டு செல்வது, சுத்திகரிப்பு செய்வது போன்றவற்றிற்கு இத்திட்டங்கள் பயனுள்ளதாக உள்ளது. மாமல்லபுரம், திருமழிசை, ஒரத்தநாடு, பழனிசெட்டிபட்டி, வேளாங்கண்ணி, மண்ணச்சநல்லூர், எஸ்.கண்ணனூர், பெருந்துறை, வல்லம் ஆகிய 9 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் செயல்பாட்டிலுள்ளன. 3 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் செயலாக்கத்திலுள்ளது. இப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, 2022-23ம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

#### 4.3.2.2 கசடு கழிவு மேலாண்மை

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கசடு கழிவுகளை அகற்றி கொண்டு செல்லவும் மற்றும்

சுத்திகரிக்கவும் ஒரு மாற்று வழியாக கசடு கழிவு மேலாண்மை திகழ்கிறது. பேரூராட்சிகளில் குடியிருப்புகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்களில் உள்ள கழிவுநீர் தொட்டி (septic tank) கசடுகளை தனியார் வாகனங்கள் மூலம் அகற்றி சுத்திகரிப்பு செய்து தீர்வு செய்ய கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த சுத்திகரிப்பு முறை ஒரு முன்னோடி திட்டமாக செங்கல்பட்டு மாவட்டம், கருங்குழி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய இரு பேரூராட்சிகளில் முறையே ரூ.5.18 கோடி மற்றும் ரூ2.02 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, முதுகுளத்தூர், ஜலகண்டாபுரம், பென்னாகரம், காவேரிப்பட்டணம், செங்கம், குரும்பலூர், பெண்ணாடம் மற்றும் ஆலங்காயம் ஆகிய 8 பேரூராட்சிகளில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் ரூ.22.79 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 48 இடங்களில்,
52 நகராட்சிகளுடன் ஒருங்கிணைத்து தொகுப்பு முறையில் பணிகள் நடைபெற்று வருகிறது.



### 4.3.3 நவீன எரிவாயு தகனமேடை

பேரூராட்சிகளில் மொத்தம் 1,920 மயானங்கள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து பேரூராட்சிகளிலும் நவீன எரிவாயு தகனமேடை மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய மயானங்கள் அமைப்பது அரசின் முயற்சியாகும். பேரூராட்சிகளில் ஏற்கனவே 25 நவீன தகனமேடைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 2021–22 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தில் ரூ.21.96 கோடி மதிப்பீட்டில் 15 நவீன தகனமேடைகள் மற்றும் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் 11 நவீன தகனமேடைகளும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கட்டுமானப் பணிகள் முடிவடைந்த பிறகு, 2022–23 ஆம் ஆண்டில் இந்த தகன மேடைகள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 4.4 சுற்றுச்சூழல் மேம்பாடு

பேரூராட்சிப் பகுதிகளில் சுற்றுச்சூழலைப் பராமரித்து, ஆரோக்கியமான வாழ்க்கை சூழலை வழங்குவது அவசியமானது ஆகும். மரங்கள் நடுதல், நீர்நிலைகளை புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல்

மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பேரூராட்சிகளை பசுமை பேரூராட்சிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.4.1 நீர் நிலைகளை புனரமைத்தல்**

490 பேரூராட்சிகளில் மொத்தம் 2,212 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 1,182 நீர்நிலைகள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டில், 358 நீர்நிலைகள் ரூ.109.30 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 672 நீர்நிலைகள் படிப்படியாக புனரமைக்கப்பட்டு சீராக்கப்படும்.

பேரூராட்சிகளில் உள்ள திறந்தவெளி மற்றும் காலி நிலங்கள் பசுமையான இடங்களாக மேம்படுத்தப்படும்.

**4.4.2 மழை நீர் சேகரிப்பு**

பேரூராட்சிகளிலுள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்குவது கட்டாயமாகும்.

பொது மக்களின் ஈடுபாட்டுடன் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பதற்கு பொது மக்களிடையே



விழிப்புணர்வு ஏற்படுத்தி, பருவமழை துவங்குவதற்கு முன்னர் தங்களது வளாகத்திலுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைக்க ஊக்குவிக்கப்படுவார்கள்.

**4.4.3 பூங்காக்கள்**

பேரூராட்சிகளில் 536 பூங்காக்கள் உள்ளன. 2021-22 ஆம் ஆண்டில் 15வது நிதி ஆணைய மானியத்தின் (CFC) கீழ் 364 பூங்காக்கள் மேம்படுத்துவதற்கு ரூ.56.22 கோடி அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், மூலதன மானிய நிதியின் கீழ் 3 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.89 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 பூங்கா மேம்பாட்டுப் பணிகளும் ரூ.0.98 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.5 செயலாக்கத்திலுள்ள திட்டங்கள்**

**4.5.1 தூய்மை இந்தியா திட்டம் 2.0.**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ், தனிநபர் கழிப்பிடம், சமுதாய / பொது கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் ஆகியவற்றின் தேவைகள் குறித்து கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. 7,295 தனிநபர்

கழிப்பறைகள், 100 சமுதாய கழிப்பறைகள் மற்றும் 450 சிறுநீர் கழிப்பிடங்கள் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும். அனைத்து 490 பேரூராட்சிகளும் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற பேரூராட்சிகளாக (ODF) மாற்றப்பட்டுள்ளன. இதில், 350 பேரூராட்சிகள் ODF+ என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 140 பேரூராட்சிகள் ODF+ என சான்றிதழ் பெற மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் ஒப்புதல் பெற தொடர் நடவடிக்கையில் உள்ளது.

### 4.5.2 பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புரம்) – அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம்

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புரம்) திட்டத்தின் மாநில அளவிலான முகமை நிறுவனமாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழுள்ள உட்கூறுகளின் ஒன்றான பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் திட்டம் பேரூராட்சிகளின் ஆணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளர்களுக்கும் தலா ரூ.2.10 இலட்சம் வழங்கப்படும். இதில், மத்திய அரசால் ரூ.1.50



இலட்சமும் மற்றும் மாநில அரசு ரூ.0.60 இலட்சமும் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் செலவினத்தை பயனாளர்கள் ஏற்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் நாளது வரை 84,818 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டு 60,845 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 23,973 வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் 2022–23 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர அமைச்சக வலைதளத்தில் புவிசார் அடிப்படையில் (Geo tag) பதிவேற்றம் செய்யப்பட்டதன் மூலம், சம்மந்தப்பட்ட பயனாளர்களுக்கு மானியத் தொகை சம்மந்தப்பட்ட பயனாளர்களின் வங்கி கணக்கில் நேரடியாக மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படுகிறது.

### 4.5.3 தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டம்

**i)** வீடற்ற நகர்ப்புர ஏழைகள் தங்குமிடம்

இத்திட்டத்தின் கீழ் பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளில் உள் நோயாளிகளுடன் வரும் உதவியாளர்கள் தங்கிட ஏதுவாக, 37 தங்குமிடங்கள் மற்றும் நகர்ப்புர வீடற்றவர்களுக்கான 2 தங்குமிடங்கள் என 39 தங்குமிடங்கள் ரூ.16.24 மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில்

38 தங்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள வேளாங்கண்ணி பேரூராட்சியில் நடைபெற்று வரும் ஒரு பணி 2022-23ல் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

**ii) சாலையோர வியாபாரிகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணி பேரூராட்சியில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில், 2020-21ம் ஆண்டில் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் 228 தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டிலும் சாலையோர வியாபாரிகளின் தேவைக்கேற்ப தள்ளு வண்டிகள் வழங்கப்படும்.

**iii) பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிதி PM-SVANidhi**

இத்திட்டத்தின் கீழ் ரூ.10,000/-க்கான சிறு கடன் உதவித்தொகை சாலையோர வியாபாரிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 61,611 சாலையோர வியாபாரிகளில் 57,299 வியாபாரிகள் கண்டறிந்து, அவர்களின் விவரங்கள் PM SVANidhi இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



மேலும், 30,371 சாலையோர வியாபாரிகளுக்கு கடன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2022-23ம் ஆண்டில் இக்கடன் தொகையினை அதிகமான சாலையோர வியாபாரிகளுக்கு விரிவுபடுத்தவும் மற்றும் தேவைப்படும் சாலையோர வியாபாரிகளுக்கு இரண்டு மற்றும் மூன்று கட்டங்களில் கடன் வழங்கிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 4.6 தமிழக அரசின் திட்டங்கள்

### 4.6.1 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள உட்கட்டமைப்பின் தேவைகளை பூர்த்தி செய்திட 2021-22ம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2021-22ம் ஆண்டில் 446 பேரூராட்சிகளுக்கு ரூ.449.74 கோடியில் 798 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் மண் சாலைகளை, தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றுதல், வாராந்திர சந்தைகளை மேம்படுத்துதல், மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் வாங்குதல், நூலகம் / அறிவு

சார் மையம் அமைத்தல் மற்றும் நவீனமயமான பேருந்து நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும். இப்பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரங்கள் கீழே அட்டவணை 4.4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4**

| வ எண் | திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ கோடியில்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | சாலை பணிகள் | 656 | 251.43 | 154 | 502 |
| 2 | வடிகால் மற்றும் கல்வெர்ட்டு பணிகள் | 44 | 12.80 | | 44 |
| 3 | உலோக கற்றை விபத்து தடை | 33 | 5.06 | 17 | 16 |
| 4 | நவீன எரிவாயு தகனமேடை | 15 | 21.96 | | 15 |
| 5 | அறிவு சார் மையம் | 11 | 17.58 | | 11 |



| வ எண் | திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ கோடியில்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 6 | மார்க்கெட் மற்றும் சந்தைப் பணிகள் | 15 | 44.35 | | 15 |
| 7 | பேருந்து நிலைய பணிகள் | 10 | 35.68 | | 10 |
| 8 | சமுதாய கூடப் பணிகள் | 1 | 1.96 | | 1 |
| 9 | மின்கலம் மூலம் இயங்கும் வாகனம் | 1 | 38.43 | | 1 |
| 10 | இலகு ரக வாகனம் | 1 | 6.57 | | 1 |
| 11 | குளம்/நீர் நிலைப் பணிகள் | 9 | 12.94 | | 9 |
| 12 | பூங்கா மேம்பாடு | 2 | 0.98 | | 2 |
| | **மொத்தம்** | **798** | **449.74** | **171** | **627** |

### 4.6.2 நமக்கு (நகர்ப்புரம்)நாமே திட்டம்

சமூக உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் பொதுமக்களிடையே சுய சார்பு தன்மையை உருவாக்கவும், அவர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கும், உரிமை உணர்வை உருவாக்குவதற்கும், அரசு 2021–22 ஆம் ஆண்டில் "நமக்கு நாமே திட்டத்தை (நகர்ப்புரம்)" அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தின் கீழ் நீர்நிலைகள் புனரமைத்தல், விளையாட்டு மைதானம், மரங்கள் நடுதல், பள்ளிக் கட்டடம் மேம்படுத்துதல், சுகாதார நிலையங்கள் மேம்படுத்துதல், சாலைகள், தெருவிளக்குகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் பொதுமக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்குத்தொகையாகும்.

2021–22 ஆம் ஆண்டில் ரூ.12.76 கோடி மதிப்பீட்டில் 134 பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 14 பணிகள் முடிவடைந்து மீதமுள்ள 120 பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



### 4.6.3 தமிழ்நாடு நகர்ப்புர வேலை வாய்ப்பு திட்டம்

டாக்டர்.சி.ரங்கராஜன் கமிட்டி, நகர்ப்புர ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், விருப்பமுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பொது சொத்துக்களை உருவாக்கவும் ஒரு சிறப்புத் திட்டத்தை பரிந்துரைத்துள்ளது. அதன்படி, அரசாணை (நிலை) எண் 69, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (புதி) துறை, நாள்.13.09.2021 இல் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன. 2021–22 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மழைநீர் வடிகால், சாலைகள், கட்டிடங்கள் மற்றும் நீர்நிலைகளை புத்துயிர் பெறுதல் போன்ற பொது சொத்துக்களை உருவாக்கி பராமரிக்க ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 37 மாவட்டங்களில் முன்னோடியாக, தலா ஒரு பேரூராட்சி வீதம் 37 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

அதன்படி, 37 பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, 1,53,096 வீடுகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இதில், விருப்பமுள்ள 83,757 பயனாளர்கள் அடையாளம் காணப்பட்டு, 81,507

பயனாளர்களுக்கு வேலை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 37 பேரூராட்சிகளில் ரூ.27.75 கோடி மதிப்பீட்டில் 192 பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விருப்பமுள்ள பயனாளர்களின் தேவைகளின் அடிப்படையில் இப்பணிகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.6.4 **தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – (NABARD)**

நபார்டு வங்கி நிதி உதவியின் கீழ் பேரூராட்சிகளில் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020–21ஆம் நிதியாண்டில் 86 பேரூராட்சிகளில் 105 சாலைப்பணிகள் ரூ.93.88 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 96 பணிகள் முடிவுற்று, எஞ்சிய 9 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் 2021–22ம் நிதியாண்டில் 147 பேரூராட்சிகளில் 192 சாலைப்பணிகள் சுமார் 292.66 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.181.30 கோடி



மதிப்பீட்டிலும், 7 பேரூராட்சிகளில் 11 பாலங்கள் கட்டும் பணி ரூ.19.40 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 203 பணிகள் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

### 4.6.5 மூலதன மானிய நிதி

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாய கூடம், சந்தைகள், பேருந்து நிலையம் மேம்பாடு போன்ற அடிப்படை கட்டமைப்பினை மேம்படுத்தும் பணிகள் மூலதன மானிய நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கான பேரூராட்சிகளின் பங்களிப்புத் தொகையும் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

2020–21 ஆம் ஆண்டில் 229 பணிகள் ரூ.244.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 154 பணிகள் முடிவுற்று, எஞ்சிய 75 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2021–22 ஆம் ஆண்டில் 160 பணிகள் ரூ.298.99 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 17

பணிகள் முடிவுற்று, எஞ்சிய 143 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.6.6 இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் போன்ற உள்கட்டமைப்புகளை பராமரிப்பதில் உள்ள இடைவெளியை குறைப்பதற்கும், தற்போதைய மின் நுகர்வு கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துவதற்கும், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2020-21ஆம் ஆண்டில் ரூ.69.57 கோடி மதிப்பீட்டில் 164 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. இதில் 156 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 2021-22ஆம் ஆண்டில் ரூ.60.48 கோடி மதிப்பீட்டில் 349 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்கண்ட பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



### 4.6.7 தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைத்து சாலைகளை மேம்படுத்தும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 67 பேரூராட்சிகளில் 122.72 கிமீ நீளத்திற்கு 175 சாலைப் பணிகள் ரூ.82.99 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில், 28 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 147 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளை துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.6.8 சிறப்பு சாலை திட்டம் (SRP)

பாதாள சாக்கடை திட்டம்/ குடிநீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்தியதன் காரணமாக சேதமடைந்த சாலைகளை மறுசீரமைக்க 2020-21 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் ரூ.1,000 கோடி கடனாக டுபிட்கோ நிறுவனத்தால் வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 262 சாலைப் பணிகள் 302.33 கி.மீ. நீளத்திற்கு ரூ.150 கோடி மதிப்பீட்டில் 182

பேரூராட்சிகளில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 164 சாலைப் பணிகள் முடிவடைந்து, மீதமுள்ள 98 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் 2022-23க்குள் முடிக்கப்படும்.

### 4.7 மின் ஆளுமை

தேசிய தகவல் மையம், பேரூராட்சிகளில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான சேவைகளை மின் ஆளுமை மூலம் வழங்க மென்பொருளை உருவாக்கியுள்ளது. முதற்கட்டமாக, சொத்து வரி, தொழில் வரி, வர்த்தக உரிமம், குடிநீர் கட்டணம் மற்றும் வரி அல்லாத இனங்களை வசூலிக்க ஐந்து பகுதிகளுக்கு மென்பொருள் உருவாக்கப்படுகிறது. முதற்கட்டமாக, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 17 பேரூராட்சிகளில் இந்த முறையை சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், வன்பொருள் மற்றும் மென்பொருள் கொள்முதல் செய்ய எல்காட் நிறுவனத்துக்கு ரூ.6.64 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் 31.05.2022க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதன் மூலம் பேரூராட்சிகளில் உள்ள பொது மக்களுக்கு மின் ஆளுமை மூலம் சேவைகள் எளிதாகச் சென்றடையும்.



### 4.8 நிதி மேலாண்மை

#### 4.8.1 ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

ஐந்தாவது மாநில நிதி ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், 2021-22 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியத் தொகை விவரங்கள் கீழே அட்டவணை 4.5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5**

| வ. எண் | நிதியின் வகை | **2021-22** (ரூ. கோடியில்) | |
|---|---|---|---|
| | | **ஒதுக்கீடு** | **விடுவிக்கப்பட்டது** |
| 1. | மாநில நிதி ஆணைய ஒதுக்கீடு | 1,190.20 | 1,190.20 |
| 2. | மூலதன மானிய தொகை | 223.76 | 223.76 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி | 74.38 | 74.38 |
| | **மொத்தம்** | **1,488.34** | **1,488.34** |

#### 4.8.2 ஆறாவது மாநில நிதி ஆணையம்

ஆறாவது மாநில நிதி ஆணையம் 06.03.2020 அன்று தோற்றுவிக்கப்பட்டு அதன் அறிக்கையினை 08.03.2022ல் அரசுக்கு சமர்ப்பித்து மேற்படி அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி 2022–23 முதல் 2026–27 வரையுள்ள ஐந்தாண்டு காலங்களுக்கு மானியங்கள் விடுவிக்கப்படும் .

### 4.8.3 15வது நிதி ஆணையம்

15வது நிதி ஆணைய பரிந்துரையின்படி, நிபந்தனையுடன் கூடிய மானியம் (Tied Grant) மற்றும் நிபந்தனையற்ற மானியம் (Untied Grant) என நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2020–21 முதல் 2025–26 வரையிலான ஆறாண்டு காலத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 15வது நிதி ஆணையத்தால் பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானிய விபரங்கள் கீழே அட்டவணை 4.6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.6** (ரூ. **கோடியில்**)

| வ. எண் | ஆண்டு | நிபந்தனையுடன் கூடிய மானியம் | நிபந்தனையற்ற மானியம் | மொத்தம் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2020–21 | 269.23 | 269.24 | 538.47 | 538.47 |
| 2 | 2021–22 | 166.09 | 110.73 | 276.82 | 276.82 |
| 3 | 2022–23 | 172.05 | 114.70 | 286.75 | |
| 4 | 2023–24 | 181.90 | 121.27 | 303.17 | |
| 5 | 2024–25 | 192.69 | 128.46 | 321.15 | |
| 6 | 2025–26 | 196.41 | 130.94 | 327.35 | |
| | **மொத்தம்** | **1,178.37** | **875.34** | **2,053.71** | **815.29** |



### நிபந்தனையுடன் கூடிய மானியம் (Tied Grant)

15வது நிதி ஆணைய வழிகாட்டு நெறிமுறைகளின்படி 50 சதவீதம் நிபந்தனை மானியம், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள 50 சதவீத மானியம் குடிநீர் பணிகள், மழைநீர் சேகரிப்பு பணிகள் மற்றும் நீர் மறு சுழற்சி போன்ற பணிகள் மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

### நிபந்தனையற்ற மானியம் (Untied Grant)

15வது நிதி ஆணைய நிபந்தனையற்ற மானியத்தின் கீழ் ஊதியம் மற்றும் பணியாளர்கள் செலவினம் நீங்கலாக இந்திய அரசியலமைப்பின் 12–வது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பதினெட்டு வகையிலான இனங்களில் தேவைகளின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**4.8.4 பேரூராட்சிகளின் ஆண்டு வருவாய் / செலவின விவரங்கள் கீழே அட்டவணை 4.7ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 4.7** (ரூ. **கோடியில்)**

| வ. எண் | விவரம் | 2020–2021 | 2021–2022 |
|---|---|---|---|
| | **வருவாய்** | | |
| 1. | வரியினம் | 203.27 | 234.00 |
| 2. | வரியில்லா இனம் | 348.17 | 267.42 |
| 3. | இதர வருவாய் இனம் | 166.72 | 132.33 |
| 4. | மத்திய / மாநில நிதி ஒதுக்கீடு | 1,709.92 | 1,601.45 |
| 5. | மூலதன வருவாய் | 741.58 | 635.26 |
| | **மொத்தம்** | **3,169.66** | **2,870.46** |
| | **செலவு** | (ரூ.கோடியில் | |
| 1. | நிருவாக / பணியாளர்கள் ஊதிய செலவு | 1,770.14 | 1,361.34 |
| 2. | மூலதன செலவினம் | 2,899.24 | 1,960.36 |
| | **மொத்தம்** | **4,669.38** | **3,321.70** |
| | பற்றாக்குறை | **1,544.85** | **597.54** |

31.03.2022 அன்று உள்ளபடி செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் கடன்களின் விவரங்கள் கீழே அட்டவணை 4.8ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை 4.8** (ரூ. **கோடியில்)**

| வ.எண் | விவரங்கள் | தொகை |
|---|---|---|
| 1 | மின்சார கட்டணம் | 17.90 |
| 2 | எல்.ஐ.சி கடன் (வட்டி உட்பட) | 53.19 |
| | **மொத்தம்** | **71.09** |

**பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்**

தகவல் தொழில் நுட்பங்கள் மிக வேகமாக வளர்ந்து வருவதால், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு வழங்குவது பணியாளர்களின் திறனையும் நலனையும் மேம்படுத்தி, மக்களின் சேவைகளை செம்மையாக செய்ய உறுதுணையாக அமைகிறது.

வளர்ச்சிக்கான முக்கிய உட்கூறுகளை கண்டறிந்து (Key Development Area) தேவையான மற்றும் சரியான பயிற்சி வழங்குதல் முன்னேற்றத்தினை பல மடங்கு அதிகரிப்பதாக அமையும். தற்போதைய சூழலில் பேரூராட்சிகள் ஆணையரகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள உதவி இயக்குநர்கள், பொறியாளர்கள், செயல் அலுவலர்கள், துப்புரவு அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், இளநிலை உதவியாளர்கள், வரித்தண்டலர்கள் போன்ற பணியாளர்களுக்கு பல்வேறு

இனங்களின் கீழ், கீழ்க்கண்ட இனங்களில் பயிற்சி வழங்குதல் அவசியமாகிறது.

- மின் நிருவாகம்
- மின்னணு கணக்கியல் அமைப்பு
- சொத்துக்களின் புவி – குறியீடல்
- மின்–பதிவுகளை உருவாக்குதல்
- ஆன் லைன் கண்காணிப்பு அமைப்புகள்
- சட்டங்கள், விதிகள் ஆணைகள் மற்றும் அறிவுரைகள் குறித்து முழுமையான புரிந்துணர்வு மற்றும் விழிப்புணர்வை உருவாக்குதல். (ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் /விதிகள் மாவட்ட நகராட்சிகள் சட்டம் உட்பட)
- மனித உரிமைகள்,
- நிலம் தொடர்பான உரிமைகள்
- மன அழுத்த மேலாண்மை,
- ஆளுமை மேம்பாடு,
- கட்டிட அனுமதி வழங்குதல்
- திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016
- ஒழுங்கு நடவடிக்கை விதிகள்.

தற்போது, தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் மற்றும் அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி மூலம்



சில குறிப்பிட்ட இனங்களில் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பேரூராட்சி துறைப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது குறித்து முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னை நகரம் இந்தியாவில் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாகவும், உலகின் மக்கள் தொகை அடிப்படையில் 36வது பெரிய பெருநகரப் பகுதியாகவும் விளங்குகிறது. 1974ல் சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் சென்னைப் பெருநகரப் பகுதி (CMA) என அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளை நகரின் வளர்ச்சிக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் தேவைகளுக்காகவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி (சட்டம் 28) ஒரு அரசுரிமையாக்கப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது.



இவ்வாரியமானது, ஒரு முழு நேர மேலாண்மை இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியமானது கீழ்கண்டவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது:

**வாரிய இயக்குநர்கள்**

| | |
|---|---|
| **வாரிய தலைவர்** | |
| 1 | நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் |
| **வாரிய இயக்குநர்கள்** | |
| 2 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| 3 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>நிதித்துறை |
| 4 | அரசு முதன்மை செயலாளர் / மேலாண்மை இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |
| 5 | அரசு முதன்மை செயலாளர் / ஆணையர்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி |
| 6 | உறுப்பினர் செயலர்,<br>சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் |
| 7 | மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 8 | செயல் இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |
| 9 | அரசு கூடுதல் செயலர் / நிதி இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |
| 10 | பொறியியல் இயக்குநர்,<br>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம். |

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுதல் ஆகியவை சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும், மாநகர மக்களின் நலனுக்கும் இன்றியமையாததாகும். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், துவக்கப்பட்ட நாள் முதல் இந்த சேவைகளை சென்னைப் பெருநகர பகுதி மக்களுக்கு, நியாயமான கட்டணத்தில் வழங்கி வருகிறது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தற்போது, 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலுள்ள சென்னைப் பெருநகரில் வசிக்கும் சுமார் 85 இலட்சம் மக்களுக்கு, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் மூலம் தனது சேவையை நேரடியாக வழங்கி வருகிறது. மேலும், சென்னைக்கு அருகிலுள்ள நகர்ப்புர அமைப்புகளுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் இவ்வாரியத்தால் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**தொலைநோக்குப் பார்வை**

- சென்னைப் பெருநகரில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் செயல்படக்கூடிய குடிநீர்



குழாய் இணைப்பு வழங்குதல் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

- நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் குடிநீர் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் தேவை–பற்றாக்குறை இடைவெளியை குறைத்து, அனைத்து பருவ காலங்களிலும் சென்னைப் பெருநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல்.
- மழை நீரை சேமிப்பதற்காக, சென்னைப் பெருநகரின் ஒவ்வொரு வளாகத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி கண்காணித்தல் மற்றும் நீர்ப்படுகை மேலாண்மை திட்டம் தயாரித்தல்.
- நகர்ப்புர நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் மீட்டெடுத்தல்.
- பயன்படுத்தப்பட்ட நீரினை குறைந்தபட்சம் 20 சதவீதம் மறு சுழற்சி செய்து மறு பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.
- வருவாய் அல்லாத நீரின் அளவை 15 சதவீதத்திற்கும் கீழ் குறைத்தல்.

- சென்னைப் பெருநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றி, அனைத்து இல்லங்களுக்கும் கழிவுநீர் இணைப்பு வழங்குதல்.
- மாநகரின் நீர் வழிப்பாதைகளான அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் வடிநிலப் பகுதிகள் மற்றும் அவற்றின் பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு, குறுகிய கால திட்டமாக இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல் மற்றும் நீண்ட கால திட்டமாக கட்டமைப்பு பணிகளை வலுப்படுத்துதல்.
- போதிய அளவு கழிவுநீர் சுத்திகரிப்பு திறனை அடைவதற்கு, புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் .

## 5.1 குடிநீர் வழங்கல் மேலாண்மை

### 5.1.1 குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகர மக்களுக்கு தேவையான அளவு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான நீரை வழங்குவது சென்னைக் குடிநீர் வாரியத்தின் முதன்மையான



மற்றும் உறுதியான பெரு முயற்சியாகும். மேற்பரப்பு நீராதாரங்கள், நிலத்தடி நீர் ஆதாரங்கள், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் நகரின் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

#### (i) மேற்பரப்பு நீராதாரங்கள்

சென்னை நகரின் முக்கிய நீராதாரமாக மேற்பரப்பு நீராதாரம் விளங்குகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் கீழ் கண்டலேறு அணையிலிருந்து பெறப்படும் நீர் மற்றும் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி, செங்குன்றம், சோழவரம், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை – தேர்வாய் கண்டிகை மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரி ஆகியவற்றிலிருந்து தேவையான நீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

#### (ii) நிலத்தடி நீராதாரங்கள்

தாமரைப்பாக்கம் மற்றும் பூண்டி நிலத்தடி நீராதாரங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 5 மில்லியன் லிட்டர் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தடி நீராதாரங்களில் இருந்து

20 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

(iii) **கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள்**

சென்னைக்கு அருகே வற்றாத நீராதாரங்கள் ஏதுமில்லை. எனவே, சென்னைப் பெருநகரம் வடகிழக்கு பருவ மழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவ மழை பொய்க்கும் காலங்களில் சென்னைப் பெருநகரம் வறட்சியை எதிர்கொள்கிறது. மேலும், சென்னைக்கு அருகாமையிலுள்ள பகுதிகள் நகரமயமாவதாலும் மற்றும் தொழிற்சாலைகள் பெருகுவதாலும், நீர் தேவை அதிகரித்து, அரிதான நீராதாரங்களின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி கால அவசர நடவடிக்கையின் ஒரு பகுதியாக நகரின் நீண்ட கால குடிநீர் தேவை மற்றும் நகரை வறட்சியிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அரசு அமைத்துள்ளது.

**அ) கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் – மீஞ்சூர்**

கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் சென்னை பெருநகரின் குடிநீர் தேவையை ஈடு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.



நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட சென்னை நகரின் முதலாவது கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் மீஞ்சூரில், வடிவமைத்தல், நிறுவுதல், சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தருதல் எனும் (DBOOT) ஒப்பந்த அடிப்படையில் நிறுவப்பட்டு, 31.07.2010 அன்று அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் வடசென்னை பகுதிகளான மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் வசிக்கும் சுமார் 12 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது.

**ஆ) கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் – நெம்மேலி**

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ரூ.805.08 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் முழு நிதி உதவியுடன் நெம்மேலியில் நிறுவப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், துணை முதலமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு

வகித்தபோது, 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, இந்நிலையம் 2013 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் தென் சென்னை பகுதிகளான சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி.நகர், ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது.

### (iv) மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து (TTRO), சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குவதற்காக, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு நிலையங்களை கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவியுள்ளது. இந்நிலையங்களிலிருந்து, இருங்காட்டுக்கோட்டை,



ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், மணலி –எண்ணூர் மற்றும் மணலி – மீஞ்சூர் வழித்தடங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இரண்டு நிலையங்களும் தற்போது இயக்கத்தில் உள்ளன. கொடுங்கையூரிலிருந்து நாளொன்றுக்கு 23 மில்லியன் லிட்டரும், கோயம்பேடு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டரும் தொழிற்சாலைகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### 5.1.2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் அட்டவணை 5.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாளொன்றுக்கு 1,494 மில்லியன் லிட்டர் ஆகும். கீழ்ப்பாக்கத்தில் இயங்கிவரும் நூற்றாண்டு பழமையான முதலாவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது வரை தொடர்ந்து சென்னைப் பெருநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

**அட்டவணை 5.1**

| வ. எண் | நிலையம் அமைந்துள்ள இடம் | சுத்திகரிப்பு திறன் (MLD) | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | கீழ்ப்பாக்கம் | 270 | 1914 |
| 2 | செங்குன்றம் | 300 | 1996 |
| 3 | வீராணம் | 180 | 2004 |
| 4 | செம்பரம்பாக்கம் | 530 | 2008 |
| 5 | சூரப்பட்டு | 14 | 1965 (2009 ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்டது) |
| 6 | கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், மீஞ்சூர் | 100 | 2010 |
| 7 | கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நெம்மேலி | 100 | 2013 |
| | **மொத்தம்** | **1,494** | |

### 5.1.3 குடிநீர் விநியோகம்

சென்னைப் பெருநகர மக்களுக்கு 16 பிரதான குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் 92 சிறிய நீரேற்று நிலையங்கள் மூலம் 5,247 கி.மீ. நீளமுள்ள



குடிநீர் குழாய்கள் மூலமாக அட்டவணை 5.2ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 5.2**

| வ.எண் | குடிநீர் விநியோக நிலையம் | வழங்கப்படும் நீரின் அளவு (MLD) |
|---|---|---|
| 1 | பட்டேல் நகர் | 30 |
| 2 | அண்ணா பூங்கா | 22 |
| 3 | கண்ணப்பர் திடல் | 25 |
| 4 | வியாசர்பாடி | 35 |
| 5 | கொளத்தூர் | 25 |
| 6 | கீழ்ப்பாக்கம் | 105 |
| 7 | சூளைமேடு | 50 |
| 8 | திருவல்லிக்கேணி | 15 |
| 9 | தெற்கு நீரேற்று நிலையம் | 50 |
| 10 | வள்ளுவர் கோட்டம் | 20 |
| 11 | கே. கே. நகர் | 32 |
| 12 | ஈக்காட்டு தாங்கல் | 10 |
| 13 | மயிலாப்பூர் | 40 |
| 14 | நந்தனம் | 20 |
| 15 | பள்ளிப்பட்டு | 35 |

| வ.எண் | குடிநீர் விநியோக நிலையம் | வழங்கப்படும் நீரின் அளவு (MLD) |
|---|---|---|
| 16 | வேளச்சேரி | 35 |
| 17 | நேரடி விநியோகம் மற்றும் சிறிய நீரேற்று நிலையங்கள் | 191 |
| | பிரதான சென்னை பகுதிக்கு குழாய் மூலம் விநியோகம் | 740 |
| 18 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குழாய் மூலம் விநியோகம் | 175 |
| 19 | லாரிகள் மூலம் (பிரதான சென்னை + புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள்) | 30 |
| 20 | பெருமளவு நுகர்வோர் | 30 |
| | வீட்டு உபயோகத்திற்காக வழங்கப்படும் குடிநீர் | 975 |
| 21 | தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் குடிநீர் | |
| | (i) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் | 25 |
| | (ii) இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீர் | 23 |
| | (iii) எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் | 38 |
| | தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மொத்த நீர் | 86 |
| | விநியோகிக்கப்படும் நீரின் மொத்த அளவு | 1,061 |



### 5.1.4 தரம் கண்காணித்தல்

பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்கு, தொடர் கண்காணிப்பு மற்றும் நீரின் தரத்தை கண்காணித்தல் ஆகியவை இன்றியமையாததாகும். நுகர்வோருக்கு வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தரத்தினை உறுதி செய்வதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில், தர உறுதி பிரிவு செயல்பட்டு வருகிறது. மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் விநியோக நிலையங்கள், துணை நீரேற்று நிலையங்கள், சென்னை நகரின் விநியோக அமைப்புகள் ஆகிவற்றிலிருந்து நீர் மாதிரிகள் தினசரி சேகரிக்கப்பட்டு, அதன் இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரி காரணிகளை, இந்திய தர நிர்ணயம் 10500 – 2012 அடிப்படையில் பரிசோதித்து, குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இது தவிர, குடிநீர் மற்றும் கழிவுநீர் பரிசோதனைக்காக புதிதாக அமைக்கப்பட்டு வரும் தேசிய சான்றுரைக்கப் பெற்ற நவீன பரிசோதனை நிலையம் (NABL accredited lab) இந்தாண்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## 5.2 குடிநீர் வழங்கல் திட்டங்கள்:

### 5.2.1 நடைபெற்றுவரும் குடிநீர் திட்டப் பணிகள்

**(i) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பல்லாவரம் வரை குழாய் பதிக்கும் பணிகள்**

வளர்ந்து வரும் சென்னை பெருநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தினை நிறுவ திட்டமிடப்பட்டது. தமிழக அரசு ரூ.1,259.38 கோடி திட்ட மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அம்ரூட் திட்டம் மற்றும் ஜெர்மானிய வளர்ச்சி வங்கி (KfW) நிதி உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணி மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து, பல்லாவரம் வரை பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



இப்பணிகள் அனைத்தும் முழுமையாக ஏப்ரல் 2023ல் முடிக்கப்படும். இத்திட்டத்தினால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்ப வழித்தடப்பகுதிகளில் உள்ள தோராயமாக 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**(ii) பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்**

சென்னை பெருநகரின் தற்போதைய குடிநீர் தேவை நாளொன்றுக்கு 1,400 மில்லியன் லிட்டர் ஆகும். இது, நாளொன்றுக்கு விநியோக அளவான சுமார் 1,060 மில்லியன் லிட்டரில் பற்றாக்குறை 340 மில்லியன் லிட்டர் ஆகும். இந்த இடைவெளியை நிறைவு செய்வதற்காக சென்னை நகருக்கு புதிய கூடுதல் குடிநீர் ஆதாரங்களை கண்டறிதல் மிக முக்கியமாகும்.

எனவே, சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட

கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தினை நிறுவ திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.6,078.40 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TNIDB) மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் இந்நிலையம் அமைக்கப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தற்போது கோரப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முடிவுறும் போது, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 23 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**(iii) புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல் பணிகள்**

ரூ.460.56 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், மாத்தூர், ஜல்லடம்பேட்டை, நெற்குன்றம், மாதவரம்,



ராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, மடிப்பாக்கம் மற்றும் உத்தண்டி ஆகிய இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், மாத்தூர் மற்றும் ஜல்லடம்பேட்டை ஆகிய பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஏப்ரல் 2022ல் செயல்பாட்டிற்கு வரும் மற்றும் எஞ்சிய பகுதிகள் நடப்பாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

**(iv) வளசரவாக்கம் குடிநீர் மேம்பாட்டு பணிகள்**

வளசரவாக்கத்திலுள்ள வார்டு எண் 149 மற்றும் 152 ஆகிய பகுதிகளில் தன்னிறைவு மண்டல துணை பகுதி (DMA) அடிப்படையில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகத்தை உறுதிபடுத்த, ரூ.69.64 கோடி மதிப்பிலான குடிநீர் மேம்பாட்டு பணிகள் மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணி 2022– 23 ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.2 நீர் இழப்பை குறைப்பதற்காக தற்போது உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல்

பேரூரில் அமைக்க திட்டமிடப்பட்ட, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் ஒரு பகுதியானது, பிரதான சென்னை பெருநகரில் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். சென்னைப் பெருநகரின் பிரதானப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடிநீர் விநியோகக் குழாய்கள், 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானவை. எனவே, சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதை உறுதி செய்வதற்காக, திட்ட மேலாண்மை ஆலோசகரால், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

- சென்னைப் பெருநகரின் பிரதானப் பகுதியில் பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்தல்
- விடுபட்ட தெருக்களுக்கு குழாய் பதித்தல்



- தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பினை வலுவூட்டல்
- கீழ்நிலை நீர்தேக்கம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கம் மூலம் நீர் சேமிப்பை அதிகரித்தல்
- தன்னிறைவு மண்டல துணை பகுதிகளை உருவாக்குதல்
- அளவுமானி பொருத்தப்பட்ட வீட்டு இணைப்பு வழங்குதல்

முதற்கட்ட பணியாக, கோடம்பாக்கம் (பகுதி 10) மற்றும் அடையாறு (பகுதி 13) பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், திரு.வி.க நகர் (பகுதி 6) பகுதிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இரண்டாம் கட்டமாக, இராயபுரம் (பகுதி 5), தண்டையார் பேட்டை (பகுதி 4), அண்ணா நகர் (பகுதி 8) மற்றும் தேனாம்பேட்டை (பகுதி 9) ஆகிய பகுதிகளுக்கு இவ்வாண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். பிரதான சென்னை மாநகரின் அனைத்து பகுதிகளிலும், தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பின் மேம்பாட்டுப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.3 புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள குடிநீர் வழங்கல் பணிகள்

நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளுக்கு திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை முறையே ரூ.75 கோடி மற்றும் ரூ.44 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் அம்ரூட் 2.0 மற்றும் சிங்கார சென்னை 2.0 ஆகிய திட்டங்களின் கீழ் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். நீலாங்கரை குடிநீர் வழங்கல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

### 5.2.4 மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு அமைப்பினை தற்போதுள்ள மற்றும் புதிய கட்டிடங்களில் கட்டாயமாக செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கிட நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில் தகவல் தொடர்பு உத்தியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்



மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வடிவமைத்துள்ளது. பல்வேறு தகவல் தொடர்பு முறைகள் மூலம் அனைத்து பங்குதாரர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் முக்கிய இலக்காகும். இதன் மூலம் பருவ மழையின்போது அதிகபட்ச பலன்களை பெறுவதற்காக மழைநீர் சேகரிப்பு குறித்து சென்னை நகரவாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் பருவமழை தொடங்கும்முன் பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், அனைத்து கட்டடங்களுக்கும் கட்டடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 10.94 இலட்சம் கட்டடங்களில், தோராயமாக 8.86 இலட்சம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2021–22–ஆம் ஆண்டில் புதிய குடிநீர்/கழிவு நீர் இணைப்புகள் பெறும்போதும், இணைப்புகளை புதுப்பிக்கும்போதும், 6,120 புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்பு அமைப்பினால் பெறப்படும் நன்மைகளை அறியும்

பொருட்டு, வாரியம் தனது 200 பணிமனைகளிலும், கணினி அடிப்படையில் செயல்படும் நிலத்தடி நீர் அளவுமானிகளை நிறுவியுள்ளது. இந்தத் தரவுகள், வாரியத்தின் இணைய தளத்தில் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக வெளியிடப்படுகிறது.

மழைநீர் சேகரிப்பு திட்டம் நிறைவேற்றப்படுவதனால், நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீர்தன்மை ஒவ்வொரு வருடமும், குறிப்பாக பருவமழை காலங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மூலம் நிலத்தடிநீர் செறிவூட்டு திறன் தோராயமாக 3 ஆயிரம் மில்லியன் கன அடியாக உள்ளது. மேலும், சென்னை மாநகர் முழுவதும் பரவலாக பெய்யும் மழை பொழிவின் அளவினை கணக்கிட மழைமானி கருவிகள் சென்னை குடிநீர் வாரியத்தின் 15 பகுதி அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

சென்னை குடிநீர் வாரியம் அமைத்துள்ள 200 பணிமனைகளிலும் கணினி அடிப்படையில் செயற்படும் நிகழ்நிலை நிலத்தடி நீர் அளவுமானிகள் மூலம் கணக்கிடப்படும் நிலத்தடி நீரின் அளவானது, 7.83 மீட்டரில் இருந்து 2.83 மீட்டராக (+5.00 மீட்டர்) உயர்ந்துள்ளது. இதேபோல், நிலத்தடி நீரின் தரத்திலும்



கணிசமான அளவில் முன்னேற்றம் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

**மழைநீர் சேகரிப்பு பிரச்சாரம் மற்றும் நீர் பாதுகாப்பு சிறப்பு இயக்க வாரம் 2021**

மழைநீர் சேகரிப்பு மற்றும் நீரின் தரம் குறித்த விழிப்புணர்வு பரப்புரை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்ட் 31, 2021 அன்று தொடங்கிவைக்கப்பட்டு, சென்னை மாநகரில் வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணிகள், கடந்த ஆகஸ்ட் 31, 2021 முதல் செப்டம்பர் 09, 2021 வரை நடைபெற்றது.

மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அனைத்து 15 பகுதிகளிலும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை "**நீர் தன்னார்வலர்களாக**" ஈடுபடுத்தி, சென்னை மாநகரம் முழுவதும் விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் மாநகரம் முழுவதும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஆழ்துளைக்கிணறு / திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் குழாய் நீரின் தரம் மற்றும் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு பரப்புரை கணக்கெடுப்பில் மொத்தம் உள்ள 10.94 இலட்சம் கட்டடங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் போது 7.82 இலட்சம் கட்டிடங்களில் சரிபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 74% கட்டிட வளாகங்களில் மழைநீர் கட்டமைப்புகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டது. மீதமுள்ள வளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சீரமைக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், இந்த கணக்கெடுப்பில் மொத்தமுள்ள 7.82 இலட்சம் வளாகங்களில், 72% ஆழ்துளைக் கிணறுகளும், 9.7% வளாகங்களில் திறந்தவெளிக் கிணறுகளும் 2.2% வளாகங்களில் திறந்த மற்றும் ஆழ்துளைக் கிணறுகளும் உள்ளன என கண்டறியப்பட்டது.

**நகர நீர்ப்படுகை மேலாண்மை திட்டம்**

ஒருங்கிணைந்த நீர் பயன்பாடானது, நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் விதமாக, மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் மற்றும் மழைநீர் ஆகியவற்றை இணக்கமாக பயன்படுத்துவதன் மூலம் தடை இல்லாமல் நீர் கிடைப்பதையும் மற்றும் இந்த



நீராதாரங்களை முழுவதுமாக பயன்படுத்துவதை உறுதி செய்வதாகும். அதன்படி, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மாநகரத்தின் நீர்ப்படுகை வடிவமைப்பை கீழ்கண்டவைகளின் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது:

- சென்னை நகரில் ஓராண்டில் பயன்படுத்தப்படும் நிலத்தடிநீர்
- தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் கிடைக்கும் நிலத்தடி நீரின் அளவு
- அதிகப்படியான நிலத்தடி நீர் சுரண்டப்படுவதை கண்டறிதல்
- நீர் பாதுகாப்பு மற்றும் மேற்கூரை மழைநீர் சேகரிப்பு அமைப்பு

இந்த நடவடிக்கை மூலம், சென்னை நகருக்கான நீர்ப்படுகை மேலாண்மை திட்டம் உருவாக்கப்பட்டு, சென்னை மாநகருக்கு குடிநீர் சமநிலைத் திட்டம் கிடைக்கப்பெறும். இதன் மூலம் நிலத்தடிநீரை பாதுகாப்பதற்கும், நிலத்தடிநீர் சுரண்டப்படுவதை கட்டுப்படுவதற்கும் ஒருங்கிணைந்த முயற்சிகளை சென்னை குடிநீர் வாரியம் மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

## 5.3 கழிவுநீர் மேலாண்மை

சென்னை நகரின் கழிவுநீரை சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மற்றுமொரு முக்கிய கடமை ஆகும். பிரதான சென்னை நகரின் கழிவு நீர் கட்டமைப்பானது முதன் முதலாக 1917ல் நிறுவப்பட்டது. சென்னை நகரின் கழிவு நீர் கட்டமைப்பானது
5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனிப்பட்ட கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள், கழிவுநீரை கொண்டு செல்லும் அமைப்பு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் கழிவு நீர் 4,093 கிலோ மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்பு வாயிலாக 302 கழிவு நீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்த கழிவு நீரிறைக்கும் நிலையங்களிலிருந்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி சுத்திகரிக்கப்பட்டு, பாதுகாப்பாக வெளியேற்றப்படுகிறது.



### 5.3.1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

மாநகரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 776 மில்லியன் லிட்டர் என கீழ்கண்ட அட்டவணை 5.3ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–5.3**

| கழிவுநீர் மண்டலம் | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | சுத்திகரிப்பு திறன் (MLD) |
|---|---|---|
| I & II | கொடுங்கையூர் (80+80+110) | 270 |
| | திருவொற்றியூர் | 31 |
| III | கோயம்பேடு (34+60+120) | 214 |
| IV | நெசப்பாக்கம் (54+40+23) | 117 |
| V | பெருங்குடி (60+54+12) | 126 |
| | சோழிங்கநல்லூர் – I | 18 |
| | **மொத்தம்** | 776 |

### 5.3.2 கழிவுநீர் கட்டமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை தவிர்க்க, வாரியம் சென்னைப் பெருநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் இயக்குதல்

பணிகளை இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கு ஜெட்ராடிங் இயந்திரங்களும், பராமரிப்பு நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றுவதற்கு அதிவேக உறிஞ்சும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களும் உபயோகிக்கப்படுகின்றன. தற்சமயம், கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 500 இயந்திரங்கள் அட்டவணை 5.4ல் உள்ளவாறு பயன்பாட்டில் உள்ளன.

**அட்டவணை–5.4**

| வ.எண் | இயந்திரங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூர் வாரும் இயந்திரங்கள் | 282 |
| 2 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் (2KL, 6 KL & 9 KL) | 129 |
| 3 | ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் | 32 |
| 4 | அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் | 57 |
| | **மொத்தம்** | **500** |

ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, கழிவுநீர் கட்டமைப்பு எவ்வித தடையுமின்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.



### 5.4 கழிவுநீர் திட்டங்கள்

#### 5.4.1 புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவு நீர் திட்டப்பணிகள்

நெற்குன்றம், பள்ளிக்கரணை, ராமாபுரம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம், காரம்பாக்கம் மற்றும் முகலிவாக்கம் ஆகிய 8 பகுதிகளில் ரூ.525.77 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### 5.4.2 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் / மேம்படுத்தும் பணிகள்

ஒன்றிய அரசின், சுற்று சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 24.11.2015ல் வெளியிட்ட அறிவிப்பின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்தின் அளவுகளை, மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாற்றி அமைத்துள்ளது. வாரியத்தின் சுத்திகரிப்புத் திறனை அதிகப்படுத்துவதற்காகவும் மற்றும் திருத்திய சுத்திகரிப்பு தர அளவுகளை உறுதி செய்வதற்காகவும்,

சென்னை குடிநீர் வாரியம், கொடுங்கையூர்–1, கொடுங்கையூர்–2, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகளை ரூ.811.40 கோடி திட்ட மதிப்பீட்டில் அட்டவணை 5.5ல் உள்ளவாறு மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை–5.5**

| புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் | |
|---|---|---|---|
| **இடங்கள்** | **சுத்திகரிப்பு திறன் (MLD)** | **இடங்கள்** | **சுத்திகரிப்பு திறன் (MLD)** |
| கொடுங்கையூர் மண்டலம் I | 120 | கொடுங்கையூர் | 110 |
| கொடுங்கையூர் மண்டலம் II | 120 | கோயம்பேடு(120+60) | 180 |
| நெசப்பாக்கம் | 50 | நெசப்பாக்கம்(40+54) | 94 |
| பெருங்குடி | 60 | பெருங்குடி (60+54) | 114 |
| **மொத்தம்** | **350** | **மொத்தம்** | **498** |



### 5.4.3. சோழிங்கநல்லூரில் 54 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

தென் சென்னை பகுதிகளான, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுர சாலை பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக, ரூ.72.54 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட தொடர் உலை தொழில்நுட்பத்தில் (SBR Technology) இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சோழிங்கநல்லூரில் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுடன் மின் உற்பத்தி செய்யும் வசதியுடன் கூடிய சுத்திகரிப்பு நிலைய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இவ்வாண்டு செயல்பாட்டிற்கு வரும்.

### 5.4.4 சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னையின் நீர் வழித்தடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) மேற்கொண்டுள்ள பணிகளின் ஒரு பகுதியாக, சூளைமேடு (1.2 MLD), தாடண்டர் நகர்

(4 MLD) மற்றும் கோட்டூர்புரம் (0.6 MLD) ஆகிய இடங்களில் சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. சேத்துப்பட்டு பகுதியில் (1 MLD) சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் முடிவுற்று, சோதனை ஓட்டத்தில் உள்ளது.

### 5.4.5 புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள கழிவு நீர் திட்டப்பணிகள்

ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம்–துரைப்பாக்கம், ஜல்லடம்பேட்டை, நந்தம்பாக்கம், மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம் ஆகிய 17 பகுதிகளுக்கும் மற்றும் மாதவரம் பகுதியில் விடுபட்ட தெருக்களுக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.2,810 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் மடிப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.256.90 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அவை மதிப்பாய்வில்



உள்ளன. மேலும், ரூ.256.91 கோடி மதிப்பீட்டிலான ஒக்கியம்–துரைப்பாக்கம் திட்டத்திற்கு அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மாநில உயர் வழிநடத்தும் குழு (SHPSC) ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நிருவாக ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சிய பகுதிகளின் விரிவான திட்ட அறிக்கைகள், அம்ரூட் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு குழுவின் மதிப்பீட்டில் உள்ளன.

எஞ்சிய பகுதிகளுக்கான பணிகள் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.4.6 சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ள திட்டப்பணிகள்

தமிழ்நாடு அரசு, சென்னை மாநகரின் நீர்வழிப்பாதைகளின் சுற்று சூழல்களை மேம்படுத்தும் பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன், சென்னைக் குடிநீர் வாரியம் இணைந்து கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற சிறு

கால்வாய்களின் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்கில் அதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. கூவம் மற்றும் அடையாறு நதிகளின் சுற்றுச் சூழலை மேம்படுத்துவதற்காக சென்னை குடிநீர் வாரியம் முறையே ரூ.186.19 கோடி மற்றும் ரூ.123.19 கோடி மதிப்பில் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது, தமிழக அரசு சென்னை மாநகரின் நீர் வழித்தடங்களை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கூவம், அடையாறு ஆறுகள், பக்கிங்காம் கால்வாய் ஆகியவைகளின் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், நேரடியாகக் கலக்கும் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்றி அமைத்தல், கழிவுநீர் குழாய்கள் / கழிவுநீர் உந்து நிலையங்களை புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதற்கு அரசு கொள்கை அளவில் ரூ.2,371 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.



இதற்கான முதற்கட்ட திட்டப்பணிகளை உடனடியாக செயல்படுத்த ரூ.1,001 கோடி நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.364.80 கோடி மதிப்பீட்டிலான 36 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. 36 பணிகளில், 6 பணிகள் முடிவுற்று, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.5 மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம்

சென்னை பெருநகரம் உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டில் முன்னோடியாக திகழ்கிறது. மத்திய பொது சுகாதார சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனத்தின் (CPHEEO) முறைமையின்படி, 10 சதவீதம் மறுசுழற்சி நீரை பயன்படுத்த வேண்டும். நீர் சேமிப்பின் முயற்சியாக நாளொன்றிற்கு 23 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது, தொழிற்சாலைகளால் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது, தொழிற்சாலை பயன்பாட்டிற்கான

நீரினை உற்பத்தி செய்வதற்காக, 2 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான சுத்திகரிப்பு நிலையங்களை (TTRO) அமைத்துள்ளது.

### 5.5.1 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தால் கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவப்பட்ட நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீர் தேவைகளை பூர்த்தி செய்வதுடன், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நன்னீரின் அளவு குறைக்கப்படுகிறது. சென்னை பெருநகரம் உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சியில், இந்தியாவிலேயே முன்னோடியாக திகழ்கிறது.

### 5.5.2 மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையங்கள்

சென்னை நகரின் குடிநீர் தேவையை நிலையான ஆதாரங்கள் மூலம் உறுதி செய்யும் விதமாக, நாளொன்றுக்கு தலா 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மூன்றாம் நிலை நுண்



வடிகட்டி நிலையங்கள் (TTUF) அமைக்கும் பணி பெருங்குடி, நெசப்பாக்கம் மற்றும் லாங்ஸ் கார்டன் ஆகிய 3 இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையங்களிலிருந்து பெறப்படும் நீர், போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகளின் சேமிப்பிற்கு துணையாக பயன்படுத்தப்படும். மேலும், லாங்ஸ் கார்டன் நுண் வடிகட்டி நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரானது, தென்னக இரயில்வேயின் இரயில் பெட்டிகளை சுத்தப்படுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கும் வழங்கப்படும்.

நாளொன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு சுழற்சி செய்து, சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஏரிகளை மீள் நிரப்ப விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) மற்றும் ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையுடன் (DST–GoI) இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. முதல் நிலையாக பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் நிலையங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், நகரமயமாதலால் நீர் பிடிப்பு திறனை இழந்துள்ள ஏரிகளை புனரமைத்தல்

மற்றும் நிலத்தடி நீரை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

### 5.6 பணியாளர் திறன் மேம்படுத்துதல்

சென்னை குடிநீர் வாரியம் 1982ம் ஆண்டு பயிற்சி மையத்தை நிறுவி, பல்வேறு உள்வளாக பயிற்சி வகுப்புகள், மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் CPHEEO) அமைப்பின் ஆதரவில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறப்பு பயிற்சி வகுப்புகளை வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது. வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான சுமார் 42 பயிற்சி வகுப்புகள் மற்றும் CPHEEO ஆதரவில் 5 புத்தாக்க பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. இது தவிர பல்வேறு சிறப்பு பயிற்சிகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கான பிரத்தியேக சிறப்பு பயிற்சிகளும் (பயிற்சிக்கான கட்டணம் பெற்று) நடத்தப்படுகின்றன.

மேலும், தொழில் முனைவோர்/புதிதாக தொழில் தொடங்குவோரை ஆதரிக்கும் விதமாக தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க



நிறுவனத்துடன் (EDII–TN) இணைந்து பயிற்சி அளிக்க வாரியம் தேவையான வசதியைப் பெற்றுள்ளது.

பயிற்சி மையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையான தகவல் தொழில்நுட்பம் மூலம் செயற்படுத்துதல் மற்றும் இணைய வழியிலான மின் கற்றல் முறையை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.7 தொழில் நுட்ப பயன்பாடு

#### 5.7.1 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துக்களின் புவிசார் வரைபடத்தை, புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தயாரிக்கும் பணி தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) அமர்த்திய கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தின் (TNUFIP) கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் மூலம் நிலத்திற்கு அடியிலும், நிலத்தின் மேற்பரப்பிலும் உள்ள வாரியத்தின்

அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகள் ஆகியவை புவியியல் தகவல் அமைப்புத்தளத்தில் வரைபடமாக்கப்படும். இப்பணி, உட்கட்டமைப்புகளின் சிறந்த பராமரிப்பிற்கும், அவற்றின் மேலாண்மைக்கும் உதவும். இவற்றின் வாயிலாக சென்னை மாநகர மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட முடியும். மேலும், இப்பணியில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பொறியாளர்களுக்கு, புவியியல் தகவல் அமைப்புதளத்தின் மூலம் கட்டமைப்புகளை பராமரிக்க பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

### 5.7.2 புவியிடங்காட்டி (GPS) மூலம் குடிநீர் ஊர்திகளை கண்காணித்தல்

குடிநீர் குழாய் இல்லாத தெருக்கள் மற்றும் குறைவான நீர் அழுத்தமுள்ளத் தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு வழக்கமான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் வகையில் லாரிகள் மூலம் வாரியம் நேரடியாகவும் அல்லது மேற்கண்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் தொட்டிகளில் (HDPE) நிரப்புதல் மூலமாகவும் குடிநீர் வழங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 3,800 லாரி நடைகள் மூலம் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



இவ்வாறு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீரை, புவியிடங்காட்டி (GPS) கண்காணிப்பு அமைப்பு மூலம் தொடர் கண்காணிப்பு செய்யப்படுவதால், சரியான நேரத்தில் உரிய மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

### 5.7.3 நிகழ்நிலை (Online) சேவைகள்

நுகர்வோர் https://chennaimetrowater.tn.gov.in என்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இணையதளம் மூலம் கீழ்கண்ட நிகழ்நிலை சேவைகளைப் பெறலாம்.

- பொது மக்களின் குறைகளைப் பெற்று நிவர்த்தி செய்தல்
- குடிநீர் வரி மற்றும் குடிநீர் / கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல்
- குடியிருப்புக்கான புதிய குடிநீர் / கழிவுநீர் இணைப்பு (தரைத்தளம் + 2 தளங்கள் வரை)
- தொழிற்சாலைகளுக்கான புதிய குடிநீர் இணைப்பு

- அழைத்தால் இணைப்பு திட்டம் (கழிவுநீர் இணைப்புக்கு) பதிவு செய்தல் (தரைத்தளம் + 2 தளங்கள் வரை)
- குடிநீர் ஊர்திக்கு பதிவு செய்தல்
- கழிவுநீர் அகற்ற, ஊர்திக்கு பதிவு செய்தல்
- நிலத்தடி நீர் உரிமம் பெறுதல்

**5.7.4 தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகள்**

சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து, வாரியத்தின் அனைத்து பணிகள் மற்றும் சேவைகளையும், முழுமையாக (End-to-End) தகவல் தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தல் மற்றும் புதிய நிறுவன வள திட்டமிடல் (ERP) ஆகிய பணிகளை ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான முயற்சிகளை செய்து வருகிறது.

5.7.5 **சென்னைக் குடிநீர் வாரியத்தில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை செயல்படுத்தல்**

சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டத்தின் ஒரு பகுதியாக, பொது ஒப்பந்தப்புள்ளி கொள்முதலில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய, 01.01.2022



முதல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை மேற்கொள்ள வாரியம் முடிவு செய்துள்ளது. அனைத்து ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தரவிறக்கம், சமர்ப்பித்தல் மற்றும் அதன் சார்ந்த பணிகள் ஆகியவை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் www.tntenders.gov.in மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

**5.8 நுகர்வோர் குறைகளை கண்காணித்தல்**

5.8.1 **24 X 7 குறை தீர்க்கும் மையம்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நுகர்வோர்களின் புகார்களை பெறவும், பதிவு செய்யவும் மற்றும் கண்காணிக்கவும் 24 மணி நேரமும் இயங்கும் குறைகளை தீர்க்கும் பிரிவு செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நுகர்வோர் தங்களது குறைகளையும் / புகார்களையும் நேரடியாகவும் அல்லது தொலைபேசி எண்.044-4567 4567 (20 இணைப்புகள்) மூலமாகவும் பதிவு செய்யலாம்.அவ்வாறு பதிவு செய்யபட்ட குறைகள் களைந்திட உடனடியாக சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்படுகிறது. அதன்படி

நுகர்வோர்களின் குறைகள் உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

### 5.8.2 சென்னை குடிநீர் வாரிய 'செயலி'

பொதுமக்கள்/ நுகர்வோர் தங்களது குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்களை எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் உரிய அதிகாரிகளுக்கு கைபேசி மூலம் பதிவு செய்து அனுப்புவதற்கு சென்னை குடிநீர் வாரியம் 'Metro water' என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலியை கூகுள் ப்ளேஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், பொதுமக்கள் தங்களது விவரங்களை அதாவது பெயர், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை ஒருமுறை பதிவு செய்யவதன் மூலம் குடிநீர்/கழிவுநீர் சம்பந்தமான புகார் குறித்த படங்கள்/புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் கைபேசி மூலம் அனுப்பி அதன் நிலையை தெரிவிக்கலாம். நுகர்வோர் புகார்களை பதிவு செய்யும்போது அவர்களின் விவரங்கள் கேட்டு பெறப்படுகிறது. அதன் பிறகு தனிப்பட்ட புகார் பதிவு எண் ஒதுக்கப்பட்டு அது குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். பொதுமக்கள் இந்த செயலி மூலம்



புகார் மீதான நடவடிக்கை விவரங்களை தெரிந்து கொள்ள இயலும்.

### 5.8.3 திறந்தவெளி குறை தீர்க்கும் கூட்டம்

சென்னை மாநகர் வாழ் பொதுமக்களுக்கு/ நுகர்வோர்களுக்கு சேவை செய்வதை மேம்படுத்தும் விதமாக அனைத்து பகுதி அலுவலகங்களிலும் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை வாரியத்தால் திறந்தவெளி குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. மேற்பார்வை பொறியாளர் நிலையில் உள்ள உயர் அலுவலர்கள் தலைமையில் இக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. திறந்தவெளி கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.9 பணியாளர்களின் நலன்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வாரியப் பணியாளர்களின் சேவைத்திறனை முக்கிய மூலதனமாக கருதுகிறது. எனவே வாரியம் அவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

களப்பணியாளர்களின் சுகாதார நலனை மேம்படுத்த, தையற் கட்டணத்துடன் சீருடைகள், எண்ணெய், சோப்பு, மழை மேலங்கிகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் அவ்வப்போது சென்னை குடிநீர் வாரியத்தால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் நுகர்வோர்க்கு பயனுள்ள சேவையை அளிப்பதற்காக வாரியப் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் நலன் சார்ந்த வசதிகள் வழங்கப்படுகின்றன:

- முழு நேரப் பணியில் இருக்கும் மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் ஆய்வக தொழில்நுட்ப உதவியாளர் அடங்கிய அத்தியாவசிய உபகரணங்களுடன் முதலுதவி வசதியுடன் உள்ள மருந்தகம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

- கண், காது, நுரையீரல், இதயம் ஆகியவைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் அனைத்து பணியாளர்களின் நலனுக்காக அவ்வப்போது நடத்தப்படுகின்றன.



- அரசு விதிகளின்படி, வாரியத்தில் பணிபுரியும் அனைத்து மாற்றுத் திறனாளி ஊழியர்களுக்கும் பயணப்படி வழங்கப்பட்டு வருகிறது

- வாரியப் பணியாளர்கள் அனைவருக்கும் மருத்துவ செலவு ஈட்டுத் தொகை அரசு விதிகளின் படி வழங்கப்பட்டு வருகிறது.

- பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளில் ஓய்வூதியப்பலன்கள் வழங்கப்படுகின்றன.

- இறந்த பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு கோரிக்கை மனு பெறப்பட்ட உடன் இறப்பு கால பணப்பயன்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

- முன்களப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் பணியின் போது தேவையான அத்தியாவசிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

## 5.10 நிதி நிலைமை

2021–22 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி மொத்த செலவு ரூ.1,365 கோடி ஆகும். இதே போல் மொத்த வருமானம் ரூ.1,081

கோடி ஆகும். 2019-20 முதல் 2021-22 வரையுள்ள ஆண்டுகளுக்கான வருமானம், செலவினம், உபரி / பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை குறித்த விவரங்கள் அட்டவணை 5.6ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.6**

(ரூ. கோடியில்)

| வ.எண் | விவரங்கள் | திருத்தியமதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது) | திருத்திய மதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது) | வரவுசெலவு திட்டமதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது) | திருத்திய மதிப்பீடு (அங்கீகரிக்கப் பட வேண்டியது) |
|---|---|---|---|---|---|
| | | 2019-20ஆம் நிதியாண்டு | 2020-21 ஆம் நிதியாண்டு | 2021-22ஆம் நிதியாண்டு | 2021-22ஆம் நிதியாண்டு |
| I | **வருவாய் வருமானம்** | | | | |
| 1 | குடிநீர் விற்பனை | 385 | 355 | 396 | 361 |
| 2 | குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 192 | 227 | 247 | 233 |
| 3 | மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் நீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றல் மூலமான வருமானம் | 89 | 131 | 176 | 148 |
| 4 | இதர வருமானங்கள் | 53 | 49 | 49 | 66 |
| 5 | மானியங்கள் | 372 | 224 | 213 | 237 |
| | **மொத்தம்** | **1,091** | **986** | **1,081** | **1,045** |
| II | **வருவாய் செலவினம்** | | | | |
| 1 | ஊதியம் மற்றும் ஓய்வூதியம் | 282 | 268 | 288 | 241 |
| 2 | இயக்குதல் மற்றும் பராமரிப்பு | 322 | 286 | 268 | 321 |
| 3 | இதர செலவினங்கள் | 578 | 498 | 528 | 532 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (மின்சாரம், கடல்நீரை குடிநீராக்குதல், பழுது மற்றும் பராமரித்தல்) | | | | |
| 4 | வட்டி | 96 | 87 | 81 | 82 |
| 5 | தேய்மானம் | 200 | 200 | 200 | 200 |
| | **மொத்தம்** | **1,478** | **1,339** | **1,365** | **1,376** |
| | உபரி/பற்றாக்குறை | (387) | (353) | (283) | (331) |
| | ஒட்டு மொத்த பற்றாக்குறை | **2,229** | **2,582** | **2,865** | **3,196** |

31.01.2022 அன்று கொடுக்கப்படவேண்டிய, பெறப்படவேண்டிய மற்றும் கடன் நிலுவைத் தொகை விவரங்கள் அட்டவணை 5.7ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.7** (ரூ. கோடியில்)

| வ.எண் | விவரங்கள் | 31.01.2022 அன்று தொகை (தோராயமாக) |
|---|---|---|
| I | **கொடுக்கப்பட வேண்டியவை:** | |
| 1 | சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள் | 25 |
| 2 | திரும்ப கொடுக்க வேண்டிய வைப்புத் தொகைகள் | 170 |
| 3 | ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கவேண்டியவை (திட்ட நிதி) | 62 |
| | **மொத்தம்** | **257** |
| II | **பெறப்படவேண்டியவை: (குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணம்)** | |
| 1 | உள்ளாட்சி அமைப்புகள் | 29 |
| 2 | அரசுத்துறைகள் | 74 |
| 3 | நுகர்வோர்கள் | 345 |
| | **மொத்தம்** | **448** |

| III | கடன் நிலுவைத் தொகை: | |
|---|---|---|
| | அ) அசல் ( அரசுக்கடன் ரூ. 1522 கோடி உட்பட) | 1,846 |
| | ஆ) வட்டி(அரசு நிலுவைத் தொகை ரூ. 216 கோடி TUFIDCO ரூ.7 கோடி) | 223 |
| | மொத்தம் | 2,069 |

2021–22 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவினமானது ரூ.1,365 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.1,081 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ரூ.247 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம் ரூ.572 கோடியும், இதர வருவாய் ரூ.49 கோடியும் ஆகும். மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும், இயக்கம்& பராமரிப்பு செலவு மற்றும் இதர செலவினங்களுக்காகவும் குடிநீர் வாரியத்திற்கு ரூ.213 கோடி நிதியினை (2021–22 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் படி) தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.



## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழகத்தில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்திடவும், பராமரித்திடவும் மற்றும் நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்திடவும் சட்ட வடிவின் மூலம் 1971–ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள், ஒரு சட்டபூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கண்ட பணிகளை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இயக்குநர்கள்**

| | |
|---|---|
| **தலைவர்** | |
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| **இயக்குநர்கள்** | |
| 2 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பொதுப்பணித்துறை |
| 3 | அரசு முதன்மை செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை |
| 4 | அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 5 | மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் |

| | |
|---|---|
| 6 | பேரூராட்சிகளின் ஆணையர் |
| 7 | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 8 | அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை |
| 9 | நகராட்சி நிருவாக இயக்குநர் |
| 10 | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை |
| 11 | இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 12 | நிதி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 13 | பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்களின் கீழ் உள்ள 17 வட்ட அலுவலகங்கள், 85 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 259 உபகோட்ட அலுவலகங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், நகர தனி குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை வடிவமைத்து மற்றும் செயல்படுத்திடவும் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரித்திடவும் பணியாற்றுகின்றன.



### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்து, தேவையான குடிநீரை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்களுக்கு வழங்குதல்.
- குடிநீர் திட்டங்களின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்ய, நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் மூலம் நீராதாரங்களை வலுப்படுத்துதல்.

### 6.2 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

- வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.
- நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்யும் பொருட்டு நீர்செறிவூட்டும் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல்.

### 6.3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.1994–ன் படி, ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, 11 மாநகராட்சிகள், 72 நகராட்சிகள், 349 பேரூராட்சிகள் மற்றும் 53,191 ஊரககுடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 4.53 கோடி மக்களை பயனாளிகளாக கொண்ட 554 கூட்டுக் குடிநீர்த்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு சராசரியாக நாளொன்றுக்கு 2,091 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் விவரம் கீழ்கண்ட அட்டவணை 6.1 –ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை 6.1**

| வ. எண் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்டத்தில் வடிவமைக்கப் பட்டபடி தினசரி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டர்) | சராசரியாக தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 11 | 290 | 263.31 |
| 2 | நகராட்சிகள் | 72 | 302.48 | 277.10 |
| 3 | பேரூராட்சிகள் | 349 | 354.17 | 324.72 |
| 4 | ஊரகக் குடியிருப்புகள் | 53,191 | 1,279.03 | 1,169.76 |
| 5 | தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் / வணிக அமைப்புகள் | 567 | 72.00 | 56.00 |
| | **மொத்தம்** | **54,190** | **2,297.68** | **2,091 (91%)** |

5–வது மாநில நிதி குழுவின் பரிந்துரைப்படி, 15 ஆண்டுகளுக்கு முன்னர் செயல்படுத்தப்பட்டு, வாரிய பராமரிப்பிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டு அவற்றை முழுத்திறனுடன் செயல்படுத்தும் பணிக்கு மூலதன மானிய நிதி மற்றும் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2017–18 முதல் 2021–22 வரை, 150 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.354.39 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, 124 திட்டங்களில் பணிகள்

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 திட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களில் 72 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தற்காலிகமாக சரி செய்ய, மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூபாய் 4 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் சீரமைக்கப்பட்டது.

குறைந்தபட்ச தேவைகள் திட்டம் (MNP), தேசிய வேளாண் மற்றும் கிராமப்புர வளர்ச்சி வங்கி (NABARD), மூலதன மானிய நிதி (CGF), உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தபடும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP), KfW (ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி) உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி (SMIF–TN–II–2), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுக் கழகம் (HUDCO), ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகிய நிறுவனங்களின் நிதியுதவிகள் மூலம் பல்வேறு குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.3.1 2021–2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்கள்

2021–22 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, வேலூர், கிருஷ்ணகிரி, கரூர், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த வேலூர் மாநகராட்சி,



நாமக்கல் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 1,041 ஊரக குடியிருப்புகளில் உள்ள 15.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 10 குடிநீர்த் திட்டங்கள் நாளொன்றுக்கு **59.58** மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் ரூ.1,136.33 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.2 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.2**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்–படும் குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்சிராப் பள்ளி | முசிறி, தாத்தையங்கார் பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 293 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 140.22 | 1.59 | 9.33 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்-படும் குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 2 | வேலூர் | வேலூர் மாநகராட்சி குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் திட்டம் | 275.11 | 7.20 | பகிர்மான குழாய் அமைப்பு மட்டும் |
| 3 | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 28.24 | 0.52 | 1.98 |
| 4 | கிருஷ்ணகிரி | ஓசூர் ஒன்றியத்தை சார்ந்த நாகொண்டபள்ளி மற்றும் 27 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 8.10 | 0.17 | 0.45 |
| 5 | கிருஷ்ணகிரி | கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராயகோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். | 8.46 | 0.21 | 0.56 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்-படும் குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 6 | கரூர் | தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 274 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 81.41 | 0.73 | 4.50 |
| 7 | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | அன்னூர், மூப்பேரிபாளையம், அவிநாசி பேரூராட்சிகள் மற்றும் பல்லடம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 155 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 241.00 | 0.94 | 13.00 |
| 8 | திருப்பூர் | பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 99.24 | 1.92 | 8.07 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்–படும் குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 9 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 69.31 | 0.70 | 4.03 |
| 10 | நாமக்கல் | நாமக்கல் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 185.24 | 1.59 | 17.66 |
| | | **மொத்தம்** | **1,136.33** | **15.57** | **59.58** |

### 6.3.2 தற்போது செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

அனைத்து வீடுகளுக்கும் படிப்படியாக குடிநீர் இணைப்பு வழங்கும் நோக்குடன் ஊரகப்பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கான குடிநீர் வழங்குதலை 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்தவும், நகர பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வழங்கும் வகையிலும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



தற்போது சிவகங்கை, தென்காசி, விருதுநகர். கன்னியாகுமரி, தேனி, கடலூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், திருநெல்வேலி, திருப்பத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த 12 நகராட்சிகள், 48 பேரூராட்சிகள் மற்றும் 11,171 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.7,095.31 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 542.02 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 94.12 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் 31 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் வெவ்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 31 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 17 திட்டங்கள், தேசிய வேளாண் மற்றும் கிராமப்புர வளர்ச்சி வங்கி (NABARD) மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்ட (MNP) நிதி ஆதாரங்களின் கீழ் 15 மாவட்டங்களில் உள்ள 4 நகராட்சிகள், 43 பேரூராட்சிகள் மற்றும் 8,428 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.4,641.94 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 365.73 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 69.78 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 6.3

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை | 8 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2,452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 1,752.73 | 16.11 | 86.42 |
| 2 | கன்னியாகுமரி | இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பத்மநாபபுரம், காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் மேம்பாட்டு திட்டம் | 174.00 | 3.44 | 35.12 |
| 3 | தேனி | கூடமலைக்குண்டு–மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் | 162.43 | 1.78 | 10.70 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம். | | | |
| 4 | கடலூர் | திட்டக்குடி, பெண்ணாடம், மங்களம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர், விருத்தாசலம் ஒன்றியங்களில் உள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 479.00 | 7.92 | 39.43 |
| 5 | சேலம் | இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 778 ஊரகக் | 652.84 | 6.03 | 53.03 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | | | |
| 6 | நாமக்கல் மற்றும் சேலம் | சங்ககிரி, ஆலாம்பாளையம் மற்றும் படவீடு பேரூராட்சிகள் பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 399.46 | 6.61 | 32.65 |
| 7 | ஈரோடு மற்றும் திருப்பூர் | பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 224.00 | 5.47 | 25.39 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 8 | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 362.20 | 6.43 | 36.15 |
| 9 | திருச்சிராப்பள்ளி | தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 49.95 | 0.64 | 3.57 |
| 10 | தஞ்சாவூர் | கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த் திட்டம் | 91.13 | 0.97 | 5.45 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 11 | நாகப்பட்டினம் | 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம் | 42.46 | 7.03 | 14.93 |
| 12 | பெரம்பலூர் | வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 73 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 22.84 | 0.87 | 4.05 |
| 13 | கிருஷ்ணகிரி | பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளப்பள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 31.82 | 0.41 | 1.46 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 14 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த வெலகலஹள்ளி மற்றும் 39 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 9.90 | 0.12 | 0.41 |
| 15 | கிருஷ்ணகிரி | வேப்பனப்பள்ளி ஒன்றியத்தை சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 31.00 | 0.54 | 2.44 |
| 16 | திருப்பூர் | 5 பேரூராட்சிகள், மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 85.75 | 4.07 | 8.83 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 17 | திருப்பூர் | திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 ஊராட்சிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 70.43 | 1.34 | 5.70 |
| | | **மொத்தம்** | **4,641.94** | **69.78** | **365.73** |

இதர நிதி ஆதாரங்களின் கீழ், தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சார்ந்த 8 நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 368 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.1,076.07 கோடி மதிப்பீட்டில் 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் தற்போது செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 106.57 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 12.73 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.4–ல் கொடுக்கப்பட்டுள்ளது.



## அட்டவணை 6.4

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தென்காசி மற்றும் விருதுநகர் | தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | TNSUDP | 543.20 | 6.20 | 61.98 |
| 2 | விருதுநகர் | அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | HUDCO | 444.71 | 2.60 | 26.94 |
| 3 | திருநெல்வேலி | கீழ்ப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழ்ப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் | NRDWP | 46.55 | 2.00 | 9.27 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | | | | |
| 4 | திருநெல்வேலி | மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | NRDWP | 32.40 | 1.45 | 6.18 |
| 5 | கடலூர் | பண்ருட்டி மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியங்களைச் சார்ந்த 35 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | DMFT | 9.21 | 0.48 | 2.20 |
| | | **மொத்தம்** | | **1,076.07** | **12.73** | **106.57** |

### 6.3.2.1 ஜல் ஜீவன் இயக்கம் (Jal Jeevan Mission)

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் வரும் மார்ச், 2024 ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கி, போதுமான அளவில்,



நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் குடிநீர் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் தஞ்சாவூர், தென்காசி, திருநெல்வேலி, திருப்பத்தூர், கரூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சார்ந்த 2,375 ஊரக குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகளிலுள்ள 3 கிராமங்களுக்கு (மூலதன மானிய நிதி) ரூ. **1,377.30** கோடி மதிப்பீட்டில் **9** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் மூலம் 11.62 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 69.72 மில்லியன் லிட்டர் குடிநீர், **1,28,883** வீட்டிணைப்புகளின் மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.5 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.5**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டிணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் | கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரகக் | 117.09 | 1.02 | 5.97 | 11,861 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டிணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | | | | |
| 2 | தென்காசி மற்றும் திருநெல்வேலி | ஆலங்குளம் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 48 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் முக்கூடல் பேரூராட்சியைச் சார்ந்த 1 குடியிருப்பிற்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 50.50 | 0.56 | 3.54 | 5,053 |
| 3 | திருப்பத்தூர் | திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றாம்பள்ளி மற்றும் கந்திலி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 759 ஊரகக் | 182.09 | 2.91 | 13.99 | 31,594 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டிணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | | | | |
| 4 | கரூர் | அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 756 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 440.63 | 2.09 | 16.29 | 32,011 |
| 5 | ஈரோடு | மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 412.12 | 3.16 | 20.50 | 25,092 |
| 6 | ஈரோடு | கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 87.68 | 0.50 | 3.13 | 7,709 |
| 7 | ஈரோடு | கோபிசெட்டி பாளையம் மற்றும் | 56.94 | 0.64 | 2.31 | 9,496 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டி ணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 96 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | | | | |
| 8 | ஈரோடு | பவானி ஒன்றியத்தைச் சார்ந்த கவுந்தபாடி ஊராட்சியிலுள்ள 55 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் | 17.55 | 0.59 | 3.00 | 4,299 |
| 9 | சேலம் | ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு ஊராட்சியைச் சார்ந்த 8 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் | 12.70 | 0.15 | 0.99 | 1,768 |
| | | மொத்தம் | **1,377.30** | **11.62** | **69.72** | **1,28,883** |

### 6.3.3 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை, திருநெல்வேலி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 1 நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் 1,442 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 11.28 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், **ரூ.2,327.53 கோடி** மதிப்பீட்டிலான **6** கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு



ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் அம்ரூத் 2.0 திட்ட நிதியின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 2022–23 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு, தினசரி 136.34 மில்லியன் லிட்டர் குடிநீர் **92,420** வீட்டிணைப்புகள் மூலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.6 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அடவணை 6.6**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருவாரூர் | நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர் மற்றும் கொரடாச்சேரி ஆகிய 6 ஒன்றியங்களில் உள்ள 667 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 1127.20 | 3.97 | 32.55 | 43,804 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 2 | திருச்சிராப்பள்ளி | லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களில் உள்ள 109 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 248.59 | 1.44 | 11.26 | 15,454 |
| 3 | மயிலாடுதுறை | சீர்காழி ஒன்றியத்தில் உள்ள 32 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். | 36.14 | 0.15 | 1.46 | 2,849 |
| 4 | இராணிப்பேட்டை | காவேரிப்பாக்கம், சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஒன்றியங்களில் உள்ள செம்பேடு மற்றும் 88 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். | 41.98 | 0.55 | 2.98 | 235 |
| 5 | திருநெல்வேலி | மானூர் ஒன்றியத்தில் உள்ள கங்கை கொண்டான் மற்றும் 21 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் | 19.25 | 0.25 | 2.05 | 1,719 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) | வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 6 | நாமக்கல் | இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் மற்றும் பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 547 குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (பகுதி I) | 854.37 | 4.92 | 86.04 | 28,359 |
| | | **மொத்தம்** | **2327.53** | **11.28** | **136.34** | **92,420** |

**6.3.4 2021–2022 ஆம் ஆண்டில் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்**

2021–22 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த 1 நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 539 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 5.65 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 39.18 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில், ரூ.962.62 கோடி மதிப்பீட்டில் 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஊரகப் பகுதிகளுக்கு, ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவின் அனுமதி வழங்கப்பட்டு, நகர பகுதிகளுக்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கையில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 4,017 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 31.64 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 367.40 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில், ரூ.9,484.93 கோடி மதிப்பீட்டிலான 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான



திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிருவாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

மேற்கூறிய விரிவான திட்ட அறிக்கைகள் தவிர, திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், தஞ்சாவூர், அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி, தென்காசி, நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 1 மாநகராட்சி, 15 நகராட்சிகள், 42 பேரூராட்சிகள் மற்றும் 15,934 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 126.00 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் 15 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**6.4 தனிக் குடிநீர்த் திட்டங்கள்**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான தனிக் குடிநீர்த் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் முடிந்தவுடன் அவை இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக அந்தந்த நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

**6.4.1 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (அம்ரூத்) திட்டம்**

அம்ரூத் திட்டத்தின் கீழ், 9 குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில், 5

திட்டங்கள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 4 குடிநீர்த் திட்டங்களான இராஜபாளையம் நகராட்சி, நாகர்கோவில் மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி (பில்லூர்–III) திட்டம் ஆகியவை ரூ.1,756.48 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள், 48.06 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 388.64 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.7–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.7**

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | இராஜபாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 192.83 | 2.15 | 20.91 |
| 2 | கன்னியாகுமரி | நாகர்கோயில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 296.08 | 3.90 | 49.56 |
| 3 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 487.71 | 9.22 | பகிர்மான குழாய் அமைப்பு மட்டும் |
| 4 | கோயம்புத்தூர் | பவானி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு புதிதாக இணைக்கப்பட்ட பகுதியினை உள்ளடக்கிய விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் –பில்லூர் – III | 779.86 | 32.79 | 318.17 |
| | | **மொத்தம்** | **1,756.48** | **48.06** | **388.64** |

### 6.4.2 வெளி ஆதாரத் திட்டங்கள் (Externally Aided Projects, KfW– ஜெர்மன் மேம்பாட்டு வங்கி)

வெளி ஆதார நிதியுதவியின் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் போடிநாயக்கனூர் நகராட்சி ஆகியவை பயன்பெறும் வகையில் 2 குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள்

ரூ. 306.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் முடிந்ததும் 7.88 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 65.82 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.8 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.8**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 230.00 | 6.88 | 50.00 |
| 2 | தேனி | போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 76.15 | 1.00 | 15.82 |
| | | **மொத்தம்** | **306.15** | **7.88** | **65.82** |

### 6.4.3 இதர நிதி ஆதாரத் திட்டங்கள்

இதர நிதி ஆதாரத் திட்டங்களின் கீழ், தேனி, மதுரை, கன்னியாகுமரி, திண்டுக்கல், திருவள்ளூர் மற்றும் ஈரோடு



மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளுக்கு ரூ. **284.90** கோடி மதிப்பீட்டில் **8** குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் முடிந்ததும் 4.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 46.11 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.9 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.9**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | தேனி | போடிநாயக்கனூர் நகராட்சி தனிக் குடிநீர் அபிவிருத்தி திட்டம் | CGF | 30.00 | 1.00 | 10.00 |
| 2 | தேனி | தென்கரை பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | NABARD | 9.54 | 0.28 | 2.00 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 3 | மதுரை | உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | IUDM | 73.03 | 0.64 | 9.98 |
| 4 | மதுரை | ஆனையூர் நகராட்சி (தற்போது மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) குடிநீர் அபிவிருத்தி திட்டம் | MNP | 8.97 | 0.72 | 5.40 |
| 5 | கன்னியாகுமரி | குழித்துறை நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | IUDM | 30.94 | 0.31 | 4.83 |
| 6 | திண்டுக்கல் | பாலசமுத்திரம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | NABARD | 9.62 | 0.18 | 1.92 |
| 7 | திருவள்ளூர் | திருத்தணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | IUDM | 109.68 | 0.85 | 9.44 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | தினசரி வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 8 | ஈரோடு | சிவகிரி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | IUDM | 13.12 | 0.26 | 2.54 |
| | | **மொத்தம்** | | **284.90** | **4.24** | **46.11** |

## 6.5 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர் ஆகியோரால் பரிந்துரைக்கப்படும் நகரங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், அம்ருத் திட்ட நிதியுதவி (AMRUT), ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM), மூலதன மானிய நிதி (CGF), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) உதவியுடன் கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி – தமிழ்நாடு (SMIF-TN-II-2), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுக் கழகம் (HUDCO), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி

(TNUDF), ஆசிய வளர்ச்சி வங்கி (ADB), சீர் மிகு நகரங்கள் இயக்கம் (Smart Cities Mission) ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.5.1 2021–2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பாதாள சாக்கடைத்திட்டங்கள்

2021–22 ஆம் ஆண்டில், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 1 மாநகராட்சி மற்றும் 4 பேரூராட்சிகளில் உள்ள 3.72 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 5 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.237.47 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 35.75 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்யும் வகையில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.10 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.10**

| வ. எண். | மாவட்டம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவுநீரின் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாநகராட்சி | 95.00 | 2.65 | 23.85 |
| 2 | திருச்சிராப்பள்ளி | மணச்சநல்லூர் பேரூராட்சி | 34.39 | 0.36 | 4.16 |
| 3 | திருச்சிராப்பள்ளி | எஸ்கண்ணனூர் பேரூராட்சி | 21.58 | 0.18 | 2.25 |
| 4 | தஞ்சாவூர் | வல்லம் பேரூராட்சி | 35.00 | 0.20 | 2.35 |
| 5 | ஈரோடு | பெருந்துறை பேரூராட்சி | 51.50 | 0.33 | 3.14 |
| | | **மொத்தம்** | **237.47** | **3.72** | **35.75** |



### 6.5.2 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

### 6.5.2.1 அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (அம்ரூத்) திட்டம்

கோயம்புத்தூர் மாநகராட்சி (பகுதி) மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 9.63 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 4 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ. 1,060.49 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 73.17 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்யும் வகையில், பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.11 ல் கொடுக்கப்பட்டுள்ளது

**அட்டவணை 6.11**

| வ. எண். | மாவட்டம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவு நீரின் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் | ஆம்பூர் நகராட்சி | 165.55 | 1.83 | 16.71 |
| 2 | விருதுநகர் | இராஜபாளையம் நகராட்சி | 251.20 | 2.20 | 21.85 |
| 3 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சி (இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகள்) | 591.14 | 5.17 | 30.53 |
| 4 | இராமநாதபுரம் | இராமேஸ்வரம் நகராட்சி | 52.60 | 0.43 | 4.08 |
| | | **மொத்தம்** | **1060.49** | **9.63** | **73.17** |

### 6.5.2.2 வெளி ஆதாரத் திட்டங்கள் (Externally Aided Projects, KfW–ஜெர்மன் மேம்பாட்டு வங்கி)

வெளி ஆதாரத் திட்ட நிதி உதவியின் கீழ், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூ.410.43 கோடி மதிப்பீட்டில் 3 பாதாள சாக்கடைத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்ற பின், 3.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 35.90 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.12 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.12**

| வ. எண். | மாவட்டம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவு நீரின் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை | காரைக்குடி | 140.13 | 1.39 | 16.00 |
| 2 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி | 170.22 | 1.00 | 11.25 |
| 3 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் நகராட்சி | 100.08 | 0.77 | 8.65 |
| | | **மொத்தம்** | **410.43** | **3.16** | **35.90** |

### 6.5.2.3 இதர நிதி ஆதார பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

கன்னியாகுமரி. தூத்துக்குடி, விருதுநகர், விழுப்புரம், திருவள்ளூர், தேனி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள், 4 நகராட்சிகள் மற்றும்

2 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூ.985.99 கோடி மதிப்பீட்டில் 8 பாதாள சாக்கடைத் திட்டங்கள் இதர நிதி ஆதாரங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்ற பின், 5.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 59.33 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.13 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.13**

| வ. எண். | மாவட்டம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள்தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப் பட உள்ள கழிவுநீரின் அளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | நாகர்கோவில் மாநகராட்சி | UIDSSMT | 129.95 | 1.54 | 17.66 |
| 2 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாநகராட்சி (பகுதி) | Smart Cities Mission | 120.53 | 0.54 | 6.25 |
| 3 | விருதுநகர் | சாத்தூர் நகராட்சி | UIDSSMT | 48.39 | 0.36 | 4.63 |
| 4 | விழுப்புரம் | விழுப்புரம் நகராட்சி (இணைக்கப்பட்ட பகுதி) | HUDCO | 263.00 | 0.60 | 6.91 |
| 5 | விழுப்புரம் | திண்டிவனம் நகராட்சி | HUDCO | 268.00 | 1.00 | 11.44 |
| 6 | திருவள்ளூர் | பொன்னேரி நகராட்சி | IUDM | 62.82 | 0.57 | 6.52 |
| 7 | தேனி | மேலசொக்கநாதபுரம் பேரூராட்சி | CGF | 41.72 | 0.22 | 1.90 |
| 8 | செங்கல்பட்டு | திருப்போரூர் பேரூராட்சி | IUDM | 51.58 | 0.33 | 4.02 |
| | **மொத்தம்** | | | **985.99** | **5.16** | **59.33** |

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களைத் தவிர, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய 4 பகுதிகளுக்கு ரூ.860.80 கோடி மதிப்பீட்டில் 37.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான பாதாள சாக்கடைத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும்.

### 6.5.3 2021–2022 ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2021–22 ஆம் ஆண்டில், ஓசூர் மாநகராட்சி, தூத்துக்குடி மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி (இணைக்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகள்) மற்றும் செங்கல்பட்டு நகராட்சி ஆகியவற்றிலுள்ள 8.03 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.1,826.83 கோடி மதிப்பீட்டில், 4 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, நிருவாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன.

மேற்கூறிய திட்டங்கள் தவிர, மன்னார்குடி நகராட்சி மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சி ஆகியவற்றிலுள்ள 1.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 2 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இராணிப்பேட்டை நகராட்சி, கள்ளக்குறிச்சி நகராட்சி, திருத்தணி நகராட்சி மற்றும் தென்காசி நகராட்சி ஆகியவற்றிலுள்ள 2.40 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதாள சாக்கடைத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## 6.6 சிறப்புத் திட்டங்கள்

### 6.6.1 ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் –இரண்டாவது கட்டம்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் (முதல் கட்டம்) தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவினை உயர்த்தி வழங்கும் வகையில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.01.2022 அன்று அறிவிக்கப்பட்டது.

இதற்கிணங்க, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள நகர்ப்புர பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், ஊரகப் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும் வீட்டு இணைப்புகளுடன் குடிநீர் வழங்கும் பொருட்டு, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இரண்டாவது கட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள ஓசூர் மாநகராட்சி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக

குடியிருப்புகளைச் சார்ந்த 41.55 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

## 6.7 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

### 6.7.1 ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புப் பிரிவு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் புதிய தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை பயனுக்கு கொண்டுவரும் பொருட்டு, ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டுவருகிறது.

வாரிய பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை சிறப்பாக பராமரிக்கும் பொருட்டு 600 தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி நீர் உந்து நிலையங்களில் 5 குதிரை திறன் வரை அமைந்துள்ள மின்னிறைப்பான்கள் தானியக்கம் செய்யப்பட்டு ஆண்டிற்கு ரூ.12.61 கோடி பராமரிப்பு செலவில் சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 6.7.2 பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் தலைமை பயிற்சி மையம் சென்னையிலும், துணை பயிற்சி மையங்கள் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களிலும் உள்ளன. இந்த மையங்களின் மூலம் வாரியத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் இதர



பிரிவு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

- 2021–22 ஆம் ஆண்டில், 7 பயிற்சி திட்டங்கள் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள களப்பொறியாளர்கள், நீர் ஆய்வாளர்கள், நீர் புவியியலாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை களப்பொறியாளர்கள் உட்பட 1,100 நபர்களுக்கு ரூ.1.25 கோடி செலவில் ஜல்ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியுடன் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து வாரிய பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் மேலும் திறன் மேம்பாட்டை வளர்க்கும் விதமாகவும் 2022–23 ஆம் நிதியாண்டில், கீழ்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

- குடிநீர்த் திட்டங்களில் நீர் பகிர்மான கட்டமைப்பு வடிவமைத்தல்
- குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை மென்பொருள் உருவகப்படுத்துதல் (software simulation) மூலம் பகுப்பாய்வு மற்றும் வடிவமைப்பு.
- பராமரிப்பில் உள்ள திட்டங்களில் இயந்திர, மின் மற்றும் சூரிய ஆற்றல் கொண்ட உபகரணங்களை பயன்படுத்தி

ஆற்றல் திறனை (Energy Efficiency) உறுதி செய்தல் மற்றும் ஆற்றல் தணிக்கை செயல்படுத்துதல்.

- மழைநீர் சேகரிப்பு வழிமுறைகள்.
- ஒப்பந்தபுள்ளி முறைகளில் அடிப்படை பயிற்சி வழங்குதல்.
- நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை கையாளுதல்.
- கணக்கு, சரக்கு மற்றும் சேவை வரி, TDS மற்றும் PFMS தொடர்பான மென்பொருளை கையாளுதல்.
- கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாளசாக்கடைத் திட்டங்களின் செயலாக்கத்தில் புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்.

**6.8 உபகரண சோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்**

வாரியத்தின் தரக்கட்டுப்பாட்டு சோதனை ஆய்வகங்கள் மதுரை (NABL சான்று பெற்றுள்ளது), திருச்சி, கோயம்புத்தூர் (NABL சான்று பெற்றுள்ளது) மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

இந்த சோதனை ஆய்வகங்களில், கீழ்கண்ட கட்டுமான பொருட்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

- பாலி வினைல் குளோரைடு (PVC) குழாய்கள், உயர் அடர்த்தி பாலி எத்திலின் (HDPE) குழாய்கள், வார்ப்பு இரும்பு (CI) குழாய்கள், நெகிழ் இரும்பு குழாய்கள் (DI), சுடுமண் (Stoneware) குழாய்கள்
- வடிவமைப்பு கான்கிரீட் கலவை (Mix Design)
- சிமெண்ட், கம்பி, மணல், ஜல்லி, செங்கல், கான்கிரீட் மாதிரிகள் (Concrete Cubes) போன்ற கட்டுமான பொருட்கள்
- வடிகட்டி மணல், ஹாலோ பிளாக்குகள், பேவர் பிளாக்குகள்
- மின் கடத்திகள் (Electric Cables)

2021–22 ஆம் நிதியாண்டில் 10,597 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

2022–23 ஆம் நிதியாண்டில், 12,000 மாதிரிகள் பரிசோதிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

**6.9 குடிநீரின் தரப்பரிசோதனை மற்றும் கண்காணிப்பு**

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னையில் மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக்கூடம், 31 மாவட்ட, 56 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனை கூடங்களை தமிழ்நாடு முழுவதும் அமைத்துள்ளது. இதன் வாயிலாக ஊரகப் பகுதிகளில் வழங்கப்படும் குடிநீரில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளதா என்பது உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் (Basic quality parameters)

மற்றும் குடிநீர் தரக்கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் சென்னையில் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப்பரிசோதனைக்கூடம் 2016 ஆம் ஆண்டு முதல் **NABL** (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தரச்சான்றிதழ் பெற்று, மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக்கூடமாக இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 12 மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு (தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், தருமபுரி, கோயம்புத்தூர், சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல்) NABL தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 19 மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL தரச்சான்றிதழ், 56 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனை கூடங்களுக்கு NABL அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் நிதியாண்டில், ஜல் ஜீவன் இயக்க நிதி மற்றும் மாநில நிதி உதவியுடன் 3,86,724 குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. குடிநீர் மாதிரிகள் பரிசோதனை செய்வதன் மூலமும், கள நீர் பரிசோதனை பெட்டிகளின்



விற்பனை மூலமும் ரூ. **31.73** இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

மேலும் ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 2022–23 ஆம் ஆண்டில், 6.50 இலட்சம் குடிநீர் மாதிரிகள் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகளை கண்டறியும் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.10 நிலநீர் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக கண்டறியவும், நீராதாரத்தின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்ய நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கு சாத்தியமான இடங்களை தேர்வு செய்யவும், செயற்கைகோள் தொலை உணர்வு தொழில்நுட்பம் (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System) பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பருவ மழைக்கு முன்னும் பின்னும் நீர் மாதிரிகள் சேகரித்து, தமிழ்நாட்டில் பரவலாக நீரின் தரத்தை குறிப்பிடும் பகுதிவாரியான வரைபடங்கள் (Topo Sheets – 220 எண்ணம்) தயாரித்துள்ளது.

குடிநீர் ஆதாரங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி குடிநீர்

திட்டங்கள் ஆகியன புவியிடக்குறிப்பு (Geo Tagging) செய்யப்பட்டு வருகின்றன. 37,614 குடிநீர் கட்டமைப்புகள் இணையதளத்தில் புவியிடக்குறிப்பு செய்யப்பட்டுள்ளன.

2021–22 ஆம் ஆண்டில், 812 புவி இயற்பியல் ஆய்வுப்பணிகள் (Geo–physical Survey) மேற்கொள்ளப்பட்டு ரூ. 21.13 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

### 6.11 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

நகரங்களில் வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை பயன்படுத்தி நீடித்த, நிலையான நீர் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில், நீடித்த, நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தின் (Sustainable Water Security Mission – SuWaSeM), ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு வருகிறது.

நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையரகம் ஆகிய துறைகள் மூலம் 50:50 நிதி பங்கீட்டுடன் (நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு மற்றும் SuWaSeM) கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல்.
- மேற்கூரையில் விழும் மழைநீரை சேகரித்தல்.
- மேற்கூரை நீங்கலாக வளாகத்தில் விழும் மழைநீரை சேகரித்தல்.



- மழைநீர் வடிகாலில் வரும் நீரை சேகரித்தல்.

மேற்கண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும் முகமையாக தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு வருகிறது.

### 6.12 நிதி நிலை

2021–22 ஆம் ஆண்டுக்கான மொத்த வருவாய் செலவினம் தோராயமாக ரூ.1,264.90 கோடி ஆகும். மொத்த வருமானம் தோராயமாக ரூ. 1092.70 கோடி ஆகும்.

2019–20 முதல் 2021–22 வரையுள்ள ஆண்டுகளுக்கான வருமானம், செலவினம், உபரி / பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை குறித்த விவரங்கள் கீழே அட்டவணை 6.14–ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.14**

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | விவரங்கள் | 2019–20 ஆம் நிதியாண்டு | 2020–21 ஆம் நிதியாண்டு | 2021–22 ஆம் நிதியாண்டு (தோராயமாக) |
|---|---|---|---|---|
| **I.** | **வருவாய் வருமானம்:** | | | |
| 1 | நூற்றுவீதக் கட்டணம் (centage) | 182.47 | 197.60 | 227.02 |
| 2 | குடிநீர்க் கட்டணம் | 649.52 | 675.92 | 610.26 |
| 3 | இதர வருமானம் | 81.94 | 109.82 | 57.08 |
| 4 | மானியங்கள் | 449.26 | 159.50 | 198.34 |
| | மொத்தம் | **1,363.19** | **1,142.84** | **1,092.70** |
| **II.** | **வருவாய் செலவினம்:** | | | |
| 1 | சம்பளம் | 127.51 | 109.38 | 95.08 |
| 2 | ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் | 412.07 | 375.14 | 311.20 |

(ரூபாய் கோடியில்)

| வ எண் | விவரங்கள் | 2019-20 ஆம் நிதியாண்டு | 2020-21 ஆம் நிதியாண்டு | 2021-22 ஆம் நிதியாண்டு (தோராயமாக) |
|---|---|---|---|---|
| 3 | கூட்டுக் குடிநீர்த் திட்ட பராமரிப்புச் செலவுகள் | 924.74 | 962.54 | 837.02 |
| 4 | இதர செலவுகள் | 25.61 | 28.92 | 21.60 |
| | மொத்தம் | **1,489.93** | **1,475.98** | **1,264.90** |
| | உபரி / பற்றாக்குறை | **-126.74** | **-333.14** | **-172.20** |
| | ஒட்டுமொத்த பற்றாக்குறை | **2,310.63** | **2,643.77** | **2,815.97** |

31.03.2022 அன்று கொடுக்கப்படவேண்டிய, பெறப்படவேண்டிய, மற்றும் கடன் நிலுவைத் தொகை விவரங்கள் கீழே அட்டவணை 6.15 ல் தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 6.15**

(ரூபாய் **கோடியில்**)

| வ எண் | விவரங்கள் | 31.03.2022 அன்று தொகை (தோராயமாக) |
|---|---|---|
| **I.** | **கொடுக்கப்படவேண்டியவை:** | |
| 1 | தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) – மின் பயன்பாடு கட்டணம் | 1910.40 |
| 2 | ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் | 20.58 |
| 3 | கூட்டுக் குடிநீர்த் திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள் | 360.56 |
| 4 | வேலை நிதி ஊழியர் (WCE)–நீதிமன்ற வழக்கு – நிலுவைத் தொகை | 10.51 |
| | **மொத்தம்** | **2,302.05** |
| **II** | **பெறப்படவேண்டியவை:**(குடிநீர் கட்டணம்) | |
| 1 | மாநகராட்சிகள் | 289.10 |
| 2 | நகராட்சிகள் | 14.52 |
| 3 | பேரூராட்சிகள் | 12.05 |
| 4 | கிராம ஊராட்சிகள் | 202.64 |
| 5 | தனியார் பயனாளிகள் | 130.11 |
| | **மொத்தம்** | **648.42** |
| **III** | **ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை** | |
| | a) அசல் | **87.27** |
| | b) வட்டி | 35.01 |
| | **மொத்தம்** | **122.28** |
| | | |



## 6.13 ஜல் ஜீவன் இயக்கம் (Jal Jeevan Mission)

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வீட்டுக் குழாய் இணைப்பு மூலம் மார்ச் 2024-க்குள் வழங்குவது ஜல் ஜீவன் இயக்கத்தின் நோக்கமாகும்.

### 6.13.1. ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

i. நீடித்த நிலைத் தன்மை உடைய நீராதாரங்களை (source sustainability) தெரிந்தெடுத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள நீராதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்தல் (source strengthening).

ii. தேவைப்படும் இடங்களில், அதிக அளவு நீரினை குழாய்கள் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லுதல் (bulk water transfer), நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பகிர்மான குழாய்களின் அமைப்பினை ஏற்படுத்துதல்.

iii. அனைத்து வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை (in–village infrastructure) உருவாக்குதல்.

iv. பராமரிப்பிலுள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் நடைபெற்று வரும் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு (retrofitting) செய்து ஊரக பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் அளவு குடிநீர் வழங்குதல்.

v. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC), மனிதவள மேம்பாடு (HRD), பயிற்சி, நீர் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆகியவை மேற்கொள்ளல்.

### 6.13.2 மாநில செயல்படுத்தும் துறை மற்றும் மாநில பொறுப்பு அலுவலர்

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் செயல்படுத்தவும், இத்துறையின்



அரசு கூடுதல் தலைமை செயலாளரை மாநில பொறுப்பு அலுவலராகவும் (State Nodal Officer) நியமித்து, அரசாணை (நிலை) எண் 26, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை, நாள் 04.02.2022 இன் மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### 6.13.3 மாநில திட்ட இயக்குநர்

தமிழ் நாட்டில், ஜல் ஜீவன் இயக்கத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள், திட்ட இயக்குநராக உள்ளார்.

ஜல் ஜீவன் இயக்க செயல்பாட்டில், இதன் திட்ட இயக்குநருக்கு உதவிட மாநில திட்ட மேலாண்மை பிரிவு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

### 6.13.4. குழுக்கள்

அரசாணை (நிலை) எண்.33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை நாள் 15.02.2022–இன்படி பின்வரும் குழுக்கள் மறு உருவாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

i. **உயர் நிலைக் குழு (Apex Committee)**

அரசு தலைமைச் செயலாளர் அவர்களை இக்குழுவின் தலைவராகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களை உறுப்பினர் – செயலராகவும், மற்றும் 7 துறைகளின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் / முதன்மை செயலாளர் / செயலாளர், ஒன்றிய அரசின் பிரதிநிதி, 4 இதர அலுவலர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இக்குழு கொள்கை முடிவுகள், மாநில செயல் திட்டத்தை இறுதி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

ii. **மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (State Level Scheme Sanctioning Committee)**

இக்குழுவில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைவராகவும் மற்றும் ஒன்றிய அரசின் பிரதிநிதி உட்பட 13 உறுப்பினர்களும் உள்ளனர். உயர்நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வழங்கும் குழு



தேவையான தொழில்நுட்ப அனுமதியை வழங்கும்.

iii. **செயற்குழு (Executive Committee)**

ஜல் ஜீவன் இயக்கத்தின் திட்ட இயக்குநர் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இயக்குநர், நிதி துறை கூடுதல் செயலாளர் மற்றும் 4 மாநில அரசு அதிகாரிகளை உறுப்பினர்களாக கொண்ட செயற்குழுவால் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படும்.

### 6.13.5 செயலாக்க வழிமுறைகள்

ஜல் ஜீவன் இயக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்ற பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

i. ஊரக பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமங்களிலும் குடிநீர் தேவைகளின் அடிப்படையில் கிராம செயல் திட்டம் (Village action plan) தயாரிக்கப்படுகிறது. குக்கிராமங்களின் செயல் திட்டங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, கிராம செயல் திட்டம் உருவாக்கப்பட்டு கிராம சபையின் ஒப்புதல் பெறப்படுகிறது.

ii. மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் செயல் திட்டங்களும்

ஒன்றிணைக்கப்பட்டு மாவட்ட செயல் திட்டம் (District action plan) தயாரிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார முகமை (District Water and Sanitation Mission) ஒப்புதல் வழங்குகிறது.

iii. மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் செயல் திட்டங்கள், கூட்டுக் குடிநீர் திட்டங்கள், மொத்த நீர் பரிமாற்றம் ஆகியவை தொகுக்கப்பட்டு மாநில செயல் திட்டம் (State action plan) தயாரிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாநில அளவில் ஆண்டு செயல் திட்டம் (Annual action plan) தயாரிக்கப்படுகிறது.

**6.13.6 நிதி**

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த 50 சதவிகித நிதியினை ஒன்றிய அரசும் 50 சதவிகித நிதியினை மாநில அரசும் வழங்குகிறது. துணை நடவடிக்கைகள் (support activities) மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு



60 சதவிகிதமும் மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்குகிறது.

**6.13.7 செயல்படுத்துதல்**

ஜல் ஜீவன் இயக்கம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**6.13.7.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

i. ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (Combined water supply schemes / multi village schemes), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைத்து செயல்படுத்தப்படுகிறது.

ii. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டங்களின் நீர் ஆதாரத்தை பெருக்குதல், மின்சாதனங்களின் திறன்களை கூட்டுதல் மற்றும் குழாய்களை மறுசீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**6.13.7.2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை**

i. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, ஒற்றை கிராம திட்டங்களை (Single Village

Schemes) வடிவமைத்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்களில், நீர் ஆதாரத்தை உருவாக்குதல், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல், உட்கட்டமைப்புகள் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ii. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல கிராம திட்டங்களில், கிராம உட்கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்கிறது.

### 6.13.8 ஜல் ஜீவன் இயக்கத்தின் இதர முக்கிய அம்சங்கள்

i. ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் அனைத்து பணிகளின் தரத்தினை உறுதி செய்ய மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு மேற்கொள்ளுதல்.

ii. குடிநீரின் அளவு, தரம், மற்றும் சீரான விநியோகம் ஆகியவற்றுக்கான செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.



iii. ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் (Integrated Management Information System – IMIS) மூலம் திட்ட செயலாக்கத்தினை கண்காணித்தல்.

iv. கள ஆய்வு உபகரணங்களின் (Field Test Kit – FTK) மூலம் நீரின் தரத்தினை ஆய்வு செய்தல்.

v. நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோகம் தொடர்பான தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC Activities) செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

### 6.13.9 சமூக பங்களிப்பு (Community Contribution)

மக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்க, கிராம ஊராட்சியில் உட்கட்டமைப்பு செலவினத்தில் மலை மற்றும் வனப்பகுதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் 5 சதவிகிதமும், இதர கிராம ஊராட்சிகளில் 10 சதவிகிதமும் பணம் / பொருள் / உடல் உழைப்பு ஆகியவை சமூக பங்களிப்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும்.

## 6.13.10 இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல் (Convergence of Funds)

மாவட்ட நீர் மற்றும் சுகாதார முகமையால் ஆண்டு செயல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட திட்ட பணிகள் 15–வது நிதிக் குழு மானியம் (CFC), 5–வது மாநில நிதிக் குழு மானியம் (SFC) மற்றும் இதர நிதிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

## 6.13.11 ஜல் ஜீவன் இயக்கத்தின் தற்போதைய நிலை

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள 126.89 இலட்சம் வீடுகளில், இதுவரை 52.99 இலட்சம் (41.76%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6.37 இலட்சம் வீடுகளுக்கு ஒற்றை கிராமத் திட்டப் பணிகள் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்க பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 67.53 இலட்சம் வீடுகளுக்கு மார்ச் 2024–க்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.13.12 ஜல் ஜீவன் இயக்கத்தில் 2021–22–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

**i. ஒற்றை கிராம திட்டங்கள் (Single Village Scheme – SVS)**



2021–22–ம் ஆண்டில் 14.93 இலட்சம் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**ii. பல கிராம திட்டங்கள் (Multi Village Scheme – MVS)**

ஜல் ஜீவன் இயக்கத்தில், தற்போது 9 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்/ பல கிராம திட்டங்கள், ஈரோடு, கரூர், தஞ்சாவூர், திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சேலம் ஆகிய 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2,375 ஊரகக் குடியிருப்புகளுக்கு தோராயமாக 1.28 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் ஜனவரி 2023 க்குள் முடித்து குடிநீர் இணைப்புகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.2,327.53 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை, திருநெல்வேலி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், 6 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இதன்

மூலம் ஊரக பகுதிகளிலுள்ள 0.92 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும்.

பராமரிப்பிலுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல், புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள்/ பல கிராம திட்டங்கள் மற்றும் ஒற்றை கிராமத்திட்டங்கள் மூலம் மீதமுள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் மார்ச் 2024–க்குள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.13.13. நிதி நிலை (2021–22 ஆம் நிதி ஆண்டு)

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | ஒன்றிய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 01.04.2021 அன்று கையிருப்புத்தொகை | 389.69 | 372.13 | 761.82 |
| 2. | நிதி வரவு | 630.70 | 826.30 | 1,457.00 |
| 3. | கையிருப்பிலுள்ள மொத்த தொகை | 1,020.39 | 1,198.43 | 2,218.82 |
| 4. | செலவிடப்பட்ட தொகை | 429.05 | 469.72 | 898.78 (தோராயமாக) |
| 5. | 31.03.2022 அன்று மீதமுள்ள தொகை | 591.34 | 728.71 | 1,320.04 |



## 7. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தனியார் துறை பங்களிப்புடன், ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1996–ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி (ICICI Bank), வீட்டுவசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் (HDFC) மற்றும் ஐ.எல்&எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் (IL&FS) ஆகிய நிறுவனங்கள் இதன் மற்ற பங்குதாரர்களாக உள்ளன. இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ.2.00 கோடி. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ரூ.1.00 கோடியில், தமிழக அரசின் பங்கு ரூ. 49.00 லட்சம் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனமானது, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மற்றும் இதர அரசு மானிய நிதிகளை நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம், நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரை அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து

வருகிறது. இதன் முதன்மை பணிகளில், திட்ட உருவாக்கம், திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும். இந்நிறுவனம், தொடங்கப்பட்டது முதல் ஆதாயம் ஈட்டி வருவதோடு, ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

**7.1 தமிழ்நாடு நகர்ப்புரவளர்ச்சி நிதியம் (TNUDF)**

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், தமிழ்நாடு அரசால் தனியார் துறை பங்களிப்புடன் 1996–ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு பொறுப்பாட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் மற்றும் ஐ.எல்&எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவை, பங்களிப்பு செய்துள்ள தனியார் துறை நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கம், இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளர்வதற்கும், அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத்



தரமான நகர்ப்புர சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக, நீடித்த நிதி இடையீட்டாளராக செயல்படுவது ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், "நகர்ப்புர உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பதை" குறிக்கோளாக கொண்டுள்ளது.

**7.1.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்**

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பது.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

இந்நிதியம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றை செயல்படுத்த நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம் (TNUITCL), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தை நிருவகித்து வருகிறது. இந்நிதியம், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ரூ.199.60 கோடியில், தமிழக அரசு ரூ.142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்.&எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ரூ.56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.



## 7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் மூன்று வெளி ஆதாரக்கடன்கள் நிருவகிக்கப்படுகின்றன. அவையாவன– ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II–பகுதி–2 (SMIF–TN–II–2) திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP) மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன் கூடிய தமிழ் நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP) (நிலை I மற்றும் நிலை II). மேற்குறிப்பிடப்பட்ட மூன்று வெளி ஆதாரக் கடன்களின் மொத்த நிதி ரூ.11,929.72 கோடியாகும். அவற்றின் விவரங்கள் அட்டவணை 7.1 – இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1**

(ரூ. கோடியில்)

| வ. எண் | கூறுகள் | தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் | நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு நிலை–II பகுதி2 | தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிலைI | நிலைII | |
| 1 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான | 1,225.92 | 417.36 | 304.78 | 487.01 | 2,435.07 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் | | | | | |
| 2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதனமானியம் | 1,225.92 | 396.94 | 646.73 | 834.10 | 3,103.69 |
| 3 | மாதிரி நகரங்களுக்கான மானியம் | 389.48 | 0 | 0 | 0 | 389.48 |
| 4 | தொழில்நுட்ப உதவி மானியம்/செயல் திறன்சார்ந்த ஊக்கத் தொகை | 344.80 | 22.39 | 148.02 | 120.89 | 636.10 |
| 5 | கூடுதல் நிர்வாக செலவு மற்றும் வரி | 0 | 0 | 36.33 | 40.32 | 76.65 |
| 6 | பங்கு பத்திரம், மற்ற மானியம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 644.88 | 40.70 | 1,934.47 | 2,668.68 | 5,288.73 |
| மொத்தம் | | 3,831.00 | 877.39 | 3,070.33 | 4,151.00 | 11,929.72 |

### 7.2.1 ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு எனும் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன்



செயல்படுத்தப்படுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துதல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம், இரண்டு நிலைகளைக் கொண்டது (நிலை 1 மற்றும் நிலை 2). இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளைக் (பகுதி-1 மற்றும் 2) கொண்டது. இத்திட்டத்தின் முதல் நிலை 2015-ஆம் ஆண்டு டிசம்பரிலும், இரண்டாவது நிலை – பகுதி 1 2021-ஆம் ஆண்டு டிசம்பரிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி-2) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ரூ.814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக வழங்கப்படும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ரூ.22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூலதனச்

சந்தையிலிருந்து நகராட்சிகளுக்கு கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக, குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ரூ.40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014 முதல் டிசம்பர் 2019 வரை ஆகும். இருப்பினும், துணைத் திட்டங்களின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு, இத்திட்டம் டிசம்பர் 2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II–பகுதி–2 திட்டத்தின் கீழ், ரூ.1,124.75 கோடி மதிப்பிலான 17 துணைதிட்டப் பணிகளுக்காக ரூ.816.77 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், ரூ.266.37 கோடி மதிப்பிலான 8 துணைதிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன மற்றும் மீதம் உள்ள 9 துணைதிட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II–பகுதி–2 திட்டத்தின் கீழ், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்கான திட்ட அறிக்கை, 11 பகுதிகளில், 52 பாடப்பிரிவுகள் மற்றும் 8



கருத்தரங்குகள் வாயிலாக செயல்படுத்த ரூ.12.98 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 5,200 அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு, நகர்ப்புர நிருவாகம், திட்ட உருவாக்கம், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்புடைய பயிற்சிகள் அளிக்கப்படும். இந்த பயிற்சி இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

### 7.2.2 உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பங்குபெறும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நகர்ப்புர சேவைகளை நீடித்த நிதி நிலையுடன் மேம்படுத்துதல் மற்றும் மேம்பட்ட நகர்ப்புர மேலாண்மை நடைமுறைகளை, தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் முன்னோடியாக செயல்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3,831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில்,

உலக வங்கியின் நிதியுதவி ரூ.2,554 கோடி (400 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.1,277 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும். இருப்பினும், துணைத் திட்டங்கள் மற்றும் ஆலோசனை பணிகளின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு, இத்திட்டம் மார்ச் 2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பினை ரூ.4,104.86 கோடிக்கு (609 மில்லியன் அமெரிக்க டாலர்) மறுசீரமைப்பதன் மூலம், திட்ட கூறுகளுக்குள் உள்ள நிதியில், கோவிட்–19 பராமரிப்புக்காக, ரூ.37.18 கோடியை (5 மில்லியன் அமெரிக்க டாலர்) மறு ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. இதில், உலக வங்கியின் நிதியுதவி ரூ.2,770.39 கோடியாக (400 மில்லியன் அமெரிக்க டாலர்) இருக்கும்.

இத்திட்டத்தின் கீழ், ரூ.3,620.88 கோடி மதிப்பிலான 31 துணைதிட்டங்களுக்கு ரூ.2,752.49 கோடி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில். ரூ.1,761.96 கோடி மதிப்பிலான 7 துணைதிட்டங்கள்



நிறைவு செய்யப்பட்டுள்ளன மற்றும் மீதம் உள்ள 24 துணைதிட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. மேலும், 2,000 எண்ணிக்கையிலான ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை கொள்முதல் செய்ய ரூ.21.07 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 7.2.3 ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ் நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP)

தமிழ் நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP), ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெருவழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் ஆகிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், நகர்ப்புர ஆளுகை, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, காலநிலை நெகிழ்ச்சி மற்றும் நகர்ப்புர வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் மூன்று நிலைகளை கொண்டதாகும் (நிலை-I, நிலை-II, நிலை-III). இந்த மூன்று நிலைகளுக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 502 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலைக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.3,070.33 கோடி (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,099.53 கோடி (171 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.1,970.80 கோடி (306.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2018 முதல் ஜூன் 2023 வரை ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலையின் கீழ், ரூ.2,794.68 கோடி மதிப்பிலான 9 துணைதிட்டப் பணிகளுக்காக, ரூ.951.51 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 8 துணைதிட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன மற்றும் ஒரு திட்டம் கொள்முதல் நிலையில் உள்ளது.

இத்திட்டத்தின், இரண்டாம் நிலைக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.4,151 கோடி (593 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு



வங்கியின் நிதியுதவி ரூ.1,442 கோடி (206 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.2,709 கோடி (387 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு டிசம்பர் 2019 முதல் டிசம்பர் 2025 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், ரூ.3,837.61 கோடி மதிப்பிலான 6 துணைதிட்டப் பணிகளுக்காக ரூ.1,321.11 கோடி நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அனைத்து துணைதிட்டங்களும் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன.

இத்திட்டத்தின் மூன்றாம் நிலைக்கான திட்ட மதிப்பீடு ஆசிய மேம்பாட்டு வங்கியால் (ADB) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.2.4 தயாரிப்பு நிலையில் உள்ள வெளி ஆதாரத் திட்டங்கள்

கீழ்காணும் வெளி ஆதாரத் திட்டங்கள் தயாரிப்பு நிலையில் உள்ளன.

i. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன், 750 மில்லியன் யூரோ (சுமார் ரூ.6,375 கோடி) திட்ட மதிப்பீட்டில்

செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–III திட்டம். இதில், ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 500 மில்லியன் யூரோ (சுமார் ரூ.4,250 கோடி) மற்றும் தமிழக அரசின் நிதியுதவி 250 மில்லியன் யூரோ (சுமார் ரூ. 2,125 கோடி) ஆகும்.

ii. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன், 22.22 மில்லியன் யூரோ (சுமார் ரூ.188.87 கோடி) திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான மானிய நிதியுதவி திட்டம். இதில், ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 20 மில்லியன் யூரோ (சுமார் ரூ.170 கோடி) மற்றும் தமிழக அரசின் நிதியுதவி 2.22 மில்லியன் யூரோ (சுமார் ரூ.18.87 கோடி) ஆகும்.

iii. உலக வங்கி நிதியுதவியுடன், 450 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.3,350.25 கோடி) திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் – கூடுதல் நிதியுதவி (TNSUDP–



AF) திட்டம். இதில், உலக வங்கியின் நிதியுதவி 300 மில்லியன் யூரோ (சுமார் ரூ.2,233.50 கோடி) மற்றும் தமிழக அரசின் நிதியுதவி 150 மில்லியன் யூரோ (சுமார் ரூ.1,116.75 கோடி) ஆகும்..

### 7.3 குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டவும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்
- கூட்டு நிதி அமைப்பின் கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்

- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்
- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய மற்றும் / அல்லது மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.

இது வரை ரூ.302.30 கோடி நிதி, வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தால் திரட்டப்பட்டுள்ளது. இதில், ரூ.222.30 கோடி முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

வேலூர் கூட்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த, 12 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் வழங்குவதற்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (HUDCO) ரூ.300 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவனம், அருப்புக்கோட்டை கூட்டு குடிநீர் திட்டத்திற்கு ரூ.355.21 கோடி, திண்டிவனம்



பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.174.20 கோடி, மற்றும் விழுப்புரம் பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.163.58 கோடி என மொத்தம் ரூ.692.99 கோடி கடன் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதில், அருப்புகோட்டை கூட்டு குடிநீர் திட்டத்திற்காக ரூ.35.08 கோடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (HUDCO) பெறப்பட்டுள்ளது.

### 7.4 சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM)

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்க அரசு, சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் என்ற திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்திற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவு–செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு

நிதி சேவைகள் நிறுவனம், இத்திட்டத்திற்கான மைய முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த 2011–12 முதல் 2015–16 வரை ரூ.2,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 2018–ல் மீண்டும் தொடங்கபட்டு, இதற்காக 2018–19 முதல் 2020–2021 வரையிலான ஆண்டுகளில் ரூ.1,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை, ரூ.9,054.38 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு, மூலதன மானியமாக ரூ.3,991.73 கோடியும், தொழில்நுட்ப மானியமாக ரூ.7.90 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.3,236.39 கோடி வழங்கப்பட்டுள்ளது.



**8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை**

ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதன் மூலம் நகர்ப்புரங்களில் உள்ள அனைவருக்கும் நிலையான மற்றும் ஆரோக்கியமான வாழும் சூழலை வழங்க அரசு உறுதிகொண்டுள்ளது, இதனை முன்னெடுத்துச் செல்ல அரசு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது.

மேலும், சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட ஆறுகள் மற்றும் நீர்நிலைகளான கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாயுடன் அதன் கிளைக் கால்வாய்கள், சிற்றோடைகள், முகத்துவாரங்கள் மற்றும் கழிமுகங்களின் சுற்றுச்சூழலை சீரமைக்க உரிய திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் ஆகிய முக்கியப் பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையிடம் அரசு ஒப்படைத்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இந்த இலக்குகளை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்றி தொடர்புடைய சார் துறைகள் மூலம் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

## 8.1 நிறைவுற்ற சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள்

### 8.1.1 தொல்காப்பியப் பூங்கா – அடையாறு சிற்றோடை சுற்றுச்சூழல் சீரமைப்பு (58 ஏக்கர்)

தமிழ்நாடு அரசின் நகர்ப்புர கடலோர ஈரநில பாதுகாப்பின் ஓர் முன்னோடித் திட்டமாக திரு.வி.க பாலத்திற்கு கிழக்கே அமைந்துள்ள 358 ஏக்கர் பரப்பிலான அடையாறு முகத்துவாரம் மற்றும் உப்பங்கழிப் பகுதியை சீரமைப்பதற்கு தமிழ்நாடு அரசு அக்டோபர் 2006ல், ரூ.100 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவார பகுதிகளில் மண்டிகிடந்த சீமைக்கருவேல மரங்கள், குப்பைகள், கட்டடக்கழிவுகள் மற்றும் கழிவுநீர் கலந்து காணப்பட்டதால், உப்பங்கழி மற்றும் முகத்துவாரச் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததன் விளைவாக நீர்ப்பரப்புப்பகுதி சுருங்கி, ஓதநீரின் தொடர்பு முற்றிலும் குறைந்து, இச்சூழலில் பல்லுயிர்ப்பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்தன.

முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அடையாறு உப்பங்கழியின் சீரமைப்பு பணிகள் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சீரமைப்பு பணிகள்



2011 ஆம் ஆண்டு முழுமையாக நிறைவு பெற்று தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடையாறு உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பின் முக்கிய பணிகளான ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்ப்பரப்பின் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. மண்சார் நிலத்தாவரங்களான உலர்வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளுக்குரிய தாவரங்கள், சதுப்பு நிலத்தாவரங்கள் மற்றும் கோரைப்புற்கள் நடப்பட்டுள்ளன மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புப்படுத்தும் வகையில் நில சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது தொல்காப்பியப் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பெற்றிடும் வகையில், சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, 1,181 பள்ளிகளைச் சேர்ந்த 98,611 மாணவர்கள் மற்றும் 4,744 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று பயனடைந்ததுடன், நகர்ப்புர

ஈரநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்புணர்வு நிதி (CSR) பெறப்பட்டு, தொல்காப்பியப் பூங்காவில் பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

தொல்காப்பியப் பூங்காவில் கடலோர முகத்துவார சுற்றுச்சூழல் சீரமைப்பின் முக்கியத்துவம் குறித்து, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர், இதுவரை, 18,788 நபர்கள் பார்வையிட்டுள்ளனர். தற்போது, முன்பதிவின் பேரில், பொதுமக்களை தொல்காப்பியப் பூங்காவிற்குள் நடைப்பயிற்சி மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக பரிசீலனையில் உள்ளது. அரசின் நகர்ப்புர ஈரநில சீரமைப்பு முயற்சியில் தொல்காப்பியப் பூங்கா ஒரு சிறந்த உதாரணமாக திகழ்ந்து வருகிறது.

தற்போது தொல்காப்பியப் பூங்காவில் 2011ல் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மறுமதிப்பீடு செய்ய வேண்டிய



அவசியம் உள்ளது. மேலும், தொல்காப்பியப் பூங்காவை நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் அமைப்பில் ஓர் வலுவான மையமாக மாற்ற தேவைப்படும் புதிய முயற்சிகளை மேற்கொள்ள, அடுத்த 10 ஆண்டுக்கான (2022 முதல் 2032 வரை) தொல்காப்பியப் பூங்காவின் (58 ஏக்கர்) மறுமேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

### 8.1.2 அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்)

அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்) இரண்டாம் கட்டப் பணிகளை அடையாறு உப்பங்கழி, முகத்துவாரம், சிறுதீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ள ரூ.24.93 கோடிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. இதன் முக்கிய கூறுகளாக சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, கரைகள் திடப்படுத்தப்பட்டு நெகிழி மற்றும் கட்டடக் கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதந்த மட்காத நெகிழி பொருட்கள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றி, ஆழப்படுத்தி ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்பு பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் பல்லுயிர் பெருக்கத்தை

அதிகரிக்கும் வகையில் சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும் உள்ளூர் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் (358 ஏக்கர்) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி மெல்லுடலிகள், நண்டுகள், தும்பிகள், பட்டாம் பூச்சிகள், மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்ற 424 வகையான விலங்குகள் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு இந்த எண்ணிக்கை 141 ஆக இருந்தது. சீரமைக்கப்பட்ட அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரம் நகர்ப்புர ஈரநில பல்லுயிர் பெருக்கத்தின் வாழ்விடமாக திகழ்கிறது.

## 8.2 மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள்

பெருநகரில் உள்ள ஆறுகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசினால் ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் மற்றும் அடையாறு நதி சீரமைப்புத் திட்டம் ஆகியவை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



இச்சீரமைப்பின் துணைத் திட்டங்களான தூர்வாருதல், சிறுகால்வாய் அமைத்தல் மற்றும் வெள்ளதடுப்புச்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் தொடர்புடைய சார்துறையான நீர்வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலிகள் அமைத்தல், பாலங்களை அழகுபடுத்துதல், மிதவை தடுப்பான் அமைத்தல், பூர்வீகத் தாவரங்கள் நடவு செய்தல் மற்றும் நதிக்கரையோர மேம்பாட்டுப் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால் அவர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழி குழாய்கள் அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 8.2.1 ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

பருத்திப்பட்டு அணையிலிருந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் கூவம் நதி முகத்துவாரம் வரையிலான 32 கிமீ தூரம் ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.735.08 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய கூறுகள்: கூவம் நதியில் கழிவுநீர் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், கூவம் நதிக்கரையில் வாழும் மக்களுக்கான மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான திட்டம், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்பு திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர், 2022–ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சீரமைப்பு பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை, ரூ.361.04 கோடி சார்துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



### 8.2.2 அடையாறு நதி சீரமைப்புத் திட்டம்

அடையாறு நதியின் தொடக்கம் ஆதனூர் ஏரி முதல் முகத்துவாரம் வரையிலான சுமார் 42 கிலோ மீட்டர் தூரத்திற்கான சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகள் தமிழ்நாடு அரசால் ரூ.555.46 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முக்கிய பணிகள்: கழிவுநீர் மேலாண்மை, திடக்கழிவு அகற்றுதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்பு பணிகள் தொடர்புடைய சார்துறைகளால் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சீரமைப்பு பணிகள் மே 2023–ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சீரமைப்பு பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை சார்துறைகளுக்கு ரூ.141.18 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 8.3 மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்

### 8.3.1 பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளை கால்வாய்கள் சீரமைப்பு

சென்னை பெருநகரில் உள்ள நீர்வழித்தடங்களை முழுமையாக சீரமைப்பதற்காக, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் பிரதான கிளைக் கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளைக் கால்வாய்கள் சீரமைப்பு திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.1,281.88 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. தொடர்புடைய சார் துறைகளால் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.3.2 எண்ணூர் கழிமுகப் பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்பு

எண்ணூர் கழிமுகப் பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்புக்காக ரூ.189.38 கோடி நிருவாக அனுமதியினை அரசு வழங்கியது. பின்னர், நீர்வளத்துறை சொந்த நிதி ஆதாரத்தில் நிலையான முகத்துவார சீரமைப்பு (தூண்டில் வளைவு அமைத்தல்) பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. எனவே, தாவரங்கள் நடவு செய்யும் பணிகள் ரூ.45.99 கோடி



மறுமதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளன.

## 8.4 விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

### 8.4.1 கோயம்புத்தூர் செம்மொழிப் பூங்கா அமைப்பதற்கான பெருந்திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவில் செம்மொழிப் பூங்கா – 'உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா' கோயம்புத்தூரில் அமைக்கப்படும் என்றும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை, கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளை கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில் செம்மொழிப் பூங்கா அமைப்பதற்கான பெருந்திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு திட்ட ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இதன் இறுதி திட்ட அறிக்கை ஜூலை, 2022–ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.4.2 கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் (முதற் கட்டம்) மற்றும் பக்கிங்காம் கால்வாய் (இரண்டாம் கட்டம்) விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்**

பெருநகரில் உள்ள நீர்வழிப்பாதைகளின் நீரின் தரத்தை குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் மேம்படுத்துவதற்கான முழுமையான அணுகுமுறையை உறுதி செய்வதற்கு, முதற்கட்டமாக, கூவம் மற்றும் அடையாறு ஆறுகளுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கும், இரண்டாம் கட்டமாக, பக்கிங்காம் கால்வாய்க்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, இச்சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசகராக, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தினை (TWIC Ltd.) நியமித்துள்ளது. இதில் இடைவெளி மதிப்பீடு, பொருத்தமான தொழில்நுட்ப தீர்வு, நிதி பகுப்பாய்வு போன்றவை அடங்கும். இதன் இறுதி அறிக்கை **ஆகஸ்ட்**, 2022–ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**8.4.3 பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு (சென்னை மாநகரம் தவிர) நீர் வழங்கலுக்கான கூடுதல் ஆதாரமாக சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள சாத்தியமுள்ள நீர்நிலைகளைக் கண்டறிந்து சீரமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்**

சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள 75 மில்லியன் கன அடிக்கும் குறையாத கொள்ளளவு கொண்ட சாத்தியமுள்ள நீர்நிலைகளை கண்டறிந்து அவற்றை சீரமைத்து, சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு (சென்னை தவிர) நீர் வழங்கலுக்கான கூடுதல் நீர் ஆதாரமாக உருவாக்குவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.

## 9. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

இந்தியாவின் நகர்ப்புர மக்கள்தொகையின் பத்தாண்டு வளர்ச்சி விகிதம், அந்தந்த நகரங்களில் அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு உட்கட்டமைப்புகளுக்கான, வேகமாக வளர்ந்து வரும் தேவையை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, அதன் மூலம், நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை (TUFIDCO) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தமிழக அரசால் 20.03.1990 அன்று நிறுவியதன் வாயிலாக இப்பிரச்சனையைத் தீர்வு செய்வதில் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

டுபிட்கோவின் தொலைநோக்கு பார்வை என்பது "நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கான முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்புகளை நிறைவான அளவிற்கு உருவாக்குவது" ஆகும்.



### 9.1 டுபிட்கோவின் நோக்கங்கள்

- அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுத் துறை நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளிப்பது.
- உள்ளாட்சி அமைப்புகளுடனோ அல்லது அரசுத் துறைகளுடனோ கூட்டாக பல்வேறு உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்வது
- அடிப்படை சேவைகளுடன் கூடிய சொத்துக்களை உருவாக்குவது, வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்காகவும் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காகவும் நிதி உதவி அளித்தல்

### 9.2 திட்ட இயக்குநரகம் / திட்ட முகமை

டுபிட்கோ நிறுவனம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கீழ்காணும் திட்டங்களுக்கு திட்ட இயக்குநரகமாகவும் / திட்ட முகமையுமாகவும் செயல்படுகிறது:

1. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns- Revolving Fund – சுழற்சி நிதி
2. சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission)
3. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation)
4. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0)
5. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்
6. சிங்காரச் சென்னை 2.0

**9.3 நிதி மேலாளர்**

டுபிட்கோ நிறுவனம் கீழ்காணும் திட்ட நிதிகளை கையாளும் முகமையாக விளங்குகிறது:

1. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (Metropolitan Infrastructure Development Fund)
2. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் I & II (Integrated Urban Development Mission I & II)
3. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (TUFIDCO Infrastructure Funding Scheme)
4. சிறப்புச் சாலைகள் திட்டம் (Special Roads Programme)
5. மூலதன மானிய நிதி (Capital Grant Fund) மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF) ஆகியவற்றிற்கு நிதிமேலாளராக உள்ளது.

**9.4 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)**

ஒன்றிய அரசு, அதன் முதன்மைத் திட்டமான அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தை (AMRUT) ஜூன் 2015இல் தொடங்கியது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது, (அ) ஒவ்வொரு வீட்டிற்கும் தடையற்ற குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு, (ஆ) பசுமை மற்றும் நன்றாக பராமரிக்கப்பட்ட திறந்தவெளிகளை (எடுத்து காட்டாக. பூங்காக்கள்) மேம்படுத்துவதன் மூலம் நகரங்களின் மதிப்பை ஏற்றமுற செய்தல்; மற்றும் (இ) பொதுப் போக்குவரத்திற்கு மாறுவதன் மூலம் மாசுபாட்டை குறைத்தல் அல்லது மோட்டார் சாராத போக்குவரத்திற்கான வசதிகளை அமைப்பது (எ.கா. நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதல்)

ஆகியவற்றை அடைவதாகும். இத்திட்டச் செயலாக்க காலம் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆகும்.

தமிழ்நாட்டில், 28 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அதாவது, 15 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆகியவற்றில் அம்ரூத் திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சி | வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சி |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 15 | ஆவடி மாநகராட்சி |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 16 | பல்லவபுரம் நகராட்சி |
| 3 | மதுரை மாநகராட்சி | 17 | தாம்பரம் பெருநகராட்சி |
| 4 | திருச்சி மாநகராட்சி | 18 | கடலூர் மாநகராட்சி |
| 5 | சேலம் மாநகராட்சி | 19 | காஞ்சிபுரம் நகராட்சி |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 20 | திருவண்ணாமலை நகராட்சி |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 21 | கும்பகோணம் நகராட்சி |
| 8 | தூத்துக்குடி மாநகராட்சி | 22 | இராஜபாளையம் நகராட்சி |
| 9 | தஞ்சாவூர் மாநகராட்சி | 23 | புதுக்கோட்டை நகராட்சி |
| 10 | ஈரோடு மாநகராட்சி | 24 | ஆம்பூர் நகராட்சி |
| 11 | வேலூர் மாநகராட்சி | 25 | காரைக்குடி நகராட்சி |
| 12 | திண்டுக்கல் மாநகராட்சி | 26 | நாகப்பட்டினம் நகராட்சி |
| 13 | நாகர்கோவில் மாநகராட்சி | 27 | இராமேஸ்வரம் நகராட்சி |
| 14 | ஓசூர் மாநகராட்சி | 28 | வேளாங்கன்னி பேரூராட்சி |



**நிதிக்கூறு**

'அம்ரூத்' திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பல்வேறு திட்டங்களுக்கான, ஒன்றிய அரசு / மாநில அரசு / நகர்ப்புர உள்ளாட்சி நிதி பங்களிப்பு சதவீத விவரங்கள் பின்வரும் அட்டவணையில் 9.1 உள்ளது.

**அட்டவணை 9.1**

| வ எண் | மக்கள் தொகை | ஒன்றிய அரசின் பங்கு – மானியம் | மாநில அரசின் பங்கு – மானியம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 33.33 % | 20 % | 46.67 % |
| 2 | 10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 50 % | 20 % | 30 % |
| 3 | பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்) | 50 % | 20 % | 30 % |

### 9.4.1 'அம்ரூத்' திட்டங்களின் விவரம்

ஒன்றிய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (I, II, III)

அடிப்படையில், 'அம்ருத்' திட்டங்கள் 28 பெருநகரங்கள்/நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தம் ரூ.11,441.41 கோடி மதிப்பீட்டிலான 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே அட்டவணை 9.2ல் உள்ளது. இந்தியாவிலேயே அதிக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

**அட்டவணை 9.2**

**(ரூ.கோடியில்)**

| மாநில ஆண்டு செயல்திட்டம் | ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|---|
| மாநில ஆண்டு செயல்திட்டம் I | 111 | 3,245.51 | 1,355.29 | 649.10 | 1,241.10 |
| மாநில ஆண்டு செயல்திட்டம் II | 171 | 3,700.45 | 1,531.47 | 740.09 | 1,428.90 |
| மாநில ஆண்டு செயல்திட்டம் III | 163 | 4,495.46 | 1,854.39 | 899.08 | 1,742.00 |
| **மொத்தம்** | **445** | **11,441.42** | **4,741.15** | **2,288.27** | **4,412.00** |

ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.2,335.77 கோடி மதிப்பிலான 422 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, ரூ.9,105.64 கோடி மதிப்பிலான 23 திட்டங்கள்



செயலாக்கத்தில் உள்ளன. அதன் விவரங்கள் அட்டவணை 9.3ல் உள்ளன.

**அட்டவணை 9.3**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | ஒப்பந்தப்படி நிறைவுபெற வேண்டிய நாள் | எதிர்பார்க்கப்படும் நிறைவுநாள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை- நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் – நெம்மேலி | 954.00 | டிசம்பர்–21 | ஏப்ரல்–23 |
| 2 | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – கடல் நீரை குடிநீராக்கும் திட்ட குழாய்கள் அமைக்கும் பணிகள் | 125.89 | மார்ச் 22 | ஜூலை 22 |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி – பில்லூர் II குடிநீர் வழங்கல் திட்டம் | 649.30 | ஆகஸ்ட்–22 | ஆகஸ்ட்–23 |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி – குடிநீர் வழங்கல் திட்டம் 24x7 | 506.04 | ஆகஸ்ட் –23 | மார்ச்–23 |
| 5 | மதுரை மாநகராட்சி – லோயர் கேம்ப் முல்லை பெரியார் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல் தனித் திட்டம். | 1,020.00 | மே–23 | மார்ச்–23 |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் – கட்டம் –II | 381.86 | டிசம்பர்–21 | மார்ச்–23 |
| 7 | சென்னையில் மணலி– , சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் | 223.00 | டிசம்பர் –21 | டிசம்பர் –22 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | ஒப்பந்தப்படி நிறைவுபெற வேண்டிய நாள் | எதிர்பார்க்கப்படும் நிறைவு நாள் |
|---|---|---|---|---|
| | மணப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் | | | |
| 8 | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 576.76 | பிப்ரவரி–22 | டிசம்பர்–22 |
| 9 | திருப்பூர் – குடிநீர் வழங்கல் | 992.94 | செப்டம்பர்–22 | செப்டம்பர்–22 |
| 10 | இராமேஸ்வரம் பாதாளச் சாக்கடை திட்டம் | 40.33 | ஆகஸ்ட்–21 | மார்ச்–23 |
| 11 | திருச்சிராப்பள்ளி – பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் II | 264.12 | ஏப்ரல்–23 | ஏப்ரல்–23 |
| 12 | திருச்சிராப்பள்ளி – பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் II | 344.00 | ஜனவரி–22 | ஜூன்–22 |
| 13 | வேலூர் – பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் – II | 343.69 | ஜனவரி–22 | ஆகஸ்ட்–22 |
| 14 | வேலூர் – பாதாளச் சாக்கடை திட்டம் கட்டம் – III | 248.26 | மார்ச்–22 | செப்டம்பர்–22 |
| 15 | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் – வளசரவாக்கம் குடிநீர் திட்டம் | 67.74 | நவம்பர்–20 | ஜூன்–23 |
| 16 | ஆம்பூர்– பாதாளச் சாக்கடை திட்டம் | 129.07 | அக்டோபர் –21 | கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு – |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | ஒப்பந்தப்படி நிறைவுபெற வேண்டிய நாள் | எதிர்பார்க்கப்படும் நிறைவு நாள் |
|---|---|---|---|---|
| | | | | 2021 அக்டோபர் கழிவுநீர் சுத்திகரிப்பு மார்ச்–நிலையம் 2023 |
| 17 | திருப்பூர் – பாதாளச் சாக்கடை திட்டம் | 525.92 | ஜூலை–22 | ஜூலை–22 |
| 18 | திருநெல்வேலி பாதாளச் சாக்கடை திட்டம் – கட்டம் – II | 289.01 | ஜூலை –21 | ஜூலை–22 |
| 19 | கோயம்புத்தூர் பாதாளச் சாக்கடை திட்டம் | 442.00 | அக்டோபர்–21 | மார்ச்–23 |
| 20 | சென்னை உத்தண்டி – ஜல்லடம்பேட்டை, மாத்தூர், மடிப்பாக்கம் மற்றும் நீலாங்கரை ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம் | 184.11 | ஜனவரி–21 | ஜூன்–22 |
| 21 | இராஜபாளையம் – பாதாளச் சாக்கடை திட்டம் | 178.75 | மார்ச்–22 | மே–22 |
| 22 | நாகர்கோவில் – குடிநீர் வழங்கல் | 223.44 | மே–21 | மே–22 |
| 23 | கோயம்புத்தூர் மாநகராட்சி – 8 இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான குடிநீர் விநியோக அமைப்பு மேம்பாட்டு திட்டம் | 395.41 | பிப்ரவரி–21 | ஏப்ரல்–22 |

## 9.5 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0

அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 ஒன்றிய அரசால் 01.10.2021 அன்று தொடங்கப்பட்டது. அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் உள்ளிட்ட, நாட்டிலுள்ள அனைத்து நகரங்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் பயன் பெறும்.

அம்ரூத் 2.0ன் முக்கிய நோக்கமானது, 100 சதவீதம், நகரப்பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது மற்றும் அனைத்து வீடுகளுக்கும் செயல்படக்கூடிய வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதாகும். இந்நோக்கமானது, நீர் ஆதார பாதுகாப்பு, நீர்நிலைகள் மற்றும் கிணறுகளை புனரமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரை மறுசுழற்சி / மறுபயன்பாடு செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு போன்றவற்றின் வாயிலாக பொதுமக்களின் பங்களிப்போடு எய்தப்படும். இத்திட்டம் மக்கள் திட்டமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 500 அம்ரூத் நகரங்களில் 100% கழிவுநீர் / கசடுநீர்



மேலாண்மை சேவையை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அம்ரூத் 2.0ன் முக்கிய கூறுகள் (அ) அனைவருக்கும் குடிநீர் வழங்கல், (ஆ) கழிவுநீர், கசடுநீர் மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு மற்றும் நீர்நிலைகளை புனரமைத்தல் (நகர்ப்புர ஈரநிலம் உள்பட) மற்றும் பசுமை வெளிகளை உருவாக்குதல்.

### 9.5.1 திட்ட நிதி ஒதுக்கீடு

ஒன்றிய அரசினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிதி பங்கீட்டு விவரம் கீழே அட்டவணை 9.4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.4**

| வ எண் | மக்கள் தொகை | ஒன்றிய அரசின் பங்கு – மானியம் |
|---|---|---|
| 1 | 1 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | 50 % |
| 2 | 1 இலட்சத்திற்கும் மேல் 10 இலட்சத்திற்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் | மூன்றில் ஒரு பங்கு |
| 3 | 10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் ( திட்ட ஒதுக்கீட்டில் 10 சதவிகித அளவிலான திட்டங்கள் பொது தனியார் பங்களிப்புடன் இருக்க வேண்டும்) | 25 % |

அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு ரூ.4,935 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை மூன்று கட்டங்களாக ஒன்றிய அரசிற்கு அளிக்கப்படவேண்டும்.

அம்ருத் திட்ட வழிகாட்டி நெறிமுறையில் குறிப்பிடபட்டுள்ளவாறு, நகர நீர் இருப்பு திட்டங்களின் விவரங்கள் ஒன்றிய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளன. அதேபோல், நகர நீர் செயல் திட்டம் மற்றும் மாநில நீர் செயல் திட்டங்களின் விவரங்களும் ஒன்றிய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக (2021-22 நிதியாண்டு), ரூ.7,041.04 கோடி மதிப்பிலான கீழ்காணும் 570 திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணை 9.5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.5** **(ரூ.கோடியில்)**

| வ எண் | திட்டங்கள் | எண்ணிக்கை | தோராய மதிப்பீடு | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்கல் (பொது – தனியார் பங்களிப்பு–2 திட்டங்கள்) | 160 | 4,907.77* | 1,435.13 | 885.19 | 630.31 |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் (தனியார் பங்களிப்பு–1 திட்டம்) | 8 | 1,987.21** | 485.50 | 533.16 | 758.54 |
| 3 | நீர்நிலைகள் மேம்பாடு | 187 | 113.23 | 51.57 | 33.97 | 27.69 |
| 4 | பசுமை வெளி மேம்பாடு | 215 | 32.83 | 16.42 | 9.85 | 6.57 |
| | மொத்தம் | **570** | **7,041.04** | **1,988.62** | **1,462.17** | **1,423.11** |

**தோராய திட்ட மதிப்பீடானது சென்னை குடிநீர் வாரியத்தால் தனியார் பங்களிப்புடன் எடுத்துக்கொள்ளப்பட்ட 2 திட்டங்களை உள்ளடிக்கியதாகும். இது நிதிபங்கீட்டில் சேர்க்கப்படவில்லை.*

*** இதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின், தனியார் பங்களிப்புடன்கூடிய ஒரு திட்டமும் அடங்கும்,இது நிதிப் பங்கீட்டில் சேர்க்கப்படவில்லை*

## 9.6 சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission)

சீர்மிகு நகரத்திட்டத்தின் நோக்கமானது, முக்கிய உட்கட்டமைப்பை வழங்கும், நிலையான மற்றும் உள்ளடக்கிய நகரங்கள், குடிமக்களுக்கு தரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்துதல், சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவது மற்றும் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்துவது ஆகும்.

தமிழ்நாட்டின் 11 நகரங்கள், அதாவது சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி,

திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகியவை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 11 நகரங்களிலும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒன்றிய மற்றும் மாநில நிதிபங்களிப்பாக தலா ரூ.500 கோடி (ஒவ்வொரு நகரத்திற்கும் மொத்தம் ரூ.1,000 கோடி) நிதியின் கீழ், சீர்மிகு நகர திட்டப் பணிகள், திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயலாக்கப்படுகின்றன.

மொத்தம் ரூ.10,804.55 கோடி மதிப்பிலான 680 திட்டங்கள் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 680 திட்டங்களில், ரூ.2,697 கோடி மதிப்பிலான 304 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, ரூ.8,107.55 கோடி மதிப்பிலான 376 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. அவற்றின் விவரம் அட்டவணை 9.6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.6** **(ரூ கோடியில்)**

| வ. எண் | சீர்மிகு நகரம் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | | |
| 1 | சென்னை | 48 | 1,096.95 |
| 2 | கோயம்புத்தூர் | 56 | 979.34 |
| 3 | மதுரை | 16 | 979.16 |
| 4 | தஞ்சாவூர் | 103 | 974.58 |
| 5 | சேலம் | 86 | 968.67 |
| 6 | வேலூர் | 52 | 963.40 |
| 7 | திருப்பூர் | 28 | 985.39 |
| 8 | திருநெல்வேலி | 84 | 965.00 |
| 9 | தூத்துக்குடி | 70 | 965.05 |
| 10 | திருச்சி | 83 | 962.17 |
| 11 | ஈரோடு | 54 | 964.84 |
| | மொத்தம் | **680** | **10,804.55** |



சீர்மிகு நகரங்கள் திட்டம், 30.06.2023 அன்றுடன் நிறைவு பெறவுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

## 9.7 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம்

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு "கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தினை (KNMT)" 2021ல் தமிழக அரசு தொடங்கியது. 2021-22 நிதியாண்டில் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

100% வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள், சுகாதாரம், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், மயானங்ளை நவீனமயமாக்கல் மற்றும் பிற சமூக உட்கட்டமைப்புகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இத்திட்டம் பின்தங்கிய பகுதிகள், குடிசைப்பகுதிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள் ஆகியவற்றில் உள்ள உட்கட்டமைப்பு

இடைவெளிகளை நிரப்பும் நோக்கம் கொண்டது. மாணவர்கள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு உதவும் வகையில், கணினிகள் மற்றும் அறிவுசார் மையங்களுடன் கூடிய நவீன நூலகங்களையும் இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

கலைஞர் நகர்புர மேம்பட்டு திட்டமானது, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் மேம்பாடு, நிழற்குடைகள் மற்றும் சந்தைகளின் கட்டுமானம், நீர்நிலைகளை புனரமைத்தல், திடக்கழிவுகளை அகற்றுவதற்கான மின்–வாகனங்கள் வாங்குதல் மற்றும் பொது கழிப்பறைகள் கட்டுதல் போன்ற எண்ணற்ற நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.975.84 கோடிக்கு மதிப்பிலான 1,293 திட்டங்களுக்கு (கலைஞர் நகர்புர மேம்பட்டு திட்டத்தின் பங்கு ரூ.917.91 கோடி) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் அட்டவணை 9.7ல் உள்ளன.



**அட்டவணை 9.7**

(ரூ. கோடியில்)

| வ எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு | கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் பங்கு 2021–22 | உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு/ டுபிட்கோ மூலம் கடன்உதவி |
|---|---|---|---|---|---|
| 1 | சாலைகள் | 1,018 | 471.15 | 471.15 | - |
| 2 | உலோகத்திலான விபத்து தடுப்பு | 33 | 5.06 | 5.06 | - |
| 3 | பூங்காக்கள் | 58 | 31.04 | 31.05 | - |
| 4 | மயானங்கள் | 44 | 65.17 | 65.17 | - |
| 5 | அறிவுசார் மையங்கள் | 36 | 62.78 | 62.78 | - |
| 6 | பேருந்து நிலையங்கள் | 10 | 44.70 | 35.68 | 9.02 |
| 7 | சந்தைகள் | 40 | 173.38 | 129.43 | 43.94 |
| 8 | சமுதாயகூடங்கள் | 1 | 2.80 | 1.96 | 0.84 |
| 9 | நீர்நிலைகள் | 51 | 70.63 | 70.63 | - |
| 10 | மின்சார வாகனம் | 1 | 42.00 | 38.43 | 3.57 |
| 11 | இலகுரக வாகனம் | 1 | 7.13 | 6.57 | 0.56 |
| | **மொத்தம்** | **1,293** | **975.84** | **917.91** | **57.93** |

அனைத்து திட்டங்களும் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

மேலும், இத்திட்டத்திற்கு 2022–23ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 9.8 சிங்காரச் சென்னை 2.0

சென்னை நகரத்தை சிறப்பாக வாழ்வதற்குறிய மற்றும் துடிப்பான நகரமாக மாற்றும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு 2021 ஆம் ஆண்டில் "சிங்கார சென்னை 2.0" என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி, இத்திட்டத்திற்காக 2021–22 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.500 கோடியை ஒதுக்கியது. இத் திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

சிங்கார சென்னை 2.0 இன்கீழ், 2021–22ஆம் ஆண்டில் ரூ.395,32 கோடி மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகள், விளையாட்டு மைதானம், தெரு பெயர் பலகைகள், நவீன தகன மேடைகள், மழை நீர் வடிகால், பள்ளி கட்டிடங்களின் கட்டுமானம் / புதுப்பித்தல், தெருக்களை அலங்கரித்தல் போன்ற பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் அட்டவணை 9.8ல் உள்ளன.



**அட்டவணை 9.8** (ரூ. கோடியில்)

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு | சிங்கார சென்னை 2.0 பங்கு 2021–22 |
|---|---|---|---|---|
| | **பெருநகர சென்னை மாநகராட்சி** | | | |
| 1 | செயற்கை நீரூற்று | 26 | 1.29 | 1.29 |
| 2 | பூங்கா | 28 | 24.43 | 24.43 |
| 3 | விளையாட்டு மைதான மேம்பாடு | 18 | 12.57 | 12.57 |
| 4 | நிறம்மாறும் திறனுடைய வண்ண மின்விளக்குகளால் அலங்கரித்தல் | 1 | 1.81 | 1.81 |
| 5 | தார்சாலைகள் | 59 | 37.57 | 37.57 |
| 6 | தகன மேடைகள் | 10 | 6.14 | 6.14 |
| 7 | தெரு பெயர்பலகை | 1 | 8.42 | 8.42 |
| 8 | மழைநீர் வடிகால் | 1 | 184.67 | 184.67 |
| 9 | பள்ளிக்கூடங்கள் | 24 | 50.67 | 50.67 |
| 10 | நீர்நிலைகள் | 12 | 9.08 | 9.08 |
| 11 | மாற்றுதிறனாளிகளுக்கான வசதிகள் | 1 | 1.14 | 1.14 |
| 12 | விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையம் | 2 | 0.81 | 0.81 |
| | **மொத்தம்** | **180** | **338.60** | **338.60** |
| | **சென்னை குடிநீர் வாரியம்** | | | |
| 1 | நீலாங்கரை குடிநீர் திட்டம் | 1 | 66.67 | 45.68 |
| 2 | அண்ணா மெயின் ரோடு – நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் – பாதாளச் சாக்கடை பணிகள் | 1 | 31.54 | 11.04 |
| | **மொத்தம்** | **2** | **98.21** | **56.72** |
| | | | | |
| | **மொத்தம் – பெருநகர சென்னை மாநகராட்சி+ சென்னை குடிநீர் வாரியம்** | **182** | **436.81** | **395.32** |

அனைத்து பணிகளும் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 9.9 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – சுழற்சி நிதி (UIDSSMT – Revolving Fund)

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறையின்படி, டுபிட்கோ சுழற்சி நிதியை உருவாக்கியுள்ளது. இந்நிதியின் கீழ், 99 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வீடுகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை இணைப்பு அளித்தல் போன்ற பணிகளுக்கு வட்டியில்லா கடன் அளிக்கப்பட்டுள்ளது. விவரங்கள் அட்டவணை 9.9ல் உள்ளன.

**அட்டவணை 9.9** (ரூ. கோடியில்)

| வ எண் | பகுதி | நகராட்சிகள் / மாநகராட்சிகளின் எண்ணிக்கை | சுழற்சி நிதியின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்கல் | 73 | 169.58 |
| 2 | பாதாளச்சாக்கடை திட்டம் | 26 | 193.22 |
| | மொத்தம் | 99 | 362.80 |



இத்திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

## 9.10 பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF)

பெருநகர திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சென்னை பெருநகரப் பகுதியிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீடித்து நிலைக்கத்தக்க திட்டங்களுக்கு நிதி உதவியை வழங்குவதற்காக சுழற்சி நிதி ஒன்று, அதாவது பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும், மிக குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.4342.65 கோடி மதிப்பீட்டில், 34 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன, இதில், பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் பங்களிப்பு தொகை ரூ.1156.47 கோடியாகும்.

29 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன மற்றும் மீதமுள்ள 5 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

## 9.11 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM) கட்டம் 1 (2011–2016)

ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் கடந்த 5 ஆண்டு காலத்தில் அதாவது 2011–12 முதல் 2015–16 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேருராட்சிகளில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கழிவுநீர் அகற்றல், மழைநீர் வடிகால், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல், பூங்காக்கள் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மொத்தம் ரூ.10,773.22 கோடி (முழு நிதி / பகுதி நிதி) மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 13,257 திட்டங்களில், 13,220 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன மற்றும் 37 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### கட்டம் 2 (2018–19 நிதியாண்டு முதல்)

2018–19 ஆண்டில் ஆண்டொன்றுக்கு ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–2 தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–2ன் கீழ், மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி



அமைப்புகளில் (சென்னை நீங்கலாக) 2018–19, 2019–20 மற்றும் 2020–21 ஆண்டுகளில் கீழ்காணும் அடிப்படை கட்டமைப்பு வசதி திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. விவரங்கள் அட்டவணை 9.10ல் உள்ளன.

**அட்டவணை 9.10** **(ரூ.கோடியில்)**

| வ எண் | திட்டப்பணிகள் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் பங்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 1 | சாலை | 1500 | 1215.19 | 292.77 | 409.26 | 285.76 | |
| 2 | கழிவுநீர் | 769 | 263.70 | 94.51 | 51.13 | 86.42 | |
| 3 | குடிநீர் | 89 | 2650.66 | 225.45 | 335.53 | 80.96 | 67.62 |
| 4 | பாதாளச்சாக்கடை | 67 | 703.97 | 121.87 | 94.68 | 238.24 | |
| 5 | பூங்கா | 3 | 9.50 | - | 8.53 | - | |
| 6 | சந்தை | 2 | 8.40 | - | 1.12 | 4.20 | |
| 7 | சிறுபாலங்கள் | 3 | 20.15 | - | 4.04 | 12.08 | |
| 8 | பேருந்து நிலையம் | 4 | 12.84 | - | - | 10.27 | |
| 9 | தெருவிளக்குகள் | 12 | 3.81 | - | - | 3.04 | |
| 10 | கழிவுநீரகற்றல் | 11 | 31.17 | 11.00 | 20.17 | - | |
| 11 | திடக்கழிவு மேலாண்மை | 1 | 8.57 | - | 7.71 | - | |
| 12 | மற்றவை | 10 | 9.80 | 4.40 | 5.12 | - | |
| | **மொத்தம்** | **2471** | **4937.76** | **750.00** | **937.28** | **720.97** | **67.62** |

மொத்தம் 1495 திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன மற்றும் மீதமுள்ள 976 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

### 9.12 டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (TIFS)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும். கடனை திரும்ப செலுத்துவதற்கான அதிக பட்ச காலம் 10 வருடங்கள் ஆகும்.

### 9.13 சிறப்பு சாலைகள் திட்டம் (SRP)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில், வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து டுபிட்கோ மூலம் கடனாக திரட்டப்பட்ட நிதியின் கீழ் ரூ.1,000 கோடி மதிப்பில் அவசரமாக சீரமைக்கப்பட வேண்டிய சாலைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக



இயக்குனரகம், பேரூராட்சிகளின் ஆணையரகம் ஆகியவை, 2020-2021 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகளை மேற்கொள்ள பின்வருமாறு முன்மொழிந்துள்ளன. திட்டங்களின் விவரம் அட்டவணை 9.11ல் உள்ளன.

**அட்டவணை 9.11** **(ரூ.கோடியில்)**

| வ எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | எண்ணிக்கை | நீளம் (கிமீல்) | தோராய மதிப்பீடு | ஒப்பளிக்கப் பட்டவை-கடன் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின்பங்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 256.01 | 150.11 | 150.00 | 0.11 |
| 2. | நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | 102 | 1349.05 | 804.19 | 700 | 104.19 |
| 3. | பேரூராட்சிகளின் ஆணையரகம் | 183 | 302.28 | 150.00 | 150.00 | 0 |
| | **மொத்தம்** | 286 | 1,907.34 | 1,104.30 | 1,000.00 | 104.30 |

அனைத்து பணிகளும் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

### 9.14 அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

தமிழக அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மூலதன

மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் (O&MGFF) நிதி ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. இந்நிதிகளுக்கு நிதி மேலாளராக டுபிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

2020-21 நிதியாண்டில் மூலதன மானிய நிதி, மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், முறையே ரூ.141.49 கோடியும் மற்றும் ரூ.44.09 கோடியும் (மொத்தம் ரூ.185.58 கோடி) விடுவிக்கப்பட்டது.



**10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்**

1990களின் பிற்பகுதியில், திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் இருந்த ஜவுளி தொடர்பான வணிகங்கள் மிகப்பெரும் வளர்ச்சியை கண்டு, அதன் மூலம் அரசுக்கு மிகப்பெரிய அளவில் அந்நிய செலவாணியை ஈட்டித் தந்தது. எனினும், திருப்பூர், போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத நகரமாகவே இருந்தது. தமிழக அரசு, அப்போதைய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் (TACID) மூலமாக, திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தை (TADP) உருவாக்க பணித்தது. அதன்படி, பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டம், திருப்பூர் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களுக்கான நீர் வழங்கல் திட்டம் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு பாதாள சாக்கடை திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த, திருப்பூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் உருவாக்கியது. இதன் பொருட்டு, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) மற்றும் உட்கட்டமைப்பு, குத்தகை மற்றும் நிதி

சேவை நிறுவனம் (ILFS) ஆகியவற்றிற்கிடையே 25.8.1994 அன்று ஏற்படுத்தப்பட்டு, சம பங்கு மூலதன ஏற்பாடு மற்றும் இதர பொது உடன்படிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. இறுதியாக, 1995ல் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் (NTADCL), 4 TEA உறுப்பினர்களையும், 2 ILFS உறுப்பினர்களையும் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பாக ஒரு உறுப்பினரையும் கொண்டு தொடங்கப்பட்டது.

ஒரு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நாளொன்றுக்கு 185 MLD நீர் வழங்கல், (250 MLD வரை உயர்த்தத் தக்க) மற்றும் 15 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (30 MLD வரை உயர்த்தத் தக்க) ரூ.1,023 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, ஒரு சலுகை ஒப்பந்தமானது, தமிழ்நாடு அரசு, திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் ஆகியவற்றிற்கிடையே 11.2.2000 அன்று கையெழுத்தானது. இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட திட்டமதிப்பீடு ரூ.1,023 கோடி, பொது கடனாக 19 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலமாக IDBI முதன்மையாகக்



கொண்டு ரூ.613.80 கோடியும், ரூ.86.50 கோடி ஏற்பாட்டாளர்களின் மூலம் துணை கடனாகவும் மற்றும் ரூ.322.70 கோடி பொது சம பங்குகளாகவும் பெறப்பட்டது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக பங்கு மூலதனம், முதற்கட்டமாக, ரூ.10 கோடி இந்திய அரசின் சார்பில் 1997–98 TACID மூலமாக வழங்கப்பட்டது. மேலும், தமிழக அரசு (ரூ.55 கோடி) மற்றும் ILFS (ரூ.50 கோடி) சேர்ந்து முறையே 46 : 54 என்ற விகிதத்தில் உருவாக்கிய ஒரு சிறப்பு நோக்கு நிறுவனமான (SPC) தமிழ்நாடு நீர் முதலீட்டுக் கழகம் (TWIC) மூலம் ரூ.105 கோடி வழங்கப்பட்டது. ILFS, ரூ.90 கோடி முதலீடு செய்யும் ஒரு அந்நிய தனியார் முதலீட்டாளர் நிறுவனமான M/s AIDQUA Holding Mauritius (Inc) என்ற நிறுவனத்தை **27.89%** பங்குகளுக்காக கொண்டு வந்தது. 12.4.2001 அன்று, ஒரு பங்குதாரர் ஒப்பந்தமானது NTADCL நிர்வாக குழுவால் அனுமதிக்கப்பட்டு, கையெழுத்தாகி, அதில் சில சிறப்பு அதிகாரங்களை M/s. AIDQUAக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பங்குதாரர் ஒப்பந்தத்தின் சாராம்சங்களை NTADCLன் அசல் நிறுவன அமைப்பு ஆவண விதிகளுக்கு

(Articles of Association) பதிலாக புதிதாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்த முதலீடுகளைத் தவிர, NTADCLன் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (EPC), குழுவான M/s.மகேந்திரா மூலமாக ரூ.45 கோடி மற்றும் அரசு சார்ந்த காப்பீடு நிறுவனங்கள் மூலமாக ரூ.45 கோடி பெற்று ILFS மூலமாக ரூ.32.70 கோடி நேரடியாக பெறப்பட்டது.

இத்திட்ட கட்டுமானப் பணிகள் 2002ல் தொடங்கி, நீர் வழங்கல் சேவை 2006ல் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மூலம் 38.957 MLD குடிநீர் திருப்பூர் மாநகராட்சிக்கும், 18.26 MLD குடிநீர் 8 வழியோர கிராமங்களுக்கும் மற்றும் 5 பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 வழியோர குடியிருப்புகளுக்கும் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல நூற்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சாயம் மற்றும் செயலாக்க நிறுவனங்களின் நீர் வழங்கல் தேவைகளை பூர்த்தி செய்கிறது. ஒரு பாதாள கழிவுநீர் அகற்றும் அமைப்பு 15 MLD சுத்திகரிப்பு திறனுடன் கட்டப்பட்டு தற்போது 15,246 வீடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட 8 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. மேலும் திருப்பூர்



மாநகராட்சிக்குபட்ட நகர்புற ஏழை மக்களுக்காக குறைந்த செலவின கழிப்பறை வசதிகள் 31 சுகாதார வளாகங்கள் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நீர் தேவைகளை நகராட்சியின் மூலமாக செயல்படுத்திய அதேவேளையில், நிறுவனங்களுக்கான நீர்வழங்கல், மதிப்பிடப்பட்ட 115 MLDக்கு பதிலாக, வெறும் 30 MLD அளவில் மட்டுமே வழங்க முடிந்ததாலும், மேலும், அதிக செலவினங்கள் ஏற்பட்டதாலும், வட்டி வகையிலான நிதிச்சுமை அதிகரித்தது. இதன் காரணமாக, நிறுவனத்தின் நிதி ஆதாரத் திறன் முற்றிலுமாக சரிந்துவிட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்றத்தின் 30.11.2011 தேதியிட்ட பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) ஆணையின் காரணமாக சாயப்பட்டறைகள் மற்றும் பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்பட்டது. அதன் காரணமாக NTADCLன், தொழிற்சாலைகள் சார்ந்த நீர்வழங்கல் 8 MLDக்கும் கீழாக குறைந்து, நிதிச்சுமை மேலும் பாதிப்புக்குள்ளானது. இதனால், இந்நிறுவனம் அதன் கடனை திருப்பி செலுத்தும் சக்தியினை இழந்தது. மேலும் நிறுவனத்தின் நிகர மதிப்பு சற்றேறக்குறைய முழுவதுமாக துடைத்தெறியப்பட்டது.

இந்த இக்கட்டான நிதிச் சூழுலை ஒரு நிறுவன கடன் மறுசீரமைப்பு தொகுப்பின் (Corporate Debt Restructuring package) மூலம் 2011–12ல் சீரமைக்கப்பட்டது. பொது கடனீட்டாளர்கள் தங்களது கடனை மறுசீரமைத்து, 15% வரையிலான கடன் நிலுவைத் தொகையை பங்குகளாக மாற்றி, வட்டி விகிதத்தை 11 சதவீதத்திலிருந்து இருந்து 9.5 சதவீதமாக குறைத்து மாற்றியமைத்தார்கள். தமிழக அரசு, ரூ.150 கோடி பங்கு முதலீடு செய்து, மேலும் 100 MLD வரையிலான குடிநீரை கூடுதலாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொள்முதல் செய்ய உறுதி அளித்தது. தற்போது, சுமார் 65 MLD நீர் கூடுதலாக திருப்பூர் மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு ரூபாய் 21/kl விலைக்கு வழங்குகின்றது. இதில் ஒரு பகுதி, தமிழக அரசின் மூலம் நேரடியாக G.O.(Ms) No.25 dt 16.3.2012ன்படி வழங்கப்படுகிறது. மேலும், NTADCLன் தொழில் வளர்ச்சி வணிக ரீதியாக நிலைபெற, திருப்பூர் உள்ளூர் திட்ட பகுதிகளிக்கு அப்பால் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில், தனது குடிநீர் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.



தமிழக அரசு மற்றும் கடனீட்டாளர்களின் துணையுடன், நிறுவனமானது தனது செயல்பாட்டினை லாபகரமாக மாற்றி அமைத்து 2015–16ல் இருந்து மேம்பட்ட நிதி சேமிப்பை பெற்று, கடனீட்டார்களின் 3 வருடத்திற்கான மாதந்திர தவணைகளை முன்கூட்டியே செலுத்தியுள்ளது. இந்நிறுவன கடன் மறுசீரமைப்பு (CDR) திட்டமானது, நிறுவன சட்ட குழு, சென்னை (Company Law Board) மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்பட்டது. எனினும், மேற்சொன்ன அந்நிய தனியார் முதலீட்டாளர் AIDQUA இந்த ஏற்பாட்டினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

| **பங்குதாரர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பங்கு வைத்திருப்பவர்கள் CDRக்கு முன் மற்றும் பின்** | | | | | | பங்குகள் (கோடிகளில்) |
|---|---|---|---|---|---|---|
| **வ.எண்.** | **பங்குதாரரின் பெயர்** | **பங்குகள் 31.03.2011 முன் CDR** | **CDRக்கு முந்தைய பங்குகளின் %** | **CDR இன் போது ஒதுக்கப்பட்ட பங்குகள்** | **CDRக்குப் பின் மொத்த பங்குகளின் எண்ணிக்கை** | **CDRக்குப் பின் வைத்திருக்கும் பங்குகளின் %** |
| 1 | தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் லிமிடெட் | 10.50 | **32.54%** | 6.73 | 17.23 | **28.72%** |

| பங்குதாரர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பங்கு வைத்திருப்பவர்கள் CDRக்கு முன் மற்றும் பின் | | | | | | பங்குகள் (கோடிகளில்) |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | பங்குதாரரின் பெயர் | பங்குகள் 31.03.2011 முன் CDR | CDRக்கு முந்தைய பங்குகளின் % | CDR இன் போது ஒதுக்கப்பட்ட பங்குகள் | CDRக்குப் பின் மொத்த பங்குகளின் எண்ணிக்கை | CDRக்குப் பின் வைத்திருக்கும் பங்குகளின் % |
| 2 | AIDQUA ஹோல்டிங்ஸ் (மொரிஷியஸ்) இன்க். | 9.00 | **27.89%** | – | 9.00 | **15.00%** |
| 3 | IL&FS | 3.77 | **11.68%** | 5.15 | 8.92 | **14.87%** |
| 4 | டிஐடிசி | 1.00 | **3.10%** | – | 1.00 | **1.67%** |
| 5 | தமிழக அரசு | – | **0.00%** | 12.37 | 12.37 | **20.62%** |
| 6 | எம்&எம் குழுமம் | 4.50 | **13.94%** | | 4.50 | **7.50%** |
| 7 | காப்பீடு மற்றும் வங்கி குழு | 3.50 | **10.85%** | 3.48 | 6.98 | **11.63%** |
| | **மொத்தம்** | 32.27 | 100.00% | 27.73 | 60.00 | 100.00% |

இந்நிறுவனம் தனது கடன்களை முன்கூட்டியே செலுத்தும் திறன் பெற்றுள்ளதால், நீர் வழங்கும் சேவையை 185 MLDலிருந்து 250 MLDக்கு மேலும் விரிவாக்கம் செய்வதற்கு தேவை மதிப்பீட்டு ஆய்வினை (Demand assessment study) செய்யவும், நிறுவனத்தின் மின்சார செலவை குறைக்க, சூரிய மின்சக்தி திட்டத்தை செயல்படுத்தவும், (மொத்த



செலவில் மின்சார செலவு 55%) திட்டமிட்டுள்ளது. நிருவாகம் சிறந்த அனுபவத்தை பெற்றுள்ளதாலும், குறுக்கு மானிய திட்டத்தை (Cross Subsidisation model) செம்மையாக செயல்படுத்தி உள்ளதாலும், இதை எதிர்வரும் காலங்களில் மேலும் மேம்படுத்தி, பொது மக்கள் மற்றும் வணிக நீர் வழங்கல் சேவைகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது.

## 11. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு மற்றும் உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிடெட் (Infrastructure Leasing and Financial Services Ltd) ஆகியவை இணைந்து, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) என்ற ஒரு முதலீட்டு நிறுவனத்தை ஒரு சிறப்பு குறிக்கோள் நிறுவனமாக (Special Purpose Vehicle), நிறுவன சட்டம் 1956ன் கீழ் 2000–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினை (NTADCL) தோற்றுவித்து, தண்ணீர் துறையில், முதல் பொது மற்றும் தனியார் கூட்டு பங்களிப்புடன் (PPP) புதிய திருப்பூர் தண்ணீர் திட்டத்தை, நாள் ஒன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் (MLD) திறனில் ரூ.1023 கோடியில் செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தண்ணீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள், மறுசுழற்சி, கடல்நீரைக் குடிநீராக்குதல், நதி மறுசீரமைப்பு, தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை ஆகிய பல்வேறு அம்சங்கள் பற்றிய செயல்திட்டங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்



பணிகளில் நிபுணத்துவம் பெற்று, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், கருத்தாக்கம் முதல் நடைமுறைப்படுத்துதல் வரை நிலையான வளர்ச்சி மற்றும் கட்டமைப்புக்கான ஆயுள் சுழற்சி செலவுகளை குறைப்பதற்கான மாதிரியைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், பின்வரும் துறைகளில் ஆலோசனை, திட்ட மேலாண்மை ஆலோசனை, இயக்குதல் மற்றும் பராமரிப்பு சேவைப்பணிகள் ஆகியவற்றை வழங்குகிறது.

1. தண்ணீர் மறு பயன்பாட்டிற்கான குறிக்கோளுடன் நகர்ப்புர குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள்
2. கடல்நீரைக் குடிநீராக்குதல்.
3. தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை மற்றும் மறு சுழற்சி – பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) உள்பட.
4. ஏரி மற்றும் ஆறுகளின் மாசுபாட்டைக் குறைத்தல்.
5. திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி .

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி மேலாண்மை, திட்ட மேலாண்மை மற்றும் தண்ணீர் மற்றும் கழிவுநீர் பிரிவுகளில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமை செயலர் அவர்களை இந்நிறுவனத்தின் அலுவல் வழி தலைவர் பொறுப்பில் அமர்த்தியுள்ளது. நிதி, சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்துறைகளை சார்ந்த மூத்த அரசு அதிகாரிகள் இந்நிறுவனத்தின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிறுவன இயக்குநர் குழுவில் தற்போது உள்ள 10 இயக்குநர்களில் 4 இயக்குநர்கள், தமிழ்நாடு அரசாங்கத்தையும், 3 இயக்குநர்கள், உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிடெட் (IL&FS) நிறுவனத்தையும், 3 இயக்குநர்கள் சுயேச்சை இயக்குநர்களாகவும் உள்ளனர். இந்நிறுவனத்தின் அன்றாட அலுவல்களை தலைமை செயல் அலுவலர் கவனித்து வருகிறார்.



**11.1 செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில திட்டங்கள்**

**11.1.1. நகர்ப்புர தண்ணீர் மற்றும் பயன்படுத்திய தண்ணீர்**

1. அம்ரூத் மற்றும் சீர்மிகு நகரம் (Smart city) ஆகிய திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் அனைத்து பெரிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான தண்ணீர் வழங்கல் மற்றும் மாவட்ட அளவீட்டுப் பகுதி ஆகியவற்றுக்கான ஆலோசகர்.

2. பாதாள சாக்கடை அமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புக்கான ஆலோசகர்: தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம் மாநகராட்சிகள், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகள்.

3. தமிழ்நாடு மாநிலத்தில் தண்ணீர் மறுபயன்பாட்டு தொகுப்புக்கான தேவையை ஆய்வு செய்து தயாரித்தல் மற்றும் தண்ணீர் மறு பயன்பாடு கொள்கை உருவாக்குவதற்கான ஆலோசகர்.

4. அம்ரூத் / சீர்மிகு நகரம் ஆகிய திட்டங்களின் கீழ் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான திட்ட மேலாண்மை முகமை (PMA): தஞ்சாவூர், கும்பகோணம், தூத்துக்குடி.

5. பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த தியாகராய நகரில் செயல்படுத்தப்படும் சீர்மிகு நகரத் திட்டத்திற்கு ஆலோசகர்

6. எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு (TTRO) நிலையங்கள் மூலம் பயன்படுத்தப்பட்ட நீரை மறுபயன்பாடு செய்யும் திட்டத்திற்கு திட்ட மேலாண்மை முகமை : 45 MLD திறன் கொண்ட சென்னை கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

### 11.1.2 பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) வகையில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

1. திருப்பூரில் 3 MLD முதல் 11 MLD வரை திறன் கொண்ட பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையில் 9 ஜவுளி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.540 கோடி மதிப்பில் மேம்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள்

2. தமிழ்நாடு அரசின் வட்டி இல்லா கடன் வாயிலாக, எட்டு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ய திரவ வெளியேற்ற அமைப்பை மேம்படுத்துவதற்காக, திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள் இந்நிறுவனத்தில்



மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர், மேற்கண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

3. ஆம்பூரில் இரண்டு மற்றும் வாணியம்பாடி, பல்லாவரம் மற்றும் மேல்விசாரம் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ரூ. 143 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த 11.55 MLD திறன்கொண்ட தோல் பதனிடல் சார்ந்த ஐந்து பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தற்போது திருப்பூரில் 5 ஜவுளித் தொழில் சார்ந்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தன்னிச்சையான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டாளராக செயல்பட்டு வருகிறது .

5. கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தில் 11 எம்.எல்.டி பயன்படுத்தப்பட்ட நீரிலிருந்து நன்னீரை பிரித்தெடுக்கும் மீட்பு முறையை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும்

ஆலோசனை பணிகள் நிறைவேற்றப்பட்டது. இவற்றில், நாளொன்றுக்கு 1,20,000 லிட்டர் திறன் கொண்ட திரவ வெளியேற்றமில்லா முறையை தொழில் நுட்ப வணிகமயமாக்குவதற்கான சாத்தியக்கூறு மற்றும் முன்னோட்ட செய்முறையும் அடங்கும்.

6. பானிப்பட்டில் 42 எம்.எல்.டி திறன் கொண்ட திரவ வெளியேற்றமில்லா பொது தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும் ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டது.

7. வங்காள தேசத்தில் கொனபாரி ஜவுளி தொகுப்பில் ஒருங்கிணைந்த தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கான ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### 11.1.3 கடல் நீரைக் குடிநீராக்குதல்

0.5 எம்.எல்.டி முதல் 110 எம்.எல்.டி வரை திறன் கொண்ட 16 கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களுக்காக ஆலோசனை சேவைகளை



தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவுபடுத்தியுள்ளது. (குஜராத்–8, தமிழ்நாடு–7 மற்றும் ஒடிசா–1).

### 11.1.4 நீராதாரங்களை மீட்டெடுத்தல் மற்றும் புனரமைத்தல்

1. சென்னைப் பெருநகர மாநகராட்சியில் உள்ள 60 நீராதாரங்களுக்காக விரிவான திட்ட அறிக்கை.

2. உதகமண்டலம் ஏரிக்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் ஆதார சோதனை செய்தல்.

3. பல்லாவரம் நகராட்சியைச் சார்ந்த ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் கீழ்கட்டளை ஏரிக்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.

4. விசாகப்பட்டிணம் பெருநகர மாநகராட்சியில் முடசர்லோவா ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை முகமை.

## 11.2 நடைபெற்று வரும் திட்டங்கள்

1. இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகம், ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IPDS) பின்வரும்

திட்டங்களுக்காக 50% மானிய தொகைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

i) விருதுநகரில் உள்ள தென் மாவட்ட ஜவுளி செயற்பாங்கு தொகுப்பில் (SDTPC) பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன் கூடிய ஜவுளித் தொழில் செயற்பாங்கு பூங்காவுக்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.

ii) குமாரபாளையம் கிரீன் காவேரி டையிங் கிளஸ்ட்டருக்காக, பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையுடன் கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன் கூடிய ஜவுளித் தொழில் செயற்பாங்கு பூங்கா மற்றும் நாமக்கல் மாவட்டத்தில், க்ரீன் என்விரான்மென்ட்டல் அசோசியேஷனுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை.

iii) ராஜஸ்தான் மாநிலம், பாலியில் உள்ள நெக்ஸ்ட் ஜென் டெக்ஸ்டைல் பூங்காவிற்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.



iv) தெலுங்கானா மாநிலம், வாரங்கல்லில் உள்ள ககாதியா மெகா டெக்ஸ்டைல் பூங்காவிற்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.

v). காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளுக்கு புத்துயிரூட்டுதல் திட்டத்தின் கீழ் , பூஜ்ய திரவ வெளியேற்ற வகையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்துள்ளது. (கருத்துரு நிலையில் உள்ளது). மேற்காணும் திட்டத்தின் கீழ், கட்டம் – I –ல் , ரூ. 487 கோடி மதிப்பில், ஸ்ரீ பவானி டையிங் கிளஸ்ட்டர், காடையாம்பட்டி டையிங் கிளஸ்ட்டர் மற்றும் குமாரபாளையம் க்ரீன் காவேரி கிளஸ்ட்டர் திட்டங்கள், ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் IPDS திட்டத்தின் கீழ், நிதியுதவி பெற்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டங்களுக்காக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் திட்ட மேலாண்மை முகமைப் பணிகளை விரிவுபடுத்தியுள்ளது.

**11.3 நடைபெற்று வரும் பெரிய அளவிலான திட்டங்கள்**

1. இந்திய அரசின் தேசிய தூய்மை கங்கை (NMCG) திட்ட நிதியுதவியின் கீழ், கான்பூர் ஜாஜ்மா (Jajmau) தோல் பதனிடுதல் கிளஸ்ட்டருக்காக, 20 MLD திறன் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை முகமை.

2. தமிழ்நாட்டில் 9 நகராட்சி மற்றும் 18 பேரூராட்சிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆற்றுப் படுகைகளில், மாசுபாடுகளைக் குறைக்கும் பணிகளுக்காக, விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) மற்றும் பேரூராட்சிகள் ஆணையரகம் (CTP) ஆகியவற்றிற்கு ஆலோசகர் பணி (விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளது).

3. கடல்நீரைக் குடிநீராக்குதலுக்கான திட்டங்கள்

i) நெம்மேலியில், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்காக, 150 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.



ii) குஜராத்தில் டஹேஜ் GIDC – ல் 100 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.

iii) விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60 MLD திறனுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்

iv) தூத்துக்குடி முல்லக்காட்டில், சிப்காட் உத்தேசித்துள்ள 60 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்

v) இராமநாதபுரம் குதிரைமொழியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60 MLD திறன்கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்

vi) கடலூரில் சிப்காட் உத்தேசித்துள்ள 20 MLD திறன்கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்

vii) ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தில் 10 MLD திறன்கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் (ஒப்பந்தப் புள்ளி நிலை).

4. எடப்பாடி நகராட்சியில் மாவட்ட அளவீட்டு பகுதி (DMA) அடிப்படையில் ஏற்கனவே உள்ள குடிநீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

5. ஆவடி மாநகராட்சியில், விடுபட்டுப்போன பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

6. சென்னை கொடுங்கையூரில், 45 MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.

7. அம்ரூத் திட்டத்தின் கீழ், கும்பகோணம் நகராட்சியிலும், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியிலும் முறையே குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்துதல் பற்றிய திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.



8. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சியில் 28 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.

9. இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பிதுஜாவில் பொது காஸ்டிக் மீட்பு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.

10. தெலுங்கானா சங்காரெட்டி மாவட்டம் இந்திரக்கரன் ஜவுளி பூங்காவில் பொது தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை பணி.

11. இந்தோ – ஜெர்மானிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் (IGSTC) மானியம் மூலமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்கள் பின்வருமாறு:

i). இந்தியா மற்றும் ஜெர்மனியின் வருங்கால மாநகரங்களுக்காக, திறன்மிகு, நம்பகமான குடிநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் கட்டமைப்பு வசதிகள்.

ii). சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீரிலிருந்து மின்சாரத்தின் செயல்திறனை உப்பு மற்றும் நுண்துகள்களை நீக்குவதற்கான தண்ணீர் சுத்திகரிப்பு நடைமுறைகளை மிகச்சிறந்த முறையில் கண்காணித்தல்.

## 11.4 விருதுகள்

1. குளோபல் வாட்டர் இன்ட்டலிஜன்ஸ் (GWI) விருது 2014 – ஆண்டின் தொழிற்கூட தண்ணீர் சார்ந்த திட்டத்திற்காக வழங்கப்பட்டது.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தண்ணீர் மறு பயன்பாட்டு சங்கத்தால், 2014 ஆம் ஆண்டுக்கான தண்ணீர் மறு பயன்பாடு தொழிற்கூட திட்டத்திற்காக விருது வழங்கப்பட்டது.
3. ஏதென்ஸ் நகரில், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு, 2015 ஆம் ஆண்டுக்கான The 2030 WRG Corporate Water Stewardship விருது, GWI, UK – ஆல் வழங்கப்பட்டது.



## 11.5 தமிழ்நாடு அரசுக்கான பணிகள்

1. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் மறு பயன்பாடு மூலமாக தொழிற்கூட தண்ணீர் வழங்கல் மற்றும் கடல்நீரை நன்னீராக்குதல் ஆகியவை தொடர்பான வருங்கால செயல்திட்டங்களை வளர்த்தெடுத்தல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான திட்ட மேலாண்மை முகமையாக, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை நியமனம் செய்துள்ளது.
2. திருப்பூரில் ஜவுளித் தொழில் சார்ந்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமையாக தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர் துறை, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை நியமனம் செய்துள்ளது .
3. நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சிறு குறு மற்றும் நடுத்தர மாசுநீக்கிகள் (Bleaching) மற்றும் சாயப்பட்டறைகளுக்காக, கண்டறிவதற்கான ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்,

நிதி ஆதாரங்களை கண்டறிதல் மற்றும் ஆலோசகர் ஆகிய அம்சங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை / இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டாளராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை, தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை நியமனம் செய்துள்ளது .

4. திருப்பூர் தொகுப்பில் உள்ள அனைத்து 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும், "ஒரு நகரம் ஒரு செயல்பாட்டாளர்" என தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர்த் துறை நியமனம் செய்துள்ளது .

5. அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் சமநிலை திட்டத்தை தயாரிப்பதற்கான இணைப்பு முகமை.

6. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT) கூவம், அடையாறு நதிகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய்களை மறுசீரமைக்கும் பணிகளுக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை



தயாரிக்கும் பணியினை இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனம் வழங்கி உள்ளது.

### 11.6 இந்திய அரசுக்கான பணிகள்

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், இந்திய அரசின் பல்வேறு வளர்ச்சி மற்றும் திட்டங்களுக்காக இணைந்து செயலாற்றி வருகிறது. வளர்ச்சி திட்டங்களின் விவரம் பின்வருமாறு–

1. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் பூஜ்ய திரவ வெளியேற்ற (ZLD) தொழில்நுட்பத்தை ஜவுளித்துறை அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மதிப்பீடு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது .

2. இந்தியாவில் ஜவுளித்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செயல் முறை வளர்ச்சி திட்டத்திற்கு ஜவுளி அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான, திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விளங்குகிறது.

3. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் தேசிய தூய்மை கங்கை திட்டத்திற்காக (NMCG) பல்வேறு தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக திட்ட மேலாண்மை ஆலோசகராக விளங்கி வருகிறது. மேலும், இந்நிறுவனம் கான்பூரில் உள்ள ஜாஜ்மா தோல் பதனிடல் தொழிற்சாலைக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட பொறியாளராகவும் செயல்படுகிறது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், துறை முகங்களில் எதிர்மறை சவ்வூடு பரவல் வாயிலாக கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கு ஆலோசனைகளை அளிப்பதற்காக, தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (NIOT) கூட்டு நிறுவனமாக விளங்குகிறது.

5. இந்தோ – ஜெர்மன் வளர்ச்சி கூட்டுறவு கீழ் Adellphi Consult GmbH, ஜெர்மனி உடன் இணைந்து மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்காக, இந்தியாவில் கழிவு நீரை மறு உபயோகப்படுத்துதல், மறு சுழற்சி செய்தல், திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம்



ஆகியவற்றிற்கான ஆயத்தப்பணிகளை மேம்படுத்துவதற்கான பணிகளை வழங்கும் ஆலோசகர்.

### 11.7 நிறுவனத்தின் நிதிநிலை

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் வருவாய் – 2019–20ஆம் ஆண்டில் ரூ.49.64 கோடியாக இருந்த நிலையில், 2020–21 ஆண்டில் ரூ.31.26 கோடியாக இருந்தது. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு வழங்கிய கடனுக்காக, 2021–2022 ஆண்டில் ரூ.5 கோடி வட்டியாக செலுத்தி உள்ளது.

### 11.8 சமூகப் பொறுப்புணர்வு பணிகள்

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் , 2021–2022ஆம் ஆண்டில், தங்களுடைய சமூகப் பொறுப்புணர்வு செயல்களின் (CSR) பகுதியாக, ரூ. 17.25 இலட்சங்களை M/s Indian Institute of Human Settlements (IIHS), ஒரு லாப நோக்கமில்லா அமைப்பிற்கு தாம்பரம் மாநகராட்சியில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் சென்னைப் பெருநகர மாநகராட்சியில் தூய்மைப் பணிகள் மற்றும் இரவு நேர தங்கும் இடங்களை மேம்படுத்தவும் வழங்கியுள்ளது .

## 12. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு

அனைத்து குடிமக்களுக்கான முழுமையான வளர்ச்சியை எதிர்கால சந்ததியரின் தேவை குறையாமல் அளிப்பதே நீடித்த நிலையான வளர்ச்சித் திட்டத்தின் இலக்காகும். இந்த அரசின் அடுத்த 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டமானது, 2030 ஆம் ஆண்டுக்குள் நீடித்த நிலையான வளர்ச்சித் திட்ட இலக்கின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

சுத்தமான குடிநீர், திட மற்றும் திரவ கழிவுகளை சுகாதார முறையில் வெளியேற்றுதல், அதிகப்படியான பசுமை வெளிகளை உருவாக்குதல் மற்றும் அனைவருக்கும் வீட்டு வசதி அளித்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையானது முக்கிய பங்கு வகிக்கிறது,

- பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் வழங்கப்படும் பயனாளர்களின் எண்ணிக்கை சதவீதத்தை உயர்த்தி குறிப்பாக அவர்களின் இருப்பிடத்துக்குள்ளேயே கிடைப்பதற்கு இத்துறை முக்கியத்துவம் அளிக்கிறது.



- அனைத்து மக்களுக்கும் அணுகக்கூடிய கழிப்பறை வசதிகளை வழங்குதல், தனிநபர் வீட்டு கழிப்பறைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் இதன் மூலம் நகரங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
- நிலத்தடி நீர் இருப்பினைக் கருத்தில் கொண்டு நிலத்தடி நீரை பயன்படுத்துதல், சமநிலையான அணுகுமுறையைக் கையாளுதல்.
- பயன்படுத்திய தண்ணீரை மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்தல்.
- அனைத்து நகர்ப்புரங்களிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் உட்பட பாதாளச் சாக்கடை மற்றும் கசடு கழிவு மேலாண்மை செயல்படுத்துதல்.
- அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பசுமை இடங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- நகர்ப்புரங்களில் உள்ள அனைவருக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தினை இடையூறு செய்யாமல் வாழ ஏதுவான வீடுகளை வழங்குதல்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.



## 13. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஈடுகொடுத்து பணிபுரிவதற்கு ஏதுவாக, பணியாளர்களின் திறனை மேம்படுத்தவும், அலுவலகப் பதவிகளில் அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றவும், பயிற்சி மற்றும் திறன்மேம்பாடு மிகவும் அவசியமாகும். பணியாளர்களுக்கு e–நிருவாகம், நிகர்நிலை சேவை வழங்குதல், சொத்துக்களின் புவி–குறியீடல், நிருவாக சட்டங்கள் பற்றிய விபரம் மற்றும் விழிப்புணர்வு நில விவகாரங்கள், மனஅழுத்த மேலாண்மை, தனிநபர் ஆளுமை மேம்பாடு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை செயல்முறை போன்றவை பயிற்சி அளிக்கப்படவேண்டிய முக்கிய இனங்களாகும். தற்போது கோயம்புத்தூர் அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி, தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் மற்றும் தேசிய அளவில் தரமான பயிற்சி நிறுவனங்கள் ஆகியவை பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கு சில இனங்களில் பயிற்சி வழங்கி வருகிறது. நகராட்சி நிருவாகத்தை பொறுத்தவரையில், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) நிருவாகத்துறை பணியாளர்களுக்கு சில பாடக்கோப்புகள் மற்றும் கருத்தரங்குகள் உள்ளடக்கிய

திறன் மேம்பாடு பயிற்சியை வழங்குவதற்கு ஒரு திட்ட அறிக்கையை தயாரித்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ள இந்த பயிற்சித்திட்டம், சுமார் 5000 பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு பிரிதிநிதிகளுக்கு நகர்ப்புர நிருவாகம் மற்றும் அதன் தொடர்புடைய செயல்பாடுகள் போன்றவை குறித்து பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 14. தொடர் செயல் திட்டம்

நமது நகரங்களுக்கான தொலைநோக்குப் பார்வையில் இருந்து திட்டமிடலுடன் உருவான பல திட்டங்கள், இப்போது செவ்வனே செயல்படுத்தத் தயாராக உள்ளன.

நடப்பாண்டில், இந்த திட்டங்களை திறமையாகவும், பயனுள்ளதாகவும் மற்றும் பொதுமக்களுக்கு இணக்கமான வகையில் செயல்படுத்துவதில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கவனம் செலுத்தும்.

வளர்ந்து வரும் சென்னை பெருநகரத்தின் புறநகர் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் ஆகிய அடிப்படை வசதிகளை விரிவுபடுத்துதல்; வரையறுக்கப்பட்ட இந்த பூமியில், வரையறையற்ற வளர்ச்சி நிலையானது அல்ல என்பதை உணர்ந்து, காலநிலை மாற்றத்தைத் சமாளிக்கும் வகையில் பசுமையாக்குதல் மற்றும் நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நீர் வழங்கல், திடக்கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை போன்ற முக்கியமான திட்டங்களில் சமரசம் ஏதுமின்றி

செயல்படுத்துவதற்கான அடித்தளமிடுதல்; மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடங்குதல்; சாலைகள், பேருந்து நிலையங்கள், மயானங்கள், நூலகங்கள், தெருவிளக்குகள், பூங்காக்கள், வாகன நிறுத்தங்கள், சந்தைகள் போன்றவை நகரத்திற்கான திட்டங்களில் சமமான கவனம் பெறுவதை உறுதி செய்தல்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்திட வேண்டிய வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு தேவையான திட்டமிடல் ஆகியவை ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையானது, தமிழக மக்கள் அனைவருக்கும், வாழத் தகுதியுடைய மற்றும் உயிரோட்டமான நகரங்களை வழங்கிட, முயற்சித்து வருகிறது.

**கே.என்.நேரு**

**நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்**